விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

பக்கங்கள்: 32

THAMILTHANTHI தமிழ்த்தந்தி

தமிழ்த்தந்தி

www.facebook.com/thamilthanthi

Follow@thamilthanthi

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

தமிழ் 07 தந்தி 20 ஞாயிற்றுக்கிழமை 14.04.2019 Sunday 14th April 2019 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com

★ விளம்பரங்கள்
★ வாழ்த்துகள்
மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:
Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

கூட்டமைப்பு தமிழர்களுக்கு துரோகமிழைக்கிறது!

தெற்கிலே ஒரு பேச்சு வடக்கிலே ஒருபேச்சு

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் பயமுறுத்தல்கள் தேர்தல்கால நாடகம்

கூட்டமைப்பின் சாயம் வெளுக்கத் தொடங்கியுள்ளது

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் கொந்தளிப்பு!

எதிர்வரும் தேர்தல்களில் தங்கள் மீதான மக்களின் கோபத்தை திசைதிருப்பவே தமிழ் தேசிய கூட்டமைப்பினர் நாடகமாடுகின்றனர். அதனாலேயே தெற்கிலே அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்துக் கொண்டு வடக்கிலே அதே அரசாங்கத்தை மக்கள் மத்தியில் எதிர்க்கின்றார்கள்.

இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வரவு-செலவு திட்டம் மற்றும் அரசாங்கம் கொண்டு வரும் அனைத்து தீர்மானங்களுக்கும் ஆதரவு அளித்துக் கொண்டும் அது மக்கள் மத்தியில் தங்களுக்கு அவப் பெயர் ஏற்படுகின்றது என்றவுடன் தமிழ் மக்கள் மத்தியில் அதே அரசாங்கத்தை எதிர்த்தும் பேசி வருகின்றனர். இது இவர்களின் வாடிக்கையாகி விட்டது. இதை தமிழ் மக்கள் தான் உணர்ந்து தெளிந்து நடக்க வேண்டும்.

இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறல் தொடர்பாக ஒரு உள்ளக விசாரணையை நடத்தி தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கப் போவதில்லை என்பதும், கலப்புப் பொறிமுறையை உருவாக்க முனைந்தால் கூட இலங்கை அரசாங்கத்தின் நீதித்துறை கறைபடிந்து, சுயாதீன தன்மையை இழந்திருக்கின்றதென்பதும் கடந்த 2015 ஆம் ஆண்டில் மனித உரிமை ஆணையாளர் சுட்டிக்காட்டியிருந்தார்.

எங்களைப் பொறுத்தவரைக்கும் எங்களின் கருத்தும் அதுவாகத்தான் இருக்கின்றது. சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பதுதான் எங்களின் கோரிக்கை. அந்த வகையில் இந்த பொறுப்புக்கூறல் தொடர்பாக, இந்தப் போர்க்குற்றங்கள் தொடர்பாக, அங்கத்துவ நாடுகள் இவ்வாறான வழக்குகளைப் போடலாம்.

போர்க்குற்றம் தொடர்பாக ஜெனீவாவிற்கு கொண்டு சென்றது அமெரிக்கா. அமெரிக்க அரசாங்கம் கோத்தபாயவிற்கு எதிராகவும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகவும் வழக்குகளைப் போட்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது எங்களின் கோரிக்கை.

கோத்தாவின் மீதான வழக்கு விசாரணைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற யஸ்மின் சூக்காவின் கருத்தை நாங்கள் வரவேற்கின்றோம். இந்த விடயத்தில் ஒட்டுமொத்தமாக புலம்பெயர் தேசங்களில் உள்ள தமிழர் அமைப்புக்களும் ஆதரவு வழங்கி போர்க்குற்ற விடயங்கள் முன்னெடுத்துச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்

02 ஆம் பக்கம் பார்க்க

கல்வித்துறை பற்றிய தீர்மானங்களை புத்திஜீவிகளே எடுக்க வேண்டும்!

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

நாட்டின் கல்வித்துறை பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளும் பொறுப்பினை அரசியல்வாதிகளிடம் ஒப்படைக்காது அதனை நாட்டின் கல்வித்துறை சார்ந்த புத்திஜீவிகளும் கல்விமான்களும் மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

பிள்ளைகள் எதிர்கால உலகினை வெற்றி கொள்ளத்தக்க வகையிலும் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் வகையிலுமான தேசிய

02 ஆம் பக்கம் பார்க்க

வாங்கு வங்கிக்கான அரசியலையே கூட்டமைப்பு செய்கின்றது

அனந்தி சசிதரன் சீற்றம்

தங்களின் வாக்கு வங்கி அரசியலுக்கான அபிவிருத்தியையே கூட்டமைப்பு செய்து வருகின்றது. உண்மையில் தமிழ் மக்களுக்கான அபிவிருத்தியை கூட்டமைப்பு செய்யவில்லை என்று முன்னாள் வடமாகாணன அமைச்சர் அனந்தி சசிதரன் குற்றம் சாட்டினார்.

தமிழ்த்திந்திக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழ் தேசிய கூட்டமைப்பு அபிவிருத்தி என்று தங்களின்

02 ஆம் பக்கம் பார்க்க

ஜூலை மாதம் முதல் ஓய்வூதியம் அதிகரிப்பு

ஓய்வூதியம் பெறுவோருக்கான அதிகரித்த கொடுப்பனவை ஜூலை மாதம் தொடக்கம் வழங்கப் போவதாக ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டதாக பணிப்பாளர் நாயகம் ஜகத் டயஸ் தெரிவித்தார். இதற்கமைய பிரதேச செயலகங்களுடன் சேர்ந்து புதிய கொடுப்பனவு கட்டமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

2016ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதி வரையான காலப்பகுதியின் ஓய்வு பெற்ற சகலருக்கும் புதிய கொடுப்பனவு கிடைக்கும். இதன்மூலம் ஐந்து இலட்சத்து 80 ஆயிரம் பேர் வரை நன்மை பெறுவார்கள் என ஓய்வுதிய பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். ஓய்வூதிய கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக அரசாங்கம் ஒவ்வொரு மாதமும் ஆயிரத்து 600 கோடி ரூபாவை செலவிடுகிறது. இம்முறை ஆயிரத்து 700 கோடி ரூபா ஒதுக்கப்படும்.

கூட்டமைப்பை அரசியல் அரங்கிலிருந்து அகற்ற வேண்டும்

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார்

நாங்கள் 785 நாட்களைக் கடந்தும் உறுதியாக சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை வவுனியாவில் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம். தமிழர் தாயகப்பகுதியில் வவுனியாவில் மட்டும் தான் இந்தப் போராட்டம் நடைபெற்று வருகின்றது. உறுதியுடன் தாய்மார்கள் போராட்டம் செய்து வருகின்றார்கள்.

தற்போது தமிழர்கள் இருக்கும் நிலைக்கு காரணமாகவுள்ள கூட்டமைப்பின் துரோகம் தான் தமிழ் மக்களிடத்தில் நீறுபூத்த நெருப்பாகவுள்ளது. இவர்களை இந்த அரசியல் அரங்கிலிருந்து அகற்றும் வரைக்கும் தமிழர்களுக்கு எந்தவிதமான நீதியும் கிடைக்கப் போவதில்லை. தமிழர்களுக்கு கிடைக்கும் நீதிக்கு தடைக்கற்களாக இவர்கள், குறிப்பாக சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராஜா

02 ஆம் பக்கம் பார்க்க

ஆகஸ்ட் முதல் உமாஓயா மின்னுற்பத்தி நிலையத்தில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்

ஆகஸ்ட்டில் உமா ஓயா மின்னுற்பத்தி நிலைய செயற்பாடுகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் உமா ஓயா மின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் அஜித் மான்னப்பெரும தெரிவித்தார்.

இந்த மின்னுற்பத்தி நிலையத்தின் மூலம் 120 மெகாவொட் மின்வலுவை உற்பத்தி செய்ய முடியும். எதிர்காலத்தில் மேலும் பல மின்னுற்பத்தித் திட்டங்கள் அமுலாக உள்ளன. இதன் மூலம் மின்சார

02 ஆம் பக்கம் பார்க்க

நோர்வூட்டில் கடும் மழை குடியிருப்புகள் கடும் சேதம்

க.கிஷாந்தன்

நோர்வூட் பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள வெஞ்சர் தோட்டத்தில் ஏற்பட்ட கடும் காற்றுடன் கூடிய மழை பெய்ததால் அங்குள்ள 10ற்கும் மேற்பட்ட தொழிலாளர் குடியிருப்புக்கள் சேதமடைந்துள்ளன.

வெஞ்சர் தோட்டத்தில் சில இடங்களில் வீசிய

02 ஆம் பக்கம் பார்க்க

யூலியான் அஸாஞ் கைது; உணர்த்தி நிற்பது என்ன?

ஈழத்தமிழர் மீதான இன அழிப்புப் போரில் சர்வதேச சக்திகளின் பங்கு பற்றிய பல இரகசியங்களை வெளிக்கொணர்ந்த விக்கிலீக்ஸ் செய்தி இணையத்தளத்தின் நிறுவனர் யூலியான் அஸாஞ் பிரித்தானியாவில் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். அமெரிக்கா வழங்கிய அழுத்தங்களினாலேயே அவர் பிரித்தானியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பூகோள அரசியல் நகர்வுகள், உள்நாட்டுப்போர்கள், நாடுகளிடையேயான மோதல்கள். உலக அளவில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் தீவிரவாதத் தாக்குதல்கள் பற்றிய விடயங்களில் அமெரிக்கத் தலையீடுகள், அமெரிக்க நிலைப்பாடுகள் குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் பல இரகசியத் தகவல்களை விக்கி லீக்ஸ் வெளிப்படுத்தியிருந்தது.

அந்தந்த நாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இருந்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் பல இரகசியத் தகவல்களையே விக்கி லீக்ஸ் வெளிப்படுத்தியிருந்தது.

அமெரிக்காவில் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செயற்பட்டவர்கள் மீது தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் கடும் அழுத்தம் செலுத்தப்பட்டபோதும், அதை எதிர்த்துச் செயலாற்றி வந்துள்ள யூலியான் அஸாஞ் போன்றவர்களே தற்காலத்தின் கருத்துச் சுதந்திரத்திற்கான சர்வதேசப் போராளிகளாகியுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனால் அமெரிக்கத் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறி யூலியான் அஸாஞ், கைது செய்யப்பட வேண்டுமென அமெரிக்கா பிடியானை பிறப்பித்திருந்தது. அதனால் யூலியான் அஸாஞ் சுவீடன் நாட்டுக்குத் தப்பிச் சென்றார்.

ஆனாலும் அங்கு பாதுகாப்பில்லை என்பதை அறிந்துகொண்ட யூலியான் அஸாஞ் பிரித்தானியாவுக்குச் சென்று அங்கு எக்குவடோர் நாட்டின் தூதரகத்தில் மறைந்திருந்தார்.

யூலியான் அஸாஞ் லத்தீன் அமெரிக்க நாடான எக்குவடோரின் பிரித்தானியாவில் உள்ள தூதராலயத்தில் அரசியற் தஞ்சத்தில் இருந்தவாறே தனது கருத்துச் சுதந்திரப் போரை நடாத்திவந்தார்.

ஆனால் அவரைக் கைது செய்யுமாறு அமெரிக்கா பிரித்தானிய அரசுக்கு அழுத்தம் கொடுத்து வந்தது. இதனால், இன்று பிரித்தானிய அரசு அந்த எக்குவடோர் தூதராலயத்தின் திடீர் அனுமதியுடன் அவரைக் கைதுசெய்திருப்பதாக இறுதியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

எனவே விக்கிலீக்ஸ் நிறுவுனரின் விடுதலைக்காகவும் கருத்துச் சுதந்திரத்திற்காகவும் பிரித்தானியா வாழ் ஈழத் தமிழர்கள் நன்றியுணர்வுடன் களமிறங்கவேண்டும் என்பதைக் கூர்மை இணையத்தள ஆசிரியபீடம் இத்தருணத்தில் தமிழர் தாயகத்தில் இருந்து நினைவுபடுத்துகிறது.

அமெரிக்கா வியட்நாம் மீது போர் நடாத்திக்கொண்டிருந்தபோது அதன் கொடுமைகளை உலகுக்கு, குறிப்பாக அமெரிக்க மக்களுக்கு தொலைக்காட்சி ஊடகம் வெளிக்கொணர்ந்து அந்தப்போரில் இருந்து அமெரிக்காவைப் பின்வாங்கவைக்கும் சாதனையை ஊடக சுதந்திரம் நிலைநாட்டிய காலம் ஒன்றிருந்தது.

அதேவேளை, 2012 ஆம் ஆண்டு முதல் பிரித்தானியாவில் உள்ள எக்குவடோர் நாட்டின் தூதரகத்தில் யூலியான் அஸாஞ் மறைந்து வாழ்ந்தார். எக்குவடோர் நாட்டின் அரச நிர்வாகத்துடன் கூட முரண்பட்ட நிலையில் விக்கி லீக்ஸ் செய்தி இணையத்தளத்திற்கான பணியைச் செய்வதிலும் பல இடர்களை யூலியான் அஸாஞ் எதிர்நோக்கியிருந்தார்.

எனினும் எக்குவடோர் அவருக்கு குடியுரிமையை கடந்த ஆண்டு ஜனவரி மாதம் வழங்கியிருந்தது. எக்குவடோர் வெளியுறவு அமைச்சர் மரியா கூறும் போது, யூலியான் அஸாஞின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அவருக்கு குடியுரிமை வழங்கப்பட்டு இருக்கிறது. இது அவருக்கு அதிக பாதுகாப்பை வழங்கும் என்றும் கூறியிருந்தார்.

யூலியான் அஸாஞ் அவுஸ்திரேலியாவை பிறப்பிடமாக்க் கொண்டவர். கணணி நிபுணர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை, யூலியான் அஸாஞ் பிரித்தானியாவில் கைது செய்யப்பட்டமை தொடர்பாக கொழும்பில் இருந்து வெளிவரும் வீரகேசரிப் பதிரிகையின் செய்தி முகாமையாளரும் தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான வீரகத்தி தனபாலசிங்கம் முகநூல் பதிவு ஒன்றில் இவ்வாறு கூறுகின்றார்.

மேற்குலக வல்லாதிக்க நாடுகளில் ஜனநாயக உரிமைகளுக்கும் குடியியல் சுதந்திரங்களுக்கும் இருக்கும் எல்லையை ஜீலியன் அசாஞ்சின் கைது வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது. எனப் பதிவிட்டுள்ளார்.

நன்றி: இணையம்

கூட்டமைப்பை...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

கூட்டமைப்பு உறுப்பினர்கள் உட்பட சகலரும் தமிழர்களை ஏமாற்றி தங்கள் சுகபோக வாழ்க்கையில் தமிழர்களுக்கு துரோகம் செய்து, காட்டிக் கொடுத்து பலவிதமான துன்பங்களில் மக்களை ஆழ்த்திக் கொண்டும் இருக்கின்றார்கள்.

அந்த ரீதியில் இன்னொரு மாற்றுத் தலைமை என்று எதிர்பார்க்கின்ற விக்னேஸ்வரன் ஐயாவின் நடவடிக்கைகளும் திருப்திகரமாக இல்லை. அவரும் தெற்கிலிருந்து ஒரு தீர்வு வரும் என்ற செயற்பாட்டில் இயங்கிக் கொண்டிருக்கிறார். தெற்கிலிருந்து தமிழர்களுக்கு தீர்வு வராது. தெற்கிலிருந்து தீர்வு வரும் என்று நம்பும் தலைமைகள் தமிழர்களுக்கு தலைமையாக இருக்க முடியாது. அதே ரீதியில் ஜனநாயகப் போராளிகள் கட்சியும் அண்மையில் அமெரிக்கத் தூதுவர்களை சந்தித்த பொழுது வட,கிழக்குக்கு மட்டும் அதிகாரப் பரவலாக்கல் தேவையில்லை. தெற்கிலும் சிங்களவர்களுக்கும் அதிகாரப் பரவலாக்கல் தேவை என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார்கள். சிங்களவர்களுக்கும் அதிகாரப் பரவலாக்கம் தேவை என்று கூறியிருப்பது தமிழ் மக்களை ஏமாற்றும் செயல்.

இந்தப் புதுவருடத்தில் தமிழர்களுக்கு சொல்ல வரும் செய்தி, அயல் நாடான இந்தியா தமிழர்களின் ஆரம்ப கால போராட்டங்களுக்கு எப்படி பல பிளவுகளை உருவாக்கி பல இயக்கங்களை வைத்திருந்ததோ, அதேபோல் இப்பொழுது காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான எந்தப் போராட்டங்களையும் கூறுபோட்டு விடுகின்றார்கள். தமிழர்களுக்கு இவ்வளவு காலமும் தீர்வு கிடைக்காததற்கு காரணம் இந்தியாதான். இந்த அவப்பெயரிலிருந்து தங்களை மீட்டுக் கொள்ள வேண்டும். சிங்கள தேசத்திற்கு தொடர்ந்து உதவிகளை வழங்குவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் தற்பொழுது மிகவும் விழிப்பாக இருக்கின்றார்கள். இப்படியான போலி முகவர்களான தமிழ் தேசிய கூட்டமைப்பை அரசியல் அரங்கிலிருந்து அகற்றி எறிவார்கள். அதற்கு நாங்கள் துணையாக இருப்போம்.

வாக்கு...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

அரசியல் இலாபத்தையே கருதுகிறார்கள். எங்களின் உரிமைக்குப் பிறகுதான் அபிவிருத்தி. ஆனால் உரிமையுடன் சேர்ந்து அபிவிருத்தியும் பயணிக்க வேண்டும் என்ற கட்டாயமும் இருக்கின்றது. ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பு சொல்லும் அபிவிருத்தி என்பது என்ன? மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதா? அதின் வரையறை என்ன என்பதை முதலில் பார்க்க வேண்டும்.

இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்துக் கொண்டு நாட்டில் நடக்கும் மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களில் இணைத் தலைமையாக அங்கம் வகித்துவருகின்றார்கள். வெறுமனே வீதி அமைப்பதும், கட்டடங்கள் அமைப்பதும் அபிவிருத்தியல்ல. யுத்தத்தால் ஒட்டுமொத்த பாதிப்புக்குள்ளான மக்களின் அடிமட்டத்திலிருந்து அவர்களின் வாழ்வாதாரம் எல்லாவற்றையும் கட்டியெழுப்ப வேண்டும். இன்று முன்னாள் போராளிகள் என்று சமூகமயப்படுத்தியுள்ள போராளிகளுக்கான நிரந்தர வாழ்வாதாரத் திட்டம் இல்லை. மாற்றுத்திறனாளிகளுக்கான வாழ்வாதாரத் திட்டம் இல்லை. பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு நிலைபேறான வாழ்வாதாரத் திட்டங்கள் இல்லை. மக்கள் பசி, பட்டினியுடன் இருக்கும் நேரம் அரசாங்கம் வீட்டைக் கட்டிக் கொடுப்பதால் அதன் மூலம் மாதாந்த வருமானம் வருகின்றதோ என்றால் இல்லை.

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தை அரசாங்கம் ஏமாற்றுகின்றது என்று கூறிக்கொண்டு, மறுபக்கம் கண்ணைமூடிக் கொண்டு அதற்கு ஆதரவு கொடுத்துக்கொண்டு அபிவிருத்தியையும் உரிமையையும் நோக்கிப் பயணிக்கின்றோம் என்றால் இந்த உரிமையைப் பற்றி பேசுவதற்கு இவர்களுக்கு அருகதை இல்லை. ஏனெனில் இவர்கள் உரிமையைக் கைவிட்டுவிட்டார்கள். மனிதகுலத்திற்கு எதிரான போரை நடத்திய இந்த அரசுக்கு இணைஅனுசரணையும் வழங்கிக் கொண்டு எங்களின் மக்களின் உரிமைகளைப் பேசுகின்றோம் என்று செல்வதற்கு அருகதையில்லை.

தங்களின் அரசியல்நலன் சார்ந்த வாக்குவங்கிக்கான வேலைத் திட்டங்களையே கூட்டமைப்பு செய்து வருகின்றது. உண்மையில் கடந்த காலங்களில் மாகாண சபைக்கு அதிகாரங்களைத் தர வேண்டுமென்று நாங்கள் பேசினோம். இன்றைக்கு முழு அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் மத்திய அரசுதான் செய்ய வெளிக்கிடுகின்றது.

அபிவிருத்தியை காணாத வடக்கில் மத்திய அரசுதான் அபிவிருத்திகளை செய்கின்றது. கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முழுவதும் மத்திய அரசின் கீழ் மாவட்டச் செயலகம்தான் செய்கின்றது. மாகாண சபைக்கு எதுவும் வழங்கப் படவில்லை.

கூட்டமைப்பைப் பொறுத்தவரை தொடர்ந்து வரும் அரசியல் தேர்தல்களங்களில் தாங்கள் மக்கள் பிரதிநிதியாக இந்த வாக்கு வங்கியை வசூலித்துக் கொண்டு இருக்க வேண்டும். நிலஆக்கிரமிப்பு, காணாமல் போனோர் விடயங்கள் போன்றன இன்று அரசியல் தீர்வுக்குள்ளால் தீர்க்கப்பட வேண்டும். ஆனால் இன்று அரசியல் தீர்வுத்திட்டம் காணாமல் போய்விட்டது. ஆகவே கூட்டமைப்பு மக்கள் நலன் சார்ந்து செயற்படாமல் தங்கள் நலன்சார்ந்து பேசுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நீண்டகாலம் இடம்பெயர்ந்தோருக்கான மீள்குடியேற்ற அமைச்சினால் வவுனியாவில் 116 வீடுகள் வழங்கி வைப்பு

வவுனியா நிருபர்

நீண்டகாலம் இடம்பெயர்ந்தோருக்கான மீள்குடியேற்ற அமைச்சினால் வவுனியா, பட்டானிச்சூர் கிராம அலுவலர் பிரிவில் தமிழ், முஸ்லிம் மக்களை உள்ளடக்கியதாக 116 வீடுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை உறுப்பினர்களான அப்துல்பாரி மற்றும் லரீப் ஆகியோரின் வேண்டுகோளுக்கு இணங்க வர்த்தக கைத்தொழில் மற்றும் நீண்ட காலம் இடம்பெயர்ந்தோருக்கான மீள்குடியேற்ற அமைச்சர் றிசாட் பதியுதீன் அவர்களினால் குறித்த வீட்டுத் திட்டம் பிரதேச செயலகத்தின் சிபார்சுக்கு இணங்க வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்து மீளகுடியேறிய நிலையில் நிரந்தர வீடு இன்றி தற்காலிக மற்றும் அரை நிரந்தர வீடுகளில் இருந்த தமிழ், முஸ்லிம் குடும்பங்களுக்கே குறித்த வீட்டுத் திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. பட்டானிச்சூர் கிராம அலுவலர் பிரிவில் உள்ள பட்டக்காடு, வேப்பங்குளம், பட்டானிச்சூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 50 தமிழ் குடும்பங்களுக்கும், 66 முஸ்லிம் குடும்பங்களுக்குமாக முதல்கட்டமாக 116 வீடுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

10 இலட்சம் ரூபாய் பெறுமதியான குறித்த வீட்டுத்திட்டத்திற்கான கட்டுமாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை வர்த்தக கைத்தொழில் மற்றும் நீண்டகாலம் இடம்பெயர்ந்தோருக்கான மீள்குடியேற்ற அமைச்சர் றிசாட் பதியுதீன் அவர்களின் வவுனியா நகர இணைப்பாளரும், நகர சபை உறுப்பினருமான அப்துல்பாரி, வவுனியா நகரசபை உறுப்பினர் ஏ.ஆர்.எம்.லரீப் ஆகியோர் வழங்கிவைத்தனர்.

நோர்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

கடும் காற்றுக்காரணமாக வீடுகளின் கூரைகள் மழையுடன் கூடிய காற்றில் அள்ளுண்டு போயுள்ளதாகவும், தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக வீடுகளில் காண்ப்பட்ட அத்தியவசிய பொருட்கள் மற்றும் ஆவணங்கள் பாடசாலை புத்தகங்கள் என அனைத்தும் நீரில் சேதமடைந்துள்ளன.

அத்துடன் கடும் காற்றினால் மரங்களின் கிளைகள் வீட்டின் கூரைகள் மீது முறிந்து வீழ்ந்துள்ளதாகவும் அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர்கள் கூரைகளை மீண்டும் சீர்செய்து குறித்த வீடுகளிலேயே தற்போது தங்கி வருகின்றனர்.

மேலும், மாலை வேளைகளில் இடி, காற்றுடன் கூடிய மழை பெய்வதால் அனைவரும் பாதுகாப்புடன், அல்லது பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்வது குறிப்பிடத்தக்கது.

ஆகஸ்ட்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

நெருக்கடிக்குத் தீர்வு காணப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

உமா ஓயா மின்வலு உற்பத்தி நிலையம் பிரத்தியேகமானது. இது நிலத்தின் கீழ் அமைந்துள்ள மின்னுற்பத்தி நிலையமாகும். உலகில் இது போன்ற மின்னுற்பத்தி நிலையங்கள் மிகவும் குறைவு. உமா ஓயா திட்டத்தின் மூலம் இரு போகங்களிலும் 6 ஆயிரம் ஹெக்டயர் காணியில் நெற்செய்கை மெற்கொள்ளலாம் என்று இராஜாங்க அமைச்சர் அஜித் மான்னப்பெரும மேலும் தெரிவித்தார்.

கல்வி...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

திட்டமொன்றினை விரைவில் நாட்டில் அமுல்படுத்த வேண்டிய தேவை காணப்படுவதோடு, அது தொடர்பிலான உரையாடலொன்றினை அரசியல்வாதிகள், கல்விமான்கள், புத்திஜீவிகள் மற்றும் துறைசார் நிபுணர்கள் ஆகியோரின் பங்குபற்றலில் நாட்டில் ஏற்படுத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை இன்று பிள்ளைகளின் கல்வியில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென தெரிவித்தார்.

பிரபல பாடசாலைகள் இலக்குடன் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் ஏற்படுத்தப்பட்டுள்ள போட்டித்தன்மை எமது நாட்டு பிள்ளைகளின் கல்விக்கு சிறந்ததல்ல என்பதோடு, இந்நிலைமை பிள்ளைகளின் எதிர்கால நன்மை கருதி விரைவில் மாற்றப்பட வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

பிரபல பாடசாலைகள் மற்றும் சிறந்த பாடசாலைகள் போன்ற எண்ணக்கருக்களால் இன்று எமது பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகளில் பாரியளவில் தாக்கம் ஏற்பட்டுள்ளதோடு, முறையான கல்வித்திட்டத்தின் ஊடாக சகல பாடசாலைகளையும் சிறந்த பாடசாலைகளாக மாற்றி அனைத்து பிள்ளைகளுக்கும் சம கல்வி உரிமையை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டமொன்று விரைவில் அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஆசிரியர்களின் பிரச்சினைகள் காரணமாக கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகள் தொடர்பாக இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ஆசிரியர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முறையான கொள்கையொன்றின் உருவாக்கம் தொடர்பில் விரைவில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என தெரிவித்தார்.

பிரபல பாடசாலைகள் எண்ணக்கருவினால் பெருமளவிலான மாணவர்கள் கொழும்பு நகர பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவதனால் கொழும்பு நகரத்தில் வசிக்கும் பிள்ளைகளுக்கு பாடசாலை அனுமதி இல்லாதுபோகும் அசாதாரணமான சூழல் உருவாகியுள்ளதையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

அத்தோடு கல்வியில் ஏற்பட்டுள்ள போட்டித்தன்மை காரணமாக ஒரு பாடசாலைக்கு அதிகளவிலான மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படுவதனால் கல்வித்தரம் மற்றும் ஒழுக்கத்துடன் கூடிய எதிர்கால தலைமுறையை கட்டியெழுப்புவதில் ஏற்படும் சவால்களையும் ஜனாதிபதி இதன்போது தெளிவுபடுத்தினார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை இரத்து செய்து, அதற்காக முன்வைக்கப்படும் மாற்று செயற்திட்டம் தொடர்பில் இதன்போது கல்வியியலாளர்கள் உள்ளிட்ட துறைசார் நிபுணர்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டன.

ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனெவிரத்ன, கல்வியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் கல்வித்துறைசார் நிபுணர்களும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

கூட்டமைப்பு...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

கொள்கின்றோம். ஆனால் வெறுமனே ஒரு தனிநபருடன் இந்தப் போர்க்குற்றங்களை முடிப்பதற்கு அனுமதிக்கக்கூடாது. இந்த அரசாங்கத்தை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படக்கூடிய வகையில் இந்த வழக்குகள் கொண்டு செல்லப்பட வேண்டும்.

ரெலோவும் தமிழரசுக் கட்சியும் ஒரே நிலைப்பாட்டிலேயே பயணிக்கின்றன. ரெலோ கட்சி தமிழ் மக்களுக்கு நம்பிக்கைத் துரோகம் இழைப்பதில் மிகப்பெரிய பங்குண்டு. 2009 மே மாதத்திற்குப் பிறகு ரெலோ அமைப்பு துரோகத்தனத்தை செய்யாமல் அன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் இணைந்து நேர்மையான நிலைப்பாட்டை எடுத்திருந்தால், தேசியம், சுயநிர்ணய உரிமையுடன்தான் ஒரு அரசியல்தீர்வு அமைய வேண்டும், என்ற நிலைப்பாட்டை கஜேந்திரகுமாருடனும், என்னுடனும், பத்மினி சிதம்பரநாதனுடனும் ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுத்திருந்தால், அந்த 22 பேரில் சம்பந்தன் ஒருமூலைக்குள் தள்ளப்பட்டிருப்பார்.

அதாவது, ரெலோவும், காங்கிரஸ் என்ற இரண்டு பங்காளிக் கட்சிகளும், அதே நேரம் செல்வம் அடைக்கலநாதன், சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நான், பத்மினி அக்கா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் என்று மிகப்பெரிய அணி இந்த உறுதியான நிலைப்பாட்டில் நிற்பதாக சம்பந்தனுக்கு காட்டி நெருக்கடியைக் கொடுத்திருக்கலாம்.

ஆனால் 2009 மே மாதம் 21 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் மாதம் வரைக்கும் அந்த நம்பிக்கையைக் கொடுத்துவிட்டு கடைசிநேரம் காலை வாரி, சம்பந்தன் எடுத்த நிலைப்பாடு சரி, சம்பந்தன் சொன்னபடி செயற்பட வேண்டும் என்று சொன்னதால்தான் அன்று சம்பந்தனின் பக்கம் பெரும்பான்மை போய் சம்பந்தன் எதேச்சதிகாரமாக வந்து தமிழ் மக்களுக்கு நம்பிக்கைத்துரோகம் இழைக்கின்ற வகையில், தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற நிலைப்பாடுகளைக் கைவிட்டு ஒற்றையாட்சியின் கீழ் செல்லும் முடிவை துணிச்சலாக எடுக்கக்கூடியதாக இருந்தது. அதனால்தான் நாங்கள் முரண்பட்டு வெளியேற வேண்டிய இடத்திற்கு தள்ளப்பட்டோம்.

ஆகவே அந்த ரெலோ இன்று தேசியம் பேசுவதும், அரசாங்கத்திற்கு எதிராகப் பேசுவதும், தமிழரசுக் கட்சிக்க எதிராகப் பேசுவதும் முழுக்க முழுக்க ஒரு அரசியல் நாடகம். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்புக்கு கிடைத்த தேசியப்பட்டியலில் ஒரு இரண்டரை வருடத்தை ஸ்ரீகாந்தவிற்கு கொடுத்திருந்தால், எல்லாரும் வாலைச் சுருட்டிக் கொண்டு அதற்குள் இருந்திருப்பார்கள். இப்பவும் தங்களின் ஆசன ஒதுக்கீடுகளுக்காகவும், தங்களின் இருப்பைத் தக்க வைப்பதற்காகவும் தான் இந்த நாடகம்.

அதனை மறுபக்கம் கஜேந்திரகுமார் தலைமையில் ஒரு பலமான அணி வளர்ந்துவிடக்கூடாது, அதை அழிப்பதற்கு என்ன வழிமுறைகளைச் செய்யலாம் என்று யோசித்துத்தான் இந்த நாடகம் நடக்கின்றது. இதை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எவ் ஆகிய இந்த மூன்று தரப்பும் பாராளுமன்றத்தில் அரசியலமைப்புக் குழுவொன்று உருவாக்கப்பட்டு அந்த அரசியலமைப்புச் சபையில், புதிய அரசியலமைப்பு தயாரிக்கின்ற வேலைத்திட்டம் நடைபெற்ற பொழுது, ஒற்றையாட்சி அரசியலமைப்பை முன்வைக்கின்ற தரப்புகளை இணைத்துக் கொண்டு செல்ல நாங்கள் தயாரில்லை.

விக்னேஸ்வரன் ஐயா நீண்டகாலமாக ஈ.பி.ஆர்.எல்.எவ் கைவிடக்கூடாது, அதை பலப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றார். அந்த வகையில் அவர் மக்களின் நலன்களைக் கைவிட்டு வெறுமனே தன்னுடைய மாகாண முதலமைச்சராக தான் இருந்தபொழுது, தனக்கு முண்டு கொடுத்தார்கள் என்பதற்காக, கண்ணை மூடிக் கொண்டு நன்றிக் கடனுக்காக அவர் பயணித்துக் கொண்டிருக்கிறாரோ அல்லது இந்திய அரசின் நலன்களை கருத்திற் கொண்டு அப்படி செய்கின்றாரா என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் தமிழ் மக்களின் நலன் அடிப்படையில் அவர் அந்த முடிவை எடுக்கவில்லை என்பது மட்டும் உண்மை.

சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ் மக்களின் நலனில் அக்கறையில்லாதவர். தமிழ் மக்களின் நலன்களை அடகுவைத்து, இந்தியாவினுடைய தேவைகளுக்காக இனத்தை எந்தவொரு இக்கட்டுக்குள்ளும் தள்ளக் கூடியவர் என்ற அடிப்படையில்தான் நாங்கள் சுரேஷுடன் கூட்டுச் சேரக் கூடாது என்ற முடிவுக்கு வருகின்றோம். அந்த விடயத்திற்கு விக்னேஸ்வரன் ஐயா துணைபோகின்றார் என்பது மிகப்பெரிய ஏமாற்றம். அது இந்த இனத்திற்கு விக்னேஸ்வரன் ஐயா செய்யப்போகும் மிகப் பெரும் அநியாயம். தமிழ் மக்கள் மாற்றம் என்று நேர்மையான மாற்று சக்தியை பலப்படுத்துவதற்கு முன்வரவேண்டும். அந்த உண்மையான, நேர்மையான தமிழ் மக்களுக்கான மாற்று சக்தி என்பது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இணைந்த கூட்டுத்தான். அந்த யதார்த்தத்தை விளங்கிக் கொண்டு மக்கள் அந்தத் தரப்பை பலப்படுத்துவதற்கு முன்வரவேண்டும்.

வவுனியாவில் என்ர பிறைஸ் சிறிலங்கா என்னும் சலுகைத் கடன் திட்டம் தொடர்பில் விழிப்புணர்வு

வவுனியா நிருபர்

வவுனியாவில் என்ர பிறைஸ் சிறிலங்கா என்னும் சலுகைக் கடன் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

2025 ஆம் ஆண்டு வளமான நாடு என்னும் தொனிப்பொருளில் நிதி அமைச்சினால் என்ர பிறைஸ் சிறிலங்கா என்னும் விசேட சலுகைக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் கீழ் வட்டி முழுவதையும் அரசாங்கம் செலுத்தும் வகையில் மாத்ய அருண, திரிசவிய, எரம்புவ கடன் திட்டங்களும், வட்டியில் முக்கால்வாசியை அரசாங்கம் செலுத்தும் வகையில் ரியசக்தி, கொவிநவோதய கடன் திட்டங்களும், வட்டியில் அரைவாசியை அரசாங்கம் செலுத்தும் வகையில் ரன் அஸ் வென்ன, ஜய இசுர உள்ளிட்ட பல்வேறு கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள், பண்ணையாளர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள், பட்டதாரிகள், பெண்கள் என பலரும் இதனை பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த சலுகைக் கடன் திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையை நிதி அமைச்சு கடந்த 50 நாட்களாக மேற்கொண்டு வருகின்றது.

வவுனியா நகரில் இந்த விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இளைஞர், யுவதிகள் இந்த சலுகைகக் கடன் திட்டம் தொடர்பான சுலோக அட்டைகளை ஏந்தியவாறும் கோசங்களை எப்பியவாறும் வெற்றியின் பேரணி என்னும் பெயரில் நகர வீதியில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டதுடன் கடன் திட்டம் தொடர்பான துண்டு பிரசுரங்களையும் விநியோகித்து இருந்தனர்.

உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தும் செயலமர்வு

நீலமேகம் பிரசாந்த்

புதிய தேர்தல் முறைமையின் கீழ் உள்ளூராட்சி சபைகள் உருவாக்கப்பட்டு ஓராண்டு காலம் பூர்த்தியாகியுள்ள நிலையில், 'உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தல்'எனும் தொனிப்பொருளில் செயலமர்வு ஒன்று கொழும்பில் நடைபெற்றது. மக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்த அகில இலங்கை உள்ளூராட்சி உறுப்பினர்களின் அமைப்பின்ஏற்பாட்டில் இடம் பெற்றது. கொழும்பு சம்பூத்வ ஜயந்தி மண்டபத்தில் கடந்த சனியன்று இடம்பெற்ற இந்த செயலமர்வுக்கு மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஸ் குணவர்தன (பா. உ) ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா (பா.உ), லங்கா சமசமாஜ கட்சி தலைவர் பேராசிரியர் திஸ்ஸ காரியவசம், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் ராஜா கொலுரே,நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் ,மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினர் ராஜ்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் கருணாரத்ன, மதர் ஸ்ரீ லங்கா அமைப்பின் தலைவி ஜானகி, தொழில்சார் கல்வி ஆலோசகர் பின்டோ உள்ளிட்டோர் வளவாளர்களாக கலந்து கொண்டு உள்ளூராட்சி மன்றங்களை சக்தி மையப்படுத்துவது தொடர்பாக விரிவுரைகளை வழங்கினர். இந்த செயலமர்வில் வடக்கு கிழக்கு மலையகம் உள்ள டங்களாக அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

வவுனியா வடக்கு பிரதேசசபையில் இருந்து முன்னணி வெளிநடப்பு

வவுனியா க.மதி

வவுனியா வடக்கு பிரதேசசபையின் அமர்வில் இருந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர்.

இதுபற்றி தெரியவருவதாவது,

வவுனியா வடக்கு பிரதேசசபையின் அமர்வு இன்று நெடுங்கேணி பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் சபையின் தலைவர் ச.தணிகாசலம் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது சபையில் கடந்த கூட்டறிக்கை முன்வைக்கப்பட்ட போது அறிக்கையானது தவறானது என ஒரு சில உறுப்பினர்கள் தெரிவித்ததன் அடிப்படையில் அறிக்கையானது வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன் போது பதினான்கு உறுப்பினர்கள் இக்கூட்டறிக்கை பிழையானது என வாக்களித்தமைக்கு அமைவாக அறிக்கை நிராகரிக்கப்பட்டது.

இதன் பின்னர் உறுப்பினர்களிற்கான நேர ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதன் போது பல்வேறுபட்ட கருத்து முரண்பாடுகள் சபையில் ஏற்பட்டது. தொடர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதேசசபை உறுப்பினர் சஞ்சுதன்; தனது கருத்திலே தங்களது பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்றும் தங்களது வட்டாரத்திற்கான அபிவிருத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தவிசாளர் பக்கசார்பாக செயற்படுகிறார் என்றும் கருத்து தெரிவித்ததற்கு அமைவாக தவிசாளருக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டது.

இதனால் இச்சபை நடவடிக்கையில் இருந்து தாம் வெளியேறுவதாக கூறி சபையை விட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களான வி.சஞ்சுதன், நிரஞ்சினி, விஜிகரன் ஆகியோர் வெளியேறி சென்றனர்.

மாட்டு வண்டி சவாரி மன்றம் யாழ்.மாவட்ட சங்கமாக பதிவு செய்யப்பட்டது

யாழ் மாவட்ட மாட்டு வண்டி சவாரி சங்கம் யாழ் மாவட்ட சங்கமாக பதிவு செய்யப்பட்டது. தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டுவண்டி சவாரி இலங்கையில் நீண்ட காலமாக நடார்த்தப்பட்டு வருகின்றது. சுமார் 50 ஆண்டுகளிற்கு மெலாக சவாரி திடல்கள் உருவாக்கப்பட்டு, காளைகள் புாட்டியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. ஆரம்ப காலத்தில் பசுக்களும் குறித்த போட்டிகளில் ஈடுபடுத்தப்பட்ட போதிலும், பசுக்களை இவ்வாறான போட்டிகளில் ஈடுபடுத்துவதை கால போக்கில் போட்டியாளர்கள் தவிர்த்து வந்தனர்.

இந்தியாவில் ஜல்லிகட்டு, மங்சாவிரட்டு உள்ளிட்ட காளைகளுடனான விளையாட்டுக்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில், இலங்கையின் குறிப்பாக வடக்கு பகுதியில் மாட்டுவண்டி சவாரி போட்டிகள் நடார்த்தப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களில் இருந்து காளைகள் அழைத்து வரப்பட்டு போட்டிகள் இடம் பெற்று வருகின்றன. ஆரம்ப காலத்தில் வீதிகளில் குறித்த போட்டிகள் இடம்பெற்று வந்ததாகவு'ம், கால ஓட்டத்தில் சவாரி திடல்கள் அமைக்கப்பட்டு புாட்டியாக இடம்பெறுவதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்த வருகின்றனர்.

இந்த நிலையில், மாட்டுவண்டி சவாரிகளை சட்டரீதியாக முன்னெடுத்து செல்வதற்கு சங்கங்களை பதிவு செய்வதில் பெரும் சிரமங்களை சாரியாளர்கள் எதிர்கொண்டு வந்தனர்.

மிருகவதை சட்டத்தின் கீழ் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுவிடும் என்ற அச்சமும் ஒரு தரப்பினரிடம் இருந்து வந்த போதிலும், தமிழர் பாரம்பரிய விளையாட்டான மாட்டுவண்டி சவாரியினை பலரும் தைரியத்துடன் தொடர்ந்தும் முன்னெடுத்து வந்தனர். இந்த நிலையில், மாவட்டுவண்டி சவாரி சேங்கங்களை பதிவு செய்வதற்கு அவ்வந்த சங்கங்கள் பல்வேறு முயற்சிகை எடுத்தவந்ததுடன், பல தரப்பினரிடமும் குாரியும் வந்தனர்.

இந்த நிலையில் குறித்த சங்கம் முதல் முதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் முயற்சியினால் குறித்த சவாரி சங்கம் முதல் முதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பதிவு சான்றிதழை கோவில் வீதி நல்லூரில் அமைந்துள்ள மக்கள் குறைகேள் சந்திப்பு நாளான புதன்கிழமை யாழ் மாவட்ட சவாரி சங்கத்திற்கான அனுமதியை சவாரி சங்கத்தின் உபதலைவராக செயற்பட்ட நித்தியானந்தம் கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அவர்கள் கையளித்திருந்தார். இந்நிகழ்வில் யாழ் மாவட்ட அமைப்பாளர் சின்னத்துரை உதயசீலன் ,யாழ் காரியாலய இணைப்பாளர் பிரதாப் ஆகியோரும் இணைந்திருந்தனர்.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டு வண்டி சவாரி மன்றத்தினை , யாழ் மாவட்ட சங்கமாக பதிவு செய்யப்பட்டு தமிழர்களின் பாரம்பரிய கலைக்கு நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் விவசாய பிரதி அமைச்சருமான அங்கஜன் இராமநாதன் அவர்கள் புத்துயிர் அளித்துள்ளதாக யாழ் மாவட்ட சவாரி சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். குறித்த சங்கத்தினை பதிவு செய்வதற்கு பெரும் முனைப்புக்களை நாம் எடுத்திருந்தோம்.

இதேவேளை பல தரப்பினரிடம் நாம் இந்த கோரிக்கைகளையும் முன்வைத்திருந்தோம். எனினும் பாராளுமன்ற உறுப்பினரின் முயற்சியினால் நாம் நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்து பதிவுக்கான சாத்தியம் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது.

தமிழர் பாரம்பரிய விளையாட்டு அழிவடைந்து போகாது, அடுத்த சந்ததியினரிடம் கையளிக்க இந்த பதிவு இன்றியமையாத ஒன்றாக இருக்கும் என நம்புவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மத்திய மாகாண வைத்தியசாலைகளில் நிலவும் தாதியர் பிரச்சினைகளுக்கு எதிர்வரும் மே மாதத்திற்குள் தீர்வு - ஆளுநர் மைத்திரி குணரத்ன தெரிவிப்பு

க.கிஷாந்தன்

மத்திய மாகாண வைத்தியசாலைகளில் நிலவும் தாதியர் பிரச்சினைகளுக்கு எதிர்வரும் மே மாதத்திற்குள் தீர்வு வழங்கப்படுமென மத்திய மாகாண ஆளுநர் மைத்திரி குணரத்ன தெரிவித்தார்.

மத்திய மாகாண ஆளுநர் மைத்திரி குணரத்ன நோர்வூட் பிரதேச மக்களுடன் சந்திப்பு ஒன்றை நடத்தினார்.

இச்சந்திப்பில் நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் மற்றும் நோர்வூட் பிரதேச மக்கள் இக்கலந்துரையாலில் கலந்து கொண்டனர்.

இதன் போது நோர்வூட் பிரதேசத்தில் காணப்படும் குறைபாடுகள் பற்றியும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலின் போது கருத்து தெரிவித்த, மத்திய மாகாண ஆளுநர், எனக்கு அதிகமான முறைப்பாட்டு கடிதங்கள் கிடைக்கப்பெற்றதை தொடர்ந்து இவ்விஜயத்தை மேற்கொண்டேன்.

இங்கு தெரிவித்த முறைப்பாடுகளில் ஒன்றான காணிப்பத்திரம் வழங்கப்படாமை தொடர்பில் கிராம உத்தியோத்தரிடம் கேட்ட போது ஏப்ரல் அல்லது மே மாதத்திற்குள் இதற்கான தீர்வை வழங்குவதாக கூறினார்.

அத்துடன் அம்பகமுவ பிரதேச செயலாளருடன் இதைப்பற்றி கலந்துரையாடி இதனை துரித கதியில் வழங்க ஏற்பாடு செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் நோர்வூட் பாடசாலையில் நிலவி வந்த இடப் பற்றாக்குறையை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. எனவே இதற்கான தீர்வை இன்னும் இரு மாதத்திற்குள் வழங்கப்படும் என தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஆளுநராக பொறுப்பேற்ற மூன்று மாதங்களில் பார்வையிட்ட இடங்களில் நோர்வூட் பிரதேசம் சிறந்த முறையில் உள்ளது. ஏனென்றால் இங்கு சகல வசதிகளுடன் கிளங்கன் வைத்தியசாலை காணப்படுகின்றது.

ஆனால் இங்கு வைத்தியர் மற்றும் தாதியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது. இப்பிரச்சினை இங்கு மற்றும் அல்ல நாட்டில் சகல பிரதேசங்களிலும் காணப்படுகின்றது. இதில் மத்திய மாகாணத்தில் 350 வைத்தியர்களுக்கான பற்றாக்குறை காணப்படுகின்றது.

அதனால் அரச வைத்திய அதிகாரிகளுடன் கதைத்திருப்பதாகவும் இச்சந்தர்பத்தில் அரச வைத்திய அதிகாரியிடம் தெரிவிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் பெருந்தோட்ட மக்கள் அதிகளவில் வசித்திவரும் மத்திய மாகாணத்திற்கு முதலில் பற்றாக்குறை நிவர்த்தி செய்து தருமாறு வேண்டுகோள் விடுக்கிறேன் என்றதுடன் தாதியரின் பற்றாக்குறையை மே மாதத்திற்குள் நிவர்த்தி செய்து தருவதாகவும் தெரிவித்தார்.

சட்டவிரோத மணல் அகழ்வு

கிளிநொச்சி அக்கராயன் மற்றும் ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளில் வீதிகளை குடைந்து சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெற்று வருவதாகவும் இதனைக்கட்டுப்படுத்தசம் பந்தப்பட்ட தரப்புக்கள் விரைந்த நடவடிக்கை எடுக்கவேண்;டுமென பிரதேச மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஸ்கந்த புரம் பகுதியில் குடியிருப்பு வீதிகளில் தொடர்ந்தும் மணல் அகழ்வுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் அக்கராயன்குளத்திற்கான நீரைசசேர்க்கும் ஆற்றினையும் அதனை அண்மித்த பகுதிகளிலும் சட்டவிரோதமான முறையில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறிப்பாக, பகல் வேளைகளில் உழவுஇயந்திரங்களில் ஏற்றப்படும் மணல் கெங்காதரன் குடியிருப்பு கரித்தாஸ் குடியிருப்பு போன்ற பகுதிகளில் ஆட்களற்ற காணிகளுக்குள் மணல் குவிக்கப்பட்டு இரவு வேளைகளில்; டிப்பர் வாகனங்களில் ஏற்றி வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வரும் மணல் அகழ்வுகளால் பிரதேச வீதிகள் மற்றும் பிரதான வீதிகள் மிக மோசமாக சேதமடைகின்றன.

இவ்வாறு இடம் பெறுகின்ற மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்துமாறு பலராலும் கோரிக்கை விடப்பட்டு வருகின்றது.

ஆனால், இதுவரை இதனைக்கட்டுப்படுத்த எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என கிராம மட்ட அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

குறிப்பாக, அக்கராயன் குளம் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள 200 மீற்றர் தொலைவிலுள்ள கெங்காதரன் குடியிருப்பு கரித்தாஸ்குடியிருப்பு என்பவற்றில் தினமும் இரவு வேளைகளில் டிப்பர் வாகனங்களில் மணல் ஏற்றிச் செல்கின்றது. இவவாறு பொலிஸ் நிலையத்திற்கு அருகில் நடைபெறுகின்ற சட்டவிரோத மணலைக்கூட பொலிசார் கட்டுப்படுத்த முன்வருவதில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ள பிரதேச மக்கள் இவ்வாறான சட்டவிரோதமான மணல் அகழ்வுகளைத்தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அட்டன் பன்மூர் ஓம் தேவி ஸ்ரீ கருமாரியம்மன் மஹா கும்பாபிஷேகம்

க.கிஷாந்தன்

மத்திய மலைநாட்டில் அட்டன் மாநகருக்கு அருகில் அமைந்துள்ள பன்மூர் ஊரில் எழுந்தருளி இருக்கும் ஓம் தேவி ஸ்ரீ கருமாரியம்மன் தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேக திருகுட முழுக்கு பெருஞ்சாந்தி பெருவிழா 1 நடைபெற்றது.

06.04.2019 சனிக்கிழமையுடன் ஆரம்பித்த கிரியாரம்பத்தை தொடர்ந்து 08.04.2019 மற்றும் 09.04.2019 ஆகிய இரு தினங்களும் எண்ணெய் காப்பு நடைபெற்றதுடன் 10.04.2019 அன்று காலை கங்கை கரையில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித தீர்த்தின் மூலம் மஹா கும்பாபிஷேக திருகுடமுழுக்கு பெருச்சாந்தி பெருவிழா நடைபெற்றது.

கிரியா கலாபமணி கிரியாகிரம ஜோதி பிரம்மஸ்ரீ சு. திவாகரக் குருக்களால் செய்து வைக்கப்பட்ட இந்த மஹா கும்பாபிஷேகத்திற்கு மத்திய மாகாண ஆளுநர் மைத்திரி குணரட்ன அவர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளமை குறிப்பிடதக்கது.

ஊடுருவல்காரர்களை விரட்டுவோம் பாஜக தலைவர் அமித்ஷா ஆவேசம்



பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் வங்கதேசத்தில் இருந்து இந்தியாவுக்குள் ஊடுருவியவர்களை விரட்டுவோம் என்று பாஜக தலைவர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

மேற்குவங்க மாநிலம் ராய்கஞ்ச் என்ற இடத்தில் நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பாஜக தலைவர் அமித்ஷா பேசியதாவது:

போலி மதச்சார்பற்ற கட்சிகள் சிறுபான்மை மக்களை வெறும் ஓட்டு வங்கிகளாக மட்டுமே பார்க்கின்றன. சிறுபான்மை மக்களின் முன்னேற்றத்துக்கு அக்கட்சிகள் எதுவும் செய்யவில்லை. மேற்குவங்கத்தில் முதல்வர் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் அரசு ஓட்டுக்காக சிறுபான்மையினரை திருப்தி செய்வதிலேயே ஆர்வமாக உள்ளது.

வங்கதேசத்தில் இருந்து மேற்குவங்கத்தில் ஏராளமானோர் சட்ட விரோதமாக ஊடுருவியுள்ளனர். இந்த ஊடுருவல்காரர்கள் கரையான்களைப் போன்றவர்கள். ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டிய உணவை இவர்கள் சாப்பிடுகின்றனர். நமது வேலைவாய்ப்புக்களை ஊடுருவல்காரர்கள் பறிக்கின்றனர். வெளிநாட்டில் இருந்து சட்ட விரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றவும் இந்தியக் குடிமக்களுக்கு நியாயமான உரிமைகள் கிடைக்கவும்தான் தேசிய குடிமக்கள் பேரேடு திட்டத்தை பாஜக அரசு கொண்டுவந்தது. மத்தியில் பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஊடுருவல்காரர்கள் என்ற கரையான்களை கண்டுபிடித்து விரட்டுவோம். அவர்களை நாட்டை விட்டு தூக்கி எறிவோம். அதேநேரம், இந்து மற்றும் புத்தமத அகதிகளுக்கு குடியுரிமை வழங்கப்படும்.

பணிக்குத் தடையாக மாதவிடாய் இருப்பதால் கருப்பையையே அகற்றிவிடும் ஏழைப் பெண்கள்

ஒப்பந்ததாரர்கள்-மருத்துவ முறைகேடுகள் கூட்டு சேர்ந்த அவலம்

பெண்கள் மாதவிடாய் காரணமாக தங்களால் பணியை இடையூறு இன்றி செய்ய முடியவில்லை இதனால் பணியிடங்களில் அபராதம் செலுத்த வேண்டியுள்ளது என்பதற்காக கருப்பையையே அகற்றி விடுவதாக அதிர்ச்சி ரிப்போர்ட் வெளியாக மகாராஷ்ட்ரா மாநில மகளிர் ஆணையம் உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை அளிக்க பீட் மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

மகாராஷ்டிராவில் பணிக்குச் செல்லும் கிராமத்துப் பெண்கள் பணிக்கு இடையூறாக மாதவிடாய் இருப்பதாலும் இதனால் பணிக்குச் செல்ல முடியாமல் ஊதிய இழப்பு, அபராதங்கள் கட்ட நேரிடுவதாலும் கருப்பையையே அகற்றிவிடுகின்றனர். இந்த அவலம் குறித்து தி இந்து பிசினஸ் லைனில் அதிர்ச்சி செய்தி அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து மகளிர் ஆணையம் பீட் மாவட்ட அதிகாரிகளுக்கு விசாரிக்க உத்தரவிட்டுள்ளனர்.

பெரும்பாலும் கரும்புக் கூலிகளாக இருக்கும் இந்த ஏழைப்பெண்கள் கருப்பையை நீக்க ஒப்பந்ததாரர்கள் முன்பணம் கொடுக்க மருத்துவ முறைதவறல்களுடன் இந்த கொடுமை மராத்வாதா ஏழைப் பெண்களின் சுரண்டலுக்கு வித்திட்டுள்ளது.

இந்த செய்தி அதிர்ச்சியும் வேதனையும் அளிப்பதகாக் கூறியுள்ள மகளிர் ஆணையம், தொடர்ந்து பெண்களுக்கு எதிரான வன்முறை நிகழ்த்தப்பட்டு வருவதாக வருத்தம் தெரிவித்துள்ளது.

2-3 குழந்தைகளுக்குப் பிறகு கருப்பையை பெண்கள் அகற்றுவது கிராமங்களில் சகஜம் என்று கூறப்பட்டாலும், கருப்பை அகற்றுவதினால் ஏற்படும் எலும்புத்தேய்மானம், மூட்டுத்தேய்ந்து போதல் உள்ளிட்ட பிரச்சினைகள் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை, இது அபாயகரமானது என்று சமூக ஆர்வலர்கள் விமர்சித்துள்ளனர்.

இதனையடுத்து இதனைக் கண்டுபிடித்து உண்மையை வெளிகொண்டு வந்து காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும், விசாரணையின் ஒவ்வொரு படியையும் தங்களுக்குத் தெரிவிக்கவும் மகளிர் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

செவ்வாயன்று தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் மகாராஷ்ட்ரா தலைமைச் செயலர் யுபிஎஸ் மதனுக்கு நோட்டீஸ் அனுப்பி உடனடியாக இதில் தலையிட்டு சட்ட நடவடிக்கை எடுக்குமாரு வலியுறுத்தியுள்ளது.

பணிக்குச் செல்லும் ஏழை கிராமப்புற பெண்களின்

வேதனையை அதிகரிக்கும் இத்தகைய செயல்களை அனுமதிக்க முடியாது என்று மகளிர் ஆணையம் ஆவேசமாகத் தெரிவித்துள்ளது.

தி இந்து பிசினஸ் லைன் அம்பலப்படுத்திய விவரங்களின் கொடூரமான பக்கங்கள் இதோ:

15-16 வயதிலேயே திருமணம் நடந்து விடுகிறது. வறட்சிப்பகுதியான மராத்வாதா பெண்கள் அடுத்த 2 ஆண்டுகளில் தாயாகி விடுகின்றனர். 22-23 வயதில் கருப்பையை அகற்றிக்கொள்கின்றனர். அதன் பிறகு கரும்புக் கூலிகளாக இருக்கும் இவர்கள் வாழ்நாள் முழுதும் கூலிவேலையை இடையூறு இல்லாமல் செய்து வருகின்றனர்.

மாதவிடாய் உள்ளிட்ட பிரச்சினைகள் காரணமாக பணிக்கு வரமுடியாத நாட்களுக்கு சம்பளம் இல்லை, மேலும் அபராதங்களையும் ஒப்பந்ததாரர்கள் வசூலித்து விடும் அராஜகம் இருந்து வந்ததால் கருப்பை இருந்தால்தானே மாதவிடாய் சிக்கல், அகற்றிவிடுவோம் என்று முடிவெடுக்கின்றனர், இதற்கு ஒப்பந்ததாரே முன்பணம் கொடுக்கும் அவலங்களும் தொடர்கதையாகி வந்துள்ளது. இந்த முன்பணம் இவர்கள் கூலியில் பிடித்தம் செய்யப்படும்.

இதோடு பணப்பேய் மருத்துவ உலகமும் ஒப்பந்ததாரர்களுடன் கைகோர்த்துக் கொண்டு சட்டவிரோதமாக கருப்பை அகற்ற அறுவை சிகிச்சைகளை செய்து வருகின்றனர். அதாவது வெள்ளை அல்லது சிகப்புப் போக்கு புற்றுநோயின் அறிகுறி என்று கூறி பயமுறுத்தி கருப்பையை அகற்றுவதுதான் சிறந்தது என்று பரிந்துரைத்து இந்த அக்கிரமங்களைச் செய்ததாக் தி இந்து பிசினஸ் லைன் அதிர்ச்சி ரிப்போர்ட் தெரிவித்துள்ளது. கருப்பையுடன் ஓவரியும் சேர்ந்து அகற்றப்படுவதும் கிராமம் கிராமமாக நடைபெற்று வருவதும் அம்பலமானது.

மேலும் கருப்பை அகற்ற அறுவைசிகிச்சை செய்து கொண்ட பின் அவர்களுக்கு போதிய ஓய்வும் அளிப்பதில்லை, சதா வேலை வேலை என்று உழைக்க வைத்து சுரண்டப்படுகின்றனர். இத்தகைய பெண்களின் கணவன்மார்களும் மனைவியின் வேலை எந்தவிதத்திலும் தடைபட்டு விடக்கூடாது என்பதில் சுரண்டலுடன் கைகோர்த்துள்ள அவலமும் நடந்து வருகிறது.

கருப்பையை அகற்றிய பிறகு அவர்கள் 'பெண்கள் இல்லை, வேலை செய்யும் எந்திரம்' என்று சமூக ஆர்வலர் ஒருவர் வேதனை தெரிவித்துள்ளார்.

ஆண்டுக் கணக்கில் தேர்தல் என்றால் என்னவென்றே தெரியாத கிராமம்... பசி.. நோய்மையால் நடக்கக் கூட முடியாத மக்கள்

தண்டகாரண்ய கிராமங்கள் இவற்றில் பல தேர்தல் காணாதது, வேட்பாளரைப் பார்த்தே ஆண்டுகள் பல ஆன கிராமங்கள். மத்திய இந்தியாவின் தண்டகாரண்ய வனப் பகுதியில் கிராம அதிகாரியாக பணியாற்றும் 37 வயது விவசாயக் கூலி தான் பதவியை விட்டே ஓடி விடலாமா என்று யோசிக்கிறார்.

மகாராஷ்டிராவின் கட்சிரோலியிலிருந்து 190கிமீ தூரத்தில் உள்ள கஸ்னாசுர் என்ற குக் கிராமத்தின் 123 குடிமக்களுக்கு முன்ஷி மாதவி என்ற இந்த விவசாயக் கூலிதான் பொறுப்பு.

ஏப்ரல் 22, 2018-ல் 40 மாவோயிஸ்ட்கள் கிராமத்துக்கு அருகில் என்கவுண்டர் செய்யப்பட்ட பிறகே 27 குடும்பங்கள் இங்கே கடும் பீதியில் வாழ்ந்து வருகின்றனர். இந்த என்கவுண்டர் 'கேள்விக்குரியது' என்று பிற்பாடு சில உரிமைகள் போராளிகள் விமர்சித்ததும் கவனத்துக்குரியது.

ஏப்ரல் 11 தேர்தல் நாள், தத்கவானிலிருந்து 8 கிமீ கடும் பயணம் மேற்கொண்டு செல்ல வேண்டிய இந்தக் கிராமத்திற்கு இந்திய ஜனநாயகத்தின் மிகப்பெரிய கொண்டாட்டமான தேர்தல் திருவிழா நடப்பதே தெரிந்திருக்கவில்லை.

கிராமத்தினரில் பெரும்பாலானோரிடம் வாக்காளர் அட்டை கிடையாது. மக்களில் பெரும்பாலானோருக்கு உடல் முழுதும் சிரங்குகள் கொண்ட சரும நோய், இன்னும் சிலருக்கு தீரா சரும நோய்கள், மிகவும் பரிதாபகரமான வறுமை, பசி.. அதாவது அருகில் இருக்கும் வாக்குச்சாவடிக்குக் கூட நடக்கக் கூட முடியாத ஒரு வறுமைவாய்ப்பட்ட மக்கள்.

'தேர்தல் நாளன்று சிலர் வருவார்கள் தத்கவான் வாக்குச்சாவடிக்கு நடக்க முடியக்கூடியவர்களை அழைத்துச் செல்வார்கள். அங்கு நாங்கள் என்ன செய்வது என்பதே எங்களுக்குத் தெரியாது' என்கிறார் மாதவி.

வாகனங்கள் கூட செல்ல முடியாத அல்லப்பள்ளி-பாம்ரகாட் சாலையின் முடிவில் இந்த கிராமம் உள்ளது. தண்டகாரண்ய காடுகளுக்கு அருகில் உள்ளது, இங்குதான் நக்சலைட்டுகள் ஆதிக்கம் அதிகம். இங்கு தேர்தல் வாசனையே கிடையாது, அரசியல் கட்சிகள் இங்கு வாக்குச் சேகரிக்கவும் வருவதில்லை.

காட்டுக்குள் ஆழமாகச் சென்றால் வேட்பாளர் என்பவரே ஒரு இல்லாத ஐந்துதான். இங்கு வசிப்பவர்களுக்கு உடலில் சொரி சிறங்கு, படுத்தபடுக்கையாக்கும் தோல் நோய் இவர்கள் வாக்கிக்க நினைத்தாலும் முடியாது. பெரும்பாலும் ரத்தச் சோகை, வைரல் காய்ச்சல் ஆகியவற்றுடன் வறுமையில் இவர்கள் காலத்தை கழிக்கின்றனர். தலைவலி, காய்ச்சல் எவ்வளவு பெரிய வியாதியாக இருந்தாலும் கோயில் பூசாரி கொடுக்கும் மருந்துதான்.

இந்நிலையில் கிராமத்தினர் பாதுகாப்புப் படைக்கு தகவல் அளிக்கும் சந்தேகத்தின் பேரில் 3 பேரை மாவோயிஸ்ட்கள் சுட்டுக் கொன்ற அவலமும் நடந்துள்ளது. இது கிராம மக்களிடையே கடும் பீதியைக் கிளப்பியுள்ளது. 2018 என்கவுண்ட்டருக்குப் பிறகு அரசு வாக்குறுதி அளித்த நிவாரணம் இன்னும் வந்து சேர்ந்தபாடில்லை. கட்சிரோலி கலெக்டர், கிராமத்தைத் தத்து எடுத்துக் கொண்ட போலீஸ் உயரதிகாரி ஆகியோர் செய்யும் சிறு உதவி தவிர இப்பகுதிகளில் எந்த ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. உள்ளூர் நிர்வாகத்திடமிருந்து சில சிறிய உதவிகள் கிடைத்து வருகின்றன அவ்வளவுதான். மாற்றம், வளர்ச்சி, சேவை செய்யவே பிறந்திருக்கிறேன் என்று தேர்தல் சமயத்தில் கூவும் அரசியல் வாதிகள் எங்கே? என்கின்றனர் சில சமூக ஆர்வலர்கள்.

அசாஞ்சே கடந்து வந்த பாதை: தப்பிச் சென்றது முதல் அடைக்கலம் தேடியது வரை!

விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே இன்று லண்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். ஜூலியன் அசாஞ்சே மீது ஸ்வீடனில் பாலியல் குற்றச்சாட்டு வழக்குகள் இருந்த நிலையில் அவரை லண்டன் போலீஸார் கைது செய்தனர்.

ஆஸ்திரேலியா நாட்டின் குயின்ஸ்லாந்து பகுதியைச் சேர்ந்தவர் அசாஞ்சே. 47 வயது மிக்க அசாஞ்சே 2006-ல் தொடங்கப்பட்ட விக்கிலீக்ஸ் புலனாய்வு இணையதளத்தில் ஒரு முக்கிய அங்கமாக பொறுப்பேற்றார்.

அதன்மூலம் எண்ணற்ற புலனாய்வுச் செய்திகளை வழங்கினார். அமெரிக்க ராணுவ ரகசியங்களை வெளியிட்டதால், பென்டகனின் பழிவாங்கலுக்கு ஆளானார். அவர்களிடமிருந்து தப்பிக்க அவர் பட்டபாடு ஹாலிவுட் திரைக்கதைகளை விஞ்சக்கூடியது.

தப்பிச் சென்று அடைக்கலம் தேடியதுமுதல் இன்று கைதாகியுள்ளது வரை அசாஞ்சே கடந்து வந்த பாதை இதோ:

ஜூலை முதல் அக்டோபர் வரை 2010: ஆப்கன் மற்றும் ஈராக்கில் நடைபெற்ற போர்கள் குறித்து அமெரிக்க ராணுவ ரகசியங்கள் அடங்கிய 4,70,000 ராணுவ ஆவணங்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டது. இதன் பின்னர் அரசின் 2,50,000 ரகசிய (டெலிகாரம் உள்ளிட்ட) கேபிள் தகவல்களையும் விக்கிலீக்ஸ் வெளியிட்டது.

நவம்பர் 2010: அசாஞ்சே மீது பாலியல் குற்றச்சாட்டு தொடர்பாக கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. அசாஞ்சே அதை மறுத்தார்.

டிசம்பர் 2010: ஸ்வீடன் நீதிமன்றம் பாலியல் குற்றச்சாட்டு கூறியதை அடுத்து அசாஞ்சே லண்டன் போலீஸில் தானே சென்று சரணடைந்தார். அவரை ஸ்வீடனிலிந்து நாடு கடத்துவதற்கான ஒரு கோரிக்கை நிலுவையில் உள்ளதைத் தொடர்ந்து அவர் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் ஸ்வீடனின் குற்றச்சாட்டுகள் அவதூறு எனக்கூறப்பட்டு அவர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

பிப்ரவரி 2011: பிரிட்டிஷ் நீதிமன்றம் அசாஞ்சேவை ஸ்வீடனுக்கு நாடு கடத்த உத்தரவிட்டது. அசாஞ்சா அங்கே சென்றால் ஆவணங்களை வெளியிட்டதற்காக அமெரிக்காவிடம் தன்னை ஒப்படைத்துவிடுவார்கள் என்று அச்சம் தெரிவித்தார்.

ஜூன் 2012: இந்நிலையில் அசாஞ்சே லண்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் தஞ்சம் கோரினார். பின்னர் அவரது கோரிக்கை ஏற்கப்பட்டு அரசியல் புகலிடம் பெற்று பாதுகாப்பு கிடைத்தது.

அக்டோபர் 2013: ஈக்வடார் தூதரகம் அசாஞ்சேவை அந்நாட்டு தலைநகரமான கியூட்டோவிற்கு அனுப்பிவைக்க அனுமதி கோரியது.

ஜனவரி 2016: ஸ்வீடன் வழக்கறிஞர்கள் அசாஞ்சேவை லண்டனில் வைத்து விசாரிப்பதற்கு விடுத்த கோரிக்கையை கியூடோ நிராகரித்தது.

பிப்ரவரி 2016: அசாஞ்சே தன்னிச்சையான காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக பிரிட்டன் மற்றும் ஸ்வீடன் ஆகிய நாடுகளிடமிருந்து இழப்பீடு கோர முடியும் என்றும் ஐநா பணிக்குழு தெரிவித்தது. தங்களுக்கு இதில் அதிகாரமில்லை என மறுத்தன.

ஜனவரி 2017: அவரது உரிமைகளுக்கு முழு உத்தரவாதம் தரப்படுமென்றால் அவர் அமெரிக்காவுக்குச் சென்று விசாரணையில் கலந்துகொள்ள முடியும் என்று விக்கிலீக்ஸ் தெரிவித்தது.

மே 2017: அசாஞ்சே மீது நடைபெற்று வந்த பாலியல் குற்றச்சாட்டு விசாரணையை முடித்துக் கொள்வதாக ஸ்வீடிய நீதிமன்றம் தெரிவிக்கிறது. எனினும் பிரிட்டிஷ் போலீஸார், தூதரகத்திலிருந்து அசாஞ்சே வெளியே வரும் பட்சத்தில், 2012-ல் அசாஞ்சேவுக்கு அளிக்கப்பட்ட ஜாமீன் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இப்பொழுதும் அவரைக் கைது செய்ய முடியும் எச்சரிக்கை விடுத்தது.

டிசம்பர் 2017: அசாஞ்சேவுக்கு ஈக்வடார் குடியுரிமை அளித்து கியூட்டோ அனுமதி வழங்குகிறது. அசாஞ்சேவுக்கு தாங்கள் குடியுரிமை அளித்துள்ள நிலையில் அவரைக் கைது செய்யாமல் தூதரகத்தை விட்டு வெளிநாடு செல்ல அனுமதிக்க வேண்டுமென ஈக்வடார் கோரிக்கையை பிரிட்டிஷ் நிராகரித்தது.

ஜனவரி 2018: அசாஞ்சே தொடர்பாக தொடர்ந்து ஏற்பட்டு வரும் ஆட்சேபனைக்குரிய சூழ்நிலையைத் தீர்க்க ஒரு நடுவர் வேண்டுமென ஈக்வடார் தெரிவித்தது.

பிப்ரவரி 2018: உடல்நிலையைக் காரணம் காட்டி பிரிட்டிஷ் போலீஸாரால் கைது செய்யப்படுவதிலிருந்து விலக்கு பெறும் ஒரு சிறிய முயற்சியையும் அசாஞ்சே இழந்தார்.

மார்ச் 2018: மற்ற நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற ஒப்பந்தத்தை மீறியதாக அசாஞ்சேவுடனான அனைத்துத் தகவல் தொடர்புகளையும் ஈக்வடார் துண்டித்தது.

அக்டோபர் 2018: லண்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் தங்கியுள்ள அசாஞ்சேவின்மீது புதிய நிபந்தனைகளை ஈக்வடார் விதிக்கிறது. அதன்படி தங்களைமீறி அசாஞ்சே செயல்பட்டால் அடைக்கலம் முடிவுக்கு வரும் என்று எச்சரித்தது.

நவம்பர் 2018: அமெரிக்க அரசு வழக்கறிஞர்கள், அசாஞ்சே மீது சந்தேகத்திற்கு இடமின்றி ஒரு முத்திரையிடப்பட்ட குற்றச்சாட்டு தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது என்று கூறினர்.

ஏப்ரல் 2019: ஈக்வடார் அதிபர் லெனின் மொரெனா, அசாஞ்சே புகலிடத்தின் நிலைகளை பலமுறை மீறியுள்ளதாகக் கூறினார். அசாஞ்சே மீது உள்ள விதிமீறல் குற்றச்சாட்டுகள் மீது விசாரணை நடத்துவதற்கான தகுதி குறித்து ஆராய வரும் ஏப்ரல் 25 அன்று 'சுதந்திர உரிமைகளின் நிபுணர்' ஒருவர் அசாஞ்சேவைப் பார்க்க வருவதாக அறிவிக்கப்பட்டது.

ஏப்ரல் 11, 2019: இதற்கிடையில் ஈக்வடார் தூதரகம் அசாஞ்சேவுக்கு அளித்து வந்த புகலிடத் தகுதியை திரும்பப் பெற்றது. இந்நிலையில் பிரிட்டிஷ் போலீஸார் அசாஞ்சேவை கைது செய்தது.

ஜூலியன் அசாஞ்சேவின் கைது பத்திரிகை சுதந்திரத்துக்கான இருண்ட தருணம்: எட்வர்டு ஸ்னோடன்



ஜூலியன் அசாஞ்சேவின் கைது பத்திரிகை சுதந்திரத்துக்கான இருண்ட தருணம் என்று அமெரிக்கா குறித்த ரகசியத் தகவல்களை வெளியிட்ட எட்வர்டு ஸ்னோடன் தெரிவித்துள்ளார்.

விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே லண்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார். ஜூலியன் அசாஞ்சே மீது ஸ்வீடனில் பாலியல் குற்றச்சாட்டு வழக்குகள் இருந்த நிலையில்அவரை லண்டன் போலீஸார் கைது செய்துள்ளனர்.

ஈக்வேடார் அரசு அசாஞ்சேவுக்கு வழங்கிய அடைக்கலத்தை வாபஸ் பெற்றதைத் தொடர்ந்து அவர் தூதரக அதிகாரிகளால் அழைக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட அசாஞ்சே விரைவில் வெஸ்ட் மின்ஸ்டர் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளார் என்று லண்டன் போலீஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அசாஞ்சேவை லண்டன் போலீஸார் இழுத்துச் செல்லும் வீடியோ ஒன்று வெளியாகி உள்ளது.

இந்த வீடியோவைக் குறிப்பிட்டு எட்வர்ட் ஸ்னோடன், 'ஈக்வேடார் நாட்டு தூதரக அதிகாரிகள் தூதரகத்துக்குள் நுழைந்து விருது வென்ற ஒரு பத்திரிகையாளரை இழுத்துச் செல்ல லண்டனின் ரகசிய போலீஸாரை அழைத்துள்ளனர். அசாஞ்சேவை விமர்சிப்பவர்கள் வேண்டுமானால் இதைக் கண்டு மகிழ்ச்சி அடையலாம். ஆனால் இது பத்திரிகை சுதந்திரத்துக்கான இருண்ட தருணம்' என்று பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, அமெரிக்காவின் உளவு ரகசியங்கள் பலவற்றை வெளிப்படுத்தி பரபரப்பை ஏற்படுத்தியவர் ஸ்னோடன்.

பிற நாடுகளின் அரசு செயல்பாடுகளையும், சொந்த நாட்டு மக்களையும் அமெரிக்க உளவு அமைப்புகள் தொடர்ந்து ரகசியமாகக் கண்காணித்து வருவதை அவர் உலகுக்கு பகிரங்கப்படுத்தினார். இதன் காரணமாக அமெரிக்காவில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட எட்வர்டு ஸ்னோடன், அதனைத் தொடர்ந்து ரஷ்யாவில் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி
உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..
ஞாயிற்றுக்கிழமை 14.04.2019
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

புத்தாண்டில் தமிழர்களுக்கு புதுவிடிவுகள் கிடைக்குமா?

தமிழ்-சிங்கள புத்தாண்டு பிறந்து விட்டது. இந்த விகாரி ஆண்டிலாவது பலதசாப்தமாக பேரினவாதிகளால் பாதிக்கப்படும் தமிழ் மக்களுக்கு புதுவிடிவுகள் பிறக்க வேண்டும். தமிழர்களின் இனவிடுதலைகள் மழுங்கடிக்கப்பட்டு ஒரு தசாப்தமாகிவிட்டது. ஆனாலும் தமிழ் மக்களின் வாழ்வில் விடிவுகள் உருவாகவில்லை. தமிழ் அரசியல் கைதிகள் இன்னமும் விடுதலை இன்றி சிறைகளில் வாடுகின்றார்கள். இறுதித் தீர்வாக முன்வைக்கப்பட்ட புதிய அரசியல் திட்டத்தை காணாமல் போனோர் அலுவலகம்தான் தேட வேண்டும் என்று பொறுப்புள்ள அரசாங்க அமைச்சர் விகடமாக பேசும் நிலை உருவாகியுள்ளது. காணிப்பிரச்சினைகள், சிங்கள, பௌத்த மயமாக்கல், காணாமல்போனோர் பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு இல்லை. இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றது. ஆளும் நல்லாட்சி அரசாங்கமும் தமிழர்களின் ஆதரவோடு தமது அரசியலை முன்னகர்த்துகின்றனரே தவிர தமிழ் மக்களுக்கு எவ்வித அரசியல் தீர்வும் பெற்றுத்தருவதாக தெரியவில்லை. தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் ஆதரவு தெரிவிக்கின்றது. தமிழ் மக்களுக்கு எவ்வித அரசியல் இலாபங்களையும் பெற்றுக் கொடுக்கவில்லை. தமிழ் மக்களுக்கான மாற்றுத்தலைமைகள் தொடர்பான சிந்தனைகள் இன்று வலுவடைந்துள்ளன. கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, முன்னாம வடமாகாண முதலமைச்சரின் கட்சி, முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி என்ற சிந்தனைகளும் இவை கருத்தளவில் ஒன்றிணையுமா, தமிழ் தேசிய கூட்டமைப்பில் இணைந்துள்ள கட்சிகள் பணம், பதவி என்று தமிழ் அரசியல் ஊழல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இவற்றுக்கான தீர்வை எதிர்கால அரசியல் தேர்தலில் கண்டு தெளிவோம். பிறக்கும் விகாரி புத்தாண்டு ஒரு தேர்தல் ஆண்டாகும். அந்தத் தேர்தல் ஆண்டில் மக்களின் வாக்குகளை சுவீகரிக்கும் முடிவில் அரசியல் கட்சிகள் வியூகம் அமைத்து செயற்படுகின்றன. பேரினவாதக் கட்சிகள் தொடர்ந்தும் சிக்கள மக்களின் பெரும்பான்மை வாக்குகளை தமக்குள் பெறுவதிலேயே முயற்சித்துச் செயற்படுகின்றன. கடந்தகால அரசியல் நகர்வுகள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த தரப்பினரும் அவரின் அரசியல் கட்சியுமான பொதுஜன பெரமுனவும் தமிழ் பேசும் மக்களின் வாக்குகளைப் பெறுவது கடினம் என்பதை உணர்ந்த ஐக்கிய தேசிய கட்சி, தாம் தமிழ் பேசும் மக்களின் வாக்குகளைப் பெற்று விடுவோம் எனும் நம்பிக்கை தமிழ் பேசும் மக்களின் அரசியல் தேவைகளை நிராகரிக்கின்றன. இவற்றை வரவிருக்கும் தேர்தல் முடிவுகள் தான் காட்டிக் கொடுக்கும். இந்நிலையில் தமிழ்பேசும் அரசியல் தலைமைகள் பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டும். பிறக்கும் புத்தாண்டு தமிழர்களின் புத்தாண்டு மாத்திரமல்ல, சிங்கள மக்களின் புத்தாண்டாகவும் அமைகின்றது. இந்தப் புத்தாண்டிலாவது தேர்தல்களை மையப்படுத்தி தமிழ் மக்களுக்கு நல்லதொரு நிரந்தரத் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும். முதலில் மாகாணசபை தேர்தல், பொதுத்தேர்தல், ஜனாதிபதித் தேரத்தல் என்ற தீர்மானம் இல்லாத நிலையில் அரசியல்வாதிகள் தம்மைப் பலப்படுத்துவதில் முன்னிற்கின்றனரே தவிர மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுத் தரவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பினர் எவ்வித நிபந்தனைகளுமின்றி வரவு -செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்குகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் பிரேரணைக்கு காலஅவகாசம் வழங்குவதற்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். ஆனால் தமிழ் மக்களின் அடிப்படைப்பிரச்சினைகள் வேலையில்லாப் பிரச்சினைகள், புனர்வாழ்வுகள், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு எவ்வித முக்கியத்துவமும் கிடைப்பதில்லை. பிறக்கும் புத்தாண்டிலாவது தமிழர்களுக்கும் அரசியல் ரீதியான விடிவு கிடைக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

வருடப் பிறப்பும் போராட்டங்களும்

இலங்கையில் தமிழ் இனம், தனது இன விடுதலைக்காக சுமார் எழுபது வருடங்களாக ஒப்பற்ற தியாகங்களைச் செய்து போராடி வருகின்றது. இதனால் போராட்டம் என்பது தமிழ் மக்களின் வாழ்க்கையில் எழுதப்பட்ட விதியாக பரிணமித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு காலம் காலமாக தமிழ் மக்கள் தமது உரிமைக்காக போராடி வருகின்ற நிலவரமே சான்று பகர்கின்றது. அத்துடன் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கு பொறுப்பு வாய்ந்த தமிழரசுக் கட்சி இன்று பல்வேறு இழுத்தடிப்புக்களையும் அசமந்தப் போக்குகளையும் கடைப்பிடிப்பதால் இன்று தமிழர்கள் வாழ்வில் எஞ்சப்போவது வெறும் ஏமாற்றமாகவே இருக்கப்போகின்றது. இப் பின்னணியில் தமிழர்களின் விடுதலை காண பல அரசியல் கட்சிகள், விடுதலை அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. விடுதலைப் புலிகளின் நேரடியான பங்குபற்றல் மற்றும் ஒப்புதலுடன் 2001 ஒக்டோபர் 20 ஆம் திகதி பிரசவித்ததே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

ஆகும்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (இ.த.அ.க), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF), தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO), அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (²-F-Ä-F-) என நான்கு கட்சிகள் ஒன்றிணைந்து தோற்றம் பெற்றதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அந்த வகையில், 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 15 ஆசனங்களையும் 2004 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 22 ஆசனங்களையும் 2010 ஆம் ஆண்டில் 14 இடங்களையும் 2015 ஆம் ஆண்டு தேர்தலில் 16 இடங்களையும் கைப்பற்றியது. அமோக வெற்றி வாகை சூடியது. 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் விலகிக் கொண்டது. தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம் (PLOTE) இணைந்து கொண்டது.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல சவால்களுக்கு முகம் கொடுத்து நிற்கின்றது. த .தே. கூ உடையப் போகின்றதா? த. தே கூட்டமைப்புக்குள் பிளவு என்றெல்லாம் நாளாந்தம் பத்திரிகைச் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. த. தே. கூ உருவாக்கம் பெற்ற நாள் முதலே அரசியல் கட்சியாக அதன் பதிவு, சின்னம் எனப் பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அவைகள் தீர்க்கப்படாமலே கிடப்பில் போடப்பட்டு விட்டன.

தேர்தல் வேளையில் கட்சி ரீதியான ஆசன பங்கீட்டிலும் தமிழரசுக் கட்சி செல்வாக்கு செலுத்துகின்றது. தனது கட்சி அங்கத்தவர்களை அதிகப் படியாக நியமிக்கின்றது என்ற கருத்துகளும் குற்றச்சாட்டுகளும் வருவதுண்டு. உண்மையில், நான்கு கட்சிகள் ஒரு குடையின் கீழ் வந்து ஒன்றிணைந்தாலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஆதிக்கமே கூட்டமைப்பு உருவாக்கிய அன்று தொட்டு இன்று வரை, நிலவுவதால் பிரச்சினைகளும் பிடுங்குப்பாடுகளும் பஞ்சமில்லாமல் நிலவுகின்றன.

த.தே.கூ என்பது வெறுமனே ஓர் அரசியல் செய்யும் கட்சி அல்ல. மாறாக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களால், தமிழ் தேசியத்தால் ஆணை வழங்கப்பட்ட அமைப்பு. ஆயுதப் போராட்டம் மௌனித்த பின்னர், தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழுவதற்கான தமது உரிமைகளைப் பெற்றுத் தரும் பொறுப்பு தமிழ் மக்களால் தமிழ்க் கூட்டமைப்பிடம் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, இத்தகைய பெரும் பொறுப்பு வாய்ந்த அமைப்பிடம் 'நீ பெரிதா, நான் பெரிதா' என்ற பொறாமைக் குணம் சற்றேனும் எழக் கூடாது. தற்போதைய நிலையில் தமிழ் மக்களுக்கு நிலையான நிம்மதி, நிலையான தீர்வு வேண்டும்.

மேலும், 2016,17 ஆம் ஆண்டுக்குள் அரசியல் தீர்வு எட்டப்படும் என இரா. சம்பந்தன் கூறி வந்தார். ஆகவே, அது வரை நாம் பொறுமை காத்தோம். அது நடைபெறவில்லை. ஆதலால் சம்பந்தனும் ஏமாந்து, தமிழ் மக்களையும் ஏமாற்றி விட்டார் ஏமாற்றி விட்டார்கள் எனச் சுரேஸ் பிரேமசந்திரன் கூறி வருகிறார்.

எனவே, இவ்விடத்தில் சம்பந்தன், எந்தத் தகவல் அல்லது தரவு அடிப்படையில் இவ்விதம் கூறினார்? 70 வருட இனப் பிணக்கை, ஒரு வருடத்துக்குள் தீர்க்கப்பட்டுவிடும் என எழுந்தமானமாகக் கூற முடியுமா? போன்ற வினாக்கள் எழுவது நிச்சயமே.

அதுவும் இலங்கை சிங்கள ஆட்சியாளர்கள் பற்றி நன்கு அறிந்திருந்தும் இவ்வாறான உறுதியற்ற வாக்குறுதிகளை வழங்கலாமா? ஆகவே, 2015 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் வேளையில், தமிழ் மக்களது வாக்குகளை வேட்டையாடவே இவ்வாறு கூறியதாக ஏன் இப்போது தமிழ் மக்கள் கருதக் கூடாது. வடக்கு, கிழக்கு இணைப்பு, தமிழரின் இறைமை, சுயநிர்னயம், சமஷ்டி என எல்லா கோசங்களும் தேர்தல் மேடையில் முழங்கியது. அது தற்போதும் உயிர்ப்புடன் தமிழர் இதயங்களில் உள்ள வேளை அரசியல் தலைவர்கள் அது தொடர்பாக என்ன நிலைப்பாட்டில் உள்ளனர் என தெளிவுபடுத்த வேண்டும்.

ஏனெனில், 20.02.2017 இல் கொழும்பில்

எப்போதுமே தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்படுவதை பேரினவாத அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது, சகிக்காது என்பது எமது பட்டறிவு. ஆகவே, சிறுகருத்து வேறுபாடுகளுக்கும் இடமின்றி விவேகமாகவும் வினைத்திறன் மிக்க விளைச்சலைத் தரக்கூடிய அரசியலை செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு உள்ளது என தமிழர் அரசியல் ஆற்றுவோர் அறிந்திருக்க வேண்டும்

த.தே.கூ முக்கியஸ்தர்களை, இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜெயசங்கர் சந்தித்திருந்தார். அப் பேச்சுவார்த்தையின் நடுவே ஒரு கட்டத்தில் உங்கள் எதிர்பார்ப்பு தொடர்பில் முன்னுரிமை வரிசை என்ன? என கேட்கப்பட்டுள்ளது. அவ்வேளையில் அனைவரும் ஒருமித்து வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பில் குரல் கொடுக்கவில்லை. ஆகவே, அங்கு முன் ஆயத்தம் இன்றி, தங்களுக்குள் கலந்துரையாடல் இன்றி, கூட்டமைப்பு பேச்சுவார்த்தையில் பங்குபற்றியமை தெரிந்தது. அடுத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, த.தே. கூட்டமைப்பை உடைக்க முற்படுகின்றார் என வடக்கு, கிழக்கு சார்ந்த கூட்டமைப்பு அரசியல்வாதிகளே கருத்துக்களைக் கூறி வருகின்றனர்.'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்' என்பார்கள். அந்த நிலை கூட்டமைப்புக்கு ஏற்பட்டால், அதன் எதிரிகளுக்குத்தான் கொண்டாட்டம்.

எப்போதுமே தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்படுவதை பேரினவாத அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது சகிக்காது என்பது எமது பட்டறிவு. ஆகவே, சிறுகருத்து வேறுபாடுகளுக்கும் இடமின்றி விவேகமாகவும் வினைத்திறன் மிக்க விளைச்சலை தரக்கூடிய அரசியலை செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு உள்ளது என தமிழர் அரசியல் ஆற்றுவோர் அறிந்திருக்க வேண்டும்.

அகிம்சை ரீதியிலும் ஆயுத ரீதியிலும் விடுதலைக்காக போராடிய வேளை, தமிழ் மக்களுக்குள் தோற்றுவிக்கப்பட்ட பிளவுகள், அந்தப் போராட்டங்களை வெற்றியை நோக்கி நகர்த்தவிடாமல் பின்னாலேயே பிடித்து இழுத்து விழுத்தி விட்டன. அதுபோன்ற நிலை மீண்டும் ஏற்படாதவாறு நம்மவர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

அடுத்து, முல்லைத்தீவு கேப்பாபுலவு மக்கள் தமது வாழ்விடங்களைப் படையினரின் பிடியிலிருந்து விடுவிக்குமாறு கோரி நடத்திய போராட்டங்கள் ஓரளவு வெற்றி பெற்றுள்ளன. சிறுவர், பெண்கள், முதியோர் என அனைவரும் பனி, வெய்யில், மழை என எதனையும் பொருட்படுத்தாமல், ஒற்றுமையுடன் போராடி, குறிப்பிடத்தக்க சிறு வெற்றியை அடைந்தும் தோல்வியில் சிலர் இன்றும் போராடி வருகின்ற சூழல் காணப்படுகின்றது.

நோயால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் தங்கி இருந்து சிகிச்சை பெறும் நண்பர் அல்லது உறவினரைச் சென்று நலம் விசாரிப்பது போல அமைப்புகளும் அரசியல் வாதிகளும் ஆங்காங்கே போராட்டத்தில் ஈடுபடும் மக்களின் சுகநலம் விசாரிப்பதற்குச் சென்றுவருகிறார்கள். அவ்வாறு செல்பவர்கள் வெறுங்கையுடன் செல்லாது சில உணவுப் பொருட்கள், உணவுப் பொதிகள் மற்றும் சில பொருட்களை வழங்குகின்றனர். சில மணித்துளிகள் அவர்களுடன் உரையாடுகின்றனர் போராடும் மக்களுடன் நின்று புகைப்படங்களை எடுத்து பத்திரிகைகளிலும் சமூகவலைத்தளங்களிலும் பிரசாரப்படுத்துகின்றனர். மீண்டும் தங்கள் சொகுசு வாகனங்களில் வீடு திரும்புகின்றனர். அங்கு போராட்டத்தில் பங்குபற்றும் மக்கள் கூட இவ்வாறாகத் தங்களுடன் வந்து வீணாக நேரத்தை விரையமாக்காது ஆக்கபூர்வமாக ஏதாவது செய்யுமாறு தான் கோரி நிற்கின்றனர்.

அடுத்து, தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் அமைப்பே அன்றி ஓர் அரசியல் கட்சி இல்லை. அத்துடன் அதற்கான ஏற்பாடுகளும் இல்லை என அதிலுள்ள கட்சி சாரா முக்கியஸ்தர்கள் அவ்வப்போது கூறி வருகின்றனர். ஆனால், கஜேந்திரகுமாரின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரனின் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகியோர் த. ம. பேரவையை கட்சி என்பது போலவே கருதி தமது கருத்துக்களைக் கூறி வருவது போல காட்சி அளிக்கின்றது.

நக்கீரர்

மேலும், 2015 ஜனவரியில் ஆட்சிக்கு வந்த 'நல்லாட்சி'தமிழ் மக்களுக்கு உருப்படியாக குறிப்பிட்டு சொல்லும்படியாக ஒன்றும் செய்யவில்லை. இந்நிலையில் அதனையிட்டுத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை மாற்ற வேண்டும், புதிய தலைமை வரவேண்டும் என கஜேந்திரகுமார், சுரேஸ் பிரேமச்சந்திரன் இவர்களுடன் ஆனந்தசங்கரியும் சேர்ந்து எதிர்ப்புக் கோசமிடுவது, 'நித்திரை வரவில்லை என்பதற்காக தலையணையை மாற்றும் வேலை'யாகும். தமிழர் தலைமை மாறினால் அல்லது மாற்றப்பட்டால் பேரினவாத அரசாங்கம் யாவற்றையும் தருமா? கள நிலவரம் மாறுமா? என்பது கேள்விக்குறியே.

வட்டுக்கோட்டை தீர்மானத்தை (1977) மேற்கொண்ட வேளை பிழையான தலைவர்களால் எடுத்த சரியான தீர்மானம் என கூறப்பட்டது. ஆகவே தற்போதைய முக்கிய கட்டத்தில் கூட்டமைப்பை உடைப்பது உடைக்க எத்தனிப்பது சரியான தலைவர்களால் எடுத்த சரியான முடிவா? பிழையான தலைவர்களால் எடுத்த பிழையான முடிவா? ஏனெனில், தாங்கள் கூட்டமைப்பிலிருந்து வெளியேறுவது தொடர்பில் சரியான நேரத்தில் சரியான முடிவு எடுப்பதாகவும் அதனால் கூட்டமைப்பை சின்னாபின்னமாக்கிய பொறுப்பு தலைமையையே சாரும் எனவும் காட்டமான கருத்தாடலை சிலர் வெளிப்படுத்தி வருகின்றனர். மேலும் ஆரம்பம் ஈறாக கஜேந்திரகுமார் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டால் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் புளொட் என்பன தம்முடன் இணையலாம் என்றும், அவர்கள் இரு தோணியில் கால் வைத்துக் கொண்டு நிற்க முடியாது எனவும் தெரிவித்துள்ளமையானது என்ன விதத்திலாவது கூட்டமைப்பை கலைக்க வேண்டும் என எண்ணுவது போல உள்ளதாகவே அரசியல் ஆலோசகர்கள் தெரிவித்து வருகின்றனர்.

ஆகவே, மீண்டும் தமிழர் நலன் என்ற தலைப்பின் கீழ் அனைவரும் அவரவர் தனிப்பட்ட 'ஈகோ'களைந்து ஒன்றுபட வேண்டும். 'அடம்பன் கொடியும் திரண்டால் தான் மிடுக்கு'. அதுவே வடக்கு, கிழக்கு மக்களது இணைப்பே முக்கியம்.

அதுவே நிரந்தர, நீடித்த அரசியல் தீர்வு கிடைக்க எளிதான வழியாக புத்திஜீவிகளால் நம்பப் படுகின்றது. இவ்விடத்தில் சராசரி தமிழ் பொது மகன் இவ்வாறாக எண்ணுகின்றான்.

அதாவது, ஓயாத யுத்தத்தால் முற்றாக முடமான வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறும் ஓர் அண்ணளவாக பத்துப் பேரைத் தலைவர்களாகக் கொண்ட தமிழ் தலைவர்கள், ஒரு புள்ளியில் ஒன்றுபட முடியாது என்றால் எவ்வாறு முஸ்லிம் மக்களையும் இணைத்துக் கொண்டு கடும் போக்கு சிங்கள ஆட்சியாரையும் அரவணைத்துத் தமிழ் மக்களது இனப் பிரச்சினைகளுக்கு தீர்வை தரப்போகின்றனர் என்பதே நிரந்தரப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தற்போது எழுந்துள்ள பாரிய சிக்கலாகும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து விலகி புதிய கூட்டணியில் இணைந்து கொள்ள துடிக்கும் ரெலோ!

2000ஆம் ஆண்டுகளின் பின்னர் தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக திகழ்ந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது அண்மைக்காலத்தில் பல விமர்சனங்கள் எழுந்திருக்கின்ற நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளுக்கிடையிலும் மோதல்கள் அதிகரித்துள்ளன.

ஆரம்பத்தில் நான்கு கட்சிகளாக இருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு மூன்று கட்சிகளாக தேய்ந்து இப்போது இந்த மூன்று கட்சிகளும் வெவ்வேறு பாதையில் செல்ல முற்பட்டிருக்கின்றன.

மட்டக்களப்பு மற்றும் கொழும்பு ஆகிய தளங்களில் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் சந்திப்புக்களை பலனாக 2001ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி சனிக்கிழமை நான்கு தமிழ் கட்சிகளுக்கிடையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. கொள்ளுப்பிட்டியில் உள்ள தொழிலதிபர் எஸ்.வடிவேற்கரசன் அவர்களின் வீட்டிலேயே இந்த நான்கு கட்சிகளின் செயலாளர்களும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

நான்கு கட்சிகளும் இணைந்து ஒரே கொள்கையின் அடிப்படையில் செயல்படுவது என்றும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடுவதென்றும், நான்கு கட்சிகளும் இணைந்து கூட்டமைப்பாக செயல்படுவது என எடுக்கப்பட்ட முடிவையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் தேர்தல் ஆணையாளருக்கு நான்கு கட்சி செயலாளர்களும் இணைந்து அறிவிப்பதென அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒரே கொள்கையின் கீழ் செயல்படும் அதே வேளை தங்கள் தங்கள் கட்சிகளின் தனித்துவங்களையும் தொடர்ந்து பேணுவது என்றும் இக்கட்சிகள் இணங்கி கொண்டன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் ஆர்.சம்பந்தன், அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியின் செயலாளர் ந.குமரகுருபரன், ரெலோ கட்சியின் தலைவர் என். சிறிகாந்தா, ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு 2001 டிசம்பரில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இந்த நான்கு கட்சிகளும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டன. தமிழ் தேசியக் கூட்டமைப்பு உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட முதலாவது தேர்தலும் இறுதி தேர்தலும் அதுதான்.

2003ஆம் ஆண்டளவில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் உட்கட்சி மோதல்கள் அதிகரித்திருந்தன. அக்கட்சியின் தலைவர் ஆனந்தசங்கரி தலைமையிலான அணி விடுதலைப்புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க ஜோசப் பரராசிங்கம், மாவை சேனாதிராசா ஆகியோர் தலைமையிலான அணி விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக நிலைப்பாட்டை எடுத்தன.

அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளராக இருந்த சம்பந்தன் அவர்கள் இரண்டு அணிகளிலும் சேராது நளுவல் போக்கை கடைப்பிடித்தார்.

2004ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்ட போது வடக்கு கிழக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வேட்பாளர்களை தெரிவு செய்வது முதல் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிப்பது வரை அனைத்தையும் தமிழீழ விடுதலைப்புலிகளை கையில் எடுத்துக்கொண்டனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு உதயசூரியன் சின்னத்தையும் தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியையும் பயன்படுத்த முடியாதவாறு ஆனந்தசங்கரி முடக்கினார். அதன் விளைவு 1977ஆம் ஆண்டிற்கு பின்னர் தேர்தலுக்கு பயன்படுத்தப்படாதிருந்த மீண்டும் அரசியல் களத்திற்கு பிரவேசித்தது.

ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி செல்ல அந்த இடத்திற்கு தமிழரசுக் கட்சி பிரவேசித்தது. 2004ஆம் ஆண்டு தேர்தலில் தமிழரசுகட்சியும் அதன் வீட்டு சின்னமுமே பயன்படுத்தப்பட்டது.

ஆனந்தசங்கரி மீது மக்களுக்கு இருந்த வெறுப்பு காரணமாக அவர் தலைமை தாங்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியையும் மக்கள் நிராகரித்து விட்டார்கள். 1977ஆம் ஆண்டு தொடக்கம் 2001ஆம் ஆண்டுவரை தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி மக்களால் நிராகரிக்கப்பட்டு பரிதாபகரமான நிலைக்கு தள்ளப்பட்டது.

இரா.துரைரத்தினம்
சுவிட்சர்லாந்து

2004ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணி விலகிய நிலையில் 2010ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியும் விலகி சென்றது.

2015ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியும் விலகி சென்று கடந்த உள்ளூராட்சி தேர்தலில் ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியின் கீழ் போட்டியிட்ட போதும் அவர்கள் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. இதனால் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து விலகிய ஈ.பி.ஆர்.எல்.எவ் இப்போது முன்னாள் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையான தமிழ் மக்கள் கூட்டணி என்ற புதிய கட்சியுடன் இணைந்துள்ளனர்.

முன்னர் ஆயுதக்குழுக்களாக இருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ போன்ற கட்சிகளால் தனித்து தமது சொந்த கட்சி சின்னத்தில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற மாட்டோம் என்பது அவர்களுக்கு தெரியும். அதனால் தான் வேறு ஒரு அணியின் தலைமையை நாட வேட்டிய நிலையில் இருக்கிறார்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்களாகிக் கட்சிகளான தமிழரசுக்கட்சிக்கும் ரெலோவுக்கும் இடையில் முறுகல் நிலை கடந்த உள்ளூராட்சி தேர்தல் காலம் தொடக்கம் இருந்து வருகிறது.

கடந்த உள்ளூராட்சி தேர்தல் வேட்புமனு தாக்கல் செய்வதற்கு முதல் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செல்லப்போவதாக ரெலோவின் செயலாளராக தற்போது இருக்கும் என்.சிறிகாந்தாவும், தவிசாளராக இருக்கும் எம்.கே.சிவாஜிலிங்கமும் ஓடி ஓடி ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி திரிந்தன.

ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக்கூட்டணியில் அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ் இணைந்திருந்தது. ஆனந்தசங்கரி, சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றவர்களுடன் சிறிகாந்தாவும் சிவாஜிலிங்கமும் பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினர். இனிமேல் தமிழரசுக்கட்சியுடன் ஒட்டும் இல்லை உறவும் இல்லை, அவர்களுக்கு நாங்கள் ஒரு பாடம் படிப்பிப்போம் என சிறிகாந்தா காட்டமான அறிக்கையும் விட்டார்.

பின்னர் தமிழரசுக்கட்சியுடன் சமரசம் செய்து கொண்டு உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் வீட்டு சின்னத்திலேயே போட்டியிட்டனர்.

சிறிகாந்தாவும் சிவாஜிலிங்கமும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் குழப்பங்களை ஏற்படுத்தியது இது தான் முதல் தடவையல்ல.

2010ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சரத் பொன்சேகாவை ஆதரிப்பதென முடிவெடுத்த போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து சிவாஜிலிங்கம் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். இதற்கு சிறிகாந்தாவும் ஆதரவளித்தார். இதனால் சிறிகாந்தாவும் சிவாஜிலிங்கமும் ரெலோவிலிருந்து நீக்கப்பட்டார்கள்.

2010ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் சிறிகாந்தாவும் சிவாஜிலிங்கமும் யாழ்.மாவட்டத்தில் சுயேச்சைக்குழுவாக போட்டியிட்டு படுதோல்வி அடைந்தனர்.

அதன் பின்னர் 2011ஆம் ஆண்டு நடந்த உள்ளூராட்சி தேர்தலில் வல்வெட்டித்துறை நகரசபை வேட்பாளர் பட்டியலில் பங்காளிக்கட்சியான ரெலோவின் ஆலோசனையை பெறாமலே தமிழரசுக்கட்சி வேட்பாளர் பட்டியலில் சிவாஜிலிங்கத்தை மாவை சேனாதிராசா சேர்த்துக் கொண்டார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானத்தை மீறி செயற்பட்டார்கள் என்ற காரணத்தால் சிவாஜிலிங்கத்தையும் சிறிகாந்தாவையும் தமது கட்சியிலிருந்து ரெலோ நீக்கி வைத்திருக்கும் வேளையில் தமிழரசுக்கட்சி தன்னிச்சையாக முடிவெடுத்து வேட்பாளர் பட்டியலில் சிவாஜிலிங்கத்தை இணைத்து கொண்டது பற்றி ரெலோவின் தலைவராக இருந்த செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டிருந்தது.

அதன் பின்னர் சிவாஜிலிங்கமும் சிறிகாந்தாவும் ரெலோவில் இணைத்து கொள்ளப்பட்டனர்.

கடந்த உள்ளூராட்சி தேர்தல் அறிவிப்பு வெளியான காலப்பகுதியில் இவர்கள் இருவருமே தமிழரசுக்கட்சி தலைமையின் கீழ் ரெலோவால் இருக்க முடியாது, பிரிந்து போகப்போகிறோம் என கூறிவந்தனர். வேட்புமனுவின் பின்னர் சிறிது காலம் அமைதியாக இருந்த இவர்கள் தமிழரசுக்கட்சியுடன் சேர்ந்து இயங்க முடியாது என பேசத்தொடங்கியுள்ளனர்.

ரெலோவை பொறுத்தவரை இப்போது இருக்கும் ஒரே தெரிவு விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி என்ற கூட்டில் இணைவதுதான்.

ஏற்கனவே விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணியில் இணைந்திருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ் ரெலோவை தம்முடன் இணைக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது.

இதனால் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சிக்கு பல நன்மைகள் கிடைக்கலாம்.

★ தமிழரசுக்கட்சியை பலவீனப்படுத்தி தனிமைப்படுத்தி விடலாம்.

★ தாம் சார்ந்திருக்கும் அணியின் வாக்கு வங்கி அதிகரிக்கும்.

★ யாழ். மாவட்டத்தில் ரெலோவை சேர்ந்த சிவாஜிலிங்கமோ சிறிகாந்தாவோ வெற்றி பெறும் அளவிற்கு செல்வாக்கு பெற்றவர்கள் அல்ல. ஆனால் அவர்களின் வாக்குகள்

சுரேஷ் பிரேமச்சந்திரன்

14 ஆம் பக்கம் பார்க்க....

மகிந்த ராஜபக்ஷவை நிராகரிக்கவே வரவு–செலவு திட்டத்திற்கு ஆதரவு!

இலங்கை நாட்டினது அரசியலில் மாற்றங்களையும், ஆட்சி அதிகாரங்களை தக்கவைப்பதிலும் தமிழர்களும் பெரும்பங்குண்டு. இந்த நாட்டிலே யுத்தம் நிறைவுபெறுவதற்கு முன்னும், யுத்தம் நிறைவுபெற்ற பின்பும் பிரதமரையும், ஜனாதிபதியையும் தீர்மானிக்கும் சக்தியாககூட தமிழ்மக்கள் இருந்து வருகின்றனர் என்பதையும் மறைத்துவிடமுடியாது. தற்போதைய ஆட்சி ஜனாதிபதியையும், பிரதமரையும் அரியணையேற வைத்த பெருமை தமிழ் மக்களையே சாரும். மகிந்த ராஜபக்சவினது ஆட்சி 2015க்கு முன்னர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலகட்டத்தில்தான் ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டது. இத்தேர்தலும் மிகவான போட்டித்தன்மையை ஏற்படுத்தியிருந்தது. மகிந்த ராஜபக்சவிற்கு எதிராக ஜனாதிபதி வேட்பாளராக யார் களமிறங்குவார் என்று தெரியாத, குழப்பமான, அச்சமான நேரத்தில்தான் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். யுத்தத்தினை முடிவுக்கொண்டு வந்தவர் என்ற ரீதியில் பெரும்பான்மையின மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றவராக மகிந்த ராஜபக்சவே இருந்து வந்தார். இந்நிலையில் ஜனாதிபதி தேர்தல் சூடுபிடித்திருந்த நிலையில், எல்லோரும் எதிர்பார்த்த வகையில் மகிந்தராஜபக்சவிற்கு பெரும்பான்மையின மக்கள் அதிக வாக்குகளை அளித்தனர். ஆனால் அவரால் ஜனாதிபதி ஆகமுடியாத நிலையை சிறுபான்மையின மக்கள் பாடமாக கற்பித்தனர். பெரும்பான்மையின மக்களின் செல்வாக்கு இருந்தால்மட்டும் போதாது, சிறுபான்மையின மக்கள் மத்தியிலும் செல்வாக்கு வேண்டும். என்ற உண்மை வெளிப்பட்டது. சிறுபான்மையின மக்கள் இந்த நாட்டிலே மாற்றம் ஒன்று தேவை என்பதை உணர்ந்த நிலையில்தான் மைத்திரிபாலசிறிசேனவிற்கு தமது வாக்குகளை பதிவு செய்தனர் இதன் விளைவினால்தான் மைத்திரிபாலசிறிசேன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

மகிந்த ராஜபக்சவினது ஆட்சிக்காலம் வன்மையான ஆட்சியாக்காலம் எனவும், மைத்திரிபாலசிறிசேனவினது ஆட்சிக்காலம் மென்மையான ஆட்சிக்காலமாக அமையும் என்பதனையும் தமிழ்மக்கள் நம்பினர். நம்பிக்கைக்கு ஏற்ற வகையில் ஆட்சியில் முன்னரைவிட கெடுபிடிகள் இல்லாமல் குறைவடைந்தன. நல்லாட்சி என்ற நாமம் உச்சரிக்கப்பட ஆரம்பித்தன. தமிழர்சார்பாக அமிர்தலிங்கம் எதிர்கட்சி தலைவராக பதவி வகித்ததன் பின்பு மீண்டும் தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இ.சம்பந்தன் எதிர்கட்சி தலைவராகும் வாய்ப்பும் கிடைத்தது. அதேவேளை தமிழ்தலைமைகள் குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தற்போதைய ஆட்சியின் தலைவர்மீது கண்மூடித்தனமான நம்பிக்கை வைத்தார். என்று சொல்லக்கூடிய வகையில் நம்பிக்கையை வைத்தார். இதனால் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கை கருத்தொன்றினையும் முன்வைத்தார். தமிழர்களுக்கான தீர்வு கிடைத்துவிடும் என்ற மிகவும் முக்கியமான விடயத்திலேயே நம்பிக்கை கொண்டிருந்தார். ஒருவருடத்திற்குள் அந்நம்பிக்கை வலுவிழந்து சென்ற நிலையில், மீண்டும் அடுத்தவருடத்திலும் அந்நம்பிக்கையை வெளியிட்டார். பின்னர் தமிழ்மக்கள் மத்தியில் இக்கருத்து தொடர்பில் நம்பிக்கையீனமே ஏற்ப்பட்டது. தற்போதும் நம்பிக்கை இழந்தவர்களாவே காணப்படுகின்றனர். கடந்து வந்த ஆட்சிக்காலங்களில் தமிழர்கள் ஏமாற்றப்பட்டமையே வரலாறாகவும் இருக்கின்றன. இதற்கு தமிழர்கள் அளவற்ற நம்பிக்கையை ஆட்சியாளர்கள் மீது கொள்வதே காரணமாகும். வெளியிடப்படும் வார்த்தைக்கு அதிகம் நம்பிக்கை கொடுப்பவர்கள் இந்த நாட்டிலே தமிழர்கள்தான் என்றுகூறுமளவிற்கு கடந்த கால அனுபவங்கள் அவற்றினை பாடம் புகட்டியிருக்கின்றன.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா?

ஜனாதிபதியை அரியணை ஏற்றியதன் பின்பு எதிர்பார்த்த எதிர்பார்ப்புக்களில் தீர்வு விடயம் தீர்க்கப்படாத நிலையில் உள்ளது. அமீதுவேளை இறுதி யுத்தத்திலே இழைக்கப்பட்ட அநீதிக்கான நீதி இன்னமும் நிலைநாட்டப்பட்டவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, நியாயங்கள், அரசியல் கைதிகளின் விடுவிப்பு, கையகப்படுத்தப்பட்டுள்ள காணிவிடுப்பு, மீள்நிகழாமையை உறுதிபடுத்தல் போன்ற விடயங்களில் தற்போதைய ஆட்சியாளர்களின் செயற்பாடு ஆமை வேகத்திலே அமைந்துள்ளன. அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்காக செயலணிகள் உருவாக்கப்பட்டுள்ள போதிலும், காணிவிடுப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல்ஆக்கப்பட்டோர் தொடர்பிலான விடயங்களில் விரைவு செயற்பாடு காணப்படவில்லை. ஆனாலும் காணிவிடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை முற்றாக நடைபெறாமல் இல்லை. இவ்வாறான நிலை இலங்கை நாட்டிலே காணப்படுகின்ற நிலையில்தான், அரியணைஏற்றிய நன்றிக்கடனுக்காவது, தமிழ்மக்களுக்கான தீர்வினை தற்போதைய ஜனாதிபதி பெற்றுக்கொடுப்பார் என்ற நம்பிக்கையும் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்தன. ஆனாலும் ஜனாதிபதிக்கும், தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைமைகளுக்கு இடையிலான உறவு தூரத்திற்கு செல்வுமளவிற்கு நாட்டிலே 52நாள் வித்தியாசமான சூழல் ஏற்பட்டது. தீடிரென பிரதமராகவிருந்த ரணில்விக்ரமசிங்க தூக்கியெறியப்பட்டு, மகிந்த ராஜபக்ச பிரதமராக்கப்பட்டார். பாராளுமன்றத்தினையே ஜனாதிபதி கலைத்தார். இதற்கு எதிராக தமிழ்தேசிய கூட்டமைப்பு உள்ளிட்டவர்கள் நீதிமன்றத்திலே வழக்குதொடர்ந்து மீண்டும் பிரதமராக ரணில்விக்ரமசிங்க தெரிவுசெய்யப்பட்டதுடன், பாராளுமன்றமும் நிலைநிறுத்தப்பட்டது. இச்சூழலில்தான் மைத்திரிபாலசிறிசேனவும், ரணில்விக்ரமசிங்கவும் மாறி மாறி தமிழ்தேசிய கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடாத்தினர். இறுதியில் தமிழ்தேசிய கூட்டமைப்பு ரணில்விக்ரமசிங்கவிற்கே ஆதரவளித்தனர். இன்றும் ஆதரவளித்துக்கொண்டிருக்கின்றனர். அண்மையில் சமர்பிக்கப்பட்ட வரவு, செலவுத்திட்டத்திற்குகூட தமிழ்தேசிய கூட்டமைப்பு ஆதரவாக வாக்களித்திருந்தது.

முனையூரான்

நாட்டிலே இருக்கின்ற தமிழ்மக்களுக்கு இன்னமும் தீர்வு வழங்கப்படாத நிலையில், தமிழர்கள் பெரும்பான்மையாக தமது அரசியல்ரீதியான போராட்டத்திற்கு தகுதியான ஒருகட்சியாக தமிழ் தேசிய கூட்டமைப்பினை நம்பியிருக்கின்ற தருணத்தில் தொடர்ச்சியாக தமிழ்தேசிய கூட்டமைப்பினர் அமைச்சுக்களைப்பெறாத அமைச்சர்களாவே இருந்துவருகின்றனர் என்ற குற்றச்சாட்டும், பெரும்பான்மையின மக்கள் மத்தியில் சுமந்திரன் நிழல் பிரதமர் என்ற குற்றச்சாட்டுக்களும் இருந்துவருகின்றன. இவ்வாறு அரசுக்கு ஆதரவாக சகலதுக்கும் கையுயர்த்துவது, தவறென்ற கருத்தும் ஏனைய தமிழ்கட்சிகளிடையே காணப்படுகின்றன. தொடர்ச்சியாக தமிழ் தேசிய கூட்டமைப்பினை ஏனையகட்சிகள் விமர்ச்சித்தே வருகின்றன. குறிப்பாக தமிழ்தேசிய கூட்டமைப்பினை விமர்சிப்பதே அக்கட்சிகளின் செயற்பாடுகளாக கூடவிருக்கின்றன. உண்மையில் தவறுகளை விமர்ச்சிப்பது அவசியமானதே. அப்போது உரிய தவறினை திருத்திக்கொள்ளும் நிலையை அடைவார்கள். இந்நிலையில் அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரவு, செலவு திட்டத்திற்கு ஆதரவாக தமிழ்தேசிய கூட்டமைப்பு வாக்களித்திருந்தது. வாக்களித்தமை தவறென்ற கருத்துக்கள் தற்கால சூழலில் எழுந்திருக்கின்றன.

தமிழர்கள் வாழுகின்ற பகுதிகளுக்கு, தமிழ்மக்கள் விரும்புகின்ற செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தால் அதற்கு ஆதரவாக வாக்களிப்பதில் தவறில்லை. அதேவேளை சிலபல கோரிக்கைகளை முன்வைத்து வாக்களிப்பதும் சாலப்பொருத்தமானது. ஆயினும் எவ்வாறான கோரிக்கைகளையும் முன்வைக்காது, ஏற்றுக்கொள்ளமுடியாத செயற்பாடுகளை நிறைவேற்றுவதையும் நோக்காக கொண்டு வரவு, செலவுத்திட்டமை உருவாக்கப்பட்டிருந்தால் அதனை கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளவும் முடியாதென்ற வாதங்களும் உள்ளன. ஆனால் தற்போதை வரவு செலவு திட்டத்திற்கு ஏன் ஆதரவு வழங்கினோம் என்ற நிலைப்பாட்டினை தமிழ்தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நிகழ்வுகளில் தெரிவித்துவருகின்றமையினை காணமுடிகின்றது. அண்மையில் இது தொடர்பில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் கூறுகின்ற போது, இரண்டு தடவைகள் மக்களால் நிராகரிக்கப்பட்ட

மகிந்த ராஜபக்ஷவினது ஆட்சிக்காலம் வன்மையான ஆட்சிக்காலம் எனவும், மைத்திரிபால சிறிசேனவினது ஆட்சிக்காலம் மென்மையான ஆட்சிக்காலமாக அமையும் என்பதனையும் தமிழ் மக்கள் நம்பினர். நம்பிக்கைக்கு ஏற்ற வகையில் ஆட்சியில் முன்னரைவிட கெடுபிடிகள் இல்லாமல் குறைவடைந்தன. நல்லாட்சி என்ற நாமம் உச்சரிக்கப்பட ஆரம்பித்தன. தமிழர் சார்பாக அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்ததன் பின்பு மீண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராகும் வாய்ப்பும் கிடைத்தது. அதேவேளை தமிழ்த்தலைமைகள் குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தற்போதைய ஆட்சியின் தலைவர் மீது கண்மூடித்தனமான நம்பிக்கையை வைத்தார். இறுதியில் எல்லாம் புஸ்வாணமாக மாறியிருக்கிறது

08 ஆம் பக்கம் பார்க்க....

தமிழ் பொலிஸாரின் சேவையை மீண்டும் ஏற்படுத்த அரசு இதய சுத்தியுடன் செயற்படுமா?

பொலிஸ் சேவையில் தமிழர்களை இணைக்கவேண்டும் என பாராளுமன்றத்தில் சில உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.இதற்கு முன்னரும் பிரதமர், முன்னாள் முதலமைச்சர் சீ.வீ.விக்னேஸ்வரன் ,உயர் பொலிஸ் அதிகாரிகள் உட்பட பலதரப்பினரும் தமிழ் இளைஞர்கள் பொலிஸ் சேவையில் இணைந்துநாட்டுக்கு பணியாற்றவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். நாட்டில் யுத்தம் நிலவியதாலேயே பொலிஸ் சேவையில் இருந்த தமிழர்கள் பெருமளவு விலகிக்கொண்டர்.யுத்தம் ஆரம்பித்த பின் பல தமிழ் பொலிஸார்,பொலிஸ் அதிகாரிகள் தமிழ் இயக்கங்களால் படுகொலை செய்யப்பட்டதே இதற்கு ஒரு காரணம்.அத்துடன் அரசும் தமிழர்களை பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவில்லை.

ஒரு காலத்தில் பொலிஸ் சேவையில் தமிழ் பொலிஸ் அதிகாரிகள் சிறந்த சேவையாற்றியுள்ளனர்.பதவி உயர்வுகளும்,விருதுகளும் பெற்றனர். 1971 ஆம் ஆண்டு இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) ஆயுதப்போராட்டத்தில் தெற்கில் பொலிஸ் நிலையங்களை தாக்கியபோதும் சில தமிழ் பொலிசார் கொல்லப்பட்டனர். அவர்களின் சடலங்கள் வடக்கே வந்ததை மறக்க முடியாது. அவ்வாறு உயிரையும் மதித்து நாட்டுக்காகவும், அரசுக்கு விசுவாசமாகவும் பணியாற்றியவர்கள்.அது மட்டுமல்ல 1962 இல் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசை கவிழ்க்க மேற்கொள்ளப்பட்ட சதிப்புரட்சி முயற்சியிலும் சிங்கள பொலிஸ் உயர் அதிகாரிகளே சம்பந்தப்பட்டிருந்தனர்.தமிழ் பொலிஸ் அதிகாரிகள் நேர்மையாகவே செயற்பட்டனர் என அன்று பலராலும் பாராட்டப்பட்டனர்.

வடக்கு,கிழக்கு யுத்த காலம் தமிழ்ப்போராளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தபோது இன்ஸ்பெக்டர்களான பஸ்ரியாம்பிள்ளை. குமார், பத்மநாதன் உட்பட பல பொலிசார் போராளிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.இதனையடுத்தே பல தமிழ் பொலிஸ் அதிகாரிகளும்,பொலிசாரும் தமது பணிகளில் இருந்து விலகினார்கள்.யாழ்ப்பாணத்தில் 1985,இல் யாழ்.பொலிஸ் நிலையம் விடுதலைப்புலிகளால் தாக்கப்பட்ட காலத்திலும் சில தமிழ் பொலிசார் அங்கு பணியாற்றினார்கள்.யாழ். பொலிஸ் நிலையத்துக்கு பொதுமக்கள் போய்வருவது தடைப்பட்டபோது,போதனாவைத்தியசாலையில் பொலிஸ் பிரிவு இயங்கியது. அதில் தமிழ் பொலிசார் பணிபுரிந்தனர்.யுத்த காலம் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டராக சிவசம்பு தவலிங்கம் கடமையாற்றினார். இவரது தந்தையார் சிவசம்பு என்பவரும் தெற்கில் சிறந்த பொலிஸ் அதிகாரியாக கடமைபுரிந்தார்.இதேபோலவே கிழக்கிலும் யுத்த காலம் தமிழ் பொலிசார், அதிகாரிகள் சேவைபுரிந்தனர். இலங்கை பொலிஸ் வரலாற்றில் பொலிஸ் மா அதிபர்களான ருத்ரா இரஜசிங்கம் ,ரீ.ஈ. ஆனந்தராஜா ஆகிய இருவருமே தமிழர்கள். அதனைவிட பிரதிபொலிஸ் மா அதிபர்களாகவும் தமிழர்கள் சிறப்பாகவும்,அரசியல் வேறுபாடுகள் இன்றியும் பணியாற்றியுள்ளனர்.பிரதி பொலிஸ் மா அதிபரான இரா.சுந்தரலிங்கம் யாழ்.மாவட்ட அத்தியட்சகராக பணியாற்றி கொழும்புக்கு இடமாற்றலாகி வந்ததும் 1972 அவரிடம் குற்றத்தடுப்பு பிரிவு என்று முதன் முதலாக (Crime Detective Bureau) ஆரம்பிக்கப்பட்டு அவரை அதற்கு பொறுப்பாக நியமித்தனர். அவருக்கு கீழ் பல அதிகாரிகள் இருந்தனர். அவரின் சிறந்த சேவையால் பிரதி பொலிஸ் மா அதிபராக பதவி உயர்த்தப்பட்டார்.ஓய்வு பெற்ற அவரை சர்வதேச பொலிஸ் பிரவும் அவரின் உதவியை நாடியது. அவரை வெளிநாட்டு ஊடகங்களே பாராட்டி செய்திகளை வெளியிட்டன.இவர் நயினாதீவைச்சேர்ந்தவர்.

அவரைப்போலவே போக்குவரவு பிரிவுக்கு எஸ்.சிவேந்தரன் என்ற பொலிஸ் அத்தியட்சகர்.தேர்தல் பணிகளுக்கு இக்னேசியஸ் கனகரட்னம் (எஸ்.பி), போதை தடுப்பு பிரிவுக்கு அன்ரன் ஜெயநாதன் (டீ.ஐ.ஜி) என்று தமிழ் பொலிஸ் அதிகாரிகள் பணியாற்றினார்கள்.அதை விட களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் பணிப்பாளராக வீ.கே.ஆறுமுகம், (எஸ்.பி),கண்டி மாவட்டத்துக்கு எஸ்.சண்முகம் (எஸ்.பி),காலி மாவட்டத்துக்கு ஏ.நவரட்டனம் (எஸ்.பி),தங்காலை பிரிவு சீ.அம்பிகாபதி (ஏ.எஸ்.பி) இருவரும் வடமராட்சியை சேர்ந்தவர்கள்.இப்படி தெற்கில் சேவைபுரிந்த பல தமிழ் அதிகாரிகளை குறிப்பிடலாம். 1966 இல் நாட்டில் பரபரப்பை ஏற்படுத்திய அனுராதபுரம் இரட்டை கொலைச்சம்வம் தொடர்பான இரு குற்றவாளிகளான அல்பிறட் டீ சொய்சா, களு அல்பேரட் ஆகிய இருவரையும் துணிச்சலுடன் கைது செய்ய நடவடிக்கை எடுத்தவர்தான் இன்ஸ்பெக்டர் எஸ்.நவரட்னராஜா.இவர் பின்னர் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்றார். அனுராதபுரம் களத்தாவ என்ற இடத்தில் இருவரை படுகொலை செய்து புதைத்தாக இவ்விருவர் மீது அன்று வழக்கு தொடரப்பட்டு, இருவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.இப்படியாக தெற்கில் இடம்பெற்ற பாரிய குற்றச்செயல்களை விசாரண செய்த பல தமிழ் பொலிஸ் அதிகாரிகள் உள்ளனர்.

இதேபோல கொழும்பில் துறைமுகம்,கொட்டாஞ்சேனை,மருதானை,வெள்ளவத்தை,வத்தளை போன்ற இடங்களிலும் பொலிஸ் கான்ஸ்டபிள்கள், சார்ஜன்ட்கள்,சப்- இன்ஸ்பெக்டர்கள்,பொறுப்பதிகாரிகள் (O.I.C) என தமிழர்கள் பலர் சிறப்பாக சேவையாற்றினர்.1958, 1977, 1983 கலவரங்களிலும் பல சம்பவங்களை நேரில் கண்டும் மனம் தளராது இவர்கள் சேவை செய்ததை பொலிஸ் திணைக்களமே பாராட்டியது.1983 கலவர நேரம் பொலிஸ் மா அதிபராக ருத்ரா ராஜசிங்கம் பதவியில் இருந்தார்.

1956 இல் பண்டாரநாயக்காவின் சிங்கள மொழி அரச கரும மொழி சட்டத்தின் பின்னரும் பல தமிழ் பொலிஸாரும் அதிகாரிகளும் சிங்களம் மொழி பிரச்சினையின்றி தெற்கில் பணிபுரிந்தனர்.அவர்கள் சிங்களத்தில் பேசுவது மட்டுமல்ல எழுதினார்கள். இந்த சட்டத்துக்கு முன்பு ஆங்கிலத்தில் பொலிசாரின் முறைப்பாடுகள்,நீதிமன்ற நடவடிக்கைகள் இடம் பெற்றன.யுத்தம் ஆரம்பமான காலம் வரை வடக்கு,கிழக்கு உட்பட நாட்டின் பல இடங்களிலும் இருந்து பொலிஸ் கொஸ்தாப்பு (கான்ஸ்டபிள்) சப-இன்ஸ்பெக்டர் பதவிக்கு பல தமிழ் இளைஞர்கள் ஆர்வத்தோடு விண்ணப்பித்தனர். அப்போது பெண் பொலிஸ் முறை வரவில்லை.

கடைசியாக சந்திரிகா ஆட்சியில் 2002 இல்பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்ட ரீ.ஈ.ஆனந்த ராஜா,போதை பொருள் நபர் ஒருவரின் மகளின் நிகழ்வில் கலந்துகொண்டார் என சில இனவாத அரசியல்வாதிகள் அவரை விமர்சித்தனர்.இ தனை அன்றைய சில ஊடகங்களும் பெரிதுபடுத்தின. காரணம் அவர் ஒரு தமிழர். அவர் ஒரு வருடகாலம் சேவையாற்றி ஓய்வுபெற்றார். பின்னர் அவருக்கு மனித உரிமைகள் அமைப்பில் உயர் பதவியும் கிடைத்தது. மட்டக்களப்பைச்சேர்நத அவர் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி பழைய மாணவனாவார். அவர் உதவி பொலிஸ் அத்தியட்சகராக இணைந்து பதவி உயர்வு பெற்று வந்தார்.

ஆனால்,இன்று பிரதி பொலிஸ் மா அதிபர்கள்,உட்பட் பல பெரும்பான்மை பொலிஸ் உயர் அதிகாரிகள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருவதை தினமும் ஊடகங்களின் மூலம் அறியமுடிகிறது. எனவே, முன்னைய காலங்களைப்போல தமிழர்கள் இனிமேல் பொலிஸ் சேவையில் இணைய முன்வருவார்களா என்பது கேள்விக்குறி.அண்மையில் தென்பகுதி சிறைச்சாலை ஒன்றில் தமிழ் சிறைக்காவலரை பெரும்பான்மை இன காவலர்கள் தாக்கியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் அண்மையில் ஒரு தமிழ் பொலிஸ் புலனாய்வு அதிகாரி தன்னை இடமாற்றம் செய்தது தவறு என பொலிஸ் ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ச ஆட்சியில் யுத்தம் முடிந்த பின் சில தமிழர்களை பொலிஸ் சேவையில் சேர்த்தனர்.

அமெரிக்காவிலிருந்து எம்.ரூபன்

ஆனால்,ஒரு முறை சுதந்திர தின வைபவத்தில் தமிழ் பொலிசார் துப்பாக்கிகளுடன் அணிவகுப்பில் கலந்துகொள்வதில் சில சில தடைகள் ஏற்படுத்தப்பட்டதாக செய்திகள் வந்தன. இதுவும் தமிழ் பொலிசாரில் ஒரு சந்தேகம் ஆட்சியாளருக்கு இருப்பதையே காட்டுகிறது. இதுவும் தமிழர்கள் குறிப்பாக வடக்கு,கிழக்கு தமிழ் இளைஞர்கள் பொலிஸ் சேவையில் இணைவதற்கு அச்சம் தெரிவிப்பதற்கு ஒரு காரணம்.அதுமட்டுமன்றி யுத்த காலத்தில் கொழும்பு,மற்றும் சில இடங்களில் பணிபுரிந்த தமிழ் பொலிஸ் அதிகாரிகளுக்கு பொறுப்பான பதவிகள் வழங்கப்படவில்லை.அவர்கள் சாதரணமான பணிகளையே செய்தனர்.அவர்களை பொலிஸ் திணைக்களம் கணக்கெடுக்கவில்லை என அவர்கள் தெரிவித்தனர். பலர் ஓய்வு பெற்றனர். இன்று குற்றச்செயல்கள் நாட்டில் அதிகரித்துள்ளது.மக்கள் பொலிஸ் நிலையங்களுக்கு செல்வதும் தினமும் அதிகம்.தமிழ் பேசும் மக்களின் முறைப்பாடுகளை விளங்கிக்கொள்ளவும்,அதனை முறைப்பாட்டில் பதியவும் முடியாத நிலையில் பொலிஸ் திணைக்களம் பாரிய பிரச்சினைக்கு உள்ளாகியுள்ளது. அதனால்தான் இன்று பாராளுமன்றத்தில் வைத்து எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ச உட்பட பல உறுப்பினர்கள் தமிழர்களை சேருமாறு கேட்கின்றனர்.வடக்கு,கிழக்கு மட்டுமல்ல மலையகத்தில் இருந்து வருமாறும் அழைப்பு விடுத்துள்ளனர். அந்தளவுக்கு தமிழ் பொலிசாரின் தேவையை அரசும்,எதிரக்கட்சியினரும் உணர்ந்துள்ளனர்.முன்னைய காலத்தில் தமிழர்கள் எப்படி எல்லாம் சேவையாற்றினார்கள் என்பது இவர்கள் அறிந்ததே.

தமிழ் இளைஞர்களை சந்தேக்கண்கொண்டு பாராது பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்வார்களா என தமிழ் பெற்றோர் சந்தேகப்படுகின்றனர். ஆட்சியாளர்கள் இதில் உரிய முறையில் செயற்பட்டால்,எதிர்காலத்தில் பொலிஸ் திணைக்களத்தில் சிறந்த தமிழ் பொலிசாரும்,அதிகாரிகளும் உருவாக வாய்ப்புள்ளது.

இப்புது வருடத்தில்
ராசியான கரங்களுடன்
கொடுக்கல் வாங்கல் செய்திட.

ஏப்ரல் 16 ஆம் திகதி காலை மக்கள் வங்கிக்கு வாருங்கள்.
காலை 08.30 தொடக்கம் சகல மக்கள் வங்கிக் கிளைகளும் உங்களுக்காகத் திறந்திருக்கும்...!

விகாரி புதுவருடப்பிறப்பு நற் கருமங்கள்...

புது வருடப்பிறப்பு
விகாரி வருஷம் சித்திரை மாதம் 1-ம் நாள் (14.04.2019) ஞாயிற்றுக்கிழமை பகல் 02 மணி 09 நிமிடத்தில் பூர்வ பட்ச தசமி திதியில ஆயிலிய நட்சத்திரம் 2ஆம் பாதம் கடக இலக்கணத்தில் தமிழ்ப் புதுவருடம் பிறக்கின்றது.

மருத்துநீர்
புதுவருடப் பிறப்பன்று குறிப்பிடப்பட்டுள்ள புண்ணிய காலங்களில் தாழம்பூ, தாதுமாதுளம்பூ, தாமரைப்பூ, துளசி, வில்வம், அறுகு, பால், கோமயம், கோசலம், கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், மஞ்சள், சுக்கு, திப்பிலி ஆகியவற்றை சுத்த ஜலத்தில் இட்டு காய்ச்சிய மருத்துநீரினை பெரியவர்களைக் கொண்டு கிழக்கு அல்லது வடக்கு திசை பார்த்து நின்று தலையில் இலவமிலையும் காலில் விளா இலையும் வைத்து அவர்களிடம் ஆசீர்வாதம் பெற்று ஸ்நானம் செய்தல் வேண்டும்.

புத்தாடை
சிவப்பு நிறப்பட்டாயினும் சிவப்புக்கரை வைத்த வெள்ளைப் புது வஸ்திரமாயினும் தரித்து மாணிக்கம் பதித்த ஆபரணங்களை அணிவது மேன்மைதரும்.

தரிசனம்
நித்திய கருமங்களைச் செய்து முடித்து ஸ்நானம் செய்து புத்தாடை அணிந்து விநாயகர் முதலிய இஷ்ட தெய்வங்களை தரிசனம் செய்து குரு பெற்றோர் முதலிய பெரியோர்களை வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளல் மேன்மை தரும்.

கைவிசேஷம்
ஞாயிற்றுக்கிழமை 14.04.2019 பகல் 11.00 மணி தொடக்கம் 12.00 மணிவரையுள்ள சுபநேரத்தில் அல்லது இரவு 08.20 தொடக்கம் 09.30 மணிவரையுள்ள சுபநேரத்தில் அல்லது 15.04.2019 திங்கள் அதிகாலை 05.00 மணி தொடக்கம் 06.00 மணிவரையுள்ள சுபநேரங்களில் பெரியவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளல் நலன் தரும்.

விருந்துண்ணல்
விகாரி புதுவருடத்தில் உற்றார் உறவினர்கள் நண்பர்களிடம் சென்று விருந்துண்பதற்கு 14.04.2019 ஞாயிறு இரவு 08.20 தொடக்கம் 09.30 வரையுள்ள நேரத்தில் அல்லது 17.04.2019 புதன் காலை 10.00 மணி தொடக்கம் முற்பகல் 11.15 வரையுள்ள சுபநேரங்கள் சிறப்பினைத் தரும்.

பூமிபிரவேசம்
புதிய விகாரி வருடத்தில் புதுப்பூமிகளுக்கும் புதுமனைகளுக்கும் செல்வதற்கு 14.04.2019 ஞாயிறு இரவு 08.20 தொடக்கம் 09.30 வரையுள்ள அல்லது 17.04.2019 புதன் காலை 10.00 மணி தொடக்கம் முற்பகல் 11.15 வரையுள்ள சுபநேரங்கள் நன்மை பயக்கும்.

வித்தியாசாலை வித்தியாரம்பம்
புதிய விகாரி வருடத்தில் வித்தியாசாலை வித்தியாரம்பத்திற்கு 17.04.2019 புதன் காலை 10.00 மணி தொடக்கம் முற்பகல் 11.15 வரையுள்ள அல்லது 22.04.2019 திங்கள் முற்பகல் 11.47 தொடக்கம் பகல் 12.30 வரையுள்ள சுபநேரங்கள் நன்மை தரும்.

*இருந்தனைக்குபோட்டது.

PEOPLE'S BANK
The Bank of the People
www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
AA+ (lka) Fitch Rating, AA Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

தமிழ் தலைமைகளை நம்பி சிறைக்குள் வாழ்வை கழிக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை எட்டாக்கனியாகுமா?

இரு தப்பினர்களுக்கடையில் யுத்தம் இடம் பெறுகின்றபோது அதனூடாக கைது செய்யப் படும் போர் வீரர்கள் அரசியல் கைதிகளாக அந்தந்த தரப்பினரின் கட்டுப்பாட்டில் சிறை வைக்கப்படுவது வழமையான செயற்பாடாகவே உள்ளது.

எனினும் அவ்வாறான அரசியல் தைகிகளின் விடுதலை என்பது இரு தரப்பு பேச்சுக்களின் போது அல்லது மூன்றாம் தரப்பு மத்தியஸ்துடன் கைதிகள் பரிமாற்றத்தின் ஊடாக நடைபெறு வதும் வழமை. எனினும் இலங்கையில் யுத்தம் நடைபெறும் காலங்களில் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகள் இன்று யாருடைய கவனிப்புமின்றி அவர்கள் சார்ந்த அரசியல் தலைமைகளின் பொய்யான வாக்குறுதி களுக்கு மத்தியில் பல்லாண்டு காலமாக நிறைக ளில் தமது வாழ்வை கழித:து வருவதானது அவர் களது விடுதலை தொடர்பான ஐயப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

தமிழர்களின் அரசியல் களமானது காலத்திற்கு காலம் வேறுபட்ட துறைகளில் சூடு பிடித்து வரு வதானது ஐதார்த்தம். இந் நிலையில் தற்போதைய தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் ஒரு புறம் விஸ்பரூபமெடுத்திருக்கும் நிலையில் அதற் கான ஆக்கபூர்வமான செயன்முறைகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றதா என்பதான கேள்விகள் நிறைந்திருக்கின்றது.

அரசியல் கைதிகளின் போராட்டமானது காலத்திற்கு காலம் இடம்பெற்று வந்திருந்தாலும் அவை எவ்வித தீர்வம் இன்றி தமிழ் தலைமை களின் வாக்குறுதிகளை நம்பி கைவிடப்பட்ட தாகவே உள்ளது. ஆனாலும் மீண்டும் மீண்டும் தமது விடுதலைக்கான ஆக்கபூர்வமான செயற் பாடுகளை அரசியலாளர்கள் எடுப்பார்கள் என்ற நம்பிக்கையை நிலை நிறுத்தியவர்களாகவும் அதனை விடுத்தால் வேறு வழியில்லை என்ற கருத்தியலாலும் ஆட்கொள்ளப்பட்ட அரசியல் கைதிகள் அரசியலாளர்களின் பசப்பு வார்த்தைக ளில் நம்பிக்கை கொள்ளவேண்டியவர்களாகவே உருவாக்கப்பட்டுள்ளனர்.

கபில்

அவர்களது சிறை வாழ்வும் அதனூடான தாக்கங்களும் அவர்கள் சார்ந்த குடும்பங்களின் பொருளாதார நிலைமைகளும் இன்று பல்வே றான சிக்கல் நிலைமைகளை உருவாக்கி வருகின் றது.

இவ்வாறான அரசியல் கைதிகளின் நிலை மையை தமிழ் தலைமைகள் தமக்கான அரசியல் பலமாகவும் தமது தேர்தல் கால கருப்பொருட்க ளில் ஒன்றாகவும் கருதுவதானது வேதனைக்குரி யது. துமிழ் தரப்பு அரசியலாளர்களுக்கு வழங்கப் பட்டுள்ள வசதி வாய்ப்புக்கள் பெரும்பான்மை அரசின் நலன் சார்ந்தே வழங்கப்பட்டுள்ள நிலையில் அதனை மிகப்பெரும் சிம்மாசனமா கவும் அதில் இருந்து தம்மை அகற்ற முடியாது என கற்பனை உலகில் மிதப்பதும் வெறும் மணற் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியதாகவே இருக்கும். அதன் ஓர் அங்கமே தமிழ் தரப்பிடம் இருந்த எதிர்க்கட்சி தலைவர் பறிப்பும் கூட.

ஏனெனில் தமிழ் மக்கள் மத்தியில் அவசர மானதும் அவசியமானதுமான பல விடயங்கள் தேங்கி கிடைக்கும் இந் நிலையில் தமிழ் அரசி யல் சார் சக்திகள் தமது அடுத்த அரசியல் நகர்வு மற்றும் தேர்தல் தொடர்பாக கவனம் செலுத்த தொடங்கியுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடயம் எந்தளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு முன்னெடுக் கப்படும் என்பது சந்தேகத்தினை ஏற்படுத்தும் நிலையில் அரசியலாளர்களால் வடக்கு கிழக்கில் பேசப்பட்டு வரும் வீர வசனங்களும் அதனூ டான சாத்தியமற்ற செயற்முறைகளும் மக்களை தொடர்ச்சியாக முட்டாள்கள் என்ற எண்ணப்பாட் டுடனான அவர்களது நடத்தையையே காட்டி நிற்கின்றது.

ஏனெனில் போராட்ட முனைப்பென்பது பரவலாக்கப்பட வேண்டும் என்பதற்கப்பால் ஒரே நேரத்தில் ஹர்த்தாலை நடத்தி போராட்ட முனைப்பை முழுங்கடிக்க செய்யும் செயற் பாட்டை இன்றைய அரசியல் கட்சிகளும் அரசி யல் தலைமைகளும் மேற்கொண்டு வருவதானது யாருடைய கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வர்த்தக நிலையங்கள் அதிகளவில் மூடப்படுகின் றது என்பதனை நாடிபிடித்து பார்க்கும் செயற்பா டாகவே தற்போது மாறியுள்ளது.

புங்குடுதீவு மாணவியான வித்தியாவின் படுகொலைக்கு வடக்கு கிழக்கு மற்றும் மலைய கமெங்கும் எவ்வாறு உணர்வுபூர்வமாக போராட் டங்கள் நடத்தப்பட்டு அதற்கான தீர்வு கிடைக்க சிவில் செயற்பாட்டாளர்களும் மாணவ சமூகமும் வழிசமைத்ததோ அவ்வாறான நிலைமையொன் றினை தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் ஏற் படுத்துவதற்கு தமிழ் அரசியலாளர்களும் சிவில் செயற்பாட்டாளர்கள் என தம்மை அடையாளம் காட்டுபவர்களும் விடவில்லை என்பதாகவே உள்ளது.

அரசியல் கட்சிகளுக்கு அதன் நிலைபேறு தன்மைக்கான செயற்பாடுகள் முக்கியமானதாக இருந்தாலும் கூட தமிழர்களின் வாழ்வியல் சூழ லில் உள்ள இன்றைய பிரச்சனைகளை தீர்க்கவும் முன்னிற்கவேண்டும் என்பதனை மறந்து விடமு டியாது.

இதற்குமப்பால் தாம் சார்ந்;த இனத்தின் பிரச் சனைகளை உள்ளடக்கிய சரியான கான புள்ளிவி பர ரீதியான ஆவணமொன்று தமிழ் தலைமை களிடம் இல்லாத நிலையில் அவை தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்னெடுத்து செல்வதற்கு தமிழ் தலைமைகள் பல இடையூறு களை சந்தித்து வருகின்றனர்.

வடக்கு கிழக்கு பகுதியில் இராணுவ வச முள்ள தமிழர் காணிகள், காணாமல் போனோரின் விபரத்திரட்டு, அரசியல் கைதிகளின் முழுமை யான விபரங்கள் போன்ற சரியான புள்ளிவிபரங் கள் எதுவும் இன்றிய நிலையிலேயே தமிழ்

சரியான புள்ளிவிபரத்தினை அவர்களுக்கு வழங்ககூடிய விதத்தில் ஆவணமொன்று தமிழ் தரப்பிடம் இல்லாமல் அரசாங்கம் செல்லும் புள்ளிவிபரத்தினையோ அல்லது எழுந்தமான மான விபரத்தினையோ வெளியிடுவதானது பலவீனப்பட்ட அரசியலை வெளிப்படுத்துவதாக அமைந்துவிடுகின்றது.

இவ்வாறான நிலையிலேயே தற்போதைய அர சியல் கைதிகளின் விடயத்திலும் உத்வேகமுள்ள செயற்றிட்டங்களை முன்னெடுக்காமையினால் தமிழ் அரசியல் கைதிகளின் வாழ்வு சிறைகளுக் குள் சீரழியும் நிலையை எதிர்கொண்டுள்ளது.

அரசியல் கைதிகளின் விடயம் என்பது நேற்று இன்று அல்ல அது தமிழர்களின் அகிம்சை வழிப் போராட்டங்களின்போதே அரம்பிக்கப்பட்ட ஓர் அத்தியாயமாகவே உள்ளது. எனினும் அப்போ ராட்டங்களின் போது அரசியல் கைதிகள் ஆக் கப்பட்டவர்கள் சமூக சீரிமையை தோற்றுவித்த வர்கள் என்ற போர்வையில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களான உள்ளனர்.

எனினும் ஆயுதப்போராட்டம் ஆரம்பிக் கப்பட்டதன் பின்னரான அரசியல் கைதிகள் பல்வேறு சித்திரவதைக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டவர்களாகவே உள்ளனர். இது சர்வதேச ரீதியிலான அமைப்புகள் ரீதியாகவும் நிரூபிக்கப்பட்டவிடயமாகவுள்ளது.

இதற்குமப்பால் அரசியல் கைதிகளாக இருந்து சிறைகளில் மரணங்களை சந்தித்தவர்களின் வர லாறும் 1983 இல் இருந்தே ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

தங்கத்துரை, குட்டிமணி உட்பட அவர்க ளோடு கொல்லப்பட்டவர்களோடு ஆரம்பிக்கும் அரசியல் கைதிகளின் சிறை மரணிப்புகள் முன்னாள் போராளியும் அரசியல் கைதியுமான சதீஸின் மரணம் வரை நீண்டுள்ளது.

இந் நிலையில் அரசியல் கைதிகளின் விடு தலை என்பது எட்டாக்கனியான விடயமாகவே இன்றும் உள்ளது. இதற்குமப்பால் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது வெறுமனே அரசியல் கால பேச்சாகவும் அரசியல் பகடைக் காயாவும் பயன்படுத்தப்படும் நிலையொன்று உருவாக்கப்பட்டு விட்டதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளது.

குறிப்பாக ஜனாதிபதி தேர்தல் காலத்திலும் பாராளுமன்ற தேர்தல் காலத்திலும் அரசியல் கைதிகளின் விடுதலை உரத்து பேசப்பட்ட விட யமாக காணப்பட்டபோதிலும் இவை தேர்தலின் பின்னர் மௌனித்துப்போகும் விடயமாகின்றமை வழமையாகிவிட்டது.

சர்வதேச அரசியலில் தமிழ் தரப்பு கொண்டு செல்லும் கருத்தியலை விட அரசினால் முன் கொண்டு செல்லப்படும் கருத்தியல் பலம் பெற் றதாக காணப்படுகின்றது. இதற்கு வலுவுள்ள ஆவணங்களும் ஆதாரங்களையும் அரசு தரப்பு முன்வைப்;பதே காரணமாகும்.

எனவே தவறுகள் திருத்தபபடவேண்டும் என் பதனை உணராத வரையில் தமிழர்களின் தீர்வு என்பதும் தரப்படாமலேயே போகும் என்பதனை விளங்கி கொள்ள எவரும் முன்வரவில்லை.

அரசியல் கைதிகள் தொடர்பான புள்ளிவி பரத்தோடு நாம் இல்லாது இதுவரை காலமும் நாட்களை கடத்தியுள்ளோம் என்றால் எமக்கான பிரச்சனைகளுக்கான தீர்வை அல்லது எமது கோரிக்கைகளை எவ்வாறு பெறுவது என்பது கேள்விகள் நிறைந்தாகவே இருக்கும்.

விடயதானங்கள் என்பது வெறும் வெற் றுக்கோசங்களாக மாறியிருப்பது வேதனை யான விடமாகவேயுள்ளது. வெறுமனே தேசியம் பேசும் அரசியலுக்கு அப்பால் தமி ழர்களின் அன்றாட வாழ்வோடு பிறையோ டிப்போயுள்ள அரசியல் கைதிகளின் விட யம் ஆக்கபூர்வமான எடுக்கப்படவேண்டும் என்பது உண்மை.

குறிப்பாக ஆறிற்கும் மேற்பட்ட சி றைகளில் அரசியல் கைதிகளாக வைக்கப் பட்டுள்ள தமிழ் இளைஞர் யுவதிகள் பல ருக்கும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள போதிலும் பொலிஸ் மற்றும் விசாரணை அதிகாரிகளின் நீதிமன்ற பிரசன்னம் என்பது சீராக இன்மையாலும் சாட்சியங்களின் வர வின்;மையும் இவ் வழங்குகள் நாட்களை கடத்துவதாக அமைகின்றது.

இவற்றுக்கும் அப்பால் வவுனியா சிறை யில் 28.06.2012 அன்று அரசியல் கைதிகள் சிறைக்காவலர்களை பணய கைதிகளாக பிடித்ததனால் இடம்பெற்ற அசம்பாவிதங்க ளின் பின்னர் அரசியல் கைதிகளின் விடு தலை என்பது எட்டாக்கனியாவும் போடு தடியான விடயமாகவும் காணப்பட்ட நிலை யில் நல்லாட்சி அல்லது மைத்திரி ஆட்சி நல்ல முடிவை வழங்கும் என்ற தமிழர் தலைமைகளின் கருத்துக்கள் இன்று ஏமாற்ற மளித்துள்ளதாகவே உள்ளது.

வெறுமனே சீசன் வியாபாரிகளாக அரசி யல் தலைமைகள் இல்லாது அரசியல் கைதி களுக்களின் விடுதலைக்காக ஆக்கபூர்வமாக செயற்படுகின்றதா அல்லது அதற்கான நீதி அமைச்சுடன் எவ்விடங்களை கலந்தாலோசி க்க வேண்டும் என்பது தொடர்பில் கரிசனை கொண்டுள்ளதா என்பதனையும் மீட்டிப் பார்க்க வேண்டும்.

இதற்குமப்பால் அரசியல் கைதிகளின் குடும்பங்களது வாழ்வாதர விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் நிறைந்துபோயுள்ள தாகவே உள்ளது. சுமார் 10 தொடர்க்கம் 15 வருடங்களுக்கும் மேலாகவும் சிறையில் வாழும் அரசியல் கைதிகளுக்கு விடுதலை என்ற சுவாசக்காற்று இன்று வரை எட்டாக் கனியாக உள்ள நிலையில் காணாமல்போ னோர் எத்தனை பேர் சிறைகளில் வாழ்கின் றார்கள் என்பதிலும் அக்கறை செல்லுத்த வேண்டிய தருணத்தில் அரசியல் தலைமை கள் உள்ளது.

எனவே தமிழ் மக்கள் தமது கோரிக்கை களை முன்னெடுத்து செல்வதற்காக வாக்க ளித்து உருவாக்கிய பிரதிநிதிகள் வெறுமனே பார்வையாளாகளாக இருக்க மக்களே களத்தில் மீண்டும் மீண்டும் போராட்டங் களையும் அரசுக்கான அழுத்தங்களையும் வழங்கவேண்டுமாயின் மக்கள் பிரதிநிதி கள் எதற்கு என்ற கேள்வி மேலெழுவதில் நியாயமுள்ளது.

அதற்குமப்பால் கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அரசியல் கைதிகள் தொடர்பில் நியாயபூர்வமான அழுத்தங்களை தமிழ் தேசியக்கூட்டமைப்பு பிரயோகித்திருக்க கூடிய நிலையில் அதனை கூட்டமைப்பு பயன்படுத்த தவறியுள்ளது.

சந்தர்ப்பங்களை தவறவிட்டு பின்னர் அதற்கு நியாயம் கற்பிக்கும் தன்மையை தமிழ் தேசியக்கூட்டமைப்பும் கைவிடும் போதே தமது பக்க சரி பிழைகளை உணரத் தலைப்படுவர் என்பதே யதார்த்தம்.

கோப்புப்படம்

மகிந்த...

06 ஆம் பக்கத் தொடர்ச்சி

மகிந்த ராஜபக்சவிற்கு ஆதரவாக அமைந்தி ருக்கும் என்பதாலேயே அரசாங்கத்தை ஆதரித் தோம். தமிழர்கள் இந்த நாட்டின் தேசிய இனம் என்ற ரீதியில் சகல வசதிகளும் எமக்கு வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தேர்தல் விஞ் ஞாபனத்தை முன்வைத்து நாடாளுமன்ற தேர்த லில் போட்டியிட்டு வெற்றியீட்டினோம். இந்த வரவு செலவுத் திட்டத்தின் வாக்கெடுப்பில் மகிந்த ராஜபக்சவை ஆதரிப்பதா அல்லது ரணில் விக்ர மசிங்கவை ஆதரிப்பதா என்பதை தெரிவு செய்ய வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டது. நாங்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பெற்றுக்கொ டுக்கும் நோக்கில் செயற்பட்டோம். நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் கூறுகின்றபோது, தமிழ் மக்களுக்காக செயற்பாடுகளை மேற்கொண்டவர்கள் யார் என்பதை கருத்திற்கொண்டே வரவு- செலவுத் திட்டத்துக்கு ஆதரவளித்தோம். சாள்ஸ் நிர்மலநா தன் கூறுகின்ற போது, எதிர்க்கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ச மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடக்கூடாதென் பதற்காகவே வரவு- செலவு திட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கினோம் எங் களது மக்களுக்கு துரோகம் இழைக்க ஒருபோதும் நினைத்ததில்லை. ஆனாலும் சூழ்நிலைகளின் அடிப் படையிலேயே நாம் எமது நகர்வுகளை மேற்கொள் கின்றோம். மேலும் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற சதிப்புரட்சியை தோற்கடித்து நியாயத்தை நிலைநாட் டினோம். அதனை அனைவரும் வரவேற்றார்கள். ஆனால் தற்போது வரவு- செலவு திட்டத்துக்கு ஆத ரவு வழங்கியமையை தவறென விமர்சிக்கின்றனர். அன்று சதிப்புரட்சியை தோற்கடிக்க கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது சரியென்றால் வரவு - செலவு திட்டத்துக்கு ஆதரவு வழங்கியமையும் சரி என்பதே எங்களின் நிலைப்பாடு. தமிழ்தேசிய கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறுகின்ற போது, ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு தனித்து இயங்கக் கூடிய பலம் இல்லை. நாடாளுமன்றத்தில் 113 பேர் கூட ரணில் அரசுக்கு இல்லை. தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் பேராதரவுடன்தான் இந்த அரசு இயங்கு கின்றது. எமது ஆதரவுடன்தான் 119 வாக்குகளுடன் வரவு - செலவுத் திட்டம் நிறைவேறியது. நாங்கள் நினைத்தால் இந்த அரசை எந்நேரத்திலும் கவிழ்ப்போம். அதனால் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளை அனுபவிக்க இந்த அரசு இடமளிக்க வேண்டும். அரசைப் பாதுகாப்பது எமது நோக்கம் அல்ல. தமிழர்களுக்கான உரிமைகளை வென்றெடுக் கவும், நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வைக் காணும் வகையிலும்தான் இந்த அரசுக்கு நாம் ஆதரவு வழங்கி வருகின்றோம். இதை அரசுடன் நாம் நடத் தும் பேச்சுகளின்போது தெளிவாகக் கூறியுள்ளோம். அதை உணர்ந்து அரசு செயற்பட வேண்டும். இல் லையேல், அரசுக்கான எமது ஆதரவை விலக்கிக் கொள்வோம். அப்போது அரசு கவிழ்ந்தே தீரும். புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தபோதிலும், தற்போது அந்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அந்தப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு அர சிடம் நாம் வலியுறுத்தியுள்ளோம். ஐ.நா. தீர்மானத் தின் பரிந்துரைகளையும் முழுமையாக நடைமுறைப் படுத்துமாறு அரசிடம் நாம் கோரியுள்ளோம். ஐ.நா. ஊடாக அரசுக்கு அழுத்தம் வழங்கி வருகின்றோம். ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளை இலங்கை அரசு உதாசீனம் செய்தால் அதன் விளைவு மிகவும் பாரதூ ரமானதாக - மோசமானதாக இருக்கும். இவ்வாறான கருத்துக்களின் ஊடாக, மகிந்தராஜபக்சவை ஆட்சி க்கொண்டுவந்துவிடக்கூடாதென்ற எண்ணத்தில்தான் அதிகமாக தமிழ்தேசிய கூட்டமைப்பு செயற்பட் டிருக்கின்றது. இதன்காரமாக தமிழ்தேசிய கூட்ட மைப்பு ரணில்விக்ரமசிங்கவிற்கு சகல சந்தர்ப்பங் களிலும் ஆதரவு தெரிவித்து வருகின்றது. ஆனாலும் இந்நியாயத்திற்கு அப்பால் தற்போதைய ஆட்சியார் கள் தமிழ்மக்கள் விரும்புகின்ற தீர்வுவிடயங்களுக்கு முன்னுரிமையளித்து அதைபெற்றுக்கொடுக்க வழி வகைசெய்ய வேண்டும். இல்லாவிடின் தமிழ்தேசிய கூட்டமைப்பின் பேச்சுக்களும், நியாயித்தலும் வெறும் புஸ்பானமாகவே செல்லும் என்பதில் மாற் றுக்கருத்தில்லை.

தமிழ்தேசிய கூட்டமைப்பு வரவு - செலவு திட்டத் திற்கு ஆதரவளித்துவிட்டது. என்று விமர்சனத்தினை தெரிவித்துவருவதால் இனிஒன்றும் நடந்துவிடப் போவதில்லை. ஆட்சியிருக்கின்ற காலப்பகுதிக்குள் ஆதரவுதெரிவித்தவர்களுடன் கலந்துரையாடி உடன டியாக தமிழ்மக்கள் விரும்புகின்ற தீர்வுவிடயங்களை தமிழ்தேசிய கூட்டமைப்பு பெற்றுக்கொடுக்க செயற் படவேண்டும். மாறாக இருந்துவிட்டு செல்லலாம், பேசிவிட்டுசெல்லலாம், சுகபோகங்களை அனுபவித் துவிட்டு செல்லலாம், சகல விடயங்களியும் நெகிழ்வு போக்கினை கடைப்பிடித்தால் இன்னமும் தமிழ்மக் கள் ஏமாற்றப்பட்ட சமுகமாகவே செல்வர் இதற்கு தமிழ்தேசியகூட்டமைப்பே பொறுப்பாளிகளாவர் என்பதே நிதர்சனம்.

க.பொ.த.சாதாரணை தரப் பெறுபேற்றில் கிழக்கு மாகாணைத்திற்கு கடைசி நிலை

இலங்கை நாட்டில் உள்ள ஒன்பது மாகாணங்களில் ஒன்றான கிழக்கு மகாணத்தில் பல்வேறு இனத்தவர்கள் வாழ்கின்றபோதிலும் இம்மாகாணம் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற மூன்று மாவட்டங்களையும் அம்பாறையில் ஏழு கல்வி வலயங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து கல்வி வலயங்களும், திருகோணமலை மாவட்டத்தில் ஐந்து கல்வி வலயங்களுமாக மொத்தம் 17கல்வி வலயங்களையும் கொண்ட மாகாணமாகவும் அமையப்பெற்றுள்ளது.

இலங்கை நாட்டில் நடைபெறுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான பிரதான பரீட்சைகளில் கல்விப்பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை முக்கியம் பெறுவதாக அமைந்துள்ளது. கவ்விப்பொதுத்தராதர உயர்தரம் கற்பதற்கான தடைதாண்டல் பரீட்சையாகவும் அமைந்துள்ளது. இப்பரீட்சையில் அனைவருமே சித்திபெற முடியும் அவ்வாறு சித்திபெற்றால் உயர்தர கல்வியை தொடரமுடியும். சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள் மாணவர்கள் பலரின் வாழ்க்கையில் திசை திருப்பங்களை ஏற்படுகின்றமை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலையை புள்ளிப்பகுப்பாய்வுகளின் மூலமாக அவதானம் செலுத்துகின்றபோது, கிழக்கு மாகாணம் இறுதி நிலையை பெற்றிருக்கின்றமையை அறிந்துகொள்ள முடிகிறது.

ஒரு நாட்டினது அபிவிருத்தியில் முக்கியம்பெறும் ஒரு துறையாக கல்வி விளங்குகின்றது. இக்கல்வி இலங்கை நாட்டிலே இலவசமாக வழங்கப்படுகின்றது. மத்திய அரசாங்கத்தின் மூலமாக கல்வி செயற்பாட்டிற்கு அதிகளவான பணத்தினை செலவு செய்கின்றனர். அரசசார்பற்ற நிறுவனங்களின் மூலமாகவும் உதவிகள் கிடைக்கப்பெறுகின்றன. ஆனாபோதிலும் பல பாடசாலைகள் இன்றும் வளப்பற்றாக்குறையுடனேயே இருந்துகொண்டிருக்கின்றன.

கோப்புப்படம்

இலங்கை பூராக நோக்குகின்ற போது கல்விப்பொதுத்தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஒவ்வொரு வருடமும் கல்விப்பொதுத்தராதர உயர்தரத்திற்கு தகுதிபெறுபவர்களின் வீதம் அதிகரித்து செல்லுகின்றது. ஆனால் தமிழ் பேசுவர்களை அதிகம் கொண்ட வடக்கு, கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலை பின்நிலையிலேயே இருந்து கொண்டிருக்கின்றன. இலங்கை பூராகவும் பாடசாலை பரீட்சார்த்திகளில் முதலாம் தடவை 2011ம் ஆண்டில் இருந்து 2018ம் ஆண்டு வரை இலங்கை பூராகவும் சாதாரணதரத்திற்கு தோற்றிய மாணவர்களில் உயர்தரத்திற்கு தகுதி பெற்றவர்களின் சித்தி வீதத்தினை அவதானிக்கின்ற போது, 2011ம் ஆண்டு 60.80வீதம், 2012ம் ஆண்டு 64.74வீதம், 2013ம் ஆண்டு 66.67வீதம், 2014ம் ஆண்டு 69.02வீதம், 2015ம் ஆண்டு 69.33வீதம், 2016ம் ஆண்டு 69.94வீதம், 2017ம் ஆண்டு 73.05வீதம், 2018ம் ஆண்டு 75.05வீதத்தினையும் பெற்று வருடாந்தம் சித்தியின் அளவு அதிகரித்து செல்கின்றமையை இதன்மூலமாக அறியமுடிகின்றது. இது இலங்கை நாட்டினது கல்வியில் உண்டான வளர்ச்சிப் போக்கை காட்டுவதாக அமைகின்றது என குறிப்பிட முடியும்.

பாடசாலை பரீட்சார்த்திகளில் முதலாம் தடவை சாதாரண தரத்திற்கு தோற்றி கல்விப்பொதுத்தராதர உயர் தரத்திற்கு தெரிவான மாணவர்களின் நிலை தொடர்பில் மாகாண ரீதியாக நோக்குகின்ற போது கிழக்கு மாகாணம் 2010 ஆண்டு 4ம் இடத்தினை பெற்ற மாகாணமாகவும், 2011ம் ஆண்டு 6ம் இடத்தினையும் 2012ம் ஆண்டு 5ம் இடத்தினையும், 2013ம் ஆண்டு 5ம் இடத்தினையும், 2014ம் ஆண்டு 5ம் இடத்தினையும், 2015ம் ஆண்டு 8ம் இடத்தினையும், 2016ம் ஆண்டு 8ம் இடத்தினையும், 2017ம் ஆண்டு 8ம் இடத்தினையும், 2018ம் ஆண்டு 9வது இடத்தினையும் பெற்றுள்ளது. இதனடிப்படையில் பார்க்கின்ற போது கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலை ஆரம்பத்தில் 4ம் இடத்திலிருந்து பின்னோக்கி 6ம் இடத்திற்கு சென்று மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக 5ம் இடத்திலே இருந்து சடுதியாக 8ம் இடத்திற்கு மாகாணத்தின் கல்வி நிலை பின்னோக்கி, அண்மையில் வெளியாகிய பெறுபேற்றின் அடிப்படையில் இறுதிநிலையை அடைந்துள்ளது. இது கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலையின் வீழ்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது.

மாவட்ட அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களையும் அவதானிக்க 2017, 2018ம் ஆண்டு தரவுகளின் அடிப்படையில் அவதானிக்கையில், 2017ம் ஆண்டு, அம்பாறை மாவட்டம் 10இடத்தினையும், மட்டக்களப்பு மாவட்டம் 22வது இடத்தினையும், திருகோணமலை மாவட்டம் 23வது மாவட்டத்தினையும் பெற்றுள்ளன. 2018ம் ஆண்டு தரவுகளின் அடிப்படையில், அம்பாறை மாவட்டம் 11வது இடத்தினையும், மட்டக்களப்பு மாவட்டம் 21வது இடத்தினையும், திருகோணமலை மாவட்டம் 24வது இடத்தினையும் பெற்றுள்ளன. இதனடிப்படையில் பார்க்கின்ற போது, கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டம் முன்னிடியை வகித்துவுவருகின்றமையை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

முனையூரான்

இலங்கையில் மொத்தமாக 99கல்வி வலயங்கள் உள்ளன. அவ்வாறன கல்வி வலயங்களின் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்வி வலயங்களின் நிலை தொடர்பில் 2018ம் ஆண்டு வெளியாகிய கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைபெறுபேறுகளின் அடிப்படையில் பார்க்கின்ற போது, அக்கறைப்பற்று கல்வி வலயம் 8வது இடத்திலும், கல்முனை வலயம் 14வது இடத்திலும், அம்பாறை 42வது கல்வி வலயமாகவும், மட்டக்களப்பு வலயம் 55வது இடத்திலும், தெகித்தய கண்டிய கல்வி வலயம் 56வது இடத்தினையும், மட்டக்களப்பு மத்தி 57வது இடத்திலும், திருக்கோவில் கல்வி வலயம் 67வது இடத்தினையும், மூதூர் கல்வி வலயம் 71வது இடத்தினையும், மகோயா கல்வி வலயம் 78வது இடத்தினையும், திருகோணமலை வலயம் 79வது இடத்தினையும், பட்டிருப்பு கல்வி வலயம் 83வது இடத்தினையும், கந்தளாய் வலயம் 87வது இடத்தினையும், கல்குடா கல்வி வலயம் 89வது இடத்தினையும், மட்டக்களப்பு மேற்கு 91வது இடத்தினையும், சம்மாந்துறை வலயம் 93வது இடத்தினையும், கிண்ணியா வலயம் 98வது இடத்தினையும், திருகோணமலை வடக்கு கல்வி வலயம் 99வது இடத்தினையும் பெற்றுள்ளது. இதனடிப்படையில் பார்க்கின்ற போது, பெருமளவிலான வலயங்கள் 50வது வலயத்திற்குள் முன்வரவில்லையென்பதே புலனாகிறது.

பிரதான ஆறுபாடங்களின் மொத்த புள்ளிகளின் அடிப்படையில் முதல் 10இடங்களை பெற்ற மாணவர்களில் கிழக்கு மாகாணத்தினைச்சேர்ந்த எந்தவொரு மாணவர்களும் 2018ம் ஆண்டு பெற்றுக்கொள்ளவில்லை என்பதும் கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலையை படம்பிடித்து காட்டுகின்றது.

கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை உள்ளடக்கிய கிழக்கு மாகாணம் பொருளாதார ரீதியில் அபிவிருத்தி காண்பது மிகக்கடினமாக குறிப்பாக தமிழ் பிரதேசங்கள் இருந்தாலும் கல்வியினூடாகவும் அபிவிருத்தி காண முடியாத நிலையிலே கிழக்கு மாகாணம் இருந்து கொண்டிருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையும் கிழக்கு மாகாணம் இறுதிநிலையை அடைந்திருக்கின்றன. அதேவேளை கல்விசார் அதிகாரிகளிடையே காணப்படுகின்ற தாங்கள் அதிகாரிகள் என்ற போர்வையும், கீழ்மட்டத்தில் உள்ள அதிபர், ஆசிரியர்களிடையே திணிப்புக்களையும், சுமைகள் திணப்பும், ஆசிரியர்கள் மீதான கட்டுப்பாடுகளும், மட்டுப்பாடுகளும், ஆசிரியர்களுக்கு ஆலோசனை வழங்குவதையிட்டு, அவர்களிடம் தவறுபிடிக்கவேண்டும் என்ற வகையில் கேட்பப்படும் வினாக்களும், ஆசிரியர்களையும் உளரீதியாக பாதிப்புள்ளாக்கச் செய்கின்றது.

10 ஆம் பக்கம் பார்க்க....

அதாஉல்லாவின் கிழக்கு வாசலும்
முன்னாள் மாகாண அமைச்சர் உதுமாலெவ்வையும்

கிழக்கு வாசல் என்கிற சொல்லுக்குரிய இடம் முன்னாள் அமைச்சர் அதாஉல்லா அவர்களின் அக்கரைப்பற்றில் அமைந்துள்ள அரசியல் வாசஸ்தலமாகும். இங்கிருந்துதான் அவருடைய அனைத்து அரசியல் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றது. அக்கரைப்பற்று பிரதேசத்தில் மாத்திரமன்றி, அப்பிராந்தியம் முழுவதும் கிழக்கு வாசல் என்றால் அமைச்சர் அதாஉல்லாவின் அரசியல் இருப்பிடம் என்று கூட குறிப்பிடுவார்கள். இந்த கிழக்கு வாசலுக்கு முன்னாள் ஜனாதிபதி இன்றைய எதிர்க் கட்சித்தலைவர் தொடக்கம் இன்றுள்ள கிழக்குமாகாண ஆளுநர் வரையிலும் அனைவரும் தரிசனம் கொடுத்திருந்தார்கள் என்பதும் ஒரு விசேடமாகும். இந்த நிலையில்தான் இக்கட்சிக்கும், கிழக்கு வாசலின் உரிமைக்குரிய தலைமைக்கும் பல்வேறுபட்ட உதவிகளை மேற்கொண்டு, தேசிய காங்கிரஸின் ஒரு இணைப் போராளியாக தன்னை பிணைத்துக் கொண்ட முன்னாள் மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெவ்வையும் ஒருவர் என்றால் அதனை யாரும் மறுக்கமாட்டார்கள்.

தந்திமகன்

மிக அண்மைக்காலமாக முன்னாள் அமைச்சர் அதாஉல்லா அவர்கள் கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியுற்றதன் பிற்பாடு கட்சிக்குள் பல்வேறு கருத்து முரண்பாடுகள் வலுப்பெற்றன. அதில் ஒன்று அக்கரைப்பற்று மாநகரசபையில் தன்னுடைய மகனை மேயராக்கியமை. ஏற்கனவே அக்கரைப்பற்று தவம் என்கிற முன்னாள் மாகாணசபை உறுப்பினர் அக்கரைப்பற்றன் தேசிய காங்கிஸின் பிரதேச சபையின் தலைவராக இருந்தவர். பின்நாட்களில் அக்கரைப்பற்று மாநகரசபையான பின்னர் தவம் அவர்கள் நீக்கப்பட்டார். அமைச்சர் அதாஉல்லாவின் மகன் தெரிவுசெய்யப்பட்டன் பின்னர் தவம் கட்சியிலிருந்து விலகி முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து மாகாணசபை உறுப்பினரார். இதன் பிற்பாடு ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளுள் முக்கியமான ஒன்றுதான் மாகாண அமைச்சர், கட்சியின்முக்கியஸ்தர் போன்ற பல பதவிகளைப் பெற்றிருந்த உதுமாலெவ்வை தேசிய காங்கிரஸிலிருந்து விலகப்போவதாகக் கதைகள் உலாவின. பின்னர் கருத்து முரண்பாடுகள் காரணமாக இப்போது எம்.எஸ். உதுமாலெவ்வையும் கட்சியில் இல்லை என்பது அனைவரும் அறிந்த விடயமே. ஆனால் இப்போது முன்னாள் அமைச்சரான அதாஉல்லா அவர்களோடு அரணாக இருந்த பலர் அக்கட்சியை விட்டு ஒதுங்கும் நிலையே காணப்படுகின்றது.

அக்கரைப்பற்றைச்சேர்ந்த சட்டத்தரணி பஹீஜ், இறக்காமம் பிரதேசத்தில் இருக்கின்ற தேசிய காங்கிரஸின் பல முக்கியஸ்தர்கள், மூதூர் முக்கியஸ்தர்கள் என்று பலர் இப்போது தேசிய காங்கிரஸில் இல்லை. ஆகையினால்தான் இப்போது முன்னாள் மாகாண அமைச்சர் உதுமாலெவ்வை அவர்கள் தன்னுடைய நிலைப்பாட்டினை, தான் ஏன் தேசிய காங்கிரஸிலிருந்து விலகினேன் என்கிற கருத்தாடல்களை மக்களுக்கு விளக்கி கூறிவருகி;ன்றார். ஏனெனில் இவர் தேசிய காங்கிரஸில் கடும் தீவிரமான ஒரு போராளியாகவும், கட்சியின் முக்கியமான ஒருவராகவும் இருந்தவர். பல வருடங்களாக அதாஉல்லாவோடு நெருக்கமாக இருந்தவர். இவ்வாறான ஒருவர் விலகுகிறார் என்பது ஏனைய கட்சிக்கார்களுக்கு செம கொண்டாட்டமாகவே இருக்கும். இந்த தருணம் பார்த்து இவர்களை தமது கட்சிக்குள் வாருங்கள் என்று அழைப்பவர்களும் உண்டு. ஆனால் இவர்கள் இப்போது எந்தக் கட்சிக்குள் செல்வது என்று பாதையை வகுப்பதற்கு முன்னர் இவர்கள் ஏன் அக்கட்சியிலிருந்து விலகினர் என்கிற விடயங்களை மக்கள்முன்னே கொண்டு சேர்ப்பதே தமது கடமை என்கிறவாறு தனது கடந்தகால அரசியல் வறுமைத்தன்மையை இப்போது வெளிப்படையாகவே கொட்டிவருகின்றார் முன்னாள் அமைச்சர் உதுமாலெவ்வை அவர்கள்.

அண்மையில் அட்டாளைச்சேனையில் தமது ஆதரவாளர்களை அழைத்து இந்த விடயங்களை தமது சொந்தஊரின் முக்கியஸ்தர்கள், செய்தியாளர்கள் முன்னிலையில் கூறியிருந்தார். அதேபோல இப்போது இறக்காமப் பிரதேசத்திலும் தமது அணியுடன் சென்று கடந்தகால தேசிய காங்கிரஸின் நடவடிக்கைகள் தமக்கு எதிராக இறக்கப்பட்ட சதிமுயற்சிகள் போன்ற பலவிடயங்களை இறக்காமத்தில் இடம்பெற்ற தேசிய காங்கிரஸிலிருந்து விலகியவர்கள் ஒரு அணியாக சேர்ந்து மக்கள் முன் தமது கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர். இறக்காமப் பிரதேசம் தேசிய காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவான மக்களைக் கொண்ட பிரதேசமாகும். அங்கு அந்த மக்கள் மத்தியில் கட்சிக்குள் என்னதான் நடைபெற்றது என்பதைத் தெளிவாக்க வேண்டிய கடமைப்பாடும் உதுமாலெவ்வைக்கு உண்டு. ஏனெனில் அமைச்சராக இருந்தபோது தமதுசேவைகைள அப்பிராந்தியம் முழுவதும் விஸ்தரித்து சேவையாற்றிய ஒருவராக அந்த மக்களின் நெஞ்சங்களில் ஆழமாகப் பதிந்தவர் உதுமாலெவ்வை. அந்த வகையில் அவர் தெரிவித்த கருத்துக்கள சிலவற்றைப் பார்ப்போம்.

தேசிய காங்கிரஸின் தேசிய கொள்கை பரப்புச் செயலர் சிரேஷ்ட சட்டத்தரணி அக்கரைப்பற்றைச் சேர்ந்த பஹீஜ் அவர்களை கிழக்கு வாசலில் வைத்து சுடுவேன் என்று அக்கட்சியின் முக்கியமான உறுப்பினர் ஒருவர் கூறியதை கட்சியின் தலைமையிடம் கொண்டுசென்று முறையிட்டபோதும் அதற்குரிய எத்தகைய நடவடிக்கையும் இன்றுவரை எடுக்கவில்லை. இவ்வாறானவர்கள் உள்ளே இருக்க, இன்று கட்சிக்காக பல்வேறு தியாகங்களை செய்த எங்களைப் பற்றி விமர்ச்சிக்கின்றனர். பெருந்தலைவர் மர்ஹும் அஸ்ரப், இன்றைய முகாவின் தலைவர் றஊப் ஹக்கீம், தேசிய காங்கிரஸின் தலைவர் அதாஉல்லா போன்றோருக்கு மிகமிக விசுவாசமான முறையில் எங்களுடைய பணியை நிறைவேற்றியிருக்கின்றோம். ஆரம்பம் தொட்டு இன்றுவரையிலும் எங்களுடைய விசுமான தன்மை தொடர்ந்தன. அமைச்சர் அதாஉல்லா அவர்கள் முகாவினை விட்டு வெளியாகியபோது அனைத்தையும் உதறித்தள்ளிவிட்டே வெளியேறினார். அவ்வேளையில் விசுவாகம் கருதி தானும் இணைந்துகொண்டேன்.

இவைகளை எல்லாம் மறந்து இப்போது எங்களை விமர்சனம்செய்யும் அளவுக்கு நாங்கள் துரோகம் செய்யவில்லை. இப்போதும், எப்போதும் நாம் கட்சிக்குள் இருக்கின்றபோது நடைபெற்ற விடயங்களை கூறுவதற்கு நாங்கள் தயாரில்லை. அதுபோலவே இப்போது கட்சிக்குள் இருப்பவர்களும் நாகரீகமான முறையில் பேசவேண்டும். கிழக்கு வாசலில் இடம்பெற்ற சம்பவத்தில் வாய்பேசாமல் மௌனியாக இருந்தவர்கள்கூட இப்போது பேச ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் நாங்கள் எக்கட்சிக்கும் செல்லவில்லை. மக்கள் மத்தியில் எங்களுடைய கருத்துக்களை தெரிவித்து வருகின்றோம். எதிர்வரும் தேர்தலின்போது முக்கியமான முடிவுகளை எடுப்போம் என்கிற கருத்துப்பட முன்னாள் அமைச்சர் எம்எஸ். உதுமாலெவ்வை அவர்கள் தெரிவித்திருந்தார்.

எதுவாக இருந்தாலும் முஸ்லிம்கள் கட்சிகள் அடிக்கடி முரண்பாடுகளுக்குள் சிக்கிக்கொண்டு கட்சி மாறுவதும், மாற்றுக் கட்சியொன்றை ஆரம்பிப்பதும் மாமூலான விடயமாக இருந்தாலும் முஸ்லிம்களைப் பொறுத்தளவில் முன்னாள் அமைச்சர் அதாஉல்லா, உதுமாலெவ்வை போன்றோர்களது கடந்தகால சேவைகள் மறக்கமுடியாதவைகள் என்பதை ஆணித்தரமாக இங்கே கூற முடியும். ஒருகாலகட்டத்தில் வடக்கும் கிழக்கும் இணைந்திருந்தபோது அந்த சபையில் உறுப்பனராக இருந்தவர் தேசிய காங்கிரஸின் தலைவர் அதாஉல்லா. அன்றைய நாட்களில் இந்த பிணைப்பு ஒருகாலும் ஒத்துவராது என்று மேடைகளில் முழங்கியவர். பின்னரான நாட்களில் தலைவர் றஊப் ஹக்கீமுடன் முரண்பட்டு வெளியேறிய பிற்பாடு வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதன் ஊடாக இந்தப் பிரதேசங்கள் அடைந்துகொள்ளும் நன்மைகளைப் பற்றி விலாவாரியாக பேசியவர். மாத்திரமன்றி அதனை பிரிப்பதற்குரிய பக்குவத்தையும் கொடுத்தவர் அதாஉல்லா.

அதேபோன்று உள்ளூர் அரசியலில் ஒரு ஞானியாக இருந்தவர் மாகாண அமைச்சர் உதுமாலெவ்வை அவர்கள். இவர்கள் இருவரும் ஓரணியில் இருந்தபோதுதான் இவர்களுடைய எதிரிகளான முகாவினர் நிறையவே சேவைகளை செய்துவந்தனர். எதிரி ஒன்று இருக்கும்போதுதான் அந்த எதிரியை வீழ்த்தி தமது பார்வையை அதிகரித்துக் கொள்ள வேண்டுமாக இருந்தால் நமது சேவைகள் நிறையவேண்டும் என்கிறபடியினால் போட்டிபோட்டுக் கொண்டு சேவைகள் நடைபெற்றன. ஆனால் இப்போது உப்புச்சப்பில்லாத அரசியல் காய் நகர்த்தல்களால் சேவையும் இடம்பெறவில்லை. ஏனென்றால் எதிர்கட்சி பலமாக இருக்கின்றபோதுதான் அனைத்து அபிவிருத்திகளும் இடம்பெறும் என்பது அரசியல் அபிமானிகளின் கருத்தாகும். அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் ஒரு அமைச்சர் வருகை தந்து வெறும் என்பது இலட்சத்திற்கு வாழ்வாதார உபகரணங்களை வழங்கியிருப்பதாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த அரசியல் முக்கியஸ்தர் ஒருவர் நக்கலாக எம்மிடம் தெரிவித்திருந்தார். முகாவினரோ, மக்கள் காங்கிஸோ அமைச்சராக இருந்த அதாஉல்லா, உதுமாலெவ்வை போன்றவர்கள் அன்று அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, கல்முனை, நிந்தவூர், கல்முனை, மருதமுனை, பொத்துவில், இறக்காமம், சம்மாந்துறை போன்ற பிரசேதங்களில் பலகோடிகளுக்கு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன. அக்காலைவேளை ஏனைய கட்சிகள் வாய்பொத்தி மௌனிகளாக இருந்த வரலாறும் உண்டு. என்கிறார் அந்த அரசியல்வாதி.

உண்மையில் தேசிய காங்கிரஸிலிருந்து வெளியேறியோர் எவரேனும் அதாஉல்லாவைப் பற்றி விமர்சனம் செய்யவில்லை. அதாஉல்லாவின் குரல் அக்கரைப்பற்றிலிருந்து வீசினாலும் அதில் சமூகத்தின் அக்கரை பொதிந்திருக்கும். அவரின் மிகத் தைரியமானதும், உறுதியுமான பேச்சுக்கள் இன்றைய பிரதமரையும் விட்டுவைக்கவில்லை. அன்று தலைவர் அஷ்ரப் அவர்கள் கூறுகின்றபோது எக்காலத்திலாவது நான் இல்லாவிட்டாலும் பரவாயில்லை எக்காரணம் கொண்டு ரணில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருக்கும் வரையிலும் முஸ்லிம்கள் அவரோடு இணைந்து செல்லக் கூடாது என்கிற வார்த்தையை இன்று வரையிலும் கட்டிக் காத்து வருபவர். எதனையும் தைரியமாகப் பேசக்கூடியவர். இதனைத்தான் இன்று மாகாண அமைச்சர் உதுமாலெவ்வையும் கூறுகின்றார். நேற்றுக் கட்சியின் ஓரங்களில் இருந்தவர்கள் எங்களைப் பார்த்து எள்ளிநகைக்கும் போது இந்த விடயத்தை தலைமையிடம் கூறுகின்றபோது அதற்குரிய நடவடிக்கையினை எடுக்காது விட்டால் இந்தக் கட்சிக்குள் இருப்பதன் பயன் என்ன? என்பது போன்ற இன்னும் பல காரணங்களுக்காவே தாங்கள் தேசிய காங்கிரஸிலிருந்து வெளியேறிதாக குற்றம் சாட்டுகின்றனர்.

எனவேதான் இப்போது முரண்பாடுகள் முற்றிய நிலையில் தேசிய காங்கிரஸிலிருந்து உதுமாலெவ்வை போன்றவர்கள் விலகிவிட்டனர். இந்த விலகுவினைப் பற்றி ஒருகட்டத்தில் முன்னாள் அமைச்சர் அதாஉல்லா கூறுகின்றபோது கட்சிக்குள் சில பதறுகள் இருந்தன. காற்றுவீசுகின்றபோது அவை பறந்து விட்டன. இப்போது கட்சி சுத்தப்படுத்தப்பட்டிருக்கிறது. கட்சிக்குள் இருந்த புல்லுருவிகள் விலகிவிட்டார்கள். கட்சி சுத்தமாகிவிட்டது என்கிற கருத்தினை அட்டாளைச்சேனையில் இடம்பெற்ற தேசிய காங்கிரஸின் புனரமைப்பின்போது தமது ஆதரவாளர்கள் மத்தியில்; தெரிவித்திருந்தார். எனினும் அமைச்சர் உதுமாலெவ்வையைப் பற்றி எவ்விதமான விமர்சனமும் செய்யவில்லை. அதேபோலதான் உதுமாலெவ்வை அவர்களும் தமது முன்னாள் தலைவரைப் பற்றிய விமர்சனங்கள் எதுவும் கூறவில்லை. ஆக மொத்தத்தில் இருவரும் இருவருக்கும் நல்லவர்கள் என்கிற முடிவுக்கு நாம் வரவேண்டியிருக்கிறது. எதிர்காலத்தில் உதுமாலெவ்வை முஸ்லிம் காங்கிரஸில் இணைந்தால் கூட அது இப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற கௌரவ ஏ.எல்.எம்.நஸீருக்கு பெரும் தலையிடினை ஏற்படுத்தும் என்கிற கருத்தினையும் அப்பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

அதேவேளை முஸ்லிம் காங்கிரஸிற்குள் முன்னாள் அமைச்சர் உதுமாலெவ்வையின் வருகை தமக்கு சந்தோசமளிப்பதாக தலைவர் கௌரவ அமைச்சர் றஊப் ஹக்கீம் வெளிப்படையாக கூறாவிட்டாலும் உள்ளுர மகிழ்ச்சியளிப்பதாக தமது முக்கியஸ்தர்களிடம் தெரிவித்ததாகவும் செய்திகள் கூறுகின்றன. உதுமாலெவ்வையும் தமது அணியும் முகாவில் இணைவதற்கு விரும்பம் இருந்தபோதிலும் கடந்த தேர்தல் காலங்களில் தேசிய காங்கிரஸிலிருந்தும், கிழக்கு வாசலிலிருந்தும் முக்கியமான பல கருத்துக்களை வெளியிட்டவர், முகாவின் செயற்பாடுகள், தலைமை போன்றவற்றிக்கு பல அழுத்தங்களைக் கொடுத்தவர்களி;ல் முக்கியமானவர் உதுமாலெவ்வை. அவர் இவ்வாறெல்லாம் பேசிவிட்டு இப்போது முகாவின் பக்கம் வந்து மாகாண அமைச்சராகவோ, பாராளுமன்ற உறுப்பினராகவோ வருவதற்குரிய சந்தர்ப்பமாக இதனை அவர் பயன்படுத்தலாம் என்கிறார்கள் முகாவின் நிரந்தரப் போராளிகள்.

இதன் சில வெளிப்பாடுகள்கூட உதுமாலெவ்வையின் எதிராளிகள் கருத்துக்களைப் பரப்பியும் வருகின்றனர். எதுவாக இருந்தாலும் உதுமாலெவ்வை நாம் முன்னர் கூறியபோல அவர் ஒரு அரசியல் ஞானி. அந்த ஞானி முகாவிற்குக் கிடைக்குமாக இருந்தால் கிழக்கு மாகாணம் முழுவதும் உதுமாலெவ்வையைப் பயன்படுத்தி தேசிய காங்கிஸின் வங்குரோத்துத் தனத்தையும், ஏனைய கட்சிகளின் மிச்ச சொச்ச ஆதரவுகளையும் உடைந்தெரிந்து முகாவினை மீண்டும் ஒருமுறை திரும்பிப்பார்க்கவைப்பார் என்பதில் தலைவர் றஊப் ஹக்கீமுக்கு நன்கு தெரியும். ஆகையினால்தான் கிழக்கு வாசலில் என்ன நடைபெறுகிறது. என்பதை மிகத் துல்லியமாக மதிப்பீடு செய்து அதனை தேர்தல் வருகின்றபோது உதுமாலெவ்வையை வைத்தே முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லாவை மொத்தமாக வீட்டுக்கு அனுப்பலாம் என்கிற யோசனையைக்கூட அமைச்சர் றஊப் ஹக்கீம் கனவ காணலாம். எனவேதன் உதுமாலெவ்வை தமக்கு அவசியமான ஒருவராக தெரிகின்றார். அவரின் வருகையானது சிலவேளைகளில் தமக்கு எதிராக தனது நெஞ்சில் வந்து பாயலாம் என்பதை இப்போதைய தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் நஸீர் போன்றோர் ஊகித்திருக்கலாம். எதுவாக இருந்தாலும் இப்போதைக்கு உதுமாலெவ்வை தனது இருப்பிடத்தை நகர்த்துவதற்குரிய நேரம் இன்னும் வரவில்லை என்கிற கருத்தினைத்தான் அண்மையில் இறக்காமத்தில் தெரிவித்திருந்த கருத்துக்கள் ஊடாக ஊகிக்க முடிகிறது.

இதற்கிடையில் அக்கரைப்பற்று அட்டாளைச்சேனை பிரதேங்களில் இருக்கின்ற வாக்குகளில் சுமார் 15 ஆயிரம் வாக்குகளை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் இத்தனை காலங்களும் தங்களுடைய அதிகாரத்தை தக்கவைத்துக் கொண்டனர். ஒருவரின் வெற்றிக்கு மற்றவர் உதவினார். அதேவேளை தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா, எப்போதும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளராகவே இருந்து வருகின்றார். அதன் காரணமாக, கடந்த பொதுத் தேர்தலில் அவர் தோல்வியைத் தழுவினார். 15 வருடங்கள் அமைச்சராக இருந்து வந்த அதாவுல்லா, நாடாளுமன்ற உறுப்பினராகக் கூட இல்லாமல் போனமை, தேசிய காங்கிரஸக்குப் பெரும் இழப்பானது என்பது உண்மையான விடயமாக இருந்தமையினால்தான் இப்போது கட்சியை விட்டு பலரும் விலகி வருகின்றனர் என்கிற கருத்தும் அப்பிரதேசங்களில் உலாவருகின்;ற கருத்துக்களாகும்.

எனவே, நாம் முன்னர் கூறியபோல கிழக்கு வாசலும், அதன் தலைவரும், முன்னாள் அமைச்சர் உதுமாலெவ்வையும் இணைந்து கொள்வதுடன், மக்கள் காங்கிரஸ், முஸ்லிம்காங்கிரஸ் போன்ற கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்காலத்தில் முஸ்லிம்களுக்குள் கட்சிரீதியான ஒன்றுமையை ஏற்படுத்த வேண்டியது அவசியமான ஒன்றாகும். தங்களுக்குள் பதவிக்காவோ, அரசியலுக்காகவோ பிரிந்திருக்காது தமது இனத்தின் விடுதலைக்காக, இனத்தின் இருப்புக்காக தங்களை இணைத்துக் கொண்டு செல்வது மேலாக கருதப்படுகின்றது. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பது போல சிலருக்கு இவர்கள் பிரி;ந்திருப்பது வெகு சந்தோசம். ஆனால் சமூக சிந்தனையில் உதுமாலெவ்வையும்சரி, அதாஉல்லாவும்சரி அவர்கள் இந்த சமூகத்தின் எதிரிகளுக்கு தடைக்கல்லா இருந்தவர்கள்.

இப்போது கல்முனையைப் பிரிப்பதற்கும், கல்முனை சாய்ந்தமருது மக்களை பிரித்தவர்கள் யார் என்பதும் அப்பகுதி மக்களுக்கு நன்றாக தெரியும். அரசியல்வாதிகள் தங்களுடைய தோதுக்காக சிலவற்றை மேற்கொள்வார்கள். அதன் விளைவு சந்ததி சந்ததிக்கும் அவமானச் சின்னமாக அமையும் என்பதை ஒலுவில் துறைமுகத்தினால் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒலுவில் மண்ணை கடல் கபளீகரம் செய்கின்ற நிகழ்வுக்கு அரசியல்வாதிகளே பிரதானமான காரணியாக இன்றும் அந்த மக்கள் பலமாக கூறிக்கொண்டிருக்கின்றார்கள். இன்னும் சில வருடங்களில் ஒலுவில், நிந்தவூர் பிரதேசங்கள் கனிசமான பிரதேசம் கடலுக்குள் சங்கமமாகலாம் என்கிறார்கள் நில ஆய்வாளர்கள். எனவேதான், சமூகத்தின் பிரச்சினைகள் மும்முரமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற இன்றைய நாட்களில் கட்சிகளுக்குள் பிரிவுகளை ஏற்படுத்தாமல் ஒற்றுமையாய் இருந்து ஓரணியில் ஒன்றுபடுகின்றபோது சமூகம் நிச்சயம் வெற்றிபெறும் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

க.பொ.த....

09 ஆம் பக்கத் தொடர்ச்சி

இதனால் விருப்புடன் கல்வியினை மாணவர்களுக்கு வழங்குவதில் ஆசிரியர்கள் பின்நிற்கின்றமையினையே அவதானிக்க முடிகின்றது. மாணவர்களுடன் அடிமட்டத்தில் வேலை செய்கின்றவர்களாக ஆசிரியர்கள் வேலை செய்கின்ற நிலையில், இவ்வாசிரியர்களுக்கான தடைகளை நிவர்த்தி செய்து கொடுப்பதே அதிகாரிகளின் செயற்பாடாக இருக்கவேண்டுமே தவிர ஆசிரியர்களுக்கு தடைகளை வழங்கங்கக்கூடிய செயற்பாடுகளையும் குறைக்க வேண்டும். 2011, 2012, 2013, 2014ம் ஆண்டு காலப்பகுதிகளில் கிழக்கு மாகாணம் முன்னிலை வகித்திருக்கின்றது. இக்காலப்பகுதியில் ஆசிரியர்களுக்கு வேலைச்சுமைகள் குறைவாக காணப்பட்டமையுடன், மனவிருப்புடன் வேலைசெய்யக்கூடிய வகையிலான அழுத்தங்கள் வழங்கப்படாதிருந்தது. தற்போதைய சூழலில் அதிகாரி என்றால் கேள்வி கேட்க வேண்டும் என்ற எண்ணப்பாட்டில் ஒருசிலர் செயற்படுகின்றமை ஆசிரியர்கள் மீது வெறுப்பை ஏற்படுத்தியிருக்கின்றன.

கல்வியில் கிழக்கு மாகாணம் முன்னிலை வகிப்பதாகவிருந்தால், பெற்றோர் மனப்பாங்கில் மாற்றம் ஏற்படவேண்டும். அதேவேளை மாணவர்களுக்கும் கற்பதற்கான ஆர்வத்தினை கொண்டிருக்க வேண்டும். அதேநேரம் உடல் ரீதியாகவும் மாணவர்கள் ஆரோக்கியமுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனால் கிழக்கு மாகாணத்தில் உள்ள மாணவர்கள் பலரை அவதானிக்கின்ற போது, சத்துக்குறைபாடுடையவர்களாக பலர் உள்ளமையினையும் காணமுடிகின்றது. இச்செயற்பாடும் மாணவர்களின் கல்விச்செயற்பாட்டை பாதிருப்பதுடன், வீட்டிலே கற்றலுக்கான சூழல் இல்லாமையும் இன்னோர்பக்க பாதிப்பினை ஏற்படுத்தியிருக்கின்றன.

கிழக்கு மாகாணம் ஒவ்வொருவருடங்களும் பின்நிலையில் இருந்த மாகாணமல்ல. குறிப்பிட்ட சில வருடங்களாகவே பின்நிலையை வகித்துவருகின்றன. குறிப்பாக அண்மைக்காலங்களாகவே பின்னோக்கி சென்றுகொண்டிருக்கின்றன. இவ்வலயம் இப்பின்னிலையை அடைவதற்கான காரணத்தினை கிழக்கு மாகாண கல்வி நிருவாகம் ஆராயவேண்டும். ஒழுங்குமுறையான ஆய்வுமுறைகளை மேற்கொண்டு, மாகாணத்தின் கல்வி நிலையை முன்னோக்கி கொண்டுவருவதற்கு முயற்சிக்க வேண்டும். முறையான திட்டங்களையும், செயற்பாடுகளையும் சரியாக நடைமுறைப்படுத்துவதற்கும் ஆசிரியர்கள் விருப்புடன் கற்பிப்பதற்கும் ஏற்ற வழிவகைகளை செய்ய வேண்டும். மாறாக ஆசிரியர்களின் வெறுப்பை தூண்டும் வகையிலான செயற்பாடுகளோ, மாணவர்களின் வெறுப்பைத்தூண்டும் வகையிலான செயற்பாடுகளையோ அமுல்படுத்துகின்ற போது இன்னமும் கல்விநிலையை பாதிக்கச் செய்யும். அதேவேளை ஆசிரியர்களுக்கான இடமாற்றம் தொடர்பிலும் உரிய அதிபர்களின், விருப்பத்துடனும், ஆசிரியர்களின் விருப்பதுடனும், நியாயமானமுறையிலும் மேற்கொள்கின்ற போதும், கல்வி பாதிப்பினை நீக்க முடியும். மாணவர்களை கல்வி ரீதியாக முன்னோக்கி கொண்டு வருவதே அனைவரினதும் நோக்கமாக இருக்க வேண்டும். இதற்கான இலகுமுறைகளை கையாண்டு வெற்றிபெறுவதற்கான திட்டங்களை தீட்டி எதிர்வரும் காலங்களில் கிழக்கு மாகாணம் இறுதிமாகாணம் என்ற பெயரினை மாற்றியமைக்க தற்போதைய ஆளுனர் உள்ளிட்ட, கல்வி நிருவாகத்தினர் செயற்பட வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்ப்பார்ப்பாகும்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை அவசியமான ஒன்றா?

அட்டாளைச்சேனை எஸ்.எல். மன்சூர்

கடந்தவாரத் தொடர்ச்சி

உளவியல்ரீதியான பிரச்சினைகள் இருப்பதாக பலரும் கூறிவரும் நிலையில் தரம் 5 தொடர்பான பரீட்சை வினாக்கள் தொடர்பான ஆய்வினை பலர் மேற்கொண்டு இறுதியில் அவை பொருத்த மற்றவைதான் என்பதையும் நிருபித்திருக்கின்றார்கள். அந்தவகையில் ஐந்தாம் வகுப்புத் தேசியப் பரீட்சையும் மீளாய்வுக்குரிய சிந்தனைகளும் எனும் தலைப்பிலான கட்டுரையொன்றை 2008 நவம்பர் 30ம் திகதியுடைய அகவிழி எனும் சஞ்சிகையில் பேராசிரியர் சபா. ஜெயராசா கூறியிருந்த கட்டுரையில் வினாக்கள் தொடர்பாக ஆராய வேண்டியிருக்கிறது என்கிற வகையில் அவர் மாணவர்களின் வயதுக்குப் பொருத்தமான வினாக்கள் அமைவதையும் சுட்டிக்காட்டியிருந்தார். குறித்த ஓர் ஆண்டின் வினாப்பத்திரத்தினை ஆதாரமாகக் கொண்டே அவர் அதனைக் கூறியிருந்தார்.

அதாவது, பெரும்பாலான வினாக்கள் 12வயது தொடக்கம் 15வயது கொண்ட வயது வீச்சில் உள்ள மாணவருக்கே பொருத்தமானவையாக அமைந்துள்ளன. அதேவேளை அவ்வினாக்கள் பத்து பதினொரு வயது கொண்ட மாணவர்களுக்கு அதீத உளவியல் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் முனைப்புக்களைக் கொண்டிருத்தலும் சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது. குறித்த வயதுக்குரிய அறிகை மட்டங்களை மீறி வினாக்கள் அமைக்கப்படுகின்றன. மீத்திறன்மிக்க மாணவர்களைக் கண்டறிவதற்கு ஐந்தாம் வகுப்பு வயது வீச்சின் உள ஆற்றல்களைக் கொண்ட வினாக்களைத் தயாரிப்பதே பொருத்தமான நடவடிக்கை. அதைவிடுத்து உயர் வள வயது மட்டங்களுக்குரிய வினாக்களைக் கொடுத்தல் அனர்த்தம் விளைவிக்கவல்ல கணிப்பீட்டு முறையாகும் எனவும் பதிவிட்டிருந்தார்.

அவர் தன்னுடைய கட்டுரையின் இறுதியில் இவ்வாறும் கூறியிருந்தார். அதாவது, தேசிய மட்டத்திலான ஐந்தாம் தரக் கல்வி ஏற்பாட்டினையும். பரீட்சை வினாத்தாள்களையும் அறிகைத் தளத்திலும், உளவியல் தளத்திலும் விரிவான ஆய்வுக்குட்படுத்த வேண்டிய தேவை மேலெழுந்துள்ளது. அதனைச் செவ்விதாகச் செய்யத தவறுமிருடத்து இந்நாட்டின் ஆரம்பக்கல்வியின் விளைவாக உளநலப் பாதிப்புக்குள்ளான சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லலைக் கட்டுப்படுத்த முடியாதிருக்கும். வேண்டத்தகாத அழுத்தங்களைச் சுமத்துதல் எந்தப் பரீட்சையினதும் நோக்கமாக இருத்தலாகாது. கல்விச் செயல் முறையில் விருப்புடன் ஆழ்ந்து ஈடுபடச் செய்யும் அறிகைத் தளங்களை உருவாக்குதலும் வயது நிலைக்கும் முதிர்ச்சிக்குமுரிய உசாவல் விருப்பைத் தூண்டுதலும், குறித்த வயது வீச்சுக்கள் அமையும் அறிகை விளிம்பின் உச்சங்களை அடைததும் சிறந்த பரீட்சையின் பரிமாணங்களாகின்றன எனவும் பேராசிரியர் அக்கட்டுரையில் விபரித்திருந்தார்.

இந்த நிலையில்தான் இன்று இப் பரீட்சை தொடர்பான விடயங்கள் பலநோக்குகளாக ஆய்வுக்குட்படுத்த வேண்டியதன் அவசியம் இன்று வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில்தான் மீண்டும்மீண்டும் நாட்டின் ஜனாதிபதி அவர்கள் மாணவர்களின் சிறந்த கல்வியை காலத்திற்கு ஏற்றவிதத்தில் வழங்கவேண்டிய மிகப் பெரும் பொறுப்பு பாடசாலைகளுக்கு உண்டு என்பதை பரைசாற்றி வருகின்றார். உண்மையில் இன்று பாடசாலைகளுக்குப் புறம்பான முறைசாராப் பாடசாலைகள் நாட்டின் மூலை முடுக்கெங்கும், வீட்டு முற்றத்திலும் சில மாணவர்களை வைத்துக் கொண்டு தரம் 5 கற்பிக்கப்படுவதை பல இடங்களில் நாமும் பார்திருக்கிறோம். பெற்றோர்கள் எந்தளவுக்கு நிலைமை சென்றிருக்கிறது என்றால், தமது பிள்ளைகள் உயர்புள்ளிகளைப் பெற்று சமூகத்தில் ஒரு கௌரவத்தைப் பெற வேண்டும் என்றே நினைக்கிறார்கள். ஆனால் பல பெற்றோர்கள் எத்தகைய நமைச்சலாக இருந்தபோதிலும் தனது பிள்ளை பாடசாலை சென்று வந்ததன் பிற்பாடு உண்ணுவது பாதி உண்ணாதபாதி.., எனத் துடித்துக் கொண்டே தனியார் கல்விக் கூடங்களுக்குள் செல்ல அனுமதி பெறுகின்றனர். இவ்வாறான தனியார் கூடங்களுக்கு பல ஆயிரங்களை வழங்கி கெட்டித்தனமானவனாக மிளிறச் செய்வதற்கு பல்வேறு எத்தனங்களில் ஈடுபடுகின்றனர். எவ்வாறாகினும் தரம் 5 புலமைப் பரீட்சையில் நீக்கப்பட வேண்டுமா? என்பதை அண்மைய நாட்களில் அனைத்து தரப்பிலிருந்தும் வேண்டுகோள் விடுப்பதிலிருந்து இப்பரீட்சை முறையை மாற்றியமைக்க வேண்டிய கனிசமான அழுத்தங்கள் இன்று கல்வியமைச்சு மட்டம் வரையிலும் சென்றிருப்பதையே அண்மைய நாட்களின் அறிய முடிகின்றது.

ஆனால் இதன் பின்னாலும் ஒரு அபாயகரமான செய்தியும் ஒன்று உள்ளது என்பதை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் உண்டு. அதாவது இன்று தரம் 5புலமைப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு பாடசாலைப் படிப்பினைத் தொடர்ந்து டியூசன் என்கிறபேரிலோ, மாலைநேர வகுப்புக்கள் என்கிற பேரிலோ இவை நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. இவ்வாறான மாணவர்கள் உண்மையிலேயே அடுத்த வகுப்புக்களில் சிறந்த முறையில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள் என்கிற நிலையும் உண்டு. ஆனால் இவர்களுக்கு அதாவது தரம் 5 மாணவர்களுக்கு இப்பரீட்சையை முடிவுறுத்தி தரம் ஏழிலோ, எட்டிலோ மேற்கொள்கின்றபோது தரம் 5வரையான பாடசாலைகளில் விசுவாசமான முடிறில் மாணவர்கள் தயார்படுத்தலுக்கு உள்ளாக்கப்படாமல் ஏனோதானோ என்கிற நிலையில் எவ்விதமான விரைவுப் பயிற்சிகளுக்கு மாணவர்கள் முகங்கொடுக்கப் படமாட்டார்கள். ஆசிரியர்களும் தரம் 5 புலமைப்பரீட்சையில் நமது குழந்தைகள் சிறந்த பெறுபேற்றை அடைவதிலிருந்து தவிர்க்கப்பட்டிருப்பதால் வலுப்படுத்தப்பட்ட, சிறந்த முறையிலான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் முழுமையாக நடைபெறாது காணப்படுவர்.

இதேவேளை தரம் ஐந்து புலமையாளர்கள் அனைவரும் கட்டாயம் விண்ணப்பிக்க வேண்டிய கட்டாயத்திலிருந்து தவிர்க்கப்படுகிறது. அதாவது, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுவது அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயமல்ல என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்திருந்தார். இது தொடர்பில், தரம் 5 புலமைப்பரிசில் பரிட்சையில் தோற்றுவது அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயமானது என ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்த சுற்று நிருபத்தை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் அப்போது தெரிவித்திருந்தார்.

அதேவேளை புலமைப்பரிசில் பரீட்சையை மறுசீரமைப்பு செய்வது தொடர்பில் நியமிக்கப்பட்ட கல்வியியலாளர்கள், சிறுவர் தொடர்பான உளவியலாளர்கள், சிறுவர் தொடர்பான வைத்திய நிபுணர்கள் உள்ளிட்டோரை கொண்ட குறித்த மீளாய்வுக் குழுவின் சிபாரிசுகளை கருத்திற்கொண்டு குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்திருந்தார். புலமைப்பரிசில் பரீட்சை குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு உதவித்தொகை வழங்கும் நோக்கிலும், அனைத்து வசதிகளையும் கொண்ட மத்திய மகாவித்தியாலயத்தில் சேர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பு வழங்கும் நோக்கிலும் ஆரம்பிக்கப்பட்ட போதும், தற்போது அந்நோக்கங்களிலிருந்து விடுபட்டு, சுமார் 120 பிரபலமான தேசிய பாடசாலைகளில் மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் மிகப் பாரிய சித்திர வதைக்குரிய பரீட்சையாக அது மாறியுள்ளமை தொடர்பில் அக்குழு மேற்கொண்ட ஆய்வில் புலனாகியிருக்கிறது.

அதுமாத்திரமன்றி உதவி வகுப்புகள் ஊடாக சிறுபிள்ளைகள் மேலும் உளரீதியாக பாதிப்படைகின்றமையும், சமநிலையான மனிதனாக அவர்களை சமூகத்தில் இணைக்கும் பணியில், இந்த போட்டி பரீட்சையானது மிகப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். புலமைப்பரிசில் தொடர்பில் அரசாங்கம் வருடாந்தம் செலவிடுகின்ற பணம் சுமார் ரூபா ஒரு கோடி 35 இலட்சங்களாகும். ஆயினும் புலமைப்பரிசில் பரீட்சையை நடாத்துவதற்கு மாத்திரம் செலவிடப்படும் தொகை ரூபா இரண்டு கோடிக்கும் அதிகமாகும். இவ்வாறான நிலைமைகளின் கீழ் புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பில், தீர்மானம்மிக்க பல முடிவுகளை எதிர்வரும் காலங்களில் எடுக்கவுள்ளதோடு அறிஞர்களைக் கொண்ட குழுவின் சிபாரிசுகளுக்கமைய, முதலாவது தீர்மானமாக அனைத்து மாணவர்களும் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுவது கட்டாயமென அறிவிக்கப்பட்ட சுற்றுநிருபத்தை இரத்து செய்வதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

புலமைப்பரிசில் நிதி உதவியை எதிர்பார்க்காத மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை மூலம் பிரபலமான பாடசாலைகளை எதிர்பார்க்காத மாணவர்கள்கூட புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமையானது, புலமைப் பரிசில் பரீட்சையின் போட்டித்தன்மை மேலும் அதிகரித்துள்ளதோடு, குழந்தைகள் மீது சுமத்தப்படும் தேவையற்ற சுமை அதிகரித்துள்ளமையே இதற்கான முதற் காரணமாகும். அதற்கமைய எதிர்வரும் காலங்களில் விருப்பத்தின் அடிப்படையில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுவதா அல்லது தோற்றாமல் இருப்பது எனும் முடிவெடுக்கும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கிறது. அந்த வகையில், புலமைப்பரிசில் பரீட்சையை கட்டாயமாக்கி புலமைப்பரிசில் பரீட்சையின் கட்டமைப்பு, அது நடாத்தப்பட வேண்டிய தரம், நடாத்தப்படும் நோக்கம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் குழு தனது கவனத்தை செலுத்திவருகின்றது.

எனவேதான், இப்பரீட்சை உளரீதியாடன விளைவுகளை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறியபோதிலும் இப்பரீட்சையில் முழுடியாக இடைநிறுத்தம் செய்யாமல் மாற்றங்களைக் கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பும் ஏற்பட்டுள்ளது. தரம் 5 வரையான மாணவர்களைக் கொண்டுள்ள பாடசாலைகளுக்கு இப்பரீட்சையின் முடிவுகள் அவசியமான ஒன்றாகும். மாற்றங்களை உட்படுத்தியவாறு மறுசீரமைக்கப்பட்டு மாணவர்கள் சுயமாக கற்று பாடசாலையில் கற்பி;க்கப்படுகின்ற பாடங்களோடு இயல்பாக மாணவர்கள் விரும்புடன் எழுதக்கூடியவாறு பரீட்சை வினாப்பத்திரங்கள் அமைய வேண்டும். டியூசன் மாயையிலிருந்து முதலில் பெற்றோர்கள் விடுபட வேண்டும். பாடசாலைக் கல்;வியை மதிக்க வேண்டும். பாடசாலையே முழுமையான கற்றல் செயற்பாடுகள் நடைபெறும் இடமாக மாறம் பெறவேண்டும். அதற்கான மாற்றங்களை மேற்கொண்டு புதிய வடிவில் இப்பரீட்சை அமைதல் வேண்டும்.

கோப்புப்படம்

பல்கலைக்கழகங்களும் பகிடிவதை செயற்பாடுகளும்

சி.அருள்நேசன்

மாணவர்களிடையே நல்லெண்ணத்தையும் புரிந்துணர்வையும் வளர்ப்பதற்காக நினைவுக் கெட்டாத காலத்தில் இருந்து உலகெங்கிலும் உள்ள பல்கலைக்கழக முறைமையில் பகிடிவதை தொடர்ந்திருக்கின்றது. இதற்கு மாறாக இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மிகவும் ஆபத்தான, கடுமையான, மனோரீதியான மற்றும் உடல்ரீதியான இம்மைகளை பகிடிவதை ஏற்படுத்தியுள்ளதுடன் அண்மைக்காலங்களில் இதன் விளைவாக நிரந்தர உடல்ரீதியானதுடன் மனரீதியானதுமான குறைபாடுகளை அல்லது மாறாக சில மாணவர்களுக்கு மரணத்தை ஏற்படுத்தியுள்ளது.

பகிடிவதை அல்லது இலகுவான வார்த்தையில் கூறுவதானால் ராகிங் என்பதை இன்று முழுப் பல்கலைக்கழக கட்டமைப்பிலும் காணக்கூடியதாக உள்ளதோடு, சித்தரவதை மற்றும் கொடுமைகள் காரணமாக இதற்கு எதிராக சட்டத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. என்றாலும் அந்த சட்டங்களையும் மீறிச்சென்று சிலர் பகிடிவதையில் ஈடுபடுவது ஏன் என்பது புரியாத ஒன்றாகவே உள்ளது. கல்வி நிலையில் உயர்க்கல்வி நிலையங்களாக அவதானிக்கப்படும் பல்கலைக்கழங்கங்களில் ஆய்வு மாணவர்களாக உருவாக அடித்தளம் அமைக்கும் பல்கலைக்கழங்களில் மாணவர்கள் பகிடிவதை என்ற ரீதியில் அழிவுப்பாதைக்கும், முறையற்ற செயற்பாடுகளுக்கும் தங்களை தயார்ப்படுத்திக் கொள்ளுகின்றமை வேதனையான விடயமாகும்.

பொதுவாக பகிடிவதை அல்லது நம் அனைவராலும் புரிந்த மொழியில் சொல்வதானால் ராக் பண்ணுதல் என்பது இலங்;கையில் ஆரம்பிக்கப்பட்டது என அநேகமனோர் நினைத்துக் கொண்டிருந்தாலும் இதன்; வரலாறு பல நூற்றாண்டுக்களுக்கு முன்னரானதாகும். 7ஆம், 8ஆம் நூற்றாண்டில் கிரீஸ் நாட்டின் விளையாட்டுக் கழகத்திற்கு புதிய உறுப்பினர்களை இணைக்க் கொள்ளும் போது அவர்கள் சமூகத்துடன் ஒன்றிணைந்தவர்களாகச் செயற்படுவதற்கும் குழுச் செயற்பாடுகளின் போது இணங்கி நடப்பதற்கும் இவ்வாறு பகிடிவதை வழங்கப்பட்டது.

இவ்வாறு ஆரம்பதான இந்த பகிடிவதையானது முதலாவது மற்றும் இரண்டாவது உலக யுத்தத்தில் கலந்;துகொண்ட இராணுவக் குழுக்கள் வரை வியாபித்திருந்தது. உலக மகாயுத்தம் நிறைவடைந்த பின்னர் மீண்டும் கல்விச் செயற்பாடுகளுக்காகத் தங்களது கல்வி நிறுவனங்களுக்குச் சென்ற இராணுவ அதிகாரிகள் இராணுவத்தில் இருந்த இந்த உப கலாசார விடயமான பகிடிவதையினை தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்றுள்ளனர் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

இதற்கு சிங்களத்தில் பகிடிவதை என்ற சொல் பயன்படுத்தப்பட்டாலும் இது பிரித்தானிய அரச இராணுவத்துடன் இணைந்து கொள்ளும் போது பயன்படுத்தப்பட்ட Royal Admission Gang என்ற வாசகத்தின் முதல் எழுத்துக்களால் Rag(ராக்) என்று பயன்படுத்தப்பட்டுள்ளமை தெளிவாகின்றது.

குறிப்பாக பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதையினை சமூக அறிவியலோடு நோக்கும் போது எமக்குப் புரிவது என்னவென்றால் பல்கலைக்கழங்களில் அனுமதி பெறும் இளைஞர், யுவதிகளின் இளமை மற்றும் அதனுடன் இணைந்துள்ள சித்தாந்தங்கள் தவறான முறையில் கையாளப்படுகின்றது என்;பதாகும். விசேடமாக பல்கலைக்கழங்களில் அனுமதி பெறும் அநேக மாணவர்கள் 20 வயதிற்;குட்பட்டவர்களாவர். இவர்கள் அதுவரையில் தமது பெற்றோரின் பாதுகாப்பினைப்; பெற்றுக்; கொண்டிருந்தவர்கள். பிரத்தியேக வகுப்புக்கள் அல்லது பாடசாலை, வீடு என அனைத்து இடங்கள் தொடர்பிலும் பெற்றோர் அவதானத்துடன் இருந்தவர்கள்.

பாடசாலை - பல்கலைக்கழக இடைவெளி அதேபோன்று பாடசாலைகளில் அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கு அப்பாடசாலையில் இருக்கும் சட்டத்திட்டங்கள் மற்றும் பாடசாலை ஆரம்பிக்கப்படும் நேரங்கள் என்பனவும் வராவிட்டால் அதுபற்றி ஆராய்ந்து பார்த்தல் போன்ற விடயங்கள் தொடர்பிலும் மிகத் தெளிவாக அறிவுறுத்தப்படும். அத்துடன் பாடசாலையின் சிற்றுண்டிச்சாலை, அதிபர் அலுவலகம் போன்ற இடங்கள் பற்றி அறிந்து கொள்ள முடியும். அதேபோன்று தாம் நினைத்த ஆடை,அலங்காரங்களை பாடசாலைகளில் மேற்கொள்ள முடியாது அதேநேரம் பாடசாலையின் நற்பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட முடியாது.

ஆனால் பல்கலைக்கழங்களில் இவை அனைத்தும் வேறுபடும். பல்கலைக்கழகங்களில் கதவுகள் காலை 7.30மணிக்கு மூடப்படமாட்டாது. மாணவத் தலைவர்கள் தாமதித்து வந்த மாணவர்கள் தொடர்பில் எவ்வித அக்கறையும் கொள்வதில்லை. அங்கு முற்றிலும் மாறுபட்ட சூழலே இருக்கின்றது. இவ்வாறான சூழலுக்கு உடனடியாக மாணவர்கள் பழக்கப்படுவது சிரமமான காரியமாகும். உண்மையில் பாடசாலையில் மற்றும் குடும்பச் சூழலில் கிடைக்க வேண்டியதற்கும் பல்கலைக்கழங்களினுள் கிடைக்க வேண்டியவைக்கும் இடையில் பாரிய இடைவெளி இருக்கின்றது. பாரிய சட்டத்திட்டங்களுக்குக் கட்டிப்பட்டிருந்த மாணவிகளுக்கு முழுமையாக கிடைக்கும் சுதந்திரத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழங்களின் உப கலாசாரத்தினுள் காலாகாலமாக இடம்பெற்றுவரும் பகிடிவதையானது புதிய மாணவர்களின் அந்த இடைவெளியை நிரப்புவதற்குப் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றது. இதில் இன்றைய நிலையில் பாரிய குழப்பங்கள் தோன்றியிருப்;பதை அவதானிக்க முடிகின்றது. இதற்குத் தகுதியான சூழல் ஒன்றும் பல்கலைக்கழங்கத்தினுள்ளேயே தோன்றியுள்ளது. பகிடிவதை காரணமாக சில மாணவர்கள் தொடர்ச்சியாக பல்கலைக்கழகத்திலிருந்து இடைவிலகும் அதேநேரம் உளவியல் ரீதியான பாதிப்புக்குள்ளாகின்ற நிலையும் ஏற்பட்டுள்ளது.

‘முன்கோபம் எதுவுமின்றி மற்றொரு மனிதரையோ அல்லது பிராணியையோ கொடுமைக்குள்ளாக்குதென்பது உளரீதியான பாதிப்பொன்றின் வெளிப்பாடு என்பதே உளவியலாளர்களின்; கருத்தாக உள்ளது. அதாவது மற்றைய உயிரனங்களின் அவஸ்தையைப் பார்த்து இன்பம் பெறுகின்ற ஒரு வகை மனோவியாகூலம்’. இது உளப்பாதிப்பொன்று வாழ்வின் எவ்வேளையிலும் சந்தர்ப்பம் பார்த்து ஒருவரிடம் வெளிப்படக்கூடும் என்பது உளவியலாளர்களின் கருத்து.

அண்மைக்காலமாக இலங்கையில் பல பல்கலைக்கழங்களில் 15 மேற்பட்ட மாணவர்கள் பகிடிவதை காரணமாக உயிரிழந்துள்ளனர்;. மேலும் சில பல்கலைக்கழங்களில் உடல் ரீதியான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு மாணவர்கள் இடைவிலகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான நிலைகள் எற்பட்டிருக்கின்ற போதிலும் பகிடிவதைகள் இவ்வாறு ஏன் தொடர்ந்து செல்கின்றது? என்பது சமூகத்தின் பலரின் கேள்வியாகும். பல்கலைக்கழக நிர்வாகமோ அல்லது ஊடகங்களோ இவ்விடயம் தொடர்பிலும் நல்லெண்ணத்தில் பார்ப்பதில்லை. அதேபோன்;று சட்ட ரீதியாகவும் பகிடிவதை தடை செய்யப்பட்டிருக்கின்றது. குறிப்பாக 1998ஆம் ஆண்டிலிருந்து பகிடிவதை எதிர்ப்புச் சட்டம் நடைமுறையிலுள்ளது. அதன் பின்னராக பாலியல் ரீதியான வன்முறை பகிடிவதை தொடர்பிலான சட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான நடைமுறைகள் காணப்படுகின்றபோதிலும் தொடர்ந்து ஆங்காங்கே பகிடிவதைகள்; இடம்பெறுவது ஆராயப்பட வேண்டிய விடயமாகும். இதற்கு பல்கலைக்கழக மாணவர்கள மற்றும் நிர்வாகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும் பல்கலைக்கழங்களின் நிர்வாகத்தில் காணப்படுகின்ற பலவீனத்தையே இங்கு முதலில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. அதேசமயம் குற்றங்களில் ஈடுபடும் மாணவர்களை முறையான விதத்தில் தண்டனைக்கு உட்படுத்த வேண்டும் அல்லது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பல கனவுகளை சுமந்து வரும் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் இவ்வாறான முறையற்ற செயற்பாடுகள் வாழ்க்கையில் பல திருப்பத்தை ஏற்படுத்தி விடுவதை பலரின் கருத்துக்கள் மூலம் இனங்காணப்பட்டுள்ளது.

எனவே பகிடிவதையினை முன்னெடுத்துச் செல்வதற்கான நோக்கங்கள் ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஒவ்வொரு மாணவ பரம்பரையினருக்கும் ஏற்படுவதால் இந்நிலையினை அற்பமாக எண்ணிவிடாது இதற்காக நீண்ட காலத்தீர்வு ஒன்றுக்குச் செல்வதற்கான காலம் தற்போது வந்திருக்கின்றது என்பதை அனைவரும் அறிந்துக் கொள்ள வேண்டும்.

உடலுக்கு அருமருந்தாகும் உடற்பயிற்சி!

றாசிக் நபாயிஸ்
(BA, MA) சமூகப்பணியாளர்,
மருதமுனை

உலக சுகாதார தினம் (2019/04/07) ஆம் திகதி பல்வேறு நாடுகளில் அனுஷ்டிக்கப்பட்டது. இவ்வருடத்துக்கான கருப்பொருளாக 'அனைவருக்கும் ஆரோக்கியம்' என்பதாகும். அந்த வகையில் மருதமுனை 'ஜொக்கர்ஸ்' விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வு மருதமுனை, மசூர் மௌலானா விளையாட்டு தொகுதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட உடற்பயிற்சி மற்றும் நடைபவனி ஊரின் முக்கியமான பாதைகளினூடாக மக்களை ஒலிபெருக்கி ஊடாக விழிப்புணர்வு செய்த வண்ணம் நடைபெற்றது அநேகரின் வரவேற்பைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. உடற்பயிற்சி நோக்கம் பற்றி விளக்கமளித்தார், விஷேட விளையாட்டு உடற்பயிற்சி மருத்துவர் ஏ.ஏ.எம்.புஹைம் அவர்கள்.

உடற் பயிற்சியின் முக்கியத்துவங்கள்

இலங்கைத் நாட்டில் ஏறத்தாழ 65%ற்கு மேற்பட்ட இறப்புக்கள், தொற்றாத நோய்களான மாரடைப்பு, நீரிழிவு நோய், உயர் குருதி அமுக்கம், கொலஸ்ரோல், வியாதி, புற்று நோய் மற்றும் சுவாச நோய் போன்ற பல வியாதிகளின் மூலம் ஏற்படுகின்றன.

இவ்வாறான நோய்களுக்கான பிரதான காரணிகளாக உடற்பயிற்சி இன்மை, உடற்பருமன் அதிகரிப்பு என்பவற்றுடன் பொருத்தமற்ற உணவு முறை, புகையிலைப் பாவனை (சிகரட் புகைத்தல், வெற்றிலை சாப்பிடுதல், மதுபானம் பாவித்தல்) என்பவற்றைக் குறிப்பிடலாம். எனவே நமது சமூகம் சுகதேகிகளாக வாழ்வதற்கு மேற்குறிப்பிட்ட காரணிகளைத் தவிர்ப்பதுடன் உடற் பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் உடல், உளம் சார்ந்த நன்மைகளை சிறுவர் உட்பட அனைவரும் பெற்றுக்கொள்ள முடியும்.

உடற் பயிற்சியின் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள்.

01. உடலில் நல்ல கொழுப்பின் (HDL) அளவு அதிகரிப்பதுடன் கெட்ட கொழுப்பின் (LDL) அளவு குறைவடைவதனால் இரத்தக்குளாய்களில் ஏற்படும் அடைப்புகள் தவிர்க்கப்பட்டு மாரடைப்பு, (Heart Attack) பாரிசவாதம் (Stroke) போன்ற பாரிய நோய்களிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கின்றது.

02. உடல் தசை மற்றும் அங்கங்கள் அதிகளவு குருதியிலுள்ள குளுக்கோசினைப் பயன்படுத்துவதனால் உடலின் சீனியின் சமனிலை பேணப்பட்டு நீரிழிவு வியாதியிலிருந்து (Type-ii. Diabetes) நிவாரணம் கிடைக்கிறது.

03. பெருங்குடல் புற்று நோய், மார்புப் புற்றுநோய் போன்ற பல்வேறு வகையான புற்றுநோய்கள் வராமல் உடற்பயிற்சி தடுக்கிறது.

04. குருதிக் குழாய்களில் விரிவடையும் தன்மை அதிகரிப்பினால் உயர் குருதி அமுக்கம் (Pressure) வியாதியிலிருந்து விடுதலை கிடைக்கிறது.

05. என்பு மற்றும் தசைகளின் உறுதி

அதிகரிப்பினால் மூட்டுத் தேய்வு (Osterarthritis) என்பு மற்றும் மென்மையாதல் (Osteoarosis மற்றும்

திடீர் என்பு முறிவுகள் தடுக்கப்படுகின்றன.

06. உடல் எடையினைக் குறைத்து உடல் கட்டமைப்பை பேண உதவுகிறது .

07. முக்கியமாக மூளையில் (Endorphine) எனும் பதார்த்தம் சுரக்கப்படுவதால் நாள் முழுவதும் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

பொதுவாக உடல் ஆரோக்கியத்திற்காக இரண்டு வகையான உடற் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

01. எரோபிக் உடற்பயிற்சிகள்:

(Aerobic Exercises) சுவாசக்கின் மூலம் உள்ளெடுக்கப்படுகின்ற ஒட்சிசனைப் பயன்படுத்தி சக்தி உருவாக்கப்பட்டு அதன் மூலம் மெதுவாக செய்யப்படுகின்ற உடற் பயிற்சிகளான வேகமாக நடத்தல், மெதுவாக ஓடுதல் (Jogging),சைக்கிள் ஓட்டம், நீச்சல், கயிறு அடித்தல் (Skipping) போன்ற உடற்பயிற்சிகளுடன் மற்றும் காற்பந்து, வெற்றிமின்டன், டெனிஸ் போன்ற விளையாட்டுகளும் ஏரோபிக் உடற்பயிற்சிகளுக்குரிய நன்மைகளைத் தரும்.

02. தசை என்பினைப் பலப் படுத்துகிற உடற்பயிற்சிகள்:

(Strength/ Weight Exercises) இவை நமது உடலிலுள்ள பெரும் தசைகளை பலப்படுகின்ற உடற்பயிற்சிகளாகும். இங்கு Pushup, குத்தி எழும்புதல் (Squats), Lunge, Bridge போன்ற உடற்பயிற்சிகளாகும். இவ்வாறான பலப்படுத்துகின்ற உடற்பயிற்சிகளை

பாரம்தூக்குதல் அல்லது இறப்பர் பட்டிகளைப் பயன்படுத்தியும் மேற்கொள்ளலாம்.

05 -19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உடற்பயிற்சிகள்

(Aerobic Exercises) அல்லது விளையாட்டுக்கள் ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு மணித்தியாலம் செய்யப்பட வேண்டும்.

தசை, என்பு என்பவற்றைப் பலப்படுத்துகின்ற உடற்பயிற்சிகள் (Strength Exercises) 60 நிமிட ஏரோபிக் உடற்பயிற்சியுடன் சேர்த்து வாரத்தில் மூன்று நாட்களுக்கு செய்ய வேண்டும்.

இவற்றைவிட சிறுவர்கள் இரண்டு மணித்தியாலத்திற்கு மேலதிகமாக தொலைக்காட்சி பார்ப்பதும், கணணி விளையாட்டுக்களில் ஈடுபடுவதைத் தவிர்த்தல் அவசியமாகும்.

20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உடற்பயிற்சிகள்:

ஏரோபிக் உடற்பயிற்சிகளை ஒரு நாளைக்கு குறைந்தது 30 நிமிடங்களாக வாரத்தில் 5 நாட்களுக்கு மேற்கொள்ள வேண்டும். இதனை 10 நிமிடங்களாக பிரித்தும் மேற்கொள்ளலாம்.

தசை என்பினைப் பலப்படுத்துகின்ற (Strength Exercises) யினை வாரத்தில் குறைந்தது 2 நாட்களுக்கு செய்தல் வேண்டும்.

65 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உடற்பயிற்சிகள்:

ஏரோபிக் உடற்பயிற்சிகளை ஒரு நாளைக்கு குறைந்தது 30 நிமிடங்களாக வாரத்தில் 5 நாட்களுக்கு மேற்கொள்ள வேண்டும், இதனை 10 நிமிடங்களாக பிரித்தும் மேற்கொள்ளலாம்.

உடல் மூட்டுக்கள் செயற்படுகிற அளவினை அதிகரிக்கக் கூடிய பயிற்சிகள், தசையைப் பலப்படுத்துகின்ற, உடல் சமனிலையை போணுகின்ற (Balance Excercises) பயிற்சிகளைக் செய்தல் சிறந்ததாகும்.

உடற் பயிற்சி செய்யும் முன்னர் கருத்தில் கொள்ள வேண்டியவைகள்

பொருத்தமான சப்பாத்து, இறுக்கற்ற வியர்வையை உறுஞ்சி வெப்பத்தினை வெளியாக்குகிற ஆடைகளை அணிதல் வேண்டும்.

உடற் பயிற்சியினை ஆரம்பிக்கும் முன் உடம்பினை சூடாக்கக் கூடிய ((Warmup)பயிற்சிகளை 5 நிமிடம் மேற் கொண்டு அதன் பின்னர் தலை நீட்சி அடையக் கூடிய (Stretching) பயிற்சிகளையும் மேற்கொண்டு, பின்னர் தங்களுக்குப் பொருத்தமான ஏரோபி உடற் பயிற்சிகளை அல்லது தசையைப் பலப்படுத்துகின்ற பயிற்சிகளைச் செய்தல் வேண்டும்.

உடற்பயிற்சிகள் முடிவடைந்த பின்னர் உடல் வெப்பத்தைத் தணிக்கின்ற (Warmdown) பயிற்சிகளை செய்து அதன் பின் தசை நீட்சி அடையக் கூடிய (Stretching) பயிற்சிகளை மேற்கொண்டு உடற் பயிற்சிகளை நிறைவு செய்ய வேண்டும்.

ஏரோபிக் உடற்பயிற்சியின் போது இதயம் வேகமாக

தொழிற்பட்டு தசைகளுக்கு தேவையான சக்தியையும், போசணையையும் தொடர்ச்சியாக வழங்கும். இதயம், குருதிக் குழாய்களில் நோய்கள் அல்லது அடைப்புகள் காணப்படுமிடத்து அவர்களுக்கு உடற்பயிற்சி செய்யும் போது நெஞ்சுவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுடபடப்பு ஏற்படலாம். இவ்வாறான குணங்குறி ஏற்படுமிடத்து வைத்திய ஆலோசலையைக் கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

புதிதாக உடற்பயிற்சி செய்ய ஆரம்பிப்பவர்கள் திடீரென அதிகமாக செய்யும் போது அவர்களுக்கு தசை, என்புகளில் உபாதைகள் ஏற்படும் சாத்தியங்கள் இருப்பதனால் ஒரு நாளைக்கு 5-10 நிமிடங்கள் செய்து ஒவ்வொரு கிழமைக்கும் 5% தால் அதிகரித்து ஒரு நாளைக்கு 30 நிமிடங்கள் வீதம் வாரத்தில் 5 நாட்களுக்கு செய்ய வேண்டும்.

பிறஸ்ஸர் வியாதி, நீரிழிவு வியாதி, இருப்பவர்கள் மருந்துகளைப் பாவித்து அளவினைக் கட்டுப்படுத்திய பின்னர், உடற்பயிற்சிகளை ஆரம்பித்து பின்னர் படிப்படியாக மருந்துகளைக் குறைத்துக் கொள்ளலாம்.

குறிப்பு : உடற்பிற்சி செய்வதற்கு நேரம் ஒதுக்க முடியாதவர்கள் குறைந்தபட்சம் சிறு தூரங்களுக்கு செல்லும் போது நடந்து செல்லல், துவிச்சக்கர வண்டியில் செல்லுதல், இயலுமானவர்கள் மாடிகளில் ஏறும் போது படிகளைப் பயன்படுத்துதல், தோட்டம் செய்தல் போன்ற வேலைகளில் தன்னை தொடர்ச்சியாக ஈடுபடுத்துவது ஒரு உடற் பயிற்சியிலும் ஈடுபடாமல் இருப்பதை விடச் சிறந்ததாகும்.

வியாபாரக்கல்விக்கு ஆப்பு!

பெற்றோர்களும் கல்வியாளர்களும் வரவேற்பு

சத்தார் எம் ஜாவித்

ஐந்தாம்தர மாணவர்களுக்கு விமோசனம் கிடைத்த ஒன்றாகவே ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சை அரசாங்கத்தினால் இல்லாது செய்யப்பட்ட விடயம் அமைகின்றது. சிறார்களுக்கு பாரியதொரு பிரச்சினையாகவே இந்த ஐந்தாம் ஆண்டுப் பரீட்சை இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பரீட்சை தொடர்பான சாதக, பாதக பாதக விமர்சனங்கள் இருந்து வந்தாலும் அதிகமானவர்கள் இந்த பரீட்சை இம்மாணவர்களுக்கு பொருத்தமானது அல்ல என்ற விடயத்தையே சுட்டிக்காட்டி வருகின்றனர். குறைந்த பட்சம் ஒரு வருடகாலம் இந்த மாணவர்கள் குறித்த பரீட்சைக்காக பாடங்களை முழுமையாக கற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த விடயம் குறித்த மாணவர்களைப் பொருத்தவரையில் கடினமானதொரு விடயமாகவும், அவர்களால் தாக்குப்பிடிக்கக் கூடியதாகவும் இருக்கவில்லை.

இலங்கை ஒரு வளர்முக நாடு என்றும், அதிகமான மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழுகின்றனர் என்ற விடயத்துடன் இந்த நாட்டில் சகலரும் கல்வியறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற தூர நோக்குடனான நல்ல சிந்தனையுடனும் அமுல் படுத்தப்பட்டதே இலவசக் கல்வியாகும்.

இலங்கையில் இலவசக் கல்விக்கு வித்திட்டவர் என்ற பெருமையையும், தகுதியையும் பெற்றவராக சி.டபிள்யு. டபிள்யு. கண்ணங்கராவைக் குறிப்பிடலாம். இந்த நாட்டில் ஒரு கல்விப் புரட்சிக்கு வித்திட்டுச் சென்றவர் என்ற மாபெரும் பெருமைக்குரியவர் என்பதும் வரலாற்று உண்மையமகும்.

எந்தவொரு பக்கச்சாடர்புமின்றி இலங்கை வாழ் சகல மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் அமுல்படுத்தப்பட்ட இலவசக் கல்வியானது இன்று இலங்கை சர்வதேச அளவில் கல்வியறிவில் 90 சதவீதத்தையும் தாண்டியுள்ளது என்றால் அதன் பெருமை இலவசக் கல்வியின் தந்தையென வர்ணிக்கப்படும் சி.டபிள்யு. டபிள்யு. கண்ணங்கராவையே சாரும்.

தூர நோக்குடனும், நாட்டின் நலனின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்ட இலவசக் கல்வி முறையால் பல இலட்சக் கணக்கான மாணவர்கள் இன்று நன்மை அடைந்துள்ளனர். குறிப்பாக சர்வதேசம் வரை இலங்கையின் கல்வியை விலாசமிடுவதற்கும் இலவசக் கல்வி ஒரு பாலமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

கோப்புப்படம்

ஏழை மாணவர்களின் நலன் கருதி கொண்டு வரப்பட்ட இலவசக் கல்வி அண்மைய இரண்டு அல்லது மூன்று தஸாப்த காலமாக வியாபாரக் கல்வியாகமாறி ஏழை மாணவர்களின் எதிர் காலத்தை இன்று கேள்விக் குறியாக்கி அவர்களை பொருளாதார பின்னடைவுகளுக்கு வழிவகுத்துள்ளதுடன் பல ஆயிரக் கணக்கான மாணவர்களின் இடை விலகல்களுக்கும் வித்திட்டுள்ளது என்பதே வருந்தத்தக்க சம்பவமாகும்.

இந்த வியாபாரக் கல்வியானது தரம் ஐந்து மாணவர்களை அண்மைக்காலமாக மிகவும் துன்பத்திற்கு மட்டுமல்லாது அவர்களின் உடல், உள பாதிப்புக்களுக்கும் காரணமாக அமைந்துள்ளதுடன் பெற்றோர்களுக்கும் நிம்மதியில்லாத ஒரு துர்ப்பாக்கிய நிலைமைகளை தோற்று வித்துள்ளது.

தரம் ஐந்து மாணவர்களுக்கு புலமைப் பரிசில் பரீட்சை கட்டாயம் என்ற அடிப்படையில் அவர்கள் அதில் சித்தியடைந்தால்தான் புலமைப்பரிசில் உதவுதொகை மற்றும் பிரபல பாடசாலைகளில் இணைத்துக் கொள்ள முடியும் அதற்காக சிறந்த பெறுபேறுகளைபெற வேண்டும் என்ற நிர்ப்பந்தங்கள் அதிகமான மாணவர்கள் மத்தியிலும், பெற்றோர்கள் மத்தியிலும் பாரிய எரிச்சல் நிலைமைகளை ஏற்படுத்தி விட்டது எனலாம்.

மேற்படி விடயங்களை காரணங்களாக வைத்து ஒருசிலர் பணத்தைச் சம்பாதிக்கும் வகையில் இம் மாணவர்களுக்கு பிரத்தியோக வகுப்புக்களையும், கருத்தரங்குகளையும் நடாத்தி வருகின்றமை இந்த நாட்டின் இலவசக் கல்வியின் மீது விழுந்துள்ள பாரிய அடியாகும்.

இவ்வாறான விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கும், கல்வி அமைச்சுக்கும் பலதரப்பட்டவர்களாகும் விடுக்கப்பட்ட அழுத்தங்கள் மற்றும் கோரிக்கை;களின் அடிப்படையில் அரசாங்கமும், கல்வி அமைச்சும் மேற்கொண்ட விசாரணைகள், கருத்தாடல்கள் மூலம் இதனை இல்லாது செய்வதே சாலச் சிறந்தது என்ற முடிவிற்கு வந்துள்ளனர்.

இதற்கு மேலாக இந்த நாட்டின் ஜனாதிபதியும் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் தாக்கத்தை அறிந்து அதனை நிறுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கில் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வந்தமையும்; அதற்குப் பதிலாக 8ஆம் ஆண்டில் ஒரு சிறந்த பரீட்சையை நடாத்தலாம் என்ற கருத்தை வெளியிட்டு வந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத் தக்க விடயமாகும்.

இந்தப் பரீட்சை அடுத்த வருடத்தில் இருந்து நிறுத்தப்படுவதாகவும் இது அவசியமில்லை என்றும் இம்முறை இப்பரீட்சையை விரும்பியவர்கள் எழுதலாம் என்றும் அதற்காக யாரும் மாணவர்களுக்கு அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளமையும், அதற்காக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் ஒரு சுற்று நிருபத்தை வெளியிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

ஐந்தாம் ஆண்டு போட்டிப் பரீட்சைக்கான இலவச வகுப்புக்களும், கருத்தரங்குகளும் மூலை முடுக்குகளில் எல்லாம் விஸ்வரூபம் எடுத்தமாதிரி நடாத்தப்பட்டு வருகின்றன. இதற்காக பல கையேட்டுப் புத்தகங்களையும், பரீட்சை வினாத் தாள்களையும் தயாரித்து விற்பனை செய்து வரும் ஒரு விடயமும் மாணவர்களை யாருடைய புத்தகங்களை வாங்கிப் படிக்க வேண்டுமென திக்குமுக்காட வைத்துள்ளதையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

சில இடங்களில் தகுதியற்றவர்களும் ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கு பாடங்களை நடாத்தவதும், அவர்களுக்கான பாடவிடயங்கள் அடங்கியவினா, விடைகளை தயாரித்து வழங்கி வருகின்ற நிலைமைகள்கூட இடம் பெற்றுள்ளன. அத்துடன் அதிகமான பிரத்தியோக வகுப்புக்கள் நடாத்தப்படுவதால் மாணவர்கள் பாடசாலைகடகுச் செல்வதிலும் அங்குள்ள பாடங்களை சரியான முறையில் கற்றுக் கொள்வதிலும் பல சிரமங்களை எதிர் கொண்டிருந்தனர்.

சிறுவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும்

14 ஆம் பக்கம் பார்க்க....

சித்திரை புத்தாண்டு கதிரவனின் காலசக்கர நகர்வின் முதல்நாள்

என்.ஹரன்

வானசாஸ்திரத்திலும் அறிவியலிலும் கோலோச்சிய நம் தமிழினம் ஓர் ஆண்டை இரு பிரிவுகளாக பிரித்துள்ளனர் அவை சௌரமானம், சந்திரமானம் ஆகும் இதில் சௌரமானம் சூரியன் மேட ராசியில் இருந்து மீன ராசி வரையான பன்னி

ரண்டு இராசியிலும் சஞ்சரிக்கும் காலம்களை சூரிய மாதங்களாக கனக்கிட்டு சித்திரை முதல் பங்குனி வரையுள்ள பன்னிரண்டு மாதங்களை கொண்ட ஒரு ஆண்டு ஆகும்

அறுபது தமிழ் வருடங்களின் சுற்றுவட்டத் தொடரில் 33 ஆவது வருடமான விகாரி என்ற பெயரிலான சித்திரைப் புதுவருடம் இம்மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மலருகிறது.

இந்த ஆண்டு வெளிவந்திருக்கும் வாக்கிய பஞ்சாங்கத்தின்படி விகாரி தமிழ்ப் புதுவருடம் சித்திரை 1ம் திகதி (14.04.2019) ஞாயிற்றுக்கிழமை, பூர்வ பட்ஷ தசமி திதியில் ஆயிலியம் நட்ச்சகட்த்திரத்தில் இரண்டாம் பாதத்தில்,பிற்பகல் 01.12 மணிக்கு கடக லக்கினத்தில், பிறக்கிறது.

சித்திரை 1ம் திகதி (14.04.2019) ஞாயிற்றுக்கிழமை பகல் 02.09மணிக்கு பிறக்கின்றது

எந்த மாதத்திலும் இல்லாத சிறப்பு சித்திரைக்கு மட்டும் உண்டு. சித்திரையில் மட்டும் அப்படி என்ன விஷேசம்? சித்திரை முதல் நாளுக்கு உள்ள முக்கியமானதும் முதன்மையானதும் சிறப்பு சித்திரை வருடப் பிறப்பு.

தமிழர்களது காலக்கணிப்பு முறையின்படி ஒரு ஆண்டுக்குரிய பன்னிரெண்டு மாதங்களில் சித்திரை முதலாவது மாதமாக கருதப்படுகிறது.

தமிழ் மாதங்கள் சூரிய மாதங்கள் எனப்படுகின்றன.

ஏன் என்றால், இம் மாதங்கள் பூமிக்குச் சார்பாகத் தோற்றுகின்ற சூரியனுடைய இயக்கத்தை அடிப்படையாக வைத்தே கணிக்கப்படுகின்றன. இராசிச் சக்கரத்தில் மேட இராசிக்குள் சூரியன் நுழைவதிலிருந்து அந்த இராசியை விட்டு வெளியேறும் வரையில் உள்ள காலம் சித்திரை மாதமாகும்.

சித்திரை மாதம் 31 நாட்களைக் கொண்டது.

ஆங்கில நாட்காட்டியில் ஏப்ரல் மாதம் 14 ஆம் நாள் முதல் மே மாதம் 14 ஆம் நாள் வரை தமிழ் சித்திரை மாதமாகும். சூரியன் மேட இராசிக்குள் நுழைவது சித்திரை மாதப் பிறப்பு எனப்படும். சித்திரை முதல் மாதம் என்பதால் இதுவே புதிய ஆண்டின் தொடக்கமும் ஆகும்.

இதனால் சித்திரை மாதம் முதல் நாளைத் உலகத் தமிழர்கள் அனைவரும் தமிழ் வருடப் பிறப்பாக சிறப்பாக கொண்டாடுகின்றனர். இலங்கையில் தமிழ்-சிங்கள மக்களால் கொண்டாடப்படும் வைபவமாக புதுவருடப் பிறப்பு இருப்பதால் இது ஒரு தேசியப் பெருவிழாவாகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

புதிய எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கைகளையும் வைத்து மங்களகரமான திருநாளாக சித்திரைப் புதுவருடம் வரவேற்கப்படுகிறது.

சித்திரை மாதம் பிறந்ததுமே இளவேனில்காலம்? என்னும் வசந்த காலம் தொடங்குகிறது.வசந்த காலத்தில் மாமரங்களில் மாந்தளிர்களும், மலர்களும் பூத்துக் குலுங்கும். அச்சமயம் வேப்ப மரங்களில் வேப்பம் பூக்கள் பூத்துக் குலுங்கும். மனித வாழ்க்கை இனிப்பும், கசப்பும் கலந்தே இருக்கும் என்பதை எடுத்துக் காட்டும் அம்சமாக இச்செயற்பாடு கருதப்படுகிறது.

ஐக்கியம், சமய, சமூக, கலாசார உறவுகள், பண்பாட்டுக் கோலங்கள் என்பவைகளை எடுத்துக் காட்டும் வகையிலும் நல்லெண்ணம், நல்லுறவு, ஐக்கியம், அன்புப் பரிமாற்றம், குதூகலம், விருந்தோம்பல் போன்ற மனிதப் பண்பாட்டின் உயர்ந்த அம்சங்களை வெளிப்படுத்தும் வகையிலும் கொண்டாடப் படும் சமுக விழாவான புது வருடத்தில் இறைவழிபாடு, தானதர்மம், ஆசிபெறுதல் என்பவைகளையும் நாம் கடைப்பிடிப்பது வழக்கம்.

சித்திரை முதல் நாளன்று வீட்டை நன்றாக கூட்டி தூய்மை செய்ய வேண்டும். வாசலில் கோலமிட்டு அழகுபடுத்த வேண்டும். வாயிற்படிகளுக்கு மஞ்சள் குங்குமம் இட்டு, மாவிலைத் தோரணங்களை கட்டி மங்கலம் சேர்க்க வேண்டும். வாயிற்படி நிலைவாயிலில் மஞ்சள் பூசி, சாணத்தால் மெழுகி, அழகிய மாக்கோலமிட்டால் திருமகள் வாசம் செய்வாள் என்பது நம்பிக்கையாகும்.

அத்தோடு மஞ்சள், குங்குமம் ஆகியவை நோய்க் கிருமிகளும் துஷ்ட தேவதைகளும் வாசல்படியை தாண்டி வராமல் தடுக்கும் சக்திகளாகும். புதுவருட தினத்தில் நம் நலம் காக்கவே இந்நடைமுறை வழக்கத்துக்கு வந்தது.

மருத்து நீர்

விஷேட புண்ணிய காலம் - 14-04-2019 முற்பகல் 09.12 மணி தொடக்கம் பிற் பகல் 05.12 மணி வரை இந்த புண்ணிய காலத்தில் சகலரும் மருத்து நீர் தேய்த்து சிரசில் ஆலிலை , காலில் இலவம் இலையையும் வைத்து ஸ்நானம் செய்தல் வேண்டும். மருத்து நீர் வைத்தல் என்பது முக்கிய விடயமாக புதுவருட தினத்தில் கருதப்படுகிறது.

இம்மருத்துநீர் தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம் பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், திற்பலி மற்றும் சுக்கு என்பவற்றை நீரிலே கலந்து காய்ச்சப்படும். மருத்து நீர் வைத்து நீராடினால் புத்தாண்டின் நல்ல பலன்களை பெறலாம் என்பது நம்பிக்கை ஆகும்.

ஆடை

வெள்ளை நிறப் பட்டாடை அல்லது சிவப்பு கரை அமைந்த புதிய பட்டாடையையும், பவளம், நீலக்கல் பதித்த ஆபரணங்களையும் அணிந்து ஆலயங்களுக்குச் சென்று இறைவழிபாடு செய்தல் வேண்டும் என வாக்கிய பஞ்சாங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சித்திரை புதுவருடமன்று நம் வருங்கால பலன்களை அறிவது அவசியம். புத்தாண்டு பஞ்சாங்கம் வாங்கி அதற்கு சந்தனம், குங்குமம் ஆகியன இட்டு, பூஜையில் வைத்து பூஜிக்க வேண்டும். பின்னர் குடும்ப சோதிடரையோ, புரோகிதரையோ கொண்டு புத்தாண்டுப் பூஜைகளை செய்யவேண்டும். பூஜை முடிந்த பின்பு அவர் புத்தாண்டுப் பஞ்சாங்கத்தைப் படிப்பார். அதன் மூலம் அந்த ஆண்டில், நவக்கிரக சஞ்சாரத்தினால் உலகத்துக்கும், மக்களுக்கும் நிகழ விருக்கும் பலன்களை அறிந்து கொள்ளலாம். சில தோஷங்களையும் நீக்கி கொள்ளலாம்.

புதுவருட தினத்தில் தான தருமங்கள் செய்வது வழக்கம். ஏழைகளுக்கும், உறவினர்களுக்கும் புதிய விசிறிகளை தானம் செய்ய வேண்டும். சித்திரை பிறப்பதற்கு முந்தைய நாள் இரவு சாப்பாடு முடிந்த பிறகு பூஜை அறையை தூய்மை செய்து கோலமிட்டு வைத்து விட வேண்டும். வீட்டிலுள்ள பொன், வெள்ளி நகைகள், உட்பட அனைத்து ஆபரணங்களையும் பணம், நிலைக்கண்ணாடி, வெற்றிலை, பாக்கு, பழங்கள், தேங்காய், மலர்கள் முதலிய மங்கலப் பொருள்களையும் தயாரித்து, ஒரு மனையின் மீது இட்டு அதற்கு அழகியகோலமிட்டு, பூஜைக்குரிய தெய்வத்தின் முன் வைக்க வேண்டும்.

அரிசி, பருப்பு, வெல்லம், பலா, மாம்பழம், வாழைப்பழம் ஆகியவற்றையும் வைத்து மறுநாள் காலை, சித்திரை மாதப்பிறப்பன்று அதிகாலையில் முதன் முதலாக வீட்டில் மூத்த பெண்மணி எழுந்து குளித்து புத்தாடை உடுத்தி இறைவன் முன்பு குத்துவிளக்குகளையும், ஊதுவத்திகளையும் ஏற்றி வைப்பார். அதற்கு பின்பு, அவர் வீட்டில் தூங்கும் ஒவ்வொருவரையும் எழுப்பி, கண்களை மூடிய நிலையிலேயே சுவாமியின் முன்பு அழைத்துச் சென்று, கண்களை திறக்கச் சொல்வார். பூஜைக்குரிய தெய்வத்தையும், பூஜைக்கு வைத்துள்ள மங்கலப் பொருட்களையும் முதன் முதலாக தரிசிக்கும்படி

செய்வார். இவ்வாறு செய்தால் வருடம் முழுவதும் மகிழ்ச்சி பொங்கும் எனவும் மங்கலப் பொருள்கள் செழித்து இருக்கும் என்பது நம்பிக்கை.

அறுசுவை உணவு

சித்திரை மாதத்தில் சூரியன் மேஷ ராசியில் மிகவும் உச்சமாக பிரகாசிப்பதால் அன்றைய தினம் பானகம், நீர், மோர், பருப்புவடை ஆகியவற்றை நைவேத்தியம் செய்ய வேண்டும். இனிப்பு, கசப்பு, உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு என அறுசுவை கொண்ட உணவுகளை சமைத்து உண்பர்.

மதிய உணவில் வேப்பம்பூ பச்சடி, மாங்காய்ப் பச்சடி, பருப்பு வடை, நீர்மோர், பருப்பு, பாயாசம், மசால்வடை போன்றன இடம்பெறுதல் அவசியம். வேப்பம் பூ கசக்கும் என்றாலும் மனித உடலிலுள்ள ரத்தத்தை தூய்மை செய்வதில் வேப்பம் பூவுக்கு நிகராக வேறு எந்த மூலிகையும் இல்லை. இதற்காகவே இந்த உணவு உண்ணப்படுகிறது. அத்துடன் உணவை விருந்தினருடன் உண்டு மகிழ்ந்தால் அந்த ஆண்டு முழுவதுமே குதூகலமாக இருக்கும் என்பது மக்களின் முக்கிய நம்பிக்கையாகும். இதற்காகவே விருந்தினர் வருகையும் விருந்தோம்பலும் நம் பாரம்பரியமாக மாறியது.

கைவிஷேடம்

சித்திரை முதல் நாளன்று பெருவாரியாக மக்கள் கோயில்களுக்கு சென்றும் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டும் மற்றும் பல வகைகளிலும் வருடப் பிறப்பை சிறப்பாக கொண்டாடுவர். சித்திரைப் புதுவருடத்தின் மற்றொரு சிறப்பு அம்சம் கைவிசேடமாகும். ஆரம்ப காலத்தில் வீட்டின் தலைவி உரிய சுப நேரத்தில் சிறிய மூலிகைப் பொட்டலம் ஒன்றினை கிணற்றுக்குள் போட்டுவிட்டு பிறக்கும் புத்தாண்டு நிமித்தம் முதல் முறையாக தண்ணீரை கிணற்றிலிருந்து வெளியில் எடுப்பதையே கை விசேடமாக கருதப்பட்டது. ஆயினும் நாளடவில் கைவிசேடம் என்பது சுபமுகூர்த்தத்தில் பணத்தை கொடுப்பதும் எடுப்பதும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நல்ல நேரத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் குடும்பத் தலைவரிடமிருந்தும், வயதில் மூத்தவர்களிடமிருந்தும், அலுவலகங்கள், விற்பனை நிலையங்கள், தொழிற்சாலைகள் என்பவைகளில் வேலை செய்வோர் தங்கள் வேலை கொள்வோரிடமிருந்தும் புதுவருடத்தில் முதல் அன்பளிப்பாக வெற்றிலையில் பாக்கு, நெல்லு காசு என்பவற்றை வைத்து குத்து விளக்கின் முன்னாலே வைத்து கொடுப்பர்கள். பணத்தை கைவிசேடமாக பெற்றுக் கொள்வார்கள். கொடுக்க பட்ட எல்லாவற்றையும் எண்ணி (நெல்லு உட்பட) அது ஒற்றை விழுந்தால் நல்ல பலன் என்பது ஐதீகம். கைவிசேடம் பரிமாறிக்கொள்வது என்பது ஒரு பாரம்பரியமான வழக்கமாகும்.

மூத்தோர்களிடமிருந்து கைவிசேடம் பெற்றால் அந்த ஆண்டு முழுவதும் பணவரவும் பல நன்மைகளும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. கைவிசேடமாக பெற்ற பணத்தை அந்த ஆண்டு முழுவதும் பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என்பதும் நம்பிக்கையாக கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது.

சித்திரைப் புதுவருடம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பெருவிழாவாக இங்கு சிறப்புப் பெறுவதுடன், தமிழ், சிங்கள மக்களுக்கு இடையிலான நெருங்கிய தொடர்புகளை எடுத்துக்காட்டுவதாகவும் அமைந்திருந்தாலும் கொண்டாடுவதில் சில தனித்தனியான பாரம்பரிய கலாசார நடைமுறைகளைப் பின்பற்றி வருகிறார்கள்.

சமாதானம் சந்தோஷம் ஆகியவற்றை சுமந்து வெள்ளைநிற வண்டியில் வரும் இந்திரதேவ குமரனின் வருகையினை கொண்டாடும் விதத்திலேயே சித்திரை புத்தாண்டை சிங்கள பௌத்தர்கள் கொண்டாடுவதாக வரலாறு கூறுகின்றது. புத்தாண்டு பிறக்கும் செய்தியினை 'குயில்' தன் குரலால் உலகறியச் செய்வதாக நம்பப்படுகின்றது.

சிங்கள மக்கள் தமது புதுவருடத்தில் புத்தாண்டுக்கான ஏற்பாடுகள் அதற்கான சுபநேரத்தில் அரிசி இடித்து அடுப்புக்கட்டி பலகாரம் சுடுவதுடன் ஆரம்பிக்கப்படுவது வழக்கமாகும்.அடுத்ததாக பழைய வருடத்திற்கான ஸ்நானம் இடம்பெறும். உடலையும் உள்ளத்தையும் சுத்தப்படுத்தும் நோக்கி இடம்பெறும் இந்த குளியில் பழைய வருடத்திற்கான இறுதிக் குளியலாகும். புத்தாண்டுக்கான விசேட நீராடல் சிங்களவர் மத்தியில் வழக்கத்தில் இருந்து வருகின்றது.

புத்தாண்டு பிறப்பதற்கு முன் எழுந்து மருந்து எண்ணை வைத்து குளிப்பார்கள். விகாரைக்கு சென்று வழிப்பட்டு புத்தாண்டு பிறப்பு நேரத்தில் பட்டாசு கொளுத்துவர். புத்தாடை உடுத்தி பால் பொங்குதல், பால்சோறு சமைத்தல் அத்துடன் தின்பண்டங்கள் தயாரித்தலில் ஈடுபடுவர். இத்துடன் பணியாரம், வாழைப்பழம் மற்றும் தின்பண்டங்களும் வைத்து படையல் இடுவர்கள். இப் படையலில் முக்கியமாக பால்சோறு இருக்கும்.

நல்ல நேரத்தில் குத்து விளக்கேற்றி ஊதுவர்த்தி கொழுத்தி சாம்பிராணிப் புகைப் பிடிப்பர். குடும்பத்துடன் உணவு பரிமாறி உண்பர். அயலவர்களிடமும் உணவு பரிமாறிக்கொள்வர். பெரியோரை மதித்து வணங்குவர் அத்துடன் கைவிசேடம் பெறுவர். புண்ணியக் காலம் என்று குறிக்கப்பட்டிருக்கும் நேரத்திற்கு முன்பாக கொடுக்கல் வாங்கல்கள் செய்வர். ஒரு சம்பிரதாயத்திற்காக தத்தமது வேலை/தொழில் செய்வர். பின்னர் அநேகமானோர் புத்தர் விகாரைகளிற்கு பன (பௌத்த உரை) கேட்பதற்காகவும் வேறு விசேட நிகழ்வுகளுக்காகவும் செல்வர். இப் புண்ணியக் காலம் முடிந்தப் பிறகு, புத்தாண்டு கலாச்சார மற்றும் விநோத விளையாட்டுப் போட்டிகளை நடத்துவர். பெண்கள் றபான் அடிப்பர்.

இது தமிழரிடம் இல்லாத ஒரு வழக்கமாகும். சிலவேளை புண்ணியக்காலம் இரவில் முடிவடையுமாயின், இந்நிகழ்வுகள் அடுத்த நாளிலோ அல்லது அடுத்து சில நாட்களிலோ தமது வசதி'க்கேற்ப வைத்துக்கொள்வர்.

சிங்கள பௌத்தர்கள் சித்திரைப் புத்தாண்டை பகைமை ஒழிப்புக்கான சிறந்த வாய்ப்பாக உபயோகப்படுத்திக் கொள்வது வழக்கத்தில் இருந்து வருகின்றது. நீண்ட காலமாக பகைமை கொண்டிருந்த நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரை பார்க்கச் சென்று பகைமை தீர்த்துக் கொள்ளப்படும்.

கலை கலாச்சார நிகழ்வுகள்

நாட்டின் முக்கிய பகுதிகளிலும் கலை, கலாசார, இசை நிகழ்ச்சிகளுடன் சித்திரைப் புதுவருடம் சிறப்பாகவே கொண்டாடப்படும். இடத்துக்கு இடம் அந்தந்தப் பிரதேச கலாசார மரபுகளுக்கு அமைய வைபவ நடைமுறைகள் வேறுபட்டிருந்தாலும் பாரம்பரியமான நிகழ்ச்சிகளான போர்த்தேங்காய் அடித்தல், சேவல் சண்டை, கிளித்தட்டு, சடுகுடு போன்ற விளையாட்டுகள் எல்லா இடங்களிலும் நடைபெறும் சிறப்பு அம்சங்களாகும்.

இத்துடன் ஊஞ்சலாட்டம், கும்மியடித்தல், கொக்கான் வெட்டுதல், பல்லாங்குழி, ராபான் அடித்தல், சொக்கட்டான் போன்ற பெண்கள் கலந்து கொள்ளும் விளையாட்டுகளும் இடம்பெறுவதுண்டு. அத்துடன் மாட்டு வண்டிச் சவாரி, துவிச்சக்கர வண்டி ஓட்டம், மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்

டம், தலையணை சண்டை வழுக்கு மரம் ஏறுதல் போன்ற போட்டிகளும் சித்திரைப் புதுவருடத்தையொட்டி நடைபெறுவது வழக்கம்.

புதுவருடத்திற்காக அடுப்பு மூட்டுவதும் ஒரு பழக்கமாகும். பழைய வருடத்தின் முடிவில் அனைத்து அடுப்பு வேலைகளும் முடிவிற்குக் கொண்டுவரும் வீட்டுத் தலைவி அடுப்புச் சாம்பலையும் அப்புறப்படுத்தி அடுப்பை தூத்துவிடுவான். அதன் பின் புத்தாண்டு பிறக்கும் வரை வீட்டில் அடுப்பு பத்த வைப்பதில்லை. உரிய நேரம் காலம் பார்த்து மீண்டும் புதுப்பானை வைத்து பொங்குவதற்காக வீட்டுத் தலைவி சுபமுகூர்த்தத்தில் அடுப்பை பத்த வைப்பதே வழக்கத்தில் இருந்து வருகின்றது.

குடும்பத்தினர், உறவினர்களுடன் ஒன்றிணைந்து பட்டாசு வெடிகளுடன் புதுவருடத்தை வரவேற்று குதூகலமாகக் கொண்டாடும் நிலைமையானது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரியதாகும். புதுவருடத்தின் சுபநேரம் பார்த்து தங்கள் தொழிற்கருமங்களை ஆரம்பிப்பதும், பொதுமக்கள் ஒவ்வொருவரும் நல்ல நாள் பார்த்து தங்கள் உறவினர்களினதும் நண்பர்களினதும் வீடுகளுக்குச் சென்று வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டு விருந்துபசாரங்களில் கலந்து கொள்வதும், பெரியோர்களைச் சந்தித்து நல்லாசிகளைப் பெற்றுக் கொள்வதும் சிறப்பான பாரம்பரிய நிகழ்வுகளாகும்.

புதுவருடம் பிறந்ததன் பின் பஞ்சாங்க கணிப்பின்படி சுப தினத்தில் சுப நேரத்தில் தொழிலிலுக்குச் செல்வது அல்லது தொழிலை ஆரம்பிப்பதன் மூலம் தொழில் விருத்தி அடையும் என்பதே எதிர்பார்ப்பாரும், ஆரம்ப காலத்தில் முற்றத்தில் விளக்கேற்றி வைத்து, அதன் அருகே வைக்கப்பட்டிருக்கும் மண்வெட்டியைக் கொண்டு வீட்டின் தந்தை மண்ணை வெட்டி கத்தியால் ஒரு பிலா மரத்தின் கிளையினை வெட்டுவதே வழக்கத்தில் இருந்து வந்தது. காலப் போக்கில் அந்தந்த ஆண்டிற்கு ஏற்ப பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்ட வர்ண உடைகளை அணிந்து, சுப திசை சுப நேரம் ஆகியவற்றுக்கு அமைய அலுவலகத்திற்குச் செல்வதே வழக்கமாகி விட்டது.

வருடப்பிறப்பு என்பது வருடத்தினுடைய பிறந்தநாள். அதை நம் மனம் போல மாற்றிக் கொள்ள முடியாது. நம் பிறந்த நாளை நம்மால் மாற்றிக் கொள்ள முடியுமா? அதுபோலத்தான். நாம் என்றைக்குப் பிறந்தோம் என்பதை நம் பெற்றோர் சொன்னதைக் கேட்டுத்தான் நாம் தெரிந்து கொள்கிறோம். நாம் பிறந்தது முதல் நம் பெற்றோர் நம் பிறந்த நாளைக் கொண்டாடிக் கொண்டு வரவே, நம்முடைய பிறந்த நாள் என்றைக்கு வருகிறது நமக்குத் தெரிகிறது. அதுபோலவே வருஷம் பிறக்கும் நாளை சித்திரை மாதத்தில் நம் முன்னோர்கள் வழி வழியாகக் கொண்டாடிக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே அதை அப்படியே பின்பற்றி, சித்திரை மாதத்தில் கொண்டாடுவதுதான் சரியான செயலாகும்.

பிறந்த நாள் என்பதே ஜோதிடம் சம்பந்தப்பட்டது. இப்பொழுதெல்லாம் நாம் ஆங்கில மாதம், ஆங்கிலத் தேதி என்று பின்பற்றி வந்தாலும், குழந்தை பிறந்தவுடன், ஜோதிடரிடம் சென்று அந்தத் தேதியில் என்ன நாள், என்ன நட்சத்திரம் என்று கேட்டுக் கொண்டுதான், பிறந்த நாளை நிர்ணயம் செய்கிறோம். அந்தக் குழந்தை நல்ல ஆயுசுடனும், அமோகமாகவும் இருக்க வேண்டும் என்று அந்த நட்சத்திரத்தில்தான் ஆயுஷ் ஹோமம் செய்கிறோம். கோவிலில் அர்ச்சனையும் செய்கிறோம். இதே முறையில் தமிழ் வருஷப் பிறப்பும் அமைந்துள்ளது.

தமிழர்களுக்கு சூரியன் உதயமே மூலாதாரம் கதிரவன் ஆண்டிற்க்கு இரு திசை பயனத்தினை மேற்கொள்கின்றான் இதன் மையப் பகுதி தினமே சித்திரை புத்தாண்டு இக் காலமே வசந்த காலம் மனிதர்களின் மகிழ்ச்சிக்கிரிய காலம் சித்திரைப் புத்தாண்டு எனவே தான் சித்திரையில் சகலவற்றினையும் ஆரம்பிக்கின்ரனர் இதன் ஒரு மகுதியே இன நல்லுறவு

பிறக்கவிருக்கும் இந்த விளம்பி வருடம் எல்லோருக்கும் நல்ல சுபீட்சம் தரும் ஆண்டாகவும் தொட்டது துலங்கும் ஆண்டாகவும் இருக்க எல்லாம் வல்ல இறைவனை பிராத்திப்போம்.

கிழக்கு மாகாண அரசியலின் எதிர்காலம்?

கடந்த பொதுத் தேர்தலின் போது இழந்ததை விடுத்து எதிர்வரும் பொதுத் தேர்தலின் மூலமாவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூடிய ஆசனங்களை மேலும் பெற்று தமது மக்களுக்குரிய சேவைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என எதிர்பார்ப்பதில் எதுவித தவறும் இல்லை என்பதை கிழக்கில் அனைத்துக் கட்சிகளும் உணர்ந்து கொள்ள வேண்டும்

கடந்த காலங்களில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே இனமோல்கள் இடம்பெற்றமைக்கு ஆயுதப் போராட்டம் மட்டுமல்ல அரசியற் தலைமைகளின் பொறுப்பற்ற செயற்பாடுகளுமே காரணமாகும். இதனால் பேரினவாதச் சமூகம் கடந்த ஆட்சிக் காலம் உட்பட தற்காலத்திலும் வெற்றிபெற வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்ததும் இவ்விரு இனங்களுமேயாகும். அந்தவகையில் இன்றைய அரசியற் சூழலில் இவ்விரு இனங்களும் சிந்தித்து தங்களது அரசியல் காய்நகர்த்தல்களை செவ்வனே செயற்படுத்த வேண்டிய தருணத்தில் உள்ளன.

இன்று இடம்பெற்று வரும் இலங்கை அரசியற் போக்குகளில் தமிழ் பேசும் மக்களின் பல்வேறு கோரிக்கைகள் அடங்கியுள்ள இன்றைய போராட்டத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் தங்களது இனத்தை, மதத்தை, கலாசாரத்தை, தனித்துவத்தை மற்றும் அடையாளத்தை காப்பாற்ற வேண்டிய தேவையிலுள்ளார்கள்.

இந்நிலையில் ஆட்சிமாற்றத்தின் பின்னர் இலங்கையில் செயற்பட்டுவரும் பிரதான அமைப்புக்கள் உட்பட பல கட்சிகள் நாட்டில் நல்லாட்சி மலர்வதற்கான சூழலை உணர்ந்து தத்தம் பொறுப்புக்களை ஏற்று நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. ஆனால் அண்மைக்காலமாக எதிர்வரும் பொதுத் தேர்தலின் பொருட்டு பல்வேறு கருத்து நிலைகள் தோன்றியுள்ள தற்சமயம், கிழக்கில் பதவி ஆசையின் கெடுபிடியில் சிக்குண்டு தற்போது இருவின மக்கள் மத்தியில் உள்ள இன ஒருமைப்பாட்டை சீர்குலைக்கும் முயற்சியில் குறித்த சில கட்சிகள் உட்பட அதிகாரிகள் சிலரும் முனைப்புடன் செயற்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகின்றன.

அந்தவகையில் கிழக்கின் நிலையை சற்று சாதாரண நிலையிலிருந்து சிந்தித்துப் பார்க்கின்ற போது கிழக்கு மாகாணத்தில் காலம் காலமாக நடைபெற்றுவரும் பிரச்சினைகளின் வடிவங்களை நன்கு உணரமுடியும். கிழக்கு மாகாணசபையைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற நியமனங்களிலிருந்து தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டே வருகின்றனர். இதன்போது பல இழப்புக்களை தமிழினம் சந்தித்துள்ளதுடன் தொடர்;ந்தும் சந்தித்தே வருகின்றது. ஆனால் இனிவரும் காலங்களிலும் இவ்வாறான இழப்புக்கள் தொடர்ந்தால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பு கேள்விக் குறியாகிவிடும். குறிப்பாக கடந்த காலங்களில் 11 ஆசனங்களைப் பெற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முதலமைச்சர் பதவியை பெறமுடியாமல் போனமையைக் குறிப்பிடலாம். இது தொடர்பாக அச் சூழலில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தன் அவர்கள் குறிப்பிடுகையில், ஜனநாயக ரீதியாக அப்பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வரவேண்டும் என்பதனை ஆதாரங்களுடன் முன்வைத்தோம். நாங்கள் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் 11 ஆசனங்களைப் பெற்றோம். அப்போதைய ஆளும் கட்சி ஓர் ஆசனத்தையே பெற்றது. ஆகவே ஜனநாயக ரீதியாக அப்போதைய மாகாண அரசாங்கம் தங்களுடைய பெரும்பான்மையைத் தக்கவைத்துக் கொள்ளக் கூடிய நிலைமை இல்லாமல் இருந்த பொழுது அந்தப் பதவிக்கு வரவேண்டிய உரிமை தமிணீழ் தேசியக் கூட்டமைப்புக்கு இருந்தது. அந்த அடிப்படையிலும் நியாயவாத அடிப்படையிலுமே கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் பதவியை நாங்கள் கோரினோம். அப்போதைய சூழலில் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முதலமைச்சர் பதவி கிடைக்கவேண்டும் என்பது நியாயமான கோரிக்கை ஆகும். ஆனால் இக்கோரிக்கையின் நியாயத்தை புரிந்து கொள்ளாமல் மு. கா செயற்பட்டமை ஏற்கமுடியாததே. இந்தக் கடமைப்பாடு அவர்களுக்கு நிச்சயம் இருந்திருக்கவேண்டும் என முஸ்லிம் காங்கிரஸின் நியாயமற்ற செயற்பாட்டைச் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையில் கடந்த பொதுத்தேர்தலின் போது இழந்ததை விடுத்து எதிர்வரும் பொதுத் தேர்தலின் மூலமாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூடிய ஆசனங்களை மேலும் பெற்று தமது மக்களுக்குரிய சேவைகளைப் பெற்று கொடுக்க வேண்டும் என எதிர்பார்ப்பதில் எதுவித தவறும் இல்லை என்பதை கிழக்கில் அனைத்துக் கட்சிகளும் உணர்ந்து கொள்ளவேண்டும். ஆனால் அவை வெறும் வாய்ப் பேச்சாக மட்டும் இல்லாமல் செயல்வடிவமும் பெறவேண்டும் என்பதே தமிழ் மக்கள் அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். இதனை விடுத்து தற்போது சூழ்ச்சியின் காரணமாக பதவியைத் தக்கவைப்பதோ, நியாயமற்று பதவியை கைப்பற்ற நினைப்பதோ எதிர்காலத்தில் கிழக்கு மாகாண அரசியலில் மேலும் பல்வேறு குழப்பநிலைகளை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

சரணியா சுப்ரமணியம்
B.A (Hons)
பேராதனை பல்கலைக்கழகம்

கடந்தகாடல ஆட்சிகளின் சூழ்ச்சிகள் சமூக ஒற்றுமையைச் சீர்குலைப்பதற்குப் பின்னணியாக இருந்தாலும் புதிய ஆட்சி மாற்றத்தின் பின் கிழக்கு மாகாணத்தில் முதலமைச்சர் பதவியானது இழுபறியில் சென்று, இறுதியில் பல்வேறு சூழ்ச்சிகளுக்கு அப்பால் மு. காவுக்கு எட்டியது. இத்தெரிவானது இன ஐக்கியத்துடன் இருந்துவந்த இரு சமூகங்கள் மத்தியில் பாரிய பிளவை ஏற்படுத்தும் சூழலை அந்நிலையில் உருவாக்கி தணிந்துள்ளது.

இன்று கிழக்கில் பதவிகளுக்காக ஒருவரை ஒருவர் பிடித்து உண்ணும் நிலையில் அரசியலில் மாற்றம் நிகழ்ந்து வருகின்றது. உண்மையில் தாங்கள் ஒவ்வொருவரும் பெற்றுக் கொண்ட பதவிகள் மூலம் மக்களுக்கு உரிய சேவைகளை வழங்க வேண்டும், அதன் மூலமே தங்களது அரசியல் இருப்புக்களை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதே அரசியல் யதார்த்தம் ஆகும். மாறாக இங்கு மக்களின் வாக்குகளால் பதவிகளைப் பெற்றுவிட்டு இறுதியில் மக்களை மறந்து செயற்படும் அரசியற்போக்கே கிழக்கில் அதிகமாக இடம்பெறுகின்றது.

உண்மையில் இங்கு குறிப்பிடப்போனால் கிழக்கில் இன்று முஸ்லிம் சமூகம் அனைத்து விடயங்களிலும் பெறும்/பெற்றுவரும் அபிவிருத்திகளில் கால் பங்கேனும் தமிழ் மக்கள் பெற்றுக் கொள்ளமுடியாத துர்ப்பாக்கிய நிலையே காணப்படுகின்றது என்றே கூறலாம். இங்கு முஸ்லிம் சமூகத்தை குறைகூறுவதாக அர்த்தம் கொள்ளமுடியாது. மாறாக இச்சமூகம் இவ்வாறு முன்னேறிக் கொண்டு செல்வதற்கு அடிப்படைக் காரணம் அவர்களுக்குள் கட்சிப்பிரிவுகள் பல்வேறு உட்பூசல்கள் காணப்பட்டாலும் இனம் என்ற ரீதியில் ஒற்றுமையே ஆகும். ஆனால் தமிழர்கள் மத்தியில் போட்டியும் பொறாமையும் குடிகொண்டிருப்பதுடன் தங்கள் கட்சிக்குள் இருக்கும் பூசல்களைப் பெரிதாக்கித் தங்களைத் தாங்களாகவே அழித்துக் கொண்டு மக்களுக்கும் உரிய சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதில் தவறிவிடுகின்றனர். எனினும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை உணர்வு பூர்வமாகச் சிந்தித்துத் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில தலைமைகள் முன்னிற்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

இருப்பினும் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்துத் தமிழ்த் தலைமைகளும் கூட்டிணைந்து ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்கும். இங்கு அவர்கள் பிரதானமாக மக்களை முதன்மைப்படுத்தி, பிரச்சினைகளைத் தீர்க்கும் சேவைகளைச் செய்யும் மனப்பாங்கினை முழுமையாக வளர்த்துக் கொள்ளவேண்;டும். வெறும் வாய்ப்பேச்சளவில் மாத்திரம் மக்களுக்கு சேவைகளை வழங்குகின்றோம் அபிவிருத்திகளைச் செய்கின்றோம் என்று கூறிக் கொண்டிருப்பதில் மாத்திரம் எவ்வித அர்த்தமும் இல்லை என்பதனையும் அவர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும். எனவே கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த காலங்களில் எவ்விதமான பதவிகளையும் பெற்றிருக்கவில்லை. இதனால் பல்வேறு பின்னடைவுகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழ் மக்களும் எதிர் கொண்டனர். தற்போதும் எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே கடந்த காலத்தில் கிழக்கு மாகாணசபையில் இரு அமைச்சுப்பதவிகளை பெற்றும் கூட தமிழ் மக்கள் திருப்தியுறாத வகையிலேயே சேவைகள் ஆற்றப்பட்டிருந்தமை யாவரும் அறிந்த ஒரு விடயமே. தற்போது பிரதான அமைச்சுப்பதவிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தவறவிடப்பட்டுள்ளன. எனவே எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலிலாவது தங்களுக்குரிய ஆசனங்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதுடன் தற்போது கிழக்குமாகாண சபையில் புளிச்சாதத்தில் கறிவேப்பிலையாக இருக்கும் கூட்டமைப்பு மாற்றம் கண்டு தமிழ் மக்களுக்கு உரிய சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு வேண்டிய செயற்பாடுகளை முனைப்புடன் முன்னெடுக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

தமிழ்..

06 ஆம் பக்கத் தொடர்ச்சி

போன்றவர்களின் வெற்றிக்கு உதவும்.

இத்தகைய காரணங்களை வைத்தே சுரேஷ் பிரேமச்சந்திரன் ரெலோவை தமது அணியில் சேர்ந்து கொள்வதற்கு மும்முரமாக செயற்பட்டு வருகிறார்.

இப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளான ரெலோ, மற்றும் புளொட் கட்சிகளை தமது அணியில் சேர்த்துக்கொள்வதற்கான முயற்சியில் பல முனைகளில் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஈடுபட்டிருக்கிறது.

இந்த முயற்சிகள் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு என்ற தளங்களில் நடந்து வருகிறது.

இதன் ஒரு கட்டமாகவே ரெலோவின் செயலாளராக இருக்கும் என்.சிறிகாந்தாவும் தவிசாளராக இருக்கும் சிவாஜிலிங்கமும் கடந்த சில தினங்களுக்கு முதல் ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் வீட்டிக்கு சென்று அவருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றனர்.

இதற்கான ஏற்பாடுகளை தமிழ் மக்கள் பேரவையை சேர்ந்த சிலர்

கோப்புப்படம்

மேற்கொண்டிருந்தனர் என்றும் அவர்களும் இந்த பேச்சுக்களில் கலந்து கொண்டனர் என்றும் தெரியவருகிறது.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள சிலரும் இதன் பின்னணியில் இருந்ததாக கூறப்படுகிறது. அண்மையில் ஜெனிவாவுக்கு சென்ற சிவாஜிலிங்கத்திடம் தமிழரசுக் கட்சியுடனான உறவை முறித்துகொண்டு வெளியேற வேண்டும் என வலியுறுத்தப்பட்டதாகவும் சிவாஜிலிங்கம் அதற்கு இணங்கியிருந்தார் என்றும் தெரியவருகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கு ரெலோ மீது சிறிது சந்தேகம் இருப்பதை அறிந்து கொண்ட சிறிகாந்தா எங்களை நம்புங்கள், இனி தமிழரசுக்கட்சியுடன் ஒட்டும் இல்லை உறவும் இல்லை, அவர்களின் வாசல்படியை மிதிக்கவே மாட்டோம் என இச்சந்திப்பின் ஆரம்பத்திலேயே தெரிவித்தார்.

கடந்த உள்ளூராட்சி தேர்தல் காலத்தில் இதேபோன்றுதான் தமிழரசுக்கட்சியுடன் ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என ஈ.பி.ஆர்.எல்.எவ் உடன் பேசிவிட்டு பின்னர் தங்கள் மனத்தை ரெலோ மாற்றிக்கொண்டது.

கடந்த சில தினங்களுக்கு முதல் நடந்த சந்திப்பில் தாம் தமிழரசுக்கட்சி தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேற உள்ளோம். எங்களை நம்புங்கள் என சிறிகாந்தா சத்தியம் செய்திருக்கிறார்.

மன்னாரில் செல்வம் அடைக்கலநாதன், மட்டக்களப்பில் ஜனா போன்றவர்கள் இந்த முடிவுக்கு சற்று தயக்கம் காட்டினாலும் அவர்களை எங்கள் வழிக்கு கொண்டு வந்து விடுவோம், எங்களை நம்புங்கள், விக்னேஸ்வரன் அணியில் சேர்த்துக்கொள்ளுங்கள் என மன்றாட்டமாக கேட்டிருக்கிறார் சிறிகாந்தா.

புளொட் இயக்கத்தையும் சேர்த்துக் கொள்ளலாம், ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியையும் சேர்த்து பலமான அணி ஒன்றை உருவாக்கலாம் என சிறிகாந்தா இச்சந்திப்பில் கூறிய போது அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியை இக் கூட்டில் சேர்த்துக்கொள்வதில் தனக்கு உடன்பாடு இல்லை என சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியதாகவும் ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

இந்த சந்திப்பு பற்றி ரெலோவின் பொருளாளரும் மட்டக்களப்பு தலைவருமான ஜனாவிடம் கேட்ட போது இச் சந்திப்பு பற்றி தனக்கு எதுவும் தெரியாது, இணையத்தளம் ஒன்றில் தான் அச்செய்தியை பார்த்தேன் என கூறினார்.

சிறிகாந்தா, சிவாஜிலிங்கம் போன்றவர்கள் யாழ்ப்பாண நிலைமைகளை வைத்தே முடிவெடுக்கிறார்கள். ஆனால் கிழக்கின் நிலைமை வேறாகவே உள்ளது. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியில் இணைந்து கொள்வது தற்கொலைக்கு சமமானது என்றே கிழக்கில் உள்ள ரெலோ தரப்புக்கள் நம்புகின்றன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட போது இருந்த நான்கு கட்சிகளில் ஏற்கனவே மூன்று கட்சிகள் வெளியேறிவிட்டன. இறுதியாக இருந்த ரெலோவும் அக்கூட்டிலிருந்து வெளியேறப்போகிறோம் என அறிவித்திருக்கிறது.

இந்நிலையில் தமிழரசுக்கட்சியின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும்? அடுத்த வாரம் பார்ப்போம்.

வியாபார...

12 ஆம் பக்கத் தொடர்ச்சி

நோக்கில் ஏற்படுத்தப்பட்ட இந்தப் புலமைப் பரிசில் பரீ;சை வறிய மாணவர்களுக்கு வசதியான பாடசாலைகளில் கல்வி கற்கும் வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டதாகும். இதன் காரணமாக பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பிரபல பாடசாலைகளில் சேர்ப்பதற்காக அலைந்து கொண்டிருப்பதுடன் அவர்களுக்கு இடையில் பாரிய போட்டித் தன்மைகளும் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

பிள்ளைகளின் படிப்பைவிட பெற்றோர்கள் தமது கௌரவப் பிரச்சினையாக கருதி மாணவர்களை அவர்களின் கொள்ளவுக்கு அதிகமாக படிப்பில் வதைப்பது பாரியதொரு பிரச்சினையாக கண்டறியப்பட்டுள்ளது. இதன் காரணமாக குறித்த மாணவர்கள் பலதரப்பட்ட உடல், உளப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் நிலைமைகளும் காணப்படுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ள முடியாது. ஐந்தாம் ஆண்டு மாணவர்கள் பெரியோர்கள் போல் எல்லா விடயங்களையும் ஒரே நேரத்தில் கிரகித்துக் கொள்ள முடியாது. ஆனால் போட்டித் தன்மைகள் காரணமாக கொடுக்கப்படும் அழுத்தங்கள் மாணவர்களை உடல், உள ரீதியாக பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாக்கி வருகின்றன.

இந்த விடயங்களைக் கருத்திற் கொண்டு இந்தப் பரீட்சையை நிறுத்துவதே சிறந்தது என்றும் அதற்காக மாற்றுத் திட்டங்களை மெற்கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி அடிக்கடி வழியுறுத்தி வந்திருந்தமையும் முக்கியமான விடயமாகும்.

இவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்த 8ஆம் ஆண்டில் ஒரு பரீட்சையை நடாத்தவதன் மூலம் அது அவர்களுக்கு சிறந்த பயனுள்ளதாக அமையும் என்ற விடயம் இன்று வெளிப்டுத்தப்பட்டுள்ளது.

வறிய மாணவர்களுக்கு வசதிகளையும், வாய்ப்பக்களையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற விடயமும் இன்று அவதானிக்கப்பட்டு வருகின்றதுடன் சகல பாடசாலைகளும் ஒரே தரத்தில் உள்ளதாக அமைவது மாணவர்களை பாதிப்புக்களில் இருந்து பாதுகாக்க முடியும் என்பதனையும் பலர் இன்று சுட்டிக் காட்டியுள்ளனர்.

அரசாங்கம் ஆண்டு 13 வரை கல்வியை கட்டயப்படுத்தியுள்ளதை அடிப்படையாக வைத்து

மாணவர்களின் நலன் கருதி அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதன் மூலம் சிறந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்களை இப்பாடசாலைகளுக்கு நியமித்து இப்பாடசாலைகளின் கல்வித் தரத்தை மேம்படுத்தவும் அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது.

இந்த வகையில் ஐந்தாம் ஆண்டுப் பரீட்சை நிறுத்தப்படுவது ஒரு வகையில் மாணவர்களின் ஏற்றத்தாழ்வுகளைப் போக்கவும், சிறிய பாடசாலைகளை வளப்படுத்தி சிறந்த பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யவும் வழிவகுக்கும் என கல்வியலாளர்கள் நம்புகின்றனர்.

எனவே மாணவர்களின் நலன்களில் அக்கறை கொண்டு மேற்கொள்ளப்படும் இந்த திட்டங்கள் எதிர் காலத்தில் வறிய மாணவர்களின் நலன்களில் அதிக நன்மைகளைப் பயக்கக்கூடியதாகவும் அவர்களின் உயர் கல்வி மேம்படவும் வேண்டும் என்பதே பெற்றொர்கள், மாணவர்களின் எதிர் பார்ப்பாகும். இதனை கவனத்திற் கொண்டு அரசாங்கம் இலங்கையின் கல்வித் தரத்தில் சிறந்த மாற்றங்களை கொண்டுவர வேண்டும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்கும் அசான்ஜ்

ஈக்குவடோர் அரசாங்கம் 'வரவிருக்கும் நாட்களில்' அதன் இலண்டன் தூதரகத்திலிருந்து ஜூலியன் அசான்ஜை வெளியேற்ற இருக்கிறது என்பதை மறுத்து, வாரயிறுதி வாக்கில், அது அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இதைத் தொடர்ந்து, விக்கிலீக்ஸ் ஸ்தாபகருக்கு அரசியல் தஞ்சமளிக்கப்பட்டிருப்பதை நீக்குவதற்கான அதன் அச்சுறுத்தலுக்கு, ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகள் மற்றும் ஏனைய சர்வதேச உரிமைகளுக்கான அமைப்புகள் உட்பட, அதிகரித்த எதிர்ப்பு எழுந்தது.

அந்த அறிக்கை, ஜனாதிபதி லெனின் மொரேனோ அரசாங்கம் 'சில மணி நேரங்களில் அல்லது சில நாட்களில்' அத்தூதரகத்திலிருந்து அசான்ஜை வெளியேற்ற இருப்பதாக ஈக்குவடோர் அரசின் 'உயர்மட்ட ஆதார நபர்' ஒருவரிடம் இருந்து விக்கிலீக்ஸிற்கு தகவல் கிடைத்திருப்பதாக கடந்த வெள்ளிக்கிழமை விக்கிலீக்ஸ் வெளியிட்ட எச்சரிக்கைக்கு விடையிறுப்பாக இருந்தது.

அது அக்கட்டிடத்திலிருந்து அசான்ஜை வெளியேற்ற தயாராகி வருகிறது என்பதனை ஈக்குவடோர் அறிக்கை மறுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவர் வெளியேற்றப்பட மாட்டார் என்றோ அல்லது எதிர்காலத்தில் எந்தவொரு தருணத்திலும் பிரிட்டன் பொலிஸ் காவலுக்குள் தள்ள அவர் நிர்பந்திக்கப்பட மாட்டார் என்றோ அது எந்த உத்தரவாதமும் வழங்கவில்லை, 'வரவிருக்கும் நாட்களில் நடக்காது'என்று மட்டுமே அந்த அறிக்கை குறிப்பிட்டது. விக்கிலீக்ஸ் ஆதரவாளர்கள் குறிப்பிட்டதைப் போல, 'வரவிருக்கும் நாட்கள்'என்பது வெறும் ஒரு வெற்று வார்த்தை அதற்கு வெவ்வேறு விதத்தில் பொருள்விளங்கப்படுத்த முடியும்.

அந்த அறிக்கை அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோஸ் வாலென்சியாவின் கருத்துக்களையும் மறுத்துரைக்கவில்லை, அரசியல் தஞ்சம் அளிக்கப்பட்டதை 'தன்னிச்சையாக' முடிவுக்குக் கொண்டு வருவது சர்வதேச சட்டமீறல் என்றாலும் கூட, வெள்ளியன்று அவர் அறிவிக்கையில், அது போன்ற நடவடிக்கை எடுக்க அவரது அரசாங்கத்திற்கு உரிமை இருப்பதாக தெரிவித்திருந்தார்.

அந்த அறிக்கை, 'INA ஆவணங்கள்' குறித்த செய்திகளை விக்கிலீக்ஸ் ட்வீட் செய்த உண்மையை இரண்டு முறை மேற்கோளிட்டது, அந்த ஆவணங்கள் ஊழல், பொய்சாட்சியம் மற்றும் மோசடியில் மொரேனோ அரசாங்கம் உடந்தையாய் இருந்ததை ஆவணப்படுத்துகிறது. அந்த ஆவணங்களை கடந்த பெப்ரவரியில் ஈக்குவடோரின் எதிர் தரப்பு சட்டவல்லுனருக்கு கசிய விட்டதற்கு அசான்ஜ் தான் பொறுப்பு என்று ஆதாரமின்றி வாதிட்டு, அந்த ஆட்சி அசான்ஜ் மீதான தாக்குதல்களை அதிகரிப்பதற்கான ஒரு சாக்குபோக்காக அதைப் பயன்படுத்தி உள்ளது.

ஞாயிறன்று காலை தூதரகத்திற்குள் இரண்டு ஆயுதமேந்திய பிரிட்டன் பொலிஸ் அதிகாரிகள் சென்றனர் என்பது அசான்ஜ் எதிர்கொண்டிருக்கும் தொடர்ச்சியான அபாயங்களை எடுத்துக்காட்டுகிறது. பல நிமிடங்கள் அக்கட்டிடத்திற்குள் இருந்த அவர்கள் அங்கே என்ன செய்தார்கள் என்பது தெரியவில்லை.

அத்தூதரகத்திற்கு வெளியே அசான்ஜின் பாதுகாப்புக்காக தொடர்ந்து போராடி வருகின்ற விக்கிலீக்ஸ் ஆதரவாளர்கள் பெரும் எண்ணிக்கையிலான பிரிட்டிஷ் பொலிஸ் குறித்தும், அப்பகுதியில் பின்புல நடவடிக்கைகளாக தெரிவதையும் ஆவணப்படுத்தி உள்ளனர்.

இன்று காலை இணையத்தள பத்திரிகையாளர் Cassandra Fairbanks, தூதரகத்தில் ஓர் அடையாளம் தெரியாத கார் அதன் ஒரு சக்கரத்திற்கு அருகே இணைக்கப்பட்ட விளக்குகளைக் காரணமின்றி அணைத்து அணைத்து எரியவிட்டதைப் படமெடுத்தார். அதை செய்தவர்களில் ஒருவர் அந்த வாகனத்தை விட்டு வெளியில் வந்து, 'அதொன்றும் பிரச்சினை இல்லை' என்று கூறுவதற்கு முன்னதாக, அங்கிருந்த பத்திரிகையாளர்கள் எந்த பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் என்று வினவினார்.

பிரிட்டன் மற்றும் ஈக்குவடோரிய அரசாங்கங்கள் அசான்ஜை வெளியேற்றுவதற்கான ஒரு 'மூலோபாயத்தில்' ஏற்கனவே உடன்பாடு எட்டியிருப்பதாக வாரயிறுதி வாக்கில் விக்கிலீக்ஸ் வெளியிட்ட குற்றச்சாட்டைப் பின்தொடர்ந்து இந்த அச்சுறுத்துகின்ற பொலிஸ் நடவடிக்கைகள் வருகின்றன.

விக்கிலீக்ஸ் ஸ்தாபகர் ஜோடிக்கப்பட்ட பிணையெடுப்பு குற்றச்சாட்டுக்கள் மீது பிரிட்டன் பொலிஸால் உடனடியாக கைது செய்யப்படலாம் என்பதை அந்த ஆவணம் தெளிவுபடுத்தியது. இது, அமெரிக்க போர் குற்றங்கள், பெருந்திரளான மக்கள் மீதான உளவுபார்ப்பு மற்றும் சட்டவிரோத இராஜாங்க சூழ்ச்சிகளை விக்கிலீக்ஸ் வெளியிடுவதில் அசான்ஜ் வகித்த பாத்திரத்திற்காக அவரைத் துரத்திக் கொண்டிருக்கும் அமெரிக்காவிடம் அவரை ஒப்படைக்கும் சட்ட நடைமுறைகளைச் சுலபமாக்கும்.

அசான்ஜை அத்தூதரகத்திலிருந்து வெளியேற்றுவதற்காக, அதிகரிக்கப்பட்ட அச்சுறுத்தல்களுக்கு இட்டுச் சென்று கொண்டிருக்கும் கீழ்தரமான சூழ்ச்சிகள் குறித்து நிறைய தகவல்கள் வெளிச்சத்திற்கு வந்த வண்ணம் உள்ளன.

தனிநபர் பிரத்யேக உரிமைக்கான ஐ.நா. சபையின் முதன்மை சிறப்பு செய்தியாளர் ஒணிண்ஞுணீட இச்ணணச்ஞ்ஞிடி அசான்ஜைச் சந்திப்பதற்கான அவரின் முயற்சிகளைக் காலவரிசை கிரமமாக பிரசுரித்துள்ளார். விக்கிலீக்ஸ் ஸ்தாபகருக்குத் தஞ்சம் வழங்கப்பட்டிருப்பதை முடிவுக்குக் கொண்டு வர ஈக்குவடோரிய அரசாங்கத்தினது முயற்சிகளுக்கான ஒரு குறிப்பிடத்தக்க காரணி என்னவென்றால், அவர் மீதான அதன் மலைப்பூட்டும் கண்காணிப்பானது ஐ.நா. மற்றும் பரந்த சர்வதேச புலன்விசாரணைகளின் கீழ் வந்து கொண்டிருக்கின்றன என்றது அறிவுறுத்துகிறது.

இச்ணணச்ஞ்ஞிடி இன் தகவல்படி, அந்த ஆட்சி அவரின் தனிப்பட்ட அந்தரங்க மரியாதையை மீறியுள்ளளதாக குற்றஞ்சாட்டி அசான்ஜ் மற்றும் அவரின் சட்ட வல்லுனர் குழுவிடம் இருந்து மார்ச் 29 இல் ஒரு மின்னஞ்சல் குறிப்பும் ஓர் ஆதாரபூர்வமான புகார் ஆவணமும் அவர் பெற்றிருந்தார். மொரேனோ ஆட்சி அமெரிக்க உளவுத்துறை முகமைகளின் சார்பாக அசான்ஜை உளவுபார்த்து வருவதாக விக்கிலீக்ஸ் வழக்கறிஞர்கள் முன்னதாக வாதிட்டுள்ளனர்.

அன்று அசான்ஜைச் சந்திப்பதற்கான Cannataci இன் முயற்சிகள் வெற்றி அடையவில்லை, ஏனென்றால் தூதரகம் அவர் அழைப்புகளுக்கு பதிலளிக்கவும் இல்லை அல்லது திரும்பி கூப்பிடவும் இல்லை.

அசான்ஜ் உடனான ஒரு சந்திப்பு கோரி மார்ச் 31 இரவு Cannataci ஈக்குவடோரிய அதிகாரிகளுக்கு மின்னஞ்சல் செய்தார். ஏப்ரல் 1 வரையில் அவருக்கு எந்த பதிலும் வரவில்லை.

ஏப்ரல் 2 இல், பிரிட்டனுக்கான ஈக்குவடோரிய தூதர் Jaime Marchan, ஒரு சந்திப்புக்கான கோரிக்கை தலைநகர் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக பதிலளித்தார். அதன்பின்னர் சிறிது நேரத்தில், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோஸ் வாலென்சியா கையெழுத்திட்ட ஒரு கடிதத்தில், அசான்ஜ் ஈக்குவடோரிய ஜனாதிபதியின் தனிப்பட்ட பிரத்யேக மரியாதையை 'மீறி' இருந்ததாக கூறி, மொரேனோவிடம் இருந்து Cannataci ஒரு புகாரைப் பெற்றார்.

மொரேனோ அதே நாளில், அவரின் ஐபோனின் தகவல்கள் மற்றும் ஜிமெயில் கணக்குகளை அசான்ஜ் தனிப்பட்டரீதியில் 'ஊடுருவி' எடுத்ததாகவும், இவை INA ஆவணங்களில் உள்ளடங்கி உள்ளன, அவர் அரசாங்கத்தைச் சூழ்ந்துள்ள ஊழல் மோசடிக்கு விக்கிலீக்ஸ் ஸ்தாபகரே பொறுப்பாவார் என்றும் கூறி, விஷமத்தனமான பேட்டி ஒன்று அளித்தார்.

அசான்ஜ் உடனான சந்திப்புக்கான கோரிக்கை மேற்கொண்டு முன்நகராதவாறு, Cannataci இன் சந்திப்புக்கான மற்றொரு ஏப்ரல் 3 தேதி கோரிக்கையை மார்சன் வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளவோ அல்லது அதற்கு பதிலளிக்கவோ இல்லை. இதற்கு சில நாட்களுக்குப் பின்னர், தூதரகத்திலிருந்து அசான்ஜ் வெளியேற்றப்பட இருக்கும் தகவல் கிடைத்திருப்பதாக விக்கிலீக்ஸ் அறிவித்தது.

இந்த காலவரிசை கிரமமான சம்பவங்கள், ஊழல்பீடித்த மற்றும் நெருக்கடிக்குள் சிக்கிய ஓர் ஆட்சி அகதி பதிப்பாசிரியர் ஒருவரின் மனித உரிமைகள் மீதான அதன் மீறல்களைப் பொய்கள், தட்டிக்கழிப்புகள் மற்றும் அருவருக்கத்தக்க சூழ்ச்சிகளைக் கொண்டு மூடிமறைக்க முயன்று வருவதன் மீது ஓர் அதிர்ச்சியூட்டும் சித்திரத்தை வழங்குகிறது. மூத்த அரசு அதிகாரிகள் ஐமீஅ ஆவணங்கள் கசிந்ததற்கு அசான்ஜ் தான் பொறுப்பு என்று, அவை பிரசுரிக்கப்பட்டு பல வாரங்களுக்குப் பின்னர், திடீரென ஏன் கூறத் தொடங்கி இருக்கிறார்கள் என்பதை இது விளக்குகிறது. அசான்ஜிற்கும் அந்த கசிவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது மொரேனோ ஆட்சிக்கு நன்கு தெரியும், ஏனென்றால் அது மார்ச் 2018 இலேயே அசான்ஜின் இணைய மற்றும் தகவல்தொடர்புகளைத் துண்டித்துவிட்டது.

இந்த சூழ்ச்சிகள், மொரேனோ அரசாங்கத்துடன் நெருக்கமாக தொடர்பு கொண்டுள்ள அமெரிக்க அரசாங்கத்துடனான நெருக்கமான ஒத்துழைப்பில் நடத்தப்பட்டன என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஈக்குவடோரிய அச்சுறுத்தல்கள், ட்ரம்ப் நிர்வாகம் செல்சியா மேனிங்கை சிறையில் அடைத்திருப்பதுடன் பொருந்தி உள்ளன. அமெரிக்க இராணுவத்தின் ஈராக் மற்றும் ஆப்கான் போர் தகவல் பதிவேடுகளையும் நூறாயிரக் கணக்கான இராஜாங்க இரகசிய ஆவணங்களையும் 2010 இல் விக்கிலீக்ஸிற்குக் கசியவிட்ட தைரியமான அந்த ஆவண வெளியீட்டாளரை, அசான்ஜிற்கு எதிராக நீதியரசர்கள் விசாரணையின் முன்னால் பொய்சாட்சி அளிக்க மறுத்ததற்காக, சிறையில் அடைத்துள்ளது.

நீதித்துறை புலன்விசாரணையின் முன்னால் நிற்கக்கூடிய அளவுக்கு, அசான்ஜை அயல்நாட்டிலிருந்து கொண்டு வருவதற்கான ஒரு சட்டபூர்வ வழக்கு ட்ரம்ப் நிர்வாகத்திடம் இல்லை என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. ஈக்குவடோரிய மற்றும் பிரிட்டிஷ் அதிகாரிகளின் சட்டவிரோத சூழ்ச்சிகள் தொடர்ந்து அம்பலமாகி வருவதும் அசான்ஜிற்கு வழங்கப்பட்ட தஞ்சமளிப்பை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அவர்களின் முயற்சிகளைச் சிக்கலுக்கு உள்ளாக்கும்.

அசான்ஜைப் பாதுகாக்கவும் மற்றும் அவருக்கு எதிரான சதிகளைத் தோற்கடிக்கவும் விக்கிலீக்ஸ் தீர்மானகரமாக இருப்பது அவர் வழக்கறிஞர்களில் ஒருவரான ஜெனிபர் ரோபின்சன் சனிக்கிழமை ஆஸ்திரேலியாவில் Channel Seven இன் 'சன்ரைஸ்' நிகழ்ச்சிக்கு அளித்த ஒரு பேட்டியில் மிகவும் பலமான வெளிப்பாட்டைக் கண்டது.

உலகெங்கிலுமான அரசாங்கங்களின் போர் குற்றங்கள், மனித உரிமை துஷ்பிரயோகங்கள் மற்றும் ஊழல்கள் குறித்து தகவல் வெளியிட்டதற்காக' முந்தைய ஈக்குவடோரிய அரசாங்கத்தால் அசான்ஜிற்கு தஞ்சம் வழங்கப்பட்டது என்பதை ரோபின்சென் சுட்டிக்காட்டினார். அசான்ஜ் சிட்னி சமாதான விருது மற்றும் 2011 இல் நிகரில்லா பத்திரிகையியலுக்கான வால்க்லே விருதுகளை பெற்றிருப்பதை அவர் நினைவுகூர்ந்தார்.

நடவடிக்கைகளைப் பிரசுரித்ததற்காக 'ஓர் ஆஸ்திரேலிய பத்திரிகையாளர் அமெரிக்காவில் வழக்கில் இழுக்கப்படுவது' தீவிரமான நிலைமை' என்று ரோபின்சன் எச்சரித்தார். இதுவே எகிப்து, அல்லது துருக்கியாக இருந்திருந்தால், ஆஸ்திரேலிய அரசாங்கம் அதை விமர்சித்திருக்கும் என்பதோடு அதன் குடிமக்களுக்காக முன்நின்றிருக்கும், என்று கூறிய அப்பெண்மணி, ஆஸ்திரேலிய அரசாங்கம் இந்த விடயத்தில் ஏன் அதை செய்யவில்லை? என்று கேள்வி எழுப்பினார்.

2012 இல் அப்போதைய தொழிற் கட்சி அரசாங்கம் அவரைப் பாதுகாக்கவில்லை என்பதால் தான் அசான்ஜ் ஈக்குவடோரிய தூதரகத்தில் தஞ்சம் கோர நிர்பந்திக்கப்பட்டார் என்று ரோபின்சன் குறிப்பிட்டார். அமெரிக்காவிடம் ஒப்படைப்பதில்லை என்ற உத்தரவாதத்துடன் அசான்ஜைப் பாதுகாப்பாக ஆஸ்திரேலியாவுக்குக் கொண்டு வர ஆஸ்திரேலிய அரசாங்கம் தலையிட வேண்டுமென அவர் அழைப்பு விடுத்தார்.

ஆஸ்திரேலியா தெளிவாக இன்னும் நிறைய செய்ய வேண்டியிருக்கிறது, என்பதை அந்நிகழ்ச்சி தொகுப்பாளர்களில் ஒருவர் குறிப்பிட்டது குறிப்பிடத்தக்கதாகும். அசான்ஜின் மோசமடைந்து வரும் உடல்நலம் குறித்து அவரின் உடனிருந்தவர் கவலை வெளியிட்டார்.

ரோபின்சன் விவரித்த அந்த முதல்கட்ட கோரிக்கையை அடைவதற்கும், அசான்ஜிற்கான அதன் கடமைப்பாடுகளை நிறைவேற்ற ஆஸ்திரேலிய அரசாங்கத்தை நிர்பந்திப்பதற்கும் தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் மக்கள் உரிமைகளுக்கான அனைத்து பாதுகாவலர்களின் ஒரு பாரிய அரசியல் இயக்கத்தைக் கட்டமைப்பது அவசியமாகிறது. போர் மற்றும் சமத்துவமின்மைக்கு பெருந்திரளான மக்களிடையே உள்ள கோபம், மற்றும் வர்க்க போராட்டத்தின் மேலெழுச்சிகளுக்கு மத்தியில், இந்த தீர்க்கமான போராட்டமானது சர்வதேச அளவில் அரசாங்கங்கள் இணைய தணிக்கை மற்றும் எதேச்சதிகாரத்தை நோக்கி திரும்பி இருப்பதற்கு எதிரான பரந்த போராட்டத்திலிருந்து பிரிக்க வியலாததாகும்.

நன்றி: உலக சோசலிச இணையத்தளம்

அமெரிக்க சிறைகளின் நிலைமைகள்

பலாத்காரங்கள், படுகொலைகள், அடி-உதைகள், உருச்சிதைவுகள், தீக்கிரையாக்கும் நடவடிக்கைகள் மற்றும் சட்ட விதிமுறைமீறல்களும் கட்டுக்கடங்காமல் உள்ளன. உதவி கோரும் அலறல்களுடன், தனியறைகளில் அடைத்து வைக்கப்பட்ட சிறைக்கைதிகளின் இரத்தச் சிதறல்கள் சுவர்களில் கறைகளாக படிந்துள்ளன. கடந்த 15 மாதங்களில் பதினைந்து தற்கொலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவையெல்லாம் அல்-சிசியின் எகிப்திலோ அல்லது பின் சல்மானின் சவூதி அரேபியா சித்திரவதைக் கூடத்தினதோ விவரிப்புகள் அல்ல. அல்லது ஈராக்கில் இழிபெயர் பெற்ற அபு கிஹ்ரைப் சிறைக்கூடத்தில் கைதிகள் மீதான துஷ்பிரயோகம் குறித்ததும் இல்லை, இவை குவாண்டனமோ வளைகுடா சிறை முகாமில் அல்லது சிஐஏ இருட்டு விசாரணை அறையில் நிலவுகின்ற நிலைமைகளாகும்.

அலபாமா மாநில அரசு சிறைத்துறையில் நிலவும் இந்த பெருங்கவலைக்குரிய நிலைமைகள், இவ்வாரம் வெளியிடப்பட்ட நீதித்துறை அறிக்கையில் விவரிக்கப்பட்டிருந்தது. இவை குரூரமான மற்றும் அசாதாரண தண்டனைக்கு தடை விதிக்கும் அமெரிக்க அரசியலமைப்பின் எட்டாவது திருத்தத்தை முற்றிலுமாக மீறுவதாக உள்ளன.

இந்த அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னதாக தெற்கு பிரிவு வறுமை சட்ட மையத்தால் ஊடகங்களுக்கு வழங்கப்பட்ட 2,000 க்கும் அதிகமான அலபாமா சிறைச்சாலையின் புகைப்படங்கள், இந்த நிலைமைகளது குரூரமான யதார்த்தத்தைச் சித்தரிக்கின்றன, இவை பெடரல் புலன்விசாரணையாளர்களால் இரண்டாண்டுகளுக்கும் அதிகமாக சிறைக்கைதிகள் மற்றும் அவர்களது குடும்பங்களுடன் நடத்தப்பட்ட நூற்றுக் கணக்கான நேர்காணல்களில் விவரிக்கப்பட்டன.

குறிப்பிடத்தக்களவில் படுபயங்கரமாக இருந்தாலும், இதுபோன்ற நிலைமைகள் எவ்விதத்திலும் அங்கே மட்டும் பிரத்யேகமாக நிலவும் நிலைமைகள் அல்ல. இவை அமெரிக்கா எங்கிலும் ஒவ்வொரு மாநிலம், உள்ளாட்சி மற்றும் நகரத்தினது சிறைச்சாலைகளிலும் வெவ்வேறு வடிவங்களில் நிலவுகின்றன. அமெரிக்காவின் மத்திய மற்றும் மாநில சிறைச்சாலை அமைப்புகளுக்குள்ளும், உள்ளூர் சிறைகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் தடுப்புக்காவல் முகாம்களிலும் 2.3 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் விலங்குகளைப் போல அடைக்கப்பட்டிருக்கிறார்கள். நன்னடத்தைக் காவலில் இருப்பவர்கள் அல்லது பிணையில் இருப்பவர்கள் உள்ளடங்கலாக, அண்மித்து 7 மில்லியன் அமெரிக்கர்கள் அர்த்தமற்ற விதத்தில் ''குற்றவியல் நீதி விசாரணை முறை'' என்றழைக்கப்படுவதில் சிக்கியுள்ளனர்.

உலகளவில் சிறையில் அடைக்கப்பட்டவர்களில் ஒரு கால்வாசியினருக்கும் அதிகமானவர்கள் அமெரிக்காவில் உள்ளனர். ஒவ்வொரு 100,000 குடியானவர்களில், 698 பேர் தடுப்புக்காவலில் உள்ளனர். எந்த ஒரு நாளிலும் சிறையில் அடைக்கப்பட்ட 540,000 க்கும் அதிகமானவர்கள் மீது எந்த குற்றத்திற்காகவும் தண்டனை வழங்கப்பட்டிருக்கவில்லை. மிதமான பிணைத்தொகையான 10,000 டாலர் கூட செலுத்த முடியாத ஏழைகள் என்ற காரணத்தினாலேயே பலரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இன்னும் அரை மில்லியன் பேர், சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்களில் ஐந்தில் ஒருவர், வன்முறை எதுவுமின்றி போதை சம்பந்தமான குற்றத்தீர்ப்புகளுக்காக நீண்டகாலமாக சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபை சித்திரவதைக்கு நிகரானது என்று அறிவித்துள்ள சிறையடைப்பின் ஒரு வடிவமான, ஏதேனும் ஒரு நாளாவது தனியாக அடைத்து வைப்பதில் 61,000 கைதிகள் வைக்கப்பட்டிருப்பதாக ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர். குறைந்தபட்சம் 4,000 பேர் உலக தொடர்பின்றி முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருப்பதால், அவர்கள் கடுமையான மனநோய்க்கு உள்ளாகி உள்ளனர். சீமெந்து சவப்பெட்டிக்குள் அடைத்து வைப்பதால் இது பல கைதிகளை தற்கொலைக்கு தூண்டுகிறது.

கடனாளிகளுக்கான சிறைக்கூடங்கள் என்பது உத்தியோகபூர்வமாக சட்டத்திற்குப் புறம்பானவை என்ற போதினும், வறிய தொழிலாளர்கள் அவர்களின் கடன்களுக்காக வழமையாக சிறையில் அடைக்கப்படுகிறார்கள். இண்டியானாவில் தாய் ஒருவர், அவருக்கு ஒருபோதும் மெயிலில் அனுப்பப்பட்டிராத ஆம்புலன்ஸ் கட்டணத்தைக் கட்டவில்லை என்பதற்காக பெப்வரி மாதம் மற்ற குற்றவாளிகளுடன் சேர்த்து ஓர் அழுக்கடைந்த சிறையில் மூன்று நாட்களுக்குத் அடைக்கப்பட்டிருந்தார். இது போன்ற கதைகள் நிறைய உள்ளன.

ஒபாமா கொண்டு வந்த கொள்கைகளை விரிவாக்கி, ட்ரம்ப் நிர்வாகத்தின் கீழ் இந்த மத்திய அரசாங்கம் ஆயிரக் கணக்கான ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளை இழிவார்ந்த நிலைமைகளில் தங்க வைத்து, புலம்பெயர்ந்தவர்கள் மீது ஒரு போர் தொடுத்து வருகிறது. தெற்கு எல்லையைக் கடக்க முயன்றதற்காக பெப்ரவரியில் சுமார் 77,000 பேர் காவலில் வைக்கப்பட்டார்கள். புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் வேட்டையாடப்பட்டு வருவதுடன், அவர்களின் வீடுகள் மற்றும் வேலையிடங்களில் கைது செய்யப்படுகின்றனர்.

அமெரிக்க அரசாங்கத்தின் குரூரத் தனம் இவ்வாரம் 280 ஆவணமற்ற தொழிலாளர்கள் டெக்சாஸின் ஆலனில் பெடரல் முகவர்களால் கைது செய்யப்பட்ட போது முழுமையாக பார்வைக்கு வந்தது. ஒரு தசாப்தத்திற்கும் அதிகமான காலத்தில் இதுவே மிகப் பெரிய வேட்டையாடலாகும்.

பின்னர் அங்கே முடிவில்லாத பொலிஸ் படுகொலைகளின் அலை உள்ளது, இதில் அமெரிக்க நகர வீதிகளில் ஒவ்வொரு ஆண்டும் 1,000 க்கும் அதிகமானவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள், மின்னதிர்வுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் அல்லது அடித்து கொல்லப்பட்டுள்ளனர். பொலிஸ் படுகொலைகள் மீதான குற்ற வழக்குகள் அரிதாகவே உள்ளன என்பதோடு, இதற்காக தண்டனை வழங்கப்பட்டிருப்பதாக ஏறத்தாழ எதுவும் காதில் விழுவதில்லை. கொலை செய்வதற்கும், முடமாக்குவதற்கும் மற்றும் குரூரமாக நடந்து கொள்வதற்கும் பொலிஸிற்குத் தண்டனையிலிருந்து விலக்கீட்டுரிமையுடன் பச்சைக் கொடி காட்டப்படுகிறது.

அமெரிக்க ஆளும் வர்க்கம் எந்தவொரு நாட்டை ஆட்சி மாற்றத்திற்காகவோ அல்லது படையெடுப்புக்காகவோ இலக்கில் வைக்கிறதோ அந்நாட்டில் மனித உரிமைமீறல்கள் நடப்பதாக குற்றஞ்சாட்டுவதில், ஜனநாயகக் கட்சியும் குடியரசுக் கட்சியும், கணக்கிலடங்கா பாசாங்குத்தனத்துடன், அவற்றின் ஆக்ரோஷத்தைக் காட்டுகின்றன. மொத்த மக்கள்தொகையில் அடிமட்ட அரைவாசி ஜனங்களது செல்வவளத்தை விட அதிகமானதை மூன்று மிகப் பெரிய அமெரிக்கர்கள் கட்டுப்பாட்டில் கொண்டுள்ளதும், உலகிலேயே மிகவும் குரூரமான மற்றும் சமமற்ற சமூகங்களில் ஒன்றை, அவை உலகின் ஜனநாயகத்திற்கான கலங்கரை விளக்கமாக பிரகடனப்படுத்துகின்றன.

அமெரிக்க சிறைச்சாலை நிலைமைகள் ரஷ்யாவில் அல்லது சீனாவில் இருப்பதாக வெளியாகி இருந்தால், பத்திரிகைகளிலும் காங்கிரஸ் சபைகளிலும் பொருளாதார தடைகள் மற்றும் ''மனிதாபிமான'' இராணுவத் தலையீட்டுக்கு ஆரவாரமான கூச்சல் இருந்திருக்கும், ஊடகங்களில் அது மீண்டும் மீண்டும் எதிரொலிக்கப்பட்டிருக்கும்.

அலபாமா சிறைச்சாலைகளின் நிலைமைகளை வெளிப்படுத்தும் இதுபோன்ற ஓர் அறிக்கை ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் வெளியாகி இருந்தால், அரசியல் மற்றும் ஊடக ஸ்தாபகத்தின் பிரிவுகளுக்குள்ளேயே கூட அதிர்ச்சி மற்றும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கும், ஆனால் இன்றோ அது வெறுமனே முணுமுணுப்புடன் கடந்து செல்லப்படுகிறது.

ஜனநாயகக் கட்சி வாய்மூடி உள்ளது ஏனென்றால் அமெரிக்க சிறைச்சாலை நிலைமைகளின் பரந்த சிக்கலான

16 ஆம் பக்கம் பார்க்க....

எது ஸ்டாலின் பாணி?

'கற்பூரக் கனல் வார்த்தை தலைவர் சொல்லட்டும்' என்றே பழக்கப்பட்டுப்போன திமுக தொண்டர்களைத் தட்டியெழுப்பிக் களத்துக்கு அனுப்பும் பொறுப்பில் தீவிரமாக இருக்கிறார் மு.க.ஸ்டாலின். பிரச்சாரக்களத்தில் அவரது அணுகுமுறை எப்படியிருக்கிறது?

கடின உழைப்புக்குப் பேர்போன தந்தை கருணாநிதியின் பெயரைக் கொஞ்சமேனும் தக்கவைத்திட கடுமையாக இயங்குகிறார் ஸ்டாலின். இரவில் எந்நேரம் தூங்கினாலும் அதிகாலையிலேயே எழுந்து, நடைபோவது ஸ்டாலினின் வழக்கம். இப்போது அதையே பிரச்சாரத்துக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்.

ஓடிவருகிறான் உதயசூரியன்

எந்த ஊரில் தங்கியிருந்தாலும் அவ்வூர் வேட்பாளரை மட்டும் அழைத்துக்கொண்டு, அருகில் உள்ள சந்தை அல்லது கடைவீதிக்குப் போகிறார். அங்கே எதிர்ப்படுபவர்களிடமெல்லாம் வேட்பாளரைக் காட்டி ஓட்டுக்கேட்கிறார். நேரங்காலம் தெரியாமல் செல்ஃபி எடுப்பவர்களிடம்கூட அவர் கோபப்படுவதில்லை. சிரித்த முகத்துடன் போஸ் கொடுக்கிறார். ஒசூரில் ஒரு மூதாட்டி அவரது கன்னத்தைக் கிள்ளியது வைரலானது.

திருவாரூரில் பூணூல் அணிந்த பிராமணரிடமும் கைகுலுக்கினார், அதே வீதியில் மீன் வெட்டிக்கொண்டிருந்த இளைஞரிடமும் அதே சிரித்த முகத்தோடு கைகுலுக்கினார், மதுரையில் மு.க.அழகிரியின் படம் போட்ட டீசர்ட்டுடன் செல்ஃபி எடுத்துக்கொண்ட இளைஞரிடமும் அதே புன்சிரிப்பு. சாலையில் இறங்கவே தயங்குகிற தலைவர்களுக்கு மத்தியில் வீதியில் இறங்கி ஓட்டு வேட்டையாடும் அவரது பிரச்சாரத்துக்கு நல்ல வரவேற்பு.

ஹோட்டலில் தங்கினாலும் கட்சிக்காரர்களின் வீட்டிலிருந்து கொண்டுவரும் உணவையே அவரும், குடும்பத்தினரும் சாப்பிடுகிறார்கள். மதுரையில் வேலுச்சாமி, ஒசூரில் பர்கூர் சுகவனம் என்று ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு நிர்வாகியின் குடும்பத்தினர் பெருமையோடு சமைத்துப் பரிமாறுகிறார்கள்.

ஜெ பாணி பொதுக்கூட்டம்

சென்னையிலிருந்து தன் மனைவியுடன், தனி விமானத்தில் ஓசூர், சேலம், மதுரை, கன்னியாகுமரி போன்ற ஊர்களுக்குச் செல்கிறார் ஸ்டாலின். தொகுதியில் பெரிய விடுதியில் தங்கும் அவர், அடுத்த சில நாட்களுக்கு சுற்றியுள்ள ஊர்களில் பொதுக்கூட்டங்களில் பங்கேற்கிறார். காலை 10.30 மணிக்கு ஒரு ஊரில் என்றால், மாலை 5 மணிக்கு இன்னொரு ஊரில்.

ஊருக்கு வெளியே சுமார் 50 முதல் 100 ஏக்கர் இடத்தைப் பிடித்து பிரமாண்டப் பொதுக்கூட்டம். பகல் கூட்டத்துக்கு மேடைக்கு மட்டும் பந்தல் போடுகிறார்கள். மாலைக் கூட்டத்துக்கு மேடைக்குப் பந்தல் கிடையாது. பகல் கூட்டம் முடிய 12.30 மணிக்கு மேலாகிவிடுவதால் சுட்டெரிக்கும் வெயிலைத் தாங்க முடியாமல், பார்வையாளர்கள் தவிக்கிறார்கள். பார்வையாளர்களைப் பேச்சால் கட்டிப்போடுகிற வித்தை இன்னும் ஸ்டாலினுக்குக் கைவரவில்லை. பிரமாண்டக் கூட்டம் என்றாலும், அதுவும் ஊருக்கு வெளியில் நடத்தப்படுவதால் இதில் பங்கேற்பவர்களில் பெரும்பாலானோர் கட்சிக்காரர்களும், கூட்டணிக்காரர்களும்தான். பொதுமக்களோ, அந்த வழியாகச் செல்வோரோ கூட்டம் கேட்பதாகவும் தெரியவில்லை; அப்படிக் கேட்க நினைத்தால்கூட இடம் கிடைக்குமா என்றும் தெரியவில்லை. காரணம், 11 மணி கூட்டத்துக்கு 8 மணிக்கே கட்சிக்காரர்களும் கூட்டணியினரும் அனைத்து நாற்காலிகளையும் ஆக்கிரமித்துவிடுகிறார்கள். ஒரு பெரிய குறை என்னவென்றால், 'திமுக கூட்டம் என்றாலே 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும்தானா?' என்று கேட்கிற அளவுக்கு இளைஞர்களைக் கூட்டத்தில் தேட வேண்டியிருக்கிறது.

என்ன பேசுகிறார் ஸ்டாலின்?

ஒவ்வொரு கூட்டத்திலும் சுமார் ஒரு மணி நேரம் உரையாற்றுகிறார். மோடி தலைமையிலான மத்திய அரசையும், எடப்பாடி தலைமையிலான மாநில அரசையும் கடுமையாகச் சாடுகிறார். "மாநிலங்களே இல்லாத ஒற்றையாட்சியை அமைக்க முயல்கிறார் மோடி, மோடியா லேடியா என்று கம்பீரமாகக் கேட்ட ஜெயலலிதாவை மறந்துவிட்டு அதிமுகவை மோடியிடமும் அமித் ஷாவிடமும் அடகுவைத்துவிட்டார்கள் எடப்பாடி அணியினர், நாடாளுமன்றத் தேர்தலுடன் 22 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களும் வருவதால் மத்தியில் மட்டுமின்றி மாநிலத்திலும் ஆட்சி மாற்றம் ஏற்படும், மத்தியில் ராகுல் பிரதமராவார், ஜெயலலிதா மரணத்தின் மர்மம் விலக வேண்டும் என்றால் அவரது ஆதரவாளர்களும் திமுகவுக்கு வாக்களிக்க வேண்டும்" என்பதே அவரது பேச்சின் மையமாக இருக்கிறது. கூடவே, திமுக மற்றும் காங்கிரஸின் தேர்தல் அறிக்கை சிறப்பம்சங்கள், வேட்பாளரைப் பற்றிய அறிமுகம், அவர் தொகுதிக்கு என்னென்ன செய்வார் என்பதையும் சொல்கிறார் ஸ்டாலின். சட்டமன்ற இடைத்தேர்தல் தொகுதி என்றால் அந்த வேட்பாளரையும் பக்கத்தில் நிறுத்தி ஓட்டுக் கேட்கிறார். முன்னெல்லாம் எல்லா ஊர்களிலும் ஒரே மாதிரிப் பேசுவார். இப்போது ஒவ்வொரு வட்டாரத்துக்கு ஏற்ப பேசுகிறார்.

இன்னமும் 1990 காலகட்டத்து மேடைப் பேச்சு பாணியிலேயே பேசுவதும், பழமொழிகள், இணைப்புச் சொற்களுடன் நீண்ட வரிகளாக அவரது உரை அமைந்திருப்பதும் சோர்வைத் தருகிறது. முன்பெல்லாம், ஸ்டாலின் பேச்சில் காரம் குறைவாக இருக்கும். இப்போது காரத்தைக் கூட்டிவிட்டார். முதல்வர் பற்றி பேசும்போது தனிப்பட்ட தாக்குதலாக மாறி நீதிமன்றமே கண்டிக்கும் அளவுக்குப் போய்விட்டது. காலையைப் போலவே மாலையிலும் வீதியில் இறங்கிப் பிரச்சாரம் செய்கிறார். பொதுக்கூட்டத்தைக்கூடக் குறைத்துக்கொண்டு கொஞ்சம் திறந்த வேனில் சாலை வழியாகப் பிரச்சாரம் செய்யலாம் என்று சொல்கிறார்கள் நிர்வாகிகள்.

ஊர் ஊராகப் போகும் உதயநிதி

மேடை எப்படியிருக்க வேண்டும், கூட்டத்தில் என்ன பேச வேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும் என்று ஸ்டாலினுக்குச் சொல்லித்தர தேர்தல் பிரச்சாரத்தையே தொழில்முறையில் மேற்கொள்ளும் நிறுவனங்கள் வழிகாட்டுகின்றன. திமுக மேடை என்றால் நிறைய பேச்சாளர்கள் இருப்பார்கள், தலைவர் வரும் வரையில் ரசிக்க ரசிக்கப் பேசுவார்கள் என்ற மரபை அவர்கள் உடைத்துவிட்டார்கள். தலைமைக் கழகப் பேச்சாளர்களுக்கென பிரச்சாரத் திட்டம் எதையும் கொடுக்கவில்லை திமுக. மாறாக, ஊர் ஊராக ஸ்டாலின் போகாத குறையைப் போக்க, திறந்த வேன் பிரச்சாரத்துக்கு உதயநிதியை அனுப்புகிறார்கள். கட்சிக்காரர்கள் கொண்டாட்டமாக அவரை வரவேற்றாலும் பொதுமக்கள் முகம் சுளிக்கிறார்கள். "ஸ்டாலினுக்கே இன்னும் குடும்ப அரசியல் எனும் குற்றச்சாட்டு நிழலாகத் தொடரும் நிலையில் அடுத்தது உதயநிதியை ஏன் இழுத்துவருகிறார்கள்?" என்ற முணுமுணுப்பைத் தொண்டர்கள் மத்தியிலும் கேட்க முடிகிறது.

இன்றைக்குத் தமிழகத்தில் எந்தத் தலைவருக்கும் கூடாத அளவுக்குத் தனக்குக் கூட்டம் கூடுவதால், மகிழ்ச்சியோடு வலம்வருகிறார் ஸ்டாலின். கூட்டம் ஓட்டுகளாக மாறுமா என்பதைத் தேர்தல் முடிவுகள்தான் சொல்ல வேண்டும்.

கே.கே.மகேஷ்

த ஹிந்து

குறைந்து வருகிறதா தனிமனித ஒழுக்கம்?

ஆண்களிடம், பெண்களை துன்புறுத்தக் கூடாது; தெய்வமாக வணங்க வேண்டும் என்று சொன்னால், ஏற் றுக் கொள்வார்களா? உள்ளுக்குள் அழுக்கை நிரப்பி சமூகத்தில் சான்றோனாய் நடமாடுபவர்கள், அருவெறுக்கத்தக்க செயல்களில் ஈடுபட்டு சமூகத்தையும் அழுக்காக்குகிறார்கள். தனிமனித ஒழுக்க மீறலின் உச்சகட்டம் இது!

2012- டிசம்பர் 16.... உலகை உலுக்கிய மருத்துவ மாணவி நிர்பயா சம்பவம். சென்னை ஹாசினி, காஷ்மீர் ஆசிஃபா, கோவை சிறுமி... இன்னும் கணக்கிலடங்காமல் நீளும் பெண் குழந்தைகள் பட்டியல் ஒருபுறம்... மோகம் கொள்வதாய் நடித்து பெண்களின் உடலை கூறு போட்டு உடலையும் பொருளையும் திருடிய பொள்ளாச்சி அவலங்கள் வெளிச்சத்துக்கு வந்து மறைவதற்குள் மற்றொரு பெண்...

என்ன நடக்கிறது இந்தச் சமூகத்தில்? இதைக் கண்டு உலையில் இட்ட அரிசியாய் கொதிக்கிறோம். அனலில் விழுந்த புழுவெனக் கதறுகிறோம். பேசுகிறோம்.. எழுதுறோம்... பொங்கியெழுகிறோம். அப்படியே அடங்கி விடுகிறோம். அடுத்த நிகழ்வு நடக்கும் போது மீண்டும் பொங்குகிறோம் நம்மால் முடிந்தது அவ்வளவுதானா?

உள்ளங்கையில் உலகம். பெருமையாகத்தான் இருக்கிறது. பெரும்பாலான ஒழுக்க மீறல்களும் இதில்தான் அடங்கியிருக்கிறது. கல்வியும் சுதந்திரமும் பெண்களுக்குத் திகட்டத் திகட்ட கிடைத்துவிட்டது என்று சொல்லும் சமூகம், ஈடாக பெண்களது உடலை பல நிலைகளிலும் கூறு போட்டு ஒழுக்க மீறலை தெளிவாக செய்துகொண்டிருக்கிறது.

ஆண்கள் மத்தியில் பெண்கள் அடக்கி ஆளப்படுகிறார்கள். "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது பெண்களுக்கு மட்டும் என்றே அப்போது போலவே இப்போதைய சமூகமும் வலியுறுத்துகிறது. கற்பை இழந்த பெண்கள் நடைப்பிணங்கள் என்னும் சமூகம் அதை சூறையாடிய ஆண்கள் பிணந்தின்னும் கழுகுகளாய் ஒதுக்கி வைக்க வேண்டியவர்கள் என்பதை வலியுறுத்துவதே இல்லை.

உலகில் 7 நிமிடங்களுக்கு ஒரு பெண், பாலியல் வன்முறை கொடுமைக்கு உள்ளாக்கப்படுகிறாள் என்று அதிர்ச்சி தருகிறது ஆய்வு ஒன்று. 2012 நிர்பயா கொடுமைக்குப் பிறகு பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டது. குற்றங்கள் பதிவு செய்யப்பட்ட பிறகு 2011ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டுக்குள் பாலியல் புகார்கள் 45 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. பெண் என்னும் பிறப்பை உணருவதற்குள் பெண் குழந்தைகள் பாலியல் ரீதியிலான தொல்லைகளை அனுபவிக்கும் நிலைமைக்கு தனிமனித ஒழுக்க மீறலையே முதன்மைக் காரணமாக சொல்லலாம்.

ஒழுக்கம் என்பது

அன்பு, பொறுமை, பக்குவம், கவனம், நிதானம், விவேகம், நேர்மை இவற்றின் மொத்த வடிவம்தான் ஒழுக்கம். அன்று கூட்டுக் குடும்ப வாழ்க்கையில் இவையெல்லாம் இயல்பாகவே கிடைத்தன. இருந்தன. குட்டு வெளிப்படும் முன்பு 'திருட்டு முழி முழிக்கிறியே' என்று சிபிஐ கணக்காக கண்டுபிடித்து குடும்பத் தில் இருப்பவர்களைக் கண்டிக்கும் லகான்கள் பெரியவர்களிடம் இருந்தது.

தவறைக் கண்டித்து ஆலோசனை கூறி கண்காணித்தவர்கள், தடம் மாறும் வயது என்று பதின்ம வயது பிள்ளைகளின் செயல்பாடுகளையும் கவனிக்கத் தவறவில்லை. குடும்பத்திலிருப்பவர்களின் நட்பை பலப்படுத்துவதில் கூட மூத்தோர்களது தலையீடுகள் பாலமென இருந்தது. அதட்டி பேசாமல் அன்பாலேயே கண்டிப்பு காட்டியதால் பிள்ளைகள் ஒழுக்கத்தோடு கண்ணியமாக வளர்ந்தார்கள்.

கல்வி

25 வருடங்களுக்கு முன்பு பள்ளியிலும் ஒழுக்கத்தோடு தொடர்புடைய பாடங்களே பயிற்றுவிக்கப்பட்டன. வாரம் இருமுறை வாழ்க்கைக் கல்வி, நீதி போதனை வகுப்புகள் இருந்தன. சாரணர் இயக்கத்தின் மூலம் மாணாக்கர்கள் இருபாலரும் சகோதரத்துவத்துடன் பழகவும் சமூகத்தில் செயல்படவும் பழக்கினார்கள். கல்விப் பாடங்களை வாழ்க்கைப் பாடத்தோடு தொடர்புபடுத்தி செயல்முறையில் போதித்தார்கள். மதிப்பெண்ணுக்கு மட்டுமே கல்வி என்னும் நிலை அப்போது இல்லை என்பதால் மாணாக்கர்கள் தனி மனித ஒழுக்கத்தோடு வீட்டிலும், சமூகத்திலுமாக சிறப்பாகவே வளர்ந்தார்கள்.

பிளவுப்பட்ட தனிக்குடும்பம்

இன்று பொருளாதாரம், பற்றாக்குறை, பணிச்சுமையில் திணறும் பெரும்பாலான பெற்றோர்கள் குழந்தைகளைக் கவனிக்க நேரமின்றி சுதந்திரமாகவும் விடுகிறார்கள்.. குழந்தைகள் தவறு செய்தாலும் கண்டிப்பு காட்டாமல், வளர்ந்தால் சரியாகிவிடும், போகப்போக சரியாகிரும் என்று தனக்குள் சமாதானம் செய்து கொள்கிறார்கள். விளைவு... பதின்ம வயதில் பெற்றோர்கள் தவறுகளைக் கண்டிப்புடன் சுட்டிக் காட்டும்போது எனக்கு எல்லாம் தெரியும் என்று நிதானமிழந்து, பெற்றோர்களை எதிரிகளாகவே பாவிக்கத் தொடங்குகிறார்கள். கேட்டதெல்லாம் கிடைத்து வளரும் இத்தகைய பிள்ளைகளுக்கு பதின்ம வயதிலேயே பாலியல் தேடுதல் வேட்கையை அதிகரிக்கச் செய்து வழிகாட்டவும் தொடங்கிவிட்டது, தொழில் நுட்பம்..

சமூகத்தில் நடக்கும் அவலங்களைச் சுட்டிகாட்டுகிறேன் என்னும் பெயரில் வரும் திரைப்படங்கள் பெரும்பாலும் ஒழுக்க மீறலை தவறில்லை என்பதாகவே போதிக்கின்றன. ஆன்ட்ராய்டு ஃபோனும், இணைய தளமும் தன் பங்குக்கு பாலியல் வேட்கையைத் தூண்டும் கருவியாக மாறிவிட்டதை, செய்வதறியாமல் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஒழுக்க மீறலின் உச்சகட்டம்:

ஒழுக்க மீறலுக்கு ஹார்மோன் சுரப்பிகளும் காரணம் என்கிறார்கள் ஆய்வாளர்கள். பதின்ம வயது குழந்தைகளை ஹார்மோன்தான் வழிநடத்துகிறது. எதிர்பாலினர் மீது கவர்ச்சியான ஈர்ப்பு இயல்பாக ஏற்படத்தொடங்கும் வயது இது. குழந்தையாகவும் இல்லாமல் பெரியவர்களாகவும் இல்லாமல் தவிக்கும் அவர்களை பெற்றோர்கள் நண்பர்களாக நடத்தினால் மட்டுமே எச்சரிக்கையோடு வயதைக் கடப்பார்கள். பெற்றோர்களின் அன்பு உரிய நேரத்தில் குறையும் போது ஈர்ப்பை எதிர்கொள்ளத் தெரியாமல் முறைதவறிய சகவாசங்கள் அறிமுகமாகின்றன.

பெண்குழந்தைகளுக்கு உண்டாகும் ஈஸ்ட்ரோஜன், பிரஜெஸ்ட்ரோஜன், ஆக்சிடோஸின் ஹார்மோன்களின் சுரப்பை கவனமாகக் கடந்தால் வருங்காலத்தில் பொறுப்புள்ளவர்களாகவும், எதிலும் கூர்மையான அணுகுமுறையையும் பெற்று விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள் உளவியலாளர்கள். ஆனால் தொடுதலின் நோக்கத்தையும் காமப்பார்வையையும் இயல்பாகவே புரிந்து கொள்ளும் அளவுக்கு இயற்கையிலேயே கூர்மை பெற்ற பெண் பிள்ளைகளை அவ்வப்போது பட்டை தீட்டும் பொறுப்பு அம்மாக்களுக்கு உண்டு. இத்தகைய கவனிப்பும் அன்பும் கிடைக்காத பெண் பிள்ளைகள், வெளுத்ததெல்லாம் பால் என்று அன்புக்கு போலி சாயம் பூசிய ஆண்களிடம் ஏமாறுவதுதான் வேதனையளிக்கிறது. வெளியில் பெறும் அதீத அன்புக்காக ஒழுக்க மீறல்கள் தவறில்லை எனும் முடிவுக்கு வந்து விடுகிறார்கள்.

வயதுக்கு வந்த ஆண் மகன்களுக்கு டெஸ்டோஸ்டிரான் ஹார்மோன் பதினெட்டு மடங்கு அதிகமாகச் சுரக்கிறது என்று சொல்கிறது ஆய்வு. மேலும் இந்த நேரத்தில் அவர்களைக் கவனமாக கையாளாவிட்டால் போதைக்கு அடிமையாதல், திருடுதல், பாலியல் உணர்ச்சியை பிறருக்குத் தூண்டுதல், அதிகப்படியான வன்மத்தில் ஈடுபடுதல் என எல்லாவற்றிலும் ஈர்ப்பு ஏற்படுவதோடு தைரியமாக ஈடுபடவும் வைக்கிறது என்கிறார்கள் உளவியல் ஆய்வாளர்கள்.

இந்த அதிகப்படியான சுரப்பி எத்தகைய ரிஸ்க் எடுத்தாலும் பரவாயில்லை என்ன நடக்கிறது என்று பார்த்துவிடலாம் என்னும் தைரியத்தை உண்டாக்கி பெற்றோர்களிடம் அலட்சியமாக நடந்து கொள்ளும் மனப்போக்கைத் தருகிறது என்கிறார்கள் உளவியல் மருத்துவர்கள். இப்படியான பிள்ளைகளுக்கு தேவையானதை வாங்கிக்கொடுக்க பெற்றவர்கள் மெனக்கெடும் போது... உடல் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள உடலின் பாலியல் தூண்டுதலை பூர்த்தி செய்ய அருவெறுக்கத்தக்க செயலில் கேவலமான கொடூரமான செயலில் துணிந்து ஈடுபடுகிறார்கள்.

என்ன செய்யலாம்

ஹார்மோன் படுத்தும் பாட்டால் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று வெளியில் மூர்க்கத்தனமாக பிடிவாதமாக தன்னை காட்டிகொண்டாலும் உள்ளுக்குள் தம்மை புரிந்து அன்பு காட்டும் குடும்பத்துக்குள் இணையவே பதின்ம வயது பிள்ளைகள் விரும்புவார்கள் என்றும் வழிகாட்டுகிறார்கள் உளவியல் நிபுணர் கள். அன்றாடம் பிள்ளைகளிடம் மனம் விட்டு பேசலாம். அவர்கள் சொல்வதை காது கொடுத்துக் கேட்கலாம். பிரச்சினைக்குத் தீர்வு சொல்லும் இடத்தில் நீங்கள் இருந்தால் ஒழுக்கம் மீறுவதற்கு அங்கு வாய்ப்புமில்லை.

தனி மனித ஒழுக்கம் மிக உயர்ந்த பொக்கிஷம் என்பதை இருபாலரும் உணர்ந்துகொள்ள பதின்ம வயதுவரை காத்திருக்கத் தேவையில்லை.. சிறுவயதிலிருந்தே அனைத்திலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க சொல்லிக்கொடுங்கள்.

ஒழுக்கமே உயிரை விட மேலானது என்பதை தாரகமந்திரமாகச் சொல்லிக் கொடுங்கள். ஒரு தலைமுறையே சீராகும். சிறப்பாகும். செம்மையாகும்!

ஜெமினி தனா

அமெரிக்க..

15 ஆம் பக்கத் தொடர்ச்சி

நிலைகளுக்கு அதுவும் உடந்தையாகும். சிறைச்சாலை நெரிசலை வரலாற்றளவில் அதிகரிப்பதற்கு வழி வகுத்த சட்டமசோதாவில் ஜனாதிபதி பில் கிளிண்டன் தான் கையெழுத்திட்டார். 2011 இல் உச்சநீதிமன்றத்தால் 'குரூரமானதாக' மற்றும் 'வழமைக்கு மாறானது"" என்றும் அரசியலமைப்பை மீறுவதாகவும் காணப்பட்ட கலிபோர்னியா சிறைத்துறையை ஜனநாயகக் கட்சியினர் தான் மேற்பார்வையிடுகின்றனர்.

ஜனநாயகக் கட்சியைச் சுற்றியுள்ள சுய-ஆவேசம் கொண்ட உயர்மட்ட நடுத்தர வர்க்க அடுக்குகளுக்கு இது குறித்து எந்த ஆர்வமும் இல்லை. ஊடகங்களிலும் கல்வித்துறையிலும் Me Too பிரச்சாரத்தை ஊக்குவிப்பவர்கள் அமெரிக்க சிறைச்சாலைகளின் பாலியியல் வன்முறை குறித்து எதுவும் கூறுவதில்லை, அல்லது அமெரிக்காவுக்குத் தப்பி வருகின்ற புலம்பெயர்ந்தவர்கள் மீது சுமத்தப்படும் வன்முறை குறித்தும் ஒன்றும் கூறுவதில்லை.

பெரும்பாலான இரவு நேர செய்தி நிகழ்ச்சிகளில் எந்த செய்தியும் இல்லாமல், ஊடகங்களோ முடிந்தளவுக்கு மிகக் குறைந்த செய்திகளையே வெளியிட்டுள்ளன. அபு கிஹ்ரைப் துஷ்பிரயோக புகைப்படங்கள் மற்றும் சிஐஏ சித்திரவதைக் குறித்த செனட் அறிக்கை ஆகியவற்றைப் போலவே, அலபாமாவில் என்ன நடந்து வருகிறதோ அந்த தகவல்களையும் மறைப்பதற்கான முயற்சி நடக்கிறது. நியூ யோர்க் டைம்ஸூம் ஏனைய ஊடக நிறுவனங்களும் துஷ்பிரயோகம் மற்றும் உயிரிழப்புகளை ஆவணப்படுத்துகின்ற பெரும்பாலான புகைப்படங்களை பிரசுரிப்பதில்லை என்று முடிவெடுத்துள்ளன.

முடிவாக பார்த்தால், இதுவே அவர்களின் நிலையும். அமெரிக்க சிறைச்சாலைகளின் நிலைமைகள், மற்றும் ஒட்டுமொத்தமாக வன்முறை எந்திரமானது, அமெரிக்க 'ஜனநாயகத்தின்' யதார்த்தத்திற்கு ஓர் இழிவார்ந்த வெளிப்பாடாகும். அரசு எந்திரமானது நிதி மூலதனத்தின் கோரிக்கைகளுக்கு சமூக மற்றும் அரசியல் எதிர்ப்பை ஒடுக்குவதற்காக பயன்படுத்தப்படும். இது தான் அமெரிக்க முதலாளித்துவத்தின் நிஜமான முகம்.

நன்றி: உலக சோசலிச இணையத்தளம்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 14.04.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

‘நாட்டிற்காக ஒன்றிணைவோம்’ மூலம் பல வேலைத்திட்டங்கள் மட்டக்களப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் ‘நாட்டிற்காக ஒன்றினைவோம்’ என்ற தேசிய திட்டத்திற்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன ஜனாதிபதி செயலகம் , மாகாண சபைகள் , அதிகார சபைகள் , வரிசை அமைச்சுக்கள் , திணைக்களங்கள் , ஆகியவற்றின் நிதிக்கொடுப்பனவின் கீழேயே இந்த செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன அதனடிப்படையில் ஒட்டு மொத்தமாக 200ஞீ5 மில்லியன் செலவில் 1115 வேலைத்திட்டங்கள் 14 பிரதேச பிரிவுகளிலும் 161 கிராம பிரிவுகளிலும் 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

அதனடிப்படையில் முதல் மூன்று நாட்களுக்கும் செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் அடிப்படையில் 712 மில்லியன் ரூபா செலவுசெய்யப்பட்டு 845 திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன 20 904 குடும்பங்கள் இதனால் நன்மையடைந்துள்ளன.

அதிகபட்சமாக மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச செயலக பிரிவுகளில் 120 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு 415 மில்லியன் ரூபா செலவுசெய்யப்பட்டுள்ளது

மேலும் இன்றும் நடைபெறவுள்ள திட்டங்களுடன் சேர்த்து இந்த எண்ணிக்கைகளில் மாற்றங்கள் ஏற்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தில் விசேடமாக ஓய்வூதியக்காரர்களுக்கான பிரச்சனைகள் , சிறுவர் மற்றும் முதியோர் சம்பந்தமான பல பிரச்சனைகளுக்கு தீர்வுகள் வழங்கப்பட்டன அது மட்டுமல்லாது வாகன சாரதி அனுமதிப்பத்திரங்கள் அது தொடர்பான வேலைகள் மற்றும் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வுகள் கடவுச்சீட்டு பெற்றுக்கொடுப்பதற்கான துரித சேவைகள் ஆகியன வழங்கப்பட்டு வருகின்றன அதேபோன்று காணி ஆணையாளர் திணைக்களத்தினால் உறுதிப்பத்திரங்கள் வழங்கும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பாடசாலை மாவர்களுக்கான விசேட வேலைத்திட்டமாக பாடசாலையை கைவிட்ட மாணவர்களின் கல்வியினை மீண்டும் தொடர்வதற்கு சேர் ஜோன் கொத்தலாவல இராணுவ பல்கலைக்கழகத்தில் பலவிதமான கல்வித்திட்டங்களில் இணைக்கும் வகையிலான செயற்திட்டம் , விவசாய அமைச்சுடனான விதை உள்ளீடுகள் , உரச்செயலகத்தின் பணிகள் , மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மது மற்றும் போதைப்பொருளுக்கு எதிரான வேலைத்திட்டங்கள் , டெங்கு வேலைத்திட்டம் , பொலிசாரின் சிரமதான நிகழ்ச்சி நிரல்கள் என சமூக நலன் கருதிய பல நிகழ்ச்சி திட்டங்களும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களுக்கான வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் ‘நாட்டிற்காக ஒன்றினைவோம்’ என்ற தேசிய திட்டத்திற்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன அதனடிப்படையில் ‘சிறுவர்களை காப்போம்’ என்ற தேசிய எண்ணக்கருவிற்கு அமைவாக ஜனாதிபதி செயலகத்தினால் ‘எதிர்காலத்தை வெற்றி கொள்ளும் பிள்ளைகள்’ என்ற தொனிப்பொருளில் ஆளுமை விருத்தி செயலமர்வு ஒன்று மண்முனை வடக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சிறுவர்களை போதைப்பொருள் பாவனைகளில் இருந்து காப்பாற்றுதல் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எதிர்காலத்தை இலகுவாக்கி கொள்ளுதல் சிறுவர்களின் தேவைகளை அறிந்து அவற்றை வழங்குதல் உள ரீதியாக சிறுவர்களை பாதுகாத்தல் போன்ற பல விடயங்கள் சம்பந்தமாக இங்கு விரிவுரைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா பாராளுமன்ற உறுப்பினர்களான சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் சீனித்தம்பி யோகேஸ்வரன் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார் மாகாண கல்விப்பணிப்பாளர் எம்.கே.எம் மன்சூர் ஜனாதிபதி செயலக உதவிப்பணிப்பாளர் அருணிலி சோமரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர் மேலும் பாடசாலை அதிபர்கள் வலயக்கல்வி அலுவலர்கள் சிறுவர் உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

போதை பொருள் பாவனைக்கு அடிமையாகின்றவர்களில் கூடுதலான வீதத்தினர் இளைய சமுதாயத்தினரே

களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரெத்தினம் தெரிவிப்பு

க.விஜயரெத்தினம்

போதை பொருள் பாவனைக்கு அடிமையாகின்றவர்களில் கூடுதலான வீதத்தினர் இளைய சமுதாயத்தினரே காணப்படுகின்றனர்.வீட்டிலே சரியான பாதுகாப்பு, கண்காணிப்பு என்பன கிடைக்குமாக இருந்தால் நிற்சயமாக அந்த குழந்தை இவ்வாறான நடவடிக்கைகளுக்கு துணை போகாது என மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம் தெரிவித்தார்.

நாட்டிற்காக ஒன்றிணைவேம் எனும் ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் சமூக அபிவிருத்தி மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த து.மகிழூர்,ஒந்தாச்சிமடம்போன்ற கிராமங்களில் 46 மாணவர்கள் இடைவிலகியிருந்தார்கள்.இவ்வாறு இடை விலகியவர்களை மீள பாடசாலைக்கு இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.இவ்வாறு இடைவிலகிய பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு சமுர்த்தி திட்ட முகாமைத்துவ பணிப்பாளர் கே.உதயகுமார் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்:-

சிறுவர்கள்தான் இந்த நாட்டின் நாளைய தலைவர்கள்.நீங்கள் பலமாக இருக்க வேண்டும். இதற்கு பெற்றோர்கள் மிகவும் உறுதுணையாக இருக்க வேண்டும்.பாடசாலையில் இருந்து இடைவிலகிய மாணவர்களை மீள இணைக்கின்ற பொழுது பல பிரச்சினையாக எழுகின்றது. அதாவது இவர்கள் குறித்த வகுப்பில் மெல்லக்கற்கும் மாணவர்களாகவே காணப்படுகின்றனர்.

அன்பான பெற்றோர்களே உங்களது பிள்ளைகள் கல்வியில் மேம்படவில்லையென்றால் சமூதாயம் உங்களை ஒதுக்கி வைக்கின்றவர்களாவே காணப்படுவீர்கள்.ஒரு குழந்தையின் எதிர்காலத்தை பாதிக்கின்ற இந்த பாதகமான செயற்பாட்டுக்கு பெற்றோர் என்ற வகையில் நீங்கள் துணைபோகக்கூடாது. எந்த குழந்தையும் கல்வி அறிவில் மேம்பட்ட குழந்தையாக பிறப்பதில்லை.பொற்றோரின் பங்களிப்பு மூலமே அது சிறந்து விளங்குகின்றது. நீங்கள் உங்களது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி சிறந்த கல்வியினை பெற வேண்டும் என நினைத்தால் மாத்திரமே உங்களது குழந்தை கல்வியில் சிறந்து விளங்கும். இதனை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று மிகவும் கவலைக்குரிய விடயமாக காணப்படுவது என்னவெனில் போதை பொருள் பாவனைக்கு அடிமையாகின்றவர்களில் கூடுதலான வீதத்தினர் இளைய சமுதாயத்தினராக காணப்படுகின்றனர். இதற்கு குறிப்பாக வீட்டிலே இருந்து சரியான பாதுகாப்பு கண்காணிப்பு என்பன கிடைக்குமாக இருந்தால் நிற்சயமாக அந்த குழந்தை இவ்வாறான நடவடிக்கைகளுக்கு துணைபோகாது என்பது உண்மையான விடயமாகும். எனவே இந்த விடயத்தில் ஏனையோரை குற்றம்சாட்டுவதை விடுத்து பெற்றோராகிய உங்களுக்கு இருக்கின்ற குழந்தைகளை சமூகத்திற்க பொருத்தமானவர்களாக வளர்த்தெடுக்கும் கடடைமை உங்களுடையதாகும்.

எனவே அன்பான மாணவர்களே நீங்கள் பெரிய தொழில்களில் சிறந்து விளங்குவதற்கு கற்கவேண்டும் என்று நான் கூறவில்லை.நீங்கள் சமூகத்தில் சிறந்த மனிதர்களாக வாழ்வதற்காவேனும் நீங்கள் கற்கவேண்டும். இதனால்தான் கூறுகின்றேன் கல்வி மாத்திரம் தங்களுக்கு கிடைக்க வேண்டும் என்று பாடசாலைக்கு செல்லுங்கள் என நான் கேட்க்கவில்லை.நல்ல ஒழுக்கமுள்ள மாணவர்களாக, சிறந்த மாணவர்களாக உங்களால் எதிர்காலத்தில் ஒரு தொழிலினை பெற்றுக்கொள்ள கூடிய மாணவர்களாக நீங்கள் மாறுவதே இந்த சமூதாயத்திற்கு நீங்கள் செய்யும் மிகப்பெரிய உதவியாகும் என தெரிவித்தார்.

அபிவிருத்தி சார்ந்த வேலைத்திட்டங்கள் மக்களுக்கு இன்றியமையாதது

செட்டிபாளையம் நிருபர்

உரிமைசார்ந்த போராட்டத்திற்கு இணையாக அபிவிருத்திசார்ந்த வேலைத்திட்டங்களை சமாந்தரமாக கொண்டுசெல்ல வேண்டும். அவ்வாறு கொண்டு சென்றால் தான் பாதிக்கப்பட்ட, அழிந்து போயிருக்கின்ற இக்கிராமங்களை மீளவும் கட்டியெழுப்ப முடியும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன் தெரிவித்தார்.

நாட்டிற்காக ஒன்றிணைவோம் ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தின் கீழ், உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, தாந்தாமலை கிராமத்தில் உள்ள மக்களுக்கு நிலக்கடலை வழங்கி வைக்கும் நிகழ்வு நடைபெற்ற போதே இதனைக்குறிப்பிட்டார்.

பிரதேச செயலாளர் தெட்சணகௌரி தினேஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், திணைக்களம்சார் உயர் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்ந்தும் அங்கு, உரையாற்றுகையில்,

தாந்தாமலை கிராமம் தாந்தாமலை முருகனை கொண்ட பிரசித்திபெற்ற கிராமம். ஆனால் இங்கு பல்வேறு பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டிய நிலையிருக்கின்றது. வீதிகள் தொடக்கம் அனைத்து விடயங்களிலும் முன்னேற்றத்தினை ஏற்படுத்த வேண்டும்.

இங்குள்ள தேவை மலைபோல் இருக்கின்றது. இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமாகவிருந்தால் நாங்கள் முன்னெடுக்கின்ற உரிமைசார்ந்த வேலைத்திட்டம் உரிமைசார்ந்த போராட்டத்திற்கு இணையாக அபிவிருத்திசார்ந்த வேலைத்திட்டங்களை சமாந்தரமாக கொண்டுசெல்ல வேண்டும். அவ்வாறு கொண்டு சென்றால் தான் பாதிக்கப்பட்ட, அழிந்து போயிருக்கின்ற இக்கிராமங்களை மீளவும் கட்டியெழுப்ப முடியும்.

இல்லாவிட்டால் இன்னும் 10வருடங்கள் அல்ல இன்னும் 100வருடங்கள் சென்றாலும் எமது கிராமங்கள் இவ்வாறேதான் காட்சியளிக்கும்.

ஆகவே உரிமைசார்ந்த போராட்டத்திற்கு இணையாக அபிவிருத்திசார்ந்த வேலைத்திட்டங்களையும் சமாந்தரமாக கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் இவ்வாறான செயற்றிட்டங்களை ஜனாதிபதியுடன் பேசி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றோம்.

கிராமசக்தியில் இக்கிராமம் உள்வாங்கப்பட்டுள்ளது.

அடுத்துவருகின்ற வாரம் இக்கிராமத்திலே ஒருவாரம் தங்கியிருந்து இக்கிராமத்தின் பல்வேறு தேவைகளை அறிந்து அவற்றினை தீர்ப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 161கிராமங்களில் கிராமசக்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதேபோன்று, எங்களுக்கு தேவையானதை நாமே உருவாக்குவோம் எனும் தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்போம் நிகழ்ச்சித்திட்டம் நாடளாரீதியில் முன்னெடுக்கப்படுகின்றது. போதைப்பொருள் பாவனையில் இலங்கை மோசமான நிலைக்கு செல்கின்றது.

பாடசாலை மாணவர்களுக்கு கூட போதைப்பொருளை விநியோகிக்கின்ற செயற்பாடுகளும் நடைபெறுகின்றன.

போதைப்பொருளுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தூக்குத்தண்டணை கொடுக்க வேண்டுமென ஜனாதிபதி தீர்மானித்து அதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றார்.இந்த நாடு போதையற்ற சிறந்த நாடாக மிளிரவேண்டும்.

மக்களுக்கு அறிவித்தல்

மண்டூர் நிருபர்

நாட்டில் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டு வரும் மின்சார தடைக்கு மத்தியிலும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளர் அலுவலகம் தனது பாவனையாளர்களுக்கான நீர் விநியோகத்தினை தொடர்ச்சியாக வழங்கிவருகின்றது. எனினும் நீரினை சேமித்துவைத்து விரையமின்றி பாவனை செய்யுமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்வதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

வாகரை வட்டவான் கடற்கரை துப்பரவாக்கல்

எஸ்.எம்.எம்.முர்ஷித்

நாட்டுக்காக ஒன்றினைவோம் என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி செயலகத்தின் ஒருங்கிணைந்த அபிவிருத்தி வேலைத் திட்டத்தினை முன்னிட்டு கடற்கரை சுத்திகரிப்பு வேலைத்திட்டம் வாகரை பிரதேசத்தின் வட்டவான் கடற்கரையில் பிரதேச செயலாளர் எஸ்.கரன் தலைமையில் நடைபெற்றது.

சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் சமூர்த்தி திணைக்களத்தின் வழிகாட்டலினால் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலக சமூர்த்திப் பிரிவு இவ் செயல் திட்டத்தினை முன்னெடுத்து நடாத்தியது.

வாகரை பிரதேசத்தின் வட்டவான் கடற்கரையை அண்டியுள்ள பொதுமக்கள், ஆலய நிர்வாகத்தினர், கிராம அபிவிருத்தி சங்கங்கள், மக்கள் சக்தி அமைப்பினர் மற்றும் பிரதேசத்தின் கடற்படையினர் இணைந்து கடற்கரையில் காணப்பட்ட பிளாஸ்ரிக் பொருட்க்கள், உக்கக் கூடடிய மற்றும் உக்காத கழிவுப் பொருட்க்களை அகற்றி சுத்திகரிப்பு வேலைத்திட்டத்தில் ஈடுபட்டனர்.

அனைத்து முகாமைத்துவ உதவியாளர்கள் தொழிற் சங்கத்தின் மீஉயர்பீடம் தெரிவு

உ.உதயகாந்த்

அனைத்து முகாமைத்துவ உதவியாளர்கள் தொழிற் சங்கத்தின், வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த (2019.04.06) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மீஉயர் பீட உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவாகினர்.

ஏ.ஜீ.முபாறக் மீண்டும் தலைவராக தெரிவு செய்யப்பட்டதுடன், தவிசாளராக ஏ.எல்.எம்.இஸ்மாயில் அவர்களும், செயலாளர் நாயகமாக வீ.பற்குணன் அவர்களும், பொருளாளராக யூ.எல்.எம்.ஜஃபர் அவர்களும் தேசிய அமைப்பாளராக ரீ.ரகுராஜ் அவர்களும், வெளிக்கள நடவடிக்கைகளுக்கான செயலாளராக எஸ்.எல்.சாதிக் அவர்களும், உள்ளக செயற்பாடுகளுக்கான செயலாளராக எஸ்.சுபராஜ் அவர்களும், ஊடக செயலாளராக யூ.உதயகாந்த் அவர்களும், பிரதி தலைவராக எஸ்.திவாகரன் அவர்களும், உதவிச் செயலாளராக சியாமா மர்சுக் அவர்களும், துணைப் பொருளாளராக எம்.என்.எம்.பாஜில் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன், எம்.ஏ.றகீம், எச்.எம்.பதுர்தீன், கே.சண்முகராஜா, எஸ்.யோகேஸ்வரன், எம்.என்.எம்.பதுர்தீன், எஸ்.ஏ.சில்வஸ்ரர், பீ.கோகுலரமணன், எம்.பாத்திமா சியானா, வீ.குணேந்திரராஜா, எம்.எஸ்.ஐனுல் றிசானா, வீ.கதிரமலை, திருமதி ரீ.சந்திரமோகன், ஆர்.சந்ராதேவி, முபீனா பைசல் அமான், திருமதி. குமுதா தாஸ்கரன் ஆகியோர் உயர்பீட உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் மாவட்டங்களுக்கான மாவட்ட செயலாளர்கள், மாவட்ட இணைப்பாளர்கள், மாவட்ட பிரச்சார செயலாளர்களும் பதவி வழியாக மீஉயர் பீடத்தில் இணைந்து கொள்வர். அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஏற்கனவே, செயலாளராக தெரிவான ஜாயிதா ஜலால்தீன், இணைப்பாளராக தெரிவான எஸ்.நவநீதன், பிரச்சார செயலாளராக தெரிவு செய்யப்பட்ட எம்.எம்.எம்.பாயிஸ் ஆகியோரும் இணைந்துகொள்கின்றனர்.

ஏனைய அம்பாறை திருகோணமலை மாவட்டங்களுக்கான மேற்குறிப்பிட்ட பதவிகளுக்குரியவர்கள் இதுவரை தெரிவு செய்யப்படவில்லை என்பதுடன் விரைவில் தெரிவுகள் இடம்பெறும் என்றும், அவர்கள் தெரிவானதும், சங்கத்தின் உயர்பீடத்தில் இணைந்து கொள்வர் எனவும் தெரிவிக்கப்பட்டது. மீஉயர் பீட உறுப்பினர்களின் எண்ணிக்கை இருபத்து மூன்றில் இருந்து முப்பத்தேழாக உயர்ந்துள்ளது. இது தொடர்பில் தலைவர், சங்கம் வளர்ச்சியடைந்து வந்துள்ளமையினால் இவ்வாறான அதிகரிப்புக்கள் அவசியமாகின்றது எனத் தெரிவித்தார்.

இத்தெரிவுகள் எதுவும் வாக்கெடுப்புகள் எதுவுமின்றி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டமை ஒரு விசேட அம்சமாகும்.

தேற்றாத்தீவு கொம்புச் சந்திப்பிள்ளையார் ஆலய கொடியேற்றம்

மட்டக்களப்பு தேற்றாத்தீவு கொம்புச்சந்திப்பிள்ளையார் கொடியேற்றமானது (10.04.2019 புதன் கிழமை காலை செட்டிபாளையம் மாங்காடு கட்டுப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து மாட்டு வண்டிலில் கொடி சிலை எடுத்து வரும் நிகழ்வுடன் ஆரம்பிக்கப்பட்டு ஆரம்பம்மானது.

கொடிச்சிலை ஆலயத்தை வந்தடைந்ததும் கொடியேற்றத்திற்கான கிரிகைகள் ஆரம்பம்மானது. அதனை தொடர்ந்து காலை 11.30 ஒரு மணியளவில் தேற்றாத்தீவு கொம்புச்சந்திப்பிள்ளையாரன் பிரமோற்சவத்திற்கான கொடியேற்றம் இடம் பெற்றது.

இவ் கொடியேற்ற நிகழ்வினை ஆலய பிரதமகுரு. க.கு.மோஹனாந்த குருக்கள் நிகழ்த்தி வைத்தார்.இவ் கொடியேற்ற நிகழ்வில் கலந்து கொள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பல பொதுமக்கள் கலந்து கொண்டனர். எதிர்வரும் சித்திரா பௌணமியன்று தீர்த்தஉற்சவத்துடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடதக்கவிடயம்.

கொல்லநுலைப் பாடசாலையில் யோகாசன நிகழ்வு

படுவான்கரை நிருபர்

'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' ஜனாதிபதியின் வேலைத்திட்டத்திற்கிணங்க, மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் யோகாசன நிகழ்வு புதன்கிழமை இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் சா.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் சி.சிறீதரன், கணக்காளர் ஏ.சிவகுமார், கோட்டக்கல்விப் பணிப்பாளர்களான முருகேசபிள்ளை, ந.தயாசீலன் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது, மாணவர்கள் யோகாசனப் பயிற்சிகளில் ஈடுபட்டதுடன், யோகாசனம் தொடர்பிலும் கருத்துக்களை முன்வைத்தனர். மேலும் குழுமுறையிலான யோகாசன காட்சிகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

காணிகளுக்கு உறுதிப் பத்திரங்கள் வழங்குவதற்கான ஆரம்ப நிகழ்வு

ஹஸ்பர் ஏ ஹலீம்

சுமார் முப்பது வருடத்திற்கு மேலாக காணப்பட்ட கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகளில் உள்ள குடியிருப்பாளர்களுக்கான காணி உறுதிப் பத்திரங்கள் வழங்குவதற்கான ஆரம்ப நிகழ்வு கிண்ணியா அல் அதான் பாடசாலையில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வானது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் துறை முகங்கள் மற்றும் கப்பற் துறை பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் அவர்களின் விசேட அழைப்பின் பேரிலும் காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் தவிசாளர் ஸ்ரீமெவன் டயஷ் தலைமையிலும் இடம் பெற்றது.

ஆரம்ப கட்ட உறுதிப் பத்திரம் வழங்கும் வைபவத்தில் கிண்ணியா மஹ்ரூப் நகர், பைசல் நகர், அண்ணல் நகர் உள்ளிட்ட பிரதேசங்களை சேர்ந்த 500 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தவிசாளர் ஸ்ரீமெவன் டயஷ், பணிப்பாளர் என். விமல்ராஜ், கிண்ணியா நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.நளீம், பிரதி தவிசாளர் ஐயூப் நளீம் சப்ரீன், திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எம்.ஏ.அனஸ், கிண்ணியா நகர சபை உறுப்பினர்களான எம்.எம்.மஹ்தி, எம்.டீ.ஹரீஸ்,கலீபத்துள்ளா, கிண்ணியா பிரதேச காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அதிகாரிகள்,கிராம அதிகாரிகள், பயனாளிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டார்கள்.

தெளிவு படுத்தும் கருத்தரங்கு

கந்தளாய் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளால் வலயக் கல்வி அலுவலத்தினால் கிழக்கு மாகாண, மாகாண பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரிய பற்றாக்குறையை தீர்ப்பதற்காக பட்டதாரி பயிலுனர்கள் மற்றும் ஆசிரிய உதவியாளர்களுக்கு விண்ணப்பித்தவர்களை தெளிவு படுத்தும் கருத்தரங்கு கந்தளாய் ஆயீஷா மகளீர் மகாவித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் கந்தளாய் வலயக் கல்வி தமிழ் மொழிப் பகுதிக்கு பொறுப்பான அதிகாரி எம்.ரீ.எம்.தாரீக் மௌலவி(நளிமி) தலைமையில் நடைபெற்றது.

கந்தளாய் வலயத்தில் சுமார் 25 ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுவதோடு,விண்ணப்பிக்கும் போது அவதானத்துடன் விண்ணப்பிக்குமாறும் கல்வி அதிகாரிகளினால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதில் அறுபதிற்கும் மேற்பட்ட பட்டதாரி மற்றும் ஆசிரிய உதவியாளர் பதவிகளுக்கு விண்ணப்பித்த மற்றும் விண்ணப்பிக்க உள்ளவர்கள் கலந்து கொண்டார்கள்.

கல்முனை நகர மண்டபத்தை பொது நிகழ்வுகளுக்கு வழங்க நடவடிக்கை

சாய்ந்தமருது நிருபர்

கல்முனை நகர மண்டபத்தை பொது நிகழ்வுகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கருத்தரங்குகள், கூட்டங்கள் உள்ளிட்ட பொது நிகழ்வுகளுக்காக இந்த நகர மண்டபம் கல்முனை மாநகர சபையினால் பொது மக்களுக்கு வாடகைக்கு வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்காக மாநகர சபையின் கணக்காளர் ஊடாக மாநகர ஆணையாளரின் அனுமதியை முன்கூட்டி பெற்றுக் கொள்ள வேண்டும்.

கடந்த சில வருடங்களாக இந்த நகர மண்டபம் ஒரு தனியார் நிறுவனத்தின் பாவனைக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில் கல்முனை மாநகர முதல்வராக சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் பதவியேற்றத்தைத் தொடர்ந்து பொது மக்கள் விடுத்த வேண்டுகோளின் பேரில் அந்நிறுவனத்திடமிருந்து குறித்த கால அவகாசத்தில் நகர மண்டபம் மீளப் பெறப்பட்டு, அது புனரமைப்பு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டத்திற்கு காணி ஆவணம் வழங்க கலந்துரையாடல்

தோப்பூர் நிருபர்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மக்களுக்குஅவர்கள் பராமரிக்கும் வதியும் அரச காணிகளுக்கான காணி ஆவணங்களை முறையாக பெற்றுக்கொடுப்பது தொடர்பாக பிரதேச செயலகங்களில் காணிக்கடமைகளை மேற்கொள்ளும் காணி வெளிக்கள அலுவலர்களுடனான கலந்துரையாடல் கிழக்கு மாகாண காணி ஆணையாளர் டீடீ.அனுரதர்மதாச தலைமையில் திருகோணமலை காணி நிருவாக திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது

இதன்போது கடந்த 2018 ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட. காணி வேலைகளின் முன்னேற்றம் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் பணியுரியும் கிழக்கு மாகாண காணி நிருவாக திணைக்களத்தினுடைய காணி வெளிக்கள அலுவலர்கள் காணி உத்தியோகத்தர்கள் குடியேற்ற உத்தியோகத்தர்கள் ஆகிகியோர் சமுகமளித்திருந்தனர்

இதன்போது இவ் வாண்டு முன்னெடுக்கப்படவுள் வேலைத் திட்டம் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உட்படுத்தல் விளையாட்டுப் போட்டி-2019

மருதமுனை நிருபர் றாசிக் நபாயிஸ்

மருதமுனை, ஹியுமன் லின்ங் வளப்படுத்தல் நிலைய மாணவர்களின் 2019ஆம் ஆண்டுக்கான உட்படுத்தல் விளையாட்டுப் போட்டி கல்முனை, உவெஸ்லி உயர்தர பாடசாலை விளையாட்டு மைதானத்தில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

திருமலையில் நூல் அறிமுகம்

நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் ராணி சீதரனின் 'புறங்கைச் சுமை'கட்டுரை நூல் அறிமுக விழாவும், நீங்களும் எழுதலாம் 25 வது கவிதையிதழ் வெளியீட்டு விழாவும், மூத்த எழுத்தாளர் ஷெல்லிதாசன் கௌரவிப்பு நிகழ்வும் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் 07-04-2019 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஊடகவியலாளர் திருமலை நவம் தலைமையில் இடம் பெற்றது.

2018ஆம் ஆண்டிற்கான கிழக்கு மாகாண மட்டத்தில் நோயாளிகளின் இலத்திரனியல் தரவுபடுத்தல் திட்டத்திற்கான விருது அம்பாறை, மத்திய முகாம் பிரதேச வைத்தியசாலைக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இதனை முன்னிட்டு அதன் வைத்திய அதிகாரி டாக்டர் நுவான் குமார தலைமையில் அவ்வைத்தியசாலையில் பாராட்டு விழா ஒன்று நடைபெற்றது. இதன்போது தலைமை தாதிய உத்தியோகத்தரும் வைத்தியசாலையின் இலத்திரனியல் தரவுபடுத்தல் பிரிவின் பொறுப்பாளருமான யு.எம்.ஏ.ஜின்னா பாராட்டி கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் வைத்தியர்கள் சிலரும் கலந்து கொண்டிருப்பதை இங்கு காணலாம்.

படம்: சாய்ந்தமருது நிருபர்

க.பொ.த சாதாரணதர பெறுபேறு மகிளூர்முனை சக்தி வித்தியாலயத்தின் திருப்புமுனை

பெரியகல்லாறு நிருபர்

அண்மையில் வெளியான க.பொ.த சாதாரணதர பரீட்சையில் பட்டிருப்பு கல்வி வலயத்தில் மகிளூர்முனை சக்தி வித்தியாலயம், வலயத்திள்உள்ள 40 பாடசாலைகளில் முன்னிலை பெற்ற பாடசாலைகளில் ஒன்றாக கணிப்பிடப்பட்டுள்ளது. இப்பரீட்சைக்கு தோற்றிய 12மாணவர்களில் 11 மாணவர்கள் க.பொ.த உயர்தரம் கற்பதற்கான தகுதியை பெற்று வித்தியாலய வரலாற்றில் ஒரு திருப்புமனையை ஏற்படுத்தி பாடசாலைக்கும் பட்டிருப்பு கல்வி வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். கணித பாடத்துடன் 92வீதம் சித்தி பெற்று முன்னிலைபெறு பேற்றை அடைந்துள்ளது

வித்தியாலத்தின் அதி சிறந்த பெறுபேறாக சிவகுமார் மிதுஷா. 7ஏபிசி பெறுபேற்றையும் கனிஸ்ரன் தீபிகா 5ஏ4பி பெறபேற்றைப்பெற்றுள்ளனர்.

தமிழ், விஞ்ஞானம் சமயம் குடியியற்கல்வி. சித்திரம், இலக்கியநயம் விவசாயம் போன்ற பாடங்களில் 100வீத சித்தியும் வரலாறு மற்றும்கணித பாடங்களில் 92வீத சித்தியும் ஆங்கிலத்தில் 84.6வீதமும் சித்தி பெற்று பாடசாலையின் அடைவு மட்டத்தை உயர்த்தியுள்ளனர்.

வலய கல்விப் பணிமனைக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் ஒத்துழைப்பளித்த பெற்றோருக்கும் வித்தியாலயத்தின் அதிபர் ரி.தேவராஜாதனத நன்றியைத் தெரவித்துள்ளார்.

பொத்துவிலில் கடமையாற்றும் வெளியூர் ஆசிரியர்களின் ஆவணங்களை துரிதப்படுத்தக் கோரல்

மருதமுனை நிருபர் றாசிக் நபாயிஸ்

பொத்துவில் கல்வி வலயத்தில் வெளியூர்களில் இருந்து சுமார் 135 ஆசிரியர்கள் கடமை புரிகின்றார்கள். பொத்துவில் வலயக்கல்வி அலுவலகத்தில் கடமையாற்றி வந்த குறித்த இலிகிதர் பிரதேச சபைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

அதனால் ஆசியர்களின் பதவியுர்வுகள், இடமாற்றம், சம்பள உயர்ச்சி இது போன்ற வேலைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருக்கிறது.

எனவே இவ்வாறான குறைபாடுகளை விரைவாக நிறைவு செய்து தருமாறு 'தேசிய சேராபிஸ்ட் ஆசிரியர் சங்கம்' வலயக் கல்வி அதிகாரியை வினயமாக வேண்டிக்கொள்கிறது.

காரைதீவு ரீம் பார்க் பாடசாலையினால் நடத்தப்பட்ட சிறுவர் சந்தை நிகழ்வு அண்மையில் பாடசாலைப் பொறுப்பாசிரியை திலகமணிதலைமையில் இடம்பெற்றது இதற்கு அதிதிகளாக காரைதீவுப் பிரதேச செயலாளர் வே.ஜெகதீசன் மக்கள் வங்கி முகாமையாளர் தி.உமாசங்கரன்மற்றும் பலர் கலந்துகொண்டனர். அதிதிகள் சிறுவர் சந்தையினைப் பார்வையிடுவதனையும் சிறுவர்கள் வியாபாரிகளாக வியாபாரம்செய்வதனையும் படங்களில் காணலாம்.

படம்: கரடித்தோட்ட நிருபர்

15ஆம் கொலனி விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் சாதனையாளர் கௌரவிப்பு விழா

எம்.எம்.ஜபீர்

நாவிதன்வெளி 15ஆம் கொளனி விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் சாதனையாளர் கௌரவிப்பு விழா அதிபர் கே.பேரானந்தம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன்போது 2017,2018ஆம் ஆண்டுகளில் தேசிய மற்றும் மாகாண ரீதியில் சாதனை படைத்தவர்கள், பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர்கள், கல்வி கல்லூரிக்கு தெரிவானவர்கள், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், கா.பொ.த.சாதாரண தரத்தில் சிறந்த பெறுபெற்றவர்கள் என பாடசாலையில் சாதனை படைத்த 42 மாணவர்கள் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதில் நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் ரீ.கலையரசன், சம்மாந்துறை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.சஹூதுல் நஜீம், கல்முனை மாநகர சபை உறுப்பினர் பொன்.செல்வநாயகம், நாவிதன்வெளி கோட்டக் கல்வி பணிப்பாளர் எஸ்.சரவணமுத்து, சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் கே.அற்புதராஜா, பிரதி அதிபர் எஸ்.சாமிதம்பி, ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்கள், பெற்றோர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

அல்-ஹிக்மதுல் உம்மா பவுண்டேஷனினால் முள்ளிப்பொத்தானை பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்திற்கு குடிநீர் தளம்

முள்ளிப்பொத்தானை நிருபர்

அல்-ஹிக்மதுல் உம்மா பவுண்டேஷன் நிறுவனத்தினால் முள்ளிப்பொத்தானை பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்திற்கு குடிநீர் தளம் அல்-ஹிக்மதுல் உம்மா பவுண்டேஷன் பணிப்பாளர் .பாதிஹ் ஹஸ்ஸாலி மற்றும் திட்ட இணைப்பாளர் திரு.ஏ.எச்.எம்.ஸித்தீக் மௌலவி அவர்களினாலும் பாடசாலை மாணவர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் .ஏ.ஆர்.சாதிக்கீன், பிரதி அதிபர் .எஸ்.ஏ.றம்ஷி மற்றும் ஆசிரிய, ஆசிரியைகளும் கலந்துசிறப்பித்தனர்.

உணவகங்களின் வேலையாட்களுக்கு மருத்துவ பரிசோதனை

கந்தளாய் நிருபர்

தேசிய உணவு பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு மூதூர் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட தோப்பூர் பிரதேசத்திலுள்ள உணவகங்களில் வேலையாட்களாக கடமை புரிவோருக்கான வைத்திய பரிசோதனை தோப்பூர் உப பிரதேச சபையில் இடம்பெற்றது. இதன்போது உணவகங்களில் வேலை புரிவோருக்கு தொற்று நோய் பரவாமல் இருக்க தடுப்பூசி ஏற்றப்பட்டது.அத்தோடு நிறை, உயரம் மற்றும் இரத்த பரிசோதனையும் இடம்பெற்றது.இதன்போது மருத்துவ பரிசோதனை செய்த உணவக வேலையாட்களுக்கு மருத்துவச் சான்றிதலும் வழங்கி வைக்கப்பட்டன.

இவ் வைத்திய பரிசோதனையினை மூதூர் பொதுச் சுகாதார வைத்தியர் வை.எம்.ஜெஸ்மி, சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எம்.றினூஸ் மற்றும் மூதூர் சுகாதார பரிசோதகர்கள் ஒன்றிணைந்து மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பெரியநீலாவணையில் குடிநீர் திட்டம் திறந்து வைக்கப்பட்டது

பெரியநீலாவணை நிருபர்

பெரியநீலாவணை புலவர்மணி சரிபுத்தீன் மஹா வித்தியாலய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உபயோகிக்கும் வண்ணம் அமைக்கப்பட்ட குடிநீர் திட்டத்தை (05.04.2019) கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி ஏ.எம்.றகீப் திறந்து வைப்பதையும் அனுசரணை வழங்கிய அந்நூர் சமூக சேவைகள் நிறுவனத்தின் பிரதிநிதி எம்.எச்.றைசுல் ஹக்கீம், அதிபர் எம்.எம்.முஹம்மட் நியாஸ், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களையும் படங்களில் காணலாம்.

சர்வதேச புத்தக தினத்தை முன்னிட்டு திருமலையில் புத்தக கண்காட்சி

சேனையூர் நிருபர்

சர்வதேச புத்தக தினத்தை முன்னிட்டு திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் மண்டபத்தில் அண்மையில் புத்தக கண்காட்சி திருகோணமலை நகராட்சி மன்ற தலைவர் நா. இராசநாயகத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட சுமார் 800000 ரூபா பெறுமதியான நூல்களும், திருகோணமலை மாவட்ட படைப்புக்கள், ஈழத்துப் படைப்புக்களும் அதிகளவில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சமாதான நீதவான்

காரைதீவு நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு-05 ஐச் சேர்ந்த நல்லதம்பி -தியாகராசா இவர் கல்முனை மாவட்ட நீதிபதி முன்னிலையில் தீவு முழுவதுக்குமான சமாதான நீதவானாக 28.03.2019 அன்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் ஏற்கனவே 6 வருடங்களுக்கு மேலாக கல்முனை நீதி நிருவாக மாவட்டசமாதான நீதவானாகப் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பகுதிநேர ஆங்கில விரிவுரையாளராவார். மட்ஃவந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம். மட்;ஃஇந்துக்கல்லூரி மற்றும் கொழும்பு அலெக்காந்திரா கல்லூரி ஆங்கில பாடசாலைகளின் பழைய மாணவரும் பல்வேறுசமூகசேவை அமைப்புக்களின் இணைந்துசெயற்படும் ஒருசமூகசேவையாளரான இவர் ஓய்வுபெற்ற ஆங்கில பாடஆசிரியருமாவார்.

தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியில் உயர்தரப் பிரிவில் வர்த்தக, விஞ்ஞான, கணிதத் துறைகளை ஆரம்பிக்க கோரிக்கை

கந்தளாய் நிருபர்

மூதூர் கல்வி வலயத்துக்குட்பட்ட தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியில் உயர்தரப் பிரிவில் வர்த்தக, விஞ்ஞான, கணித்த் துறைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென கல்லூரி சமூகத்தினர் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 70 வருடங்கள் கடந்துள்ள போதும் இன்னும் உயர்தரப் பிரிவில் கலைத்துறை மாத்திரமே காணப்படுகின்றது.

ஏனைய துறைகளைக் கற்க வேண்டுமாக இருந்தால் 50 கிலோமீற்ற ருக்கு அப்பாலுள்ள திருகோணமலை நகருக்கும் 150 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள அம்பாறை மாவட்டத்துக்குமே தோப்பூர் மாணவர்கள் செல்ல வேண்டியுள்ளனர்.

எனவே இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியில் உயர்தரப் பிரிவில் வர்த்தக விஞ்ஞான, கணித துறைகளை ஆரம்பிக்க முன்வர வேண்டுமென கல்லூரி சமூகத்தினர் கோரிக்கை விடுக்கின்றனர்.

திருகோணமலை தக்கியா வீதி ஆயீஷா சித்திக்கா ஆரம்ப பாடசாலையின் வருடாந்த சிறுவர் சந்தை அதிபர் பர்ஷானா நிலாம் தலைமையில் முன்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. சிறார்கள் சந்தை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதையும் படங்களில் காணலாம்.

படம்: கந்தளாய் நிருபர்

அனைத்துப் பாடங்களிலும் ஏ சித்தி

கந்தளாய் நிருபர்

திருகோணமலை ஸாஹிரா கல்லூரியின் மாணவி அலி அக்ஸர் பாத்திமா நிஸ்மா என்கின்ற மாணவி ஒன்பது பாடங்களிலும் அதிவிசேட சித்தியான ஏ சித்திகளைப் பெற்ற ஒரேயொரு மாணவியாவர்.

இவர் அலி அக்சர் மற்றும் வஹிதா ஆகியோரின் புதல்வியாவர்.

கிழக்கு தந்தி

ஸ்ரீலங்கா முஸ்லிம் குரல் பத்திரிக்கையின் சமூக செயற்பாட்டாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு

எம்.பஹ்த் ஜுனைட்

காத்தான்குடியில் இருந்து வெளிவரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் குரல் பத்திரிக்கையின் கௌரவிப்பு நிகழ்வு பத்திரிக்கையின் பிரதம ஆசிரியர் ஜே.எல்.எம்.ஏ.சாஜஹான் தலைமையில் கடந்தவாரம் காத்தான்குடி அல்மனார் அறிவியற் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.டபள்யூ, ஏ.சத்தார், தேச கீர்த்தி ஏ.ஆர்.மபூஸ் அஹமட் ஆகியோர் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சமூக செயற்பாட்டாளர்களுக்கான இவ் கௌரவிப்பு நிகழ்வில் ஜாதிக பலசேனாவின் தலைவர் மரியாதைக்குரிய வட்டரக்க விஜித தேரர், நிந்தவூர் பிரதேச செயலாளர் அஷ்ஷேய்ஹ் டீ.எம்.எம்.அன்சார் (நழீமி), தொழிலதிபர் ஏ.ஜீ.அப்துர் ரஹ்மான்,ஊடகவியலாளர் டீன்.பைரூஸ் ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இச் சிறப்புமிக்க கௌரவிப்பு நிகழ்வில் பிரமுகர்கள், உலமாக்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் என அதிகமானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பார்வை குறுந்திரைக்கு மூன்றாம் இடம்

துறைநீலாவணை நிருபர்

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கோரப்பட்ட குறுந்திரைப்படப் போட்டியில் செ.துஜியந்தனின் பார்வை குறுந்திரை மூன்றாம் இடத்தினை சுவீகரித்துள்ளது.

திறந்த போட்டிப் பிரிவில் மூன்றாம் இடத்தைப் பெற்ற இக்குறுந்திரை யாழ்ப்பாண அரியாலையில் இடம்பெற்ற விழாவின்போது 15 ஆயிரம் ரூபா பணப் பரிசினையும் விருதுச் சான்றிதழினையும் பெற்றிருந்ததுடன் இப்படம் இயக்குனரின் ஆறாவது குறுந்திரை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இயக்குனரின் சார்பில் யாழ் சித்தம் ருத்துவபீட மாணவன் பிரவீன் கலந்து கொண்டு விருதினையும் பரிசினையும் இதன்போது பெற்றுக்கொண்டார்.

2018 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்திடைந்த முறக்கொட்டாஞ்சேனை மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு முறக்கொட்டாஞ்சேனை தேவபுரம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய முன்றலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் சு.சுதர்சன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சுதந்திர கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவரும், கிழக்கு மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தவிசாளருமான ஹரிதரன் கிரி கலந்து கொண்டு அம்மாணவர்களை பாராட்டி கௌரவித்து பரிசில்களை வழங்கி வைப்பதையும், உரையாற்றுவதையும், கலந்து கொண்டவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படம்: பைஷல் இஸ்மாயில்

கிழக்கு தந்தி

பேனா இலவச கல்வி நிலையத்திற்கு கற்றல் உபகரணம் வழங்கி வைப்பு

சேனையூர் நிருபர்

கிண்ணியாவில் இயங்கி வரும் பேனா இலக்கியப் பேரவை முனனெடுத்துச் செல்லும் பேனா இலவசக் கல்வி நிலையத்தில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டில் வாழும் 25 மாணவ மாணவிகளுக்கு பேரவையால் கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வொன்று 10-04-2019 புதன்கிழமை பி.ப.5.00 மணிக்கு அண்ணல் நகரில் உள்ள பேனா இலவச கல்வி நிலையத்தில் நடை பெற்றது.

இவ் நிகழ்வின் போது கிண்ணியா பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுணன் அவர்களும் இலக்கியப் பேரவையின் தலைவர் கவிஞர் ஜே.பிரோஸ்கான் உட்பட பேரவையின் நிருவாக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தின் புதிய மேலதிக அரசாங்க அதிபர்களாக இருவர் பதவியேற்பு

பெரியநீலாவணை நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் புதிய மேலதிக அரசாங்க அதிபர்களாக வி.ஜெகதீன், ஏ.எம்.அப்துல் லத்தீப் ஆகியோர் (10.04.2019) தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டீ.எம்.எல்.பண்டாரநாயக்கவின் பணிப்புரைக்கு அமைய பொது நிர்வாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் செயலாளரால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் ஏற்கனவே மேலதிக அரசாங்க அதிபர்களாக கடமையாற்றிய கே.விமலநாதன், எம்.எஸ்.அமீர் ஆகியோர் அமைச்சின் செயலாளர்களாக இடமாற்றம் பெற்றுச் சென்றதை அடுத்து இந்தப் பதவி நிலைக்கான வெற்றிடங்கள் மிக நீண்ட காலமாக நிரப்பப்படாமல் காணப்பட்டுது. இன்னிலையிலயே இந்த வெற்றிடங்கள் தற்போது நிரப்பப்பட்டுள்ளது

ஏ.எம்.அப்துல் லத்தீப், இறுதியாக நிந்தவூர் பிரதேச செயலாளராக கடமையாற்றிய நிலையிலேயே மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். மருதமுனை கிராமத்தை சேர்ந்த இவர் அண்மையில் சட்டத்தரணியாகவும் உயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

வி.ஜெகதீன், காரைதீவு பிரதேச செயலாளராக கடமையாற்றிய நிலையிலேயே மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பாண்டிருப்பு கிராமத்தை சேர்ந்தவராவார். இவர்கள் இருவரும் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களாவார்கள். புதிய பதவியை பொறுப் பேற்றுக் கொள்வதற்கு முன்னர் தாம் கல்விகற்ற பாடசாலைக்கு சென்றார்கள் அங்கு பாடசாலையின் அதிபர் பி.எம்.எம். பதுறுத்தீன் தலைமையில் மாபெரும் வரவேற்பு நடைபெற்றுது

அம்பாறை மாவட்டம் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது. அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள், தமிழர், சிங்களவர், ஆகிய மூவினத்தவரும் வசிக்கின்றனர். கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை ஆகிய நான்கு நாடாளுமன்ற தொகுதிகளைக் கொண்டுள்ளது. இங்கு 504 கிராமசேவகர் பிரிவுகளையும் 20 பிரதேச செயலர் பிரிவுகளையும் கொண்டுள்ளது.

அம்பாறை மாவட்ட மொத்தச் சனத்தொகையில் முஸ்லிம்கள் 44.0 வீதம், சிங்களவர்கள் 37.5 வீதம், இலங்கைத் தமிழர்கள் 18.3 வீதம், ஏனையோர் 0.2 வீதமாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

இஸ்லாமிக் ரிலீப் வீடுகளுக்கு கழிவு நீர் சுத்திகரிப்பு தொகுதியை அமைக்க அமைச்சர் ஹக்கீம் 50 மில்லியன் ஒதுக்கீடு

சாய்ந்தமருது நிருபர்

கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் எடுத்துக் கொண்ட துரித முயற்சியினால் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பெரிய நீலாவணை இஸ்லாமிக் ரிலீப் தொடர்மாடி வீட்டுத் தொகுதிக்கு கழிவு நீர் சுத்திகரிப்பு பொறிமுறை (Sewerage System) திட்டத்தை முன்னெடுப்பதற்காக நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் 50 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

கடந்த 2004ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தினால் வீடு, வாசல்களை இழந்த பெரிய நீலாவணைப் பகுதி மக்களுக்காக இஸ்லாமிக் ரிலீப் நிறுவனத்தினால் 96 வீடுகளைக் கொண்ட தொடர்மாடி வீட்டுத் தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டு, வழங்கப்பட்டிருந்தன. எனினும் கடந்த சில வருடங்களாக இவ்வீடுகளுக்கான மலசலகூடக் கழிவுக்குழிகளும் சமையலறை கழிவு நீர்க் குழிகளும் நிரம்பி, வெடிப்புகள் ஏற்பட்டு சேதமடைந்துள்ளதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் சூழலும் மாசடைந்து காணப்படுகிறது.

இதன் காரணமாக இவ்வீட்டுத் தொகுதிகளில் வாழ்கின்ற மக்கள் எதிர்நோக்கியுள்ள அவல நிலையை கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப், அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கவனத்திற்கு கொண்டு சென்றதுடன் அங்கு கழிவு நீர் சுத்திகரிப்பு தொகுதியை அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, அதற்கான நகல் திட்டத்தையும் கையளித்திருந்தார். இதனைத் தொடர்ந்து நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சின் மூலம் இத்திட்டத்திற்கான நிதியொதுக்கீட்டை மேற்கொள்வதற்கு அமைச்சர் ஹக்கீம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்நிதியின் மூலம் குறித்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் கல்முனை மாநகர சபையில், மாநகர முதலவர் ஏ.எம்.றகீப் தலைமையில் அவசர கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதில் மாநகர சபையின் ஆணையாளர் எம்.சி.அன்சார், சுகாதாரப் பிரிவு தலைமை உத்தியோகத்தர் ஏ.ஏ.எம். அஹ்சன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.எம்.நிஸார், நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சின் கல்முனை மாநகர அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பாளர் ஏ.சி.சமால்தீன், பெரிய நீலாவணை இஸ்லாமிக் ரிலீப் தொடர்மாடி வீட்டுத் தொகுதி முகாமைத்துவ சபையின் தலைவர் எம்.ஐ.எம்.சாஹிர், உப தலைவர் இசட்.ஏ.எம்.மஸ்ஹூட், செயலாளர் யூ.எல்.நாபீர் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது நவீன தொழில்நுட்பங்களுடன் முன்னெடுக்கபடவுள்ள இத்திட்டம் குறித்து வீட்டுத்தொகுதி முகாமைத்துவ சபையினருக்கு விளக்கிக் கூறப்பட்டதுடன் இதில் அவர்களது வகிபாகம் தொடர்பிலும் எடுத்துரைக்கப்பட்டது.

அத்துடன் இவ்வேலைத் திட்டத்தை உடனடியாக ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் இத்திட்டம் இவ்வருடம் டிசம்பர் மாதத்திற்குள் நிறைவு செய்யப்பட வேண்டும் எனவும் உத்தியோகத்தர்களை அறிவுறுத்திய முதல்வர் ஏ.எம்.றகீப், அதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார்.

எமது கடந்த கால வாழ்க்கையை பிரதிபலிக்கும் வகையில் கலைகள் விளங்குகின்றன

கரடித்தோட்ட நிருபர்

எமது கடந்த கால வாழ்க்கைச் சூழல் மொழிநடைகள் எவ்வாறு இருந்தன என்பதைப் பிரதிபலிக்கும் வகையில் கலைகள் விளங்குகின்றன.என காரைதீவு பிரதேச செயலாளர் வேதநாயகம் ஜெகதீசன் தெரிவித்துள்ளார்.

கலாசார அலுவல்கள் திணைக்களமும் காரைதீவு பிரதேச செயலக கலாசாரப் பிரிவும் இணைந்து நடத்திய பாடல் இரசனை என்ற நிகழ்வுபிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றபோது அதற்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில் கலைகள் மற்றும் கலைஞர்கள் காலத்தின் கண்ணாடிகள். எமது கடந்த கால வாழ்க்கைச் சூழல்மொழிநடைகள் எவ்வாறு இருந்தன என்பதைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தக் கலைகள் விளங்குகின்றன. காலத்துக்குக் காலம் மனிதன்கலைகள் ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் பல மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டு முன்னேறி வருகிறான். இருந்தாலும் எமதுகிராமிய ஊர்களுக்குச் சொந்தமான பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாத்து மனிதகுலம் இருக்கும் வரை அவற்றை அடுத்தடுத்தசந்ததியினருக்கும் கடத்திச் செல்லவேண்டியது எமது பொறுப்பாகும். நாட்டுக்கூத்துப் போன்ற சில கலைகள் இயந்திரமயமான இன்றையகாலகட்டத்தில் நவீனமயப்படுத்தப்பட்டு நடைபெறும் நேரமும் சுருக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் அவற்றின் அடிப்படைப் பண்புகளானதாளம் மொழிநடை என பன மாறாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். கேட்பதற்கு இனிமைதரக் கூடிய மீனவர்கள் தொழிலின்போது அலுப்படையாமல் இருக்கப் பாடும் பாடல்கள் வயல் வேலைகளின்போது பாடும் பாடல்கள் அருவி வெட்டுப் பாடல்கள் போன்ற கிராமியதொழிற் பாடல்கள் பல இன்று மருவிப் போவதற்கு மனிதனுடைய தொழில்நுட்ப முன்னேற்றம்தான் காரணம்.

இன்று மனிதர்கள் செய்கின்ற வேலைகளை இயந்திரங்கள் செய்வதினால் மனிதவலு அவசியமில்லாமல் போய்விட்டது. இதனால் கிராமியப் பாடல்கள் பாடுவதற்கான சந்தர்ப்பங்களும் அருகிப்போய்விட்டது. இருந்தாலும் எமது அடுத்தடுத்த சந்ததிகள் இவற்றை அறிந்துகொள்ளஅவற்றை ஆவண வடிவிலோ இறுவட்டு வடிவிலோ சேமித்துப் பாதுகாப்பது அவசியமாக உள்ளது.

எமது நாட்டைப் பொறுத்த வரை நாம் பல கலாசாரங்களுடன் இணைந்து வாழ்ந்துகொண்டிருக்கும் அதேவேளை ஏனைய கலாசாரவிழுமியங்களையும் நாம் அறிந்து அவற்றிற்கு மதிப்பளிப்பது மட்டுமல்லாமல் எமது பண்பாட்டு விழுமியங்களும் அழிந்து பொகாமல்பாதுகாப்பது ஒவ்வொரு வருடைய கடமையுமாகும். எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதேச பல்துறைக் கலைஞர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மாவட்ட மற்றும் பிரதேச கலாசாரத்திற்குப்பொறுப்பான உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்ததுடன் கலஞர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது. இதன் போது அம்பாறைமாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் பிரதேச செயலாளர் வே.ஜெகதீசன் கலைஞர்களால் பொன்னாடைபோர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் கலா மன்றங்களுக்கான காசோலைகளும் வழங்கப்பட்டதுடன் பாடல் இரசனை நிகழ்வில் பங்குபற்றித்தங்கள் திறமைகளை வெளிப்படுத்திய கலைஞர்களுக்கான சான்றிதழ்களும் கலைஞர்களுக்கான அடையாள அட்டைகளும்வழங்கிவைக்கப்பட்டன.

காரைதீவு ஆனந்தா முன்பள்ளிச் சிறுவர்கள் பங்குபற்றிய சித்திரை விளையாட்டு விழா அண்மையில் பாடசாலை வளாகத்தில்நடைபெற்றபோது சிறுவர்கள் போட்டிகளில் பங்குபற்றுவதைப் படங்களில் காணலாம்.

படம்: கரடித்தோட்ட நிருபர்

அக்பர் கிராம குறுக்கு வீதி கொங்கிறீட் வீதிகளாக செப்பனிடப்பட்டது

மருதமுனை நிருபர் றாசிக் நபாயிஸ்

கம்பெரலிய வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபை எல்லைக்குள்

அமைந்துள்ள பெரியநீலாவணை அக்பர் கிராம குறுக்கு வீதியை கொங்கிறீட் வீதியாக செப்பனிடுவதற்கு கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.ஆர்.அமீர் விடுத்த வேண்டுகோளின் பேரில் சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்தியத்துறை இராஜாங்க அமைச்சர் எம்.சி.பைசல் காசீமின் 20 லட்சம் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அக்பர் கிராம குறுக்கு வீதி கொங்கிறீட் வீதிகளாக செப்படனிப்பட்டது.

வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு

சின்னக் கிண்ணியா நிருபர்

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக் குட்பட்ட நிரந்தர மற்றும் பாரிய நோய்யினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு (10) கிண்ணியா பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

சமூகசேவைகள் அமைச்சின் அங்கவீனமுற்றோருக்கான தேசிய செயலகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட சிகிச்சை செல்வதற்கான போக்குவரத்து செலவுக் கொடுப்பனவு அங்கவீனமுற்றோருக்கான சுயதொழில் உதவி கொடுப்பனவு, அங்கவீனமுற்ற நபர்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு கல்விசார் உதவி களும் எட்டுப் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் எம் எச் முகம்மது கனி, சமூகசேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம் .எம். பஹ்மி

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். நாசர் முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் எம். இர்பான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தனியான உள்ளூராட்சி சபைக்கான தீர்வு கிட்டாததனால் நோன்பு காலத்திலும் எமது போராட்டம் தொடரும்

பைஷல் இஸ்மாயில்

சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி சபைக்கான தீர்வு கிட்டாததனால் எமது சத்தியாக்கிரகப் போராட்டங்களை நடத்தவுள்ளதாகவும் இப்போராட்டத்தை நோன்பு காலத்திலும் முன்னெடுக்கவுள்ளதாகவும் சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசலின் தலைவர் வை.எம்.ஹனிபா தெரிவித்தார்.

சாய்ந்தமருதுக்கென தனியான உள்ளூராட்சி சபையொன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டம் தொடர்பில் அவர் விளக்கமளிக்கையிலே இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து விளக்கமளிக்கையில்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸுடன் இவ்விவகாரம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு நேரம் ஒதுக்கித் தரும்படி கோரிக்கை விடுத்து பல மாதங்களாகியும் எங்களது கோரிக்கையை அவர் இது வரை கவனத்தில் எடுக்கவில்லை. இதனையடுத்தே சத்தியாக்கிரகப் போராட்டங்களையும் கவனயீர்ப்புப் போராட்டங்களையும் நாங்கள் நடாத்த முடிவு செய்துள்ளோம்.

சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி சபையொன்றினைப் பெற்றுக்கொள்ளும் வரை எமது போராட்டங்கள் தொடரும்.

இந்தப் போராட்டத்தில் பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகள், உலமா சபை பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதி நிதிகள், சுயேச்சைக் குழுவின் கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் என பிரதேசத்தைச் சேர்ந்த அனைவரும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

சாய்ந்தமருது மக்கள் முஸ்லிம் அரசியல் வாதிகளால் நீண்ட காலமாக ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றியிருக்கிறார்கள். சாய்ந்தமருது மக்கள் தொடர்ந்தும் ஏமாறுவதற்குத் தயாராக இல்லை. எமது கோரிக்கை சம்பந்தப்பட்ட அமைச்சராலும், முஸ்லிம் அரசியல் தலைமைகளாலும் நிறைவேற்றித் தரப்படாவிட்டால் நாம் இறுதியாக ஜனாதிபதியைச் சந்தித்து எங்கள் கோரிக்கைகளை முன் வைக்கவுள்ளோம் என்றார்.

பூநகரியில் காற்றலை மின் உற்பத்தி நிலையத்தினை அமைப்பது தொடர்பில் விரிவாக ஆரயப்பட வேண்டும்

கிளிநொச்சி பூநகரி கௌதாரிமுனைப் பகுதியில் காற்றலை மின் உற்பத்தி நிலையத்தினை அமைப்பது தொடர்பில் இந்தப் பிரதேசம் அதிக மக்கள் வாழும் பகுதியென்பதால் சூழல் பாதிப்புக்கள் அல்லது சமூகத் தாங்கள் உள்ளனவா? என்பது பற்றி விரிவாக ஆரயப்பட வேண்டும் என்று தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகப்பேச்சாளருமான எம்ஏ.சுமந்திரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கௌதாரிமுனைப்பிரதேசத்தில் காற்றலை மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவது தொடர்பான மக்கள் கருத்தறியும் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் பூநகரிப்பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் எஸ்.கிருஸ்னேந்திரன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், மாவை சேனாதிராஜா எம்ஏ. சுமந்திரன் முன்

னாள் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் பிரதேச சபையின் தவிசாளர் உறுப்பினர்கள் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்த கொண்டிருந்தனர்.

இதில் பூநகரிப்பிரதேசத்திற்குட்பட்ட கௌதாரிமுனைப்பகுதியில் 1703.88 கெக்ரேயர்நிலப்பரப்பில் காற்றலை நிலையங்களை நிறுவி மின் உற்பத்தி செய்வது தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் பொதுமக்கள் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது குறித்த பிரதேசம் பூநகரிபில் வளமான பகுதியாகவும் இயற்கையாகவே மணல் திட்டுக்கள் உருவாகுதல் மீன் உற்பத்திகள் கால் நடை வளர்ப்பு விவசாயம் என்பன இங்குமேற்கொள்ளப்படுவதனால் பாதிப்புக்கள் எற்படும் என்று பொதுமக்களும் பாரபாளுமன்ற உறுப்பினரும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் அதிக மக்கள் வாழும் இந்தப்பிரதேசத்தில் மீன்பிடித்தொழிலாளர்கள் விவசாயிகள் எனப்பலதரப்பட்டவர்கள் இருக்கின்றார்கள், மக்களின் வாழ்க்கை முறைகளில் இதனால் பாதிப்பக்கள் எற்படும் என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

இதனால் சூழல் பற்றியதும் சமுகத் தாக்கங்கள் பற்றியதும் விரிவாக ஆராயப்பட்டு இதன் சாதக பாதகத்தன்மைகள் பற்றி பல்வேறு மட்டங்களில் ஆராயப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிராம சக்தி மேம்பாடு குறித்து மீளாய்வு கூட்டத்தில் ஆராய்வு

கிராம சக்தி செயற்திட்ட மீளாய்வு கூட்டம் கடந்தவாரம் யாழ்.மாவட்ட செயலக பிரதான மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

கிராம சக்தி செயற்திட்ட மீளாய்வு ஒருங்கிணைப்பு குழு கூட்டம் , யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் அவர்கள் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

இந் நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் திரு.ஷிரால் லக்திலக ,யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகம், பிரதேச செயலாளர்கள் ,அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் மீளாய்வு கூட்ட கலந்துரையாடலில் இணைந்திருந்து முன்னெடுக்கப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் அதனூடாக கிராம சக்தி இயக்கத்திற்கு கிடைக்கும் வருவாய்கள்,வறுமை ஒழிப்பின் அடிப்படை காரணிகளாக ஏற்படுத்தப்பட்டுள்ளதா ?உரிய முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அவர்கள் இதன் போது ஆராய்ந்திருந்தார்.

மீளாய்வு கலந்துரையாடலின் போது 2017 ஆம் ஆண்டின் கிராம சேவையாளர் ரீதியாக மூன்று வேலைதிட்டங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட குழுக்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோர் கிராம சக்தி செயற்திட்டத்தின் வகிபங்கு, மக்களின் ஒன்றிணைவு, எதிர்கால செயற்பாடுகள், மேம்படுத்தல் நடவடிக்கைகள் குறித்தும் அனுபவரீதியிலாக பெற்றுகொண்டிருந்த கருத்துக்களையும் தெரிவித்திருந்தனர்.

கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சியை நிறைவு செய்த ஆசிரிய மாணவர்களுக்கு கௌரவிப்பு

வவுனியா நிருபர்

வவுனியா தேசிய கல்வியல் கல்லூரியில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சியை நிறைவு செய்த ஆசிரிய மாணவர்களுக்கு நிறைவு நாள் நிகழ்வும், கௌரவிப்பும் கல்லூரியின் பீடாதிபதி கதிரேசன் சுவர்ணராஜா தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வவனியா தேசிய கல்வியல் கல்லூரியின் ஓய்வுநிலை பீடாதிபதி குமாரசாமி சிதம்பரநாதன் மற்றும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியில் கல்லூரியின் ஓய்வு நிலை பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

முன்னதாக மாலை அணிவித்து அழைத்துவரப்பட்ட அதிதிகளால் மங்கள விளக்கேற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகியிருந்தது.

ஆரம்பபிரிவு, விவசாயப்பிரிவு, விஞ்ஞானப்பிரிவு, கணிதப்பிரிவு, வர்த்தகப்பிரிவு, உணவுத் தொழில் நுட்பபிரிவு, உடற்கல்வி பிரிவு, இந்து சமயப்பிரிவு மற்றும் கிறிஸ்தவப் பிரிவு ஆகிய துறைகளில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சி நெறியை நிறைவு செய்த 257 மாணவர்களுக்கு அதிதிகளால் பதக்கம் அணிவித்து கௌரவம் வழங்கப்பட்டது.

கல்லூரியின் ஆசிரிய மாணவர்களால் அதிதிகளுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுப்பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து கல்லூரியின் பீடாதிபதியினால் ஆசிரிய மாணவர்களுக்கு பயிற்சியை வழங்கிய விரிவுரையாளர்களுக்கு நினைவுப்பரிசில்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிகழ்வில் உப பீடாதிபதிகளான திருஞானந்தம் ஜெயகாண்டீபன், பொன்னையா சத்தியநாதன் விரிவுரையாளர் இணைப்பாளர்களான கிருபாகரன் யோகராஜா, எஸ்.சத்தியசீலன் சிரேஸ்ட விரிவுரையாளர்களான ந.பார்த்தீபன், எஸ்.பவானந்தன், அசிரிய மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

வவுனியாவில் குடிநீர் விநியோகம்

வவுனியா நிருபர்

வவுனியாவில் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையால் குடிநீர் வழங்கப்படுகின்றது.

நாட்டில் வரட்சியான கால நிலை நீடித்து வருகிறது. அந்த வகையில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட குட்டிநகர், சிறிநகர் ஆகிய கிராமங்களில் 225 குடும்பங்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம் மக்களுக்கு நாள் தோறும் நான்காயிரம் லீற்றர் நீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இரு கிராமங்களிலும் 4 நீர்தாங்கிகள் வைக்கப்பட்டு அவற்றின் மூலம் நீர் விநயோகிக்கப்படுவதாக வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் து.நடராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வவுனியா வடக்கு பிரதேசத்தில் காஞ்சுரமோட்டைப் பகுதி வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளது. இக் கிராமத்தில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 105 பேர் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் இணைந்து அவர்களுக்கான குடிநீரை விநியோகித்து வருகின்றது.

22வது ஆண்டை முன்னிட்டு வவுனியாவில் சித்திரை புத்தாண்டு விளையாட்டுப்போட்டி

வவுனியா நிருபர்

வவுனியா சிதம்பரபுரம் சந்திரோதய விளையாட்டுக்கழகத்தின் 22வது ஆண்டினை முன்னிட்டு சித்திரை புத்தாண்டு விளையாட்டுப் போட்டி (07.04) இடம்பெற்றது.

வவுனியா சந்திரோதய விளையாட்டு மைதானத்தில் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றது. இதில் கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், கிரிக்கற் போட்டி போன்றவற்றில் வெற்றி பெற்ற வீரர்களிற்கும் அணிகளிற்குமான வெற்றிக்கிண்ணங்களும், பரிசில்களும் பிரதமவிருந்தினர்களினால் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு கழகத்தின் செயலாளர் டெஸ்மன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ஜி.ரி.லிங்கநாதன், செ.மயூரன், பிரதேசசபை உறுப்பினர்களான உத்தரியநாதன், பார்த்தீபன் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர் தமது கட்சி உறுப்பினர்களுக்கு பாரபட்சம் காட்டுவதாக தமிழ் தேசிய மக்கள் முன்னனி உறுப்பினர் குற்றச்சாட்டு

வவுனியா நிருபர்

வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர் தமது உறுப்பினர்களின் பிரேரணைகளை கருத்தில் கொள்ளாதும், தமது வட்டாரப் பகுதிகளுக்கு நிதி ஒதுக்கீடுகளை செய்யாது பாரபட்சமாகவும், தன்னிச்சையாகவும் செயற்படுவதாக தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சஞ்சுதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா வடக்கு பிரதேச சபையில் சமர்ப்பிக்கப்படுகின்ற எமது கட்சி உறுப்பினர்களின் பிரேரணைகள் தொடர்பில் ஒரு வருடம் முடிந்தும் சபை தவிசாளர் தணிகாசலம் ஐயா அவர்களால் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் செய்யப்படவில்லை. ஒரு வருடத்தில் நான் தெரிவு செய்யப்பட்ட சின்னடம்பன், நைனாமடு வட்டாரத்தில் ஒரு உப்புக்கல்லு கூட வவுனியா வடக்கு பிரதேச சபையால் போடப்படவில்லை. இந்த விடயத்தை சபையின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தேன். கடந்த டிசம்பர் மாதம் பெய்த மழையினால் பெரியமடு பகுதியில் இருந்து வரும் 120 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பயணிக்கும் வீதி சேதமடைந்திருந்தது. அதனை செய்து தரும்படி கேட்டிருந்தேன். இன்று வரை அது சம்மந்தமாக கூட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆளும் கட்சியில் இருக்கும் கூட்டமைப்பினருக்கு தான் வேலைத்திட்டங்கள் செய்யப்படுகின்றது. ஏனைய கட்சிகளுக்கு பாரபட்சம் காட்டப்படுகின்றது.

சபைக் கூட்டத்தில் பேசப்படும் விடயங்கள் முழுமையாக பதிவு செய்யப்படுவதில்லை. கூட்ட அறிக்கைகளில் சபை அமர்வுகளில் பேசப்பட்ட பல விடயங்களை காண முடிவதில்லை. பேசாத சில விடயங்கள் கூட வந்திருக்கிறது. சில உறுப்பினர்கள் தாம் அவ்வாறு தெரிவிக்கவில்லை என அடுத்த அமர்வுகளில் தெரியப்படுத்துகின்ற போது அவற்றை நீக்கி சரி செய்வதாக கூறப்படுகின்றது. அத்துடன் கிராமங்களில் செய்யப்படும் ஒப்பந்த வேலைகளை பொதுவான கேள்வி கோரல் ஊடாகசெய்யுமாறு பிரேரணை மூலம் கோரியிருந்தேன். எனது பிரேரணை சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. நான் அதனை வாக்கெடுப்புக்கு விடுமாறும் போரியிருந்தேன். அவர் அதனை அவ்வாறு செய்யவில்லை. ஆனால் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் ஒதுக்கப்படும் வேலைகளை ஒப்பந்தங்கள் மூலம் வழங்க முடியாது எனவும்

அதனை தாம் விரும்பியபடியே வழங்குவேன் எனவும் தவிசாளர் தெரிவித்து, அந்த பிரேரணை தொடர்பில் ஒரு வாக்கெடுப்போ அல்லது பிரதிநிதிகளின் கருத்துக்களுக்கோ மதிப்பளிக்காது தனிச்சையாக முடிவெடுத்துள்ளார். சபை கூட்ட அறிக்கையில் கூட அது தொடர்பில் பேசப்பட்டதாக கூறப்பாட்டுள்ளதே தவிர, அது பிரேரணை என்றோ அல்லது வாக்கெடுப்புக்கு கோரப்பட்டது என்றோ ஒரு இடத்திலும் குறிப்பிடப்பாடவில்லை. தான் சொன்ன கருத்தையும் அந்த கூட்ட அறிக்கையில் குறிப்பிடவில்லை.

எமது பிரதேச சபையால் 3 குழாய் கிணறுகள் அடிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழாய் கிணறுகள் அடிப்பதற்கு திறந்த கேள்வி கோரல் விடப்படவில்லை. ஒரு குழாய் கிணறு அடிப்பதற்கு மூன்று இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் முடிந்ததாக கணக்கு காட்டப்பட்டுள்ளது. ஆனால் வெளியில் அந்தக் குழாய் கிணறுகள் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கு அடிக்கப்படுவதாக நாங்கள் அறிகிறோம். ஒவ்வாரு உறுப்பினருக்கும் 10 மணித்தியாலய வேலைக்கு கனகரக வாகனங்கள் வேலைக்காக ஒதுக்கப்படுவதாக கூறப்பட்டது. ஆனால் தலைவர் தணிகாசலம் ஐயா அவர்களுக்கு 32 மணித்தியாலங்கள் சென்ற ஆண்டு வேலை செய்ய ஒதுக்கப்பட்டுள்ளது. அது எவ்வாறு அப்படி செய்யப்பட்டது என கேள்வி எழுப்புகின்ற போது அது கூட்டமைப்பால் வந்த வேலை, செய்தது என சாட்டுப் போக்குகளைச் சொல்கின்றார்.

அத்துடன் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்குவதாகவும் அதன் மூலம் எமது வட்டாரங்களில் வேலைகளை முன்னெடுக்கலாம் எனவும் கூறப்பட்டது. அந்தவகையில் அந்த நிதி எங்களது கட்சி உறுபர்பினர்களுக்கு ஒதுக்கப்படவில்லை. இதைக் கேட்டபோது 15 இலட்சம் ரூபாய் தான் இருந்தது. அதனை நாம் கொடுத்து விட்டோம். அடுத்த முறை பார்ப்போம் என எமது கட்சி உறுப்பினர்களை ஓரம்கட்சி செயற்படுகின்றார். இதன்போது நான் 26 உறுப்பினர்களுக்கும் அந்த 15 இலட்சத்தையும் பிரித்து கொடுத்திருக்கலாம் எனக் கூறியிருந்தேன். அப்படி செய்திருந்தால் உரிய காலப்பகுதியில் அந்த வேலைத்திட்டங்கள் நடைபெற்றிருக்கும். ஆனால், அவ்வாறு இடம்பெறாது பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், கனகரக வாகனங்களுக்கு பொறுப்பாக ஒரு உத்தியோகத்தர் உள்ள போதும் தலைவர் அவருக்கும் தெரியாது தன்னிச்சையாக அதனை கையாண்டு வருகின்றார். கனகரக வாகனங்களுக்குரிய டீசல் அதற்குரிய உத்தியோகத்தர் ஊடாகத்தான் அடிக்கப்பட வேண்டும். அவ்வாறான நவடிக்கைகள் நடைபெறவில்லை. தலைவர் சொல்கின்ற எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் அடிக்கப்படுகிறது. அதற்குரிய பணமும் உடனடியாக எடுக்கப்படுகின்றது. தானாக நினைத்து செய்கின்ற வேலைகளுக்குரிய பணம் சபைக் கணக்கிற்கு வரவில்லை. இவ்வாறு தான் தலைவருடைய செயற்பாடுகள் நடைபெறுகிறது. இதனால் வவுனியா வடக்கில் யுத்தத்தால் பாதிப்படைந்த உள்ளூர் கிராமங்கள் பல தொடர்ந்தும் பாதிப்பையே எதிர்நோக்க வேண்டிய நிலையில் உள்ளது எனத் தெரிவித்தார்.

வவுனியாவில் வீடு எரிந்து நாசமாகிய போதும் சென்று பார்வையிடாத கிராம அலுவலர்

வவுனியா நிருபர்

வவுனியா, ஓமந்தை, பறநாட்டங்கல் பகுதியில் உள்ள தற்காலிக வீடும் அதனுள் இருந்த 40 நெல் மூடைகளும் எரிந்துள்ள போதும் அப்பகுதி கிராம சேவகர் சென்று பார்வையிடவில்லை. இதனால் வீட்டு உரிமையாளர் இழப்பீடுகளை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா, ஓமந்தை, பறநாட்டாங்கல் பகுதியில் உள்ள ஒரு தற்காலிக வீடு கடந்த வியாழக்கிழமை தீ விபத்தினால் முழுமையாக எரிந்து நாசமாகியது. இதன்போது குறித்த வீட்டிற்குள் அடுக்கப்பட்டிருந்த 40 நெல் மூடைகள் மற்றும் வீட்டு உடமைகள் முழுமையாக தீயில் எரிந்து நாசமாகியது. அயலவர்கள் தீயை அணைக்க முயன்ற போதும் அது பயனளிக்கவில்லை. இந்நிலையில் இது தொடர்பில் ஓமந்தை பொலிசில் வீட்டு உரிமையாளர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிசார் பார்வையிட்டு விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

ஆனால், தற்காலிக வீடும் நெல் மூடைகளும் எரிந்து மூன்று தினங்கள் கடந்துள்ள போதும் அப்பகுதி கிராம அலுவலர் வருகை தந்து எரிந்த வீட்டையோ அல்லது நெல் மூடைகளையோ பார்வையிடவில்லை. எமது வயில் விளைந்த நெல் முழுமையாக எரிந்துள்ளது. இதனால் நாம் மிகவும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். கிராம அலுவலர் வருகை தந்து பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையால் நாம் இழப்பீடுகளை கூட பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் கவலை தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற வருடாந்த விளையாட்டு விழா!

வவுனியா நிருபர்

வவுனியா பண்டாரிக்குளம், உக்குளாங்குளம் மகளிர் அமைப்பு மகளிர் தினத்தை முன்னிட்டு நடாத்திய 14ம் ஆண்டு வருடாந்த விளையாட்டு விழா நடைபெற்றது.

வவுனியா, உக்குளாங்குளம் சீர்திருத்த விளையாட்டுக்கழக மைதானத்தில் மகளிர் அமைப்பின் தலைவி சிவகுமார் திவியா அவர்களின் தலமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

வவுனியா, பண்டாரிகுளம், உக்குளாங்குளம் கிராம மகளிர் அமைப்பானது மகளிர் தினத்தை முன்னிட்டு வருடாந்தம் விளையாட்டுப் போட்டி ஒன்றை நடத்தி வருகின்றது. இதன டிப்படையில் 14 ஆவது ஆண்டாக இவ்வாண்டுக்குரிய விளையாட்டுப் போட்டியும் சிறப்பாக இடம்பெற்றது.

விளையாட்டு நிகழ்வுகளின் போது பணிஸ் சாப்பிடும் போட்டி, சாக்கோட்டம், தேங்காய் திருவுதல், கயிறு இழுத்தல், சங்கீத கதிரை, வினோத உடை போட்டிகள் என பல்வேறு விளையாட்டுப்போட்டிகள் இடம்பெற்றிருந்ததுடன் சிறியவர்கள் முதல் முதியவர்கள் வரை பலரும் ஆர்வத்துடன் விளையாட்டு போட்டிகளின் கலந்து கொண்டிருந்தனர்.

இவ் விளையாட்டு நிகழ்வின் இறுதியில் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான முதலாவது அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் இணைத்தலைவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்கழுக்கூட்டம் இணைத்தலைவர்கள் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அவர்களின் அறிமுக உரையுடன் ஆரம்பமாகியது. இதில் அபிவிருத்திகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் எனப் பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில ஆராயப்பட்டன.

இதில் திணைக்கள தலைவவர்கள் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பொது மக்களின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர்.

வடக்கு தந்தி

மறைந்த ஓய்வுநிலை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டி

மறைந்த ஓய்வு நிலை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டியின் இறுதி போட்டி சனிக்கிழமை இடம்பெற்றது. கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் விளையாட்டுமைதானத்தில் இடம்பெற்ற குறித்த விளையாட்டு நிகழ்வின் இறுதி போட்டியில் உதயதாரகை மற்றும் உருத்திரபுரம் விளையாட்டு கழகம் ஆகியன மோதின. போட்டியில் ஒன்றுக்கு பூச்சியம் என்ற குால் கணக்கில் உதயதாரகை அணி இவ்வாண்டுக்கான வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது. கிளிநொச்சி 7வது படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த போட்டியில் கிளிநொச்சி படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ரவி பிரிய பிரதம அதிதியாக கலந்து கொண்டு வேற்றி கேடயத்தை வழங்கி வைத்தார். குறித்த கிண்ணத்திற்காக கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 34 கழக அணிகள் பங்கு கொண்டிருந்தமை குறிப்பிடதக்கதாகும்.

நிகழ்வின் இடைவேளையின்புாது படையினரின் பெரேரா நிகழ்வும் மைதானத்தை அலங்கரித்தது. கிளிநொச்சியில் முதல் முதலாக தீயுடனான கண்காட்சி குறித்த நிகழ்வில் இடம்பிடித்தமை குறிப்பிடதக்கதாகும்.

குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கிளிநொச்சி படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ரவி பிரிய குறிப்பிடுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் 45 கழகங்கள் உள்ளன. இவற்றில் 34 கழகங்களே இந்த போட்டியில் பங்கு பற்றின. வளையாடிய அத்தனை அணிகளும் திறமையாக தமது திறமைகளை வெளிப்படுத்தினர். மிக சிறப்பாக வெளிப்படுத்திய அணிகளிற்கு மேலும் பயிற்சிகளை வழங்கி கொழும்பிற்கு அழைத்து செல்ல உள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

நிகழ்வின் நிறைவில் குறித்த விளையாட்டு மைதானத்தின் புனரமைப்பு மற்றும் சில வசதிகளை ஏற்படுத்தி தருவதற்கு தாம் முன்வருவதாகவும் இதன்போது ரவிபிரிய கழகத்தினரிடம் உறுதியளித்திருந்தமை குறிப்பிடதக்கதாகும்.

கிளிநொச்சிக் குளத்தினை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை

கிளிநொச்சிக் குளத்தினை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி நகரத்தின் மையப்பகுதியில் சுற்றுலா பயணிகளை கவரக் கூடிய வகையிலும் நகருக்கான நீர்த்தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் அமைந்துள்ள கிளிநொச்சிக்குளத்தின் கரையோரப்பகுதிகள் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் எதிர்காலத்தில் குளம் இல்லாமல்போகின்ற நிலமை காணப்படுவதாக பல்வேறு தரப்புக்களும் சுட்டிக்காட்டியுள்ளன.

அதாவது, கிளிநொச்சி கரைச்சி, கண்டாவளை, ஆகிய பகுதிகளுக்கான குடிநீரைப்பெற்றுக்கொள்வதற்கும் எதிர்காலத்தில் பூநகரி மற்றும் தட்டுவன்கொட்டிப்பகுதிக்கான குடிநீரைப்பெற்றுக்கொள்வதற்கும் பயன்படுத்துகின்ற இக்குளத்தின் இயற்கைத்தன்மையையும் குளத்தையும் பாதுகாக்க உரிய திணைங்களங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாவட்ட ஒருங்கிணைப்புக்கூட்டத்திலும் பல்வேறு தரப்புக்களாலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதாவது, கிளிநொச்சி குளத்தினுடைய கரையோரப்பகுதிகளின் எல்லைகளை வரையறை செய்து குளத்தைப் பாதுகாக்க வேண்டும். அத்தோடு மண் நிரவிக்காணப்படுகின்ற குளத்தினை ஆழப்படுத்தி அதன் இயற்கைச்சூழல் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கசிப்பு உற்பத்தியால் பாதிக்கப்படும் கிராம மக்கள்

முல்லைத்தீவு தேவிபுரம் பகுதியில்மேற்கொள்ளபபட்டு வருகின்ற சட்டவிரோத கசிப்பு உற்பத்திகளால் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெண்கள் யுவுதிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக தேவிபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் கிராம மட்ட அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தேவிபுரம் பிரதேசத்தில் 305 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழந்து வருகின்றன.

இவ்வாறு வாழ்கின்ற குடும்பங்கள் அனைத்தும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களாகக் காணப்படுகின்றன.

இந்நிலையில் இந்தப்பிரதேசத்தில் சட்டவிரோதக்கசிப்பு உற்பத்தி விற்பனைகள் அதிகரித்துக்காணப்படுகின்றன.

இதனால் தனது கிராமத்தில் பலர் பல்வேறு அசெகரியங்களுக்குள்ளாகி வருவதாக சுட்டிக்காட்டிய மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தினர் இது தொடர்பில் கருத்துத்தெரிவிக்கும் போது, தமது பிரதேசத்தில் இருந்து கடந்த காலங்களில் வெளியிடங்களில் சென்று உயர் கல்வி கற்பது மிகமிகக்குறைவு கடந்த மூன்று வருடங்களாக எமது பிள்ளைகள் கல்வியில் முன்னேற்றம் கண்டு புதுக்குயடியிருப்பு, உடையார்கட்டு, இரணைப்பாலை ஆகிய பாடசாலைகளுக்கு உயர் கல்வியைப்பெற்றுக்கொள்வதற்காக செல்கின்றனர்.

இந்நிலையில் அண்மை காலமாக இவ்வாறு பாடசாலை செல்கின்ற மாணவிகள் மற்றும் பல்வேறு தேவைகளுக்காக செல்கின்ற பெண்கள் மீது பல்வேறு பட்ட சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

அதாவது, இவை அனைத்துக்கும் இங்கே இருக்கின்ற சட்டவிரோத கசிப்பு உற்பத்தியே காரணமாக இருக்கின்றது.

எனவே இவ்வாறான சட்டவிரோத கசிப்பு உற்பத்திகளைக் கட்டுப்படுத்த உரிய தரப்புக்கள் நடவடிககை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் மேழிவனம் பகுதியில் காட்டுயானைகள் தொல்லை

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மேழிவனம் பகுதியில் அன்றாடம் காட்டுயானைகள் தொல்லையால் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர்பிரிவின் கீழ் உள்ள மேழிவனம் பகுதியல் தற்போது 52 வரையான குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்நிலையில் குறித்த பகுதியில் உள்ள மக்கள் அன்றாடம் காட்டுயானைகளின் தொல்லையை அனுபவித்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக விவசாயத்தை நம்பி வாழும் மக்களின் அதிகளவானோர் தற்போதும் பயிர் செய்கைகளை மேற்கொண்டு வருகின்றபோதும் தினமும்; இவர்களது பயிர் செய்கைகளை காட்டுயானைகள் அழத்து வருகின்றன.

எனவே தமது எதிர்காலத்தை கருத்திற் கொண்டு யானைகளுக்கான பாதுகாப்பு வேலிகள் அமைத்துத்தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை இப்பகுதியில் காட்டுயானைகளின் தொல்லையால் ஒரு சில குடும்பங்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உவர் நீர்த்தடுப்பணை அமைக்கப்படாமையினால் வன்னேரிக்குளத்தின் பெரும் பகுதி உவர் நிலமாக மாறும் அபாயம்

கிளிநொச்சி மண்டைக்கல்லாறுக்கான உவர் நீர்த்தடுப்பணை அமைக்கப்படாமையினால் வன்னேரிக்குளத்தின் பெரும் பகுதி உவர் நிலமாக மாறும் அபாயநிலை காணப்படுவதாக இப்பகுதி விவசாயிகள் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள வன்னேரிக்குளம் கிராமத்தில் கடந்த 1953 ம்ஆண்டு மக்கள் குடியேற்றப்பட்ட குடியேற்றக்கிராமமாக காணப்பட்டாலும் குஞ்சுக்;குளம் சோலை போன்ற கிராமங்கள் மிகவும் பழமைவாய்ந்த விவசாயக்கிராமங்களாக காணப்படுகின்றது.

இந்நிலையில் இப்பகுதிகளில் உள்ள பயிர் செய்கை நிலங்களுக்குள் கடல் நீரானது உட்புகுந்து உவர் நிலமாக மாறி வருகின்றது.

அதாவது இப்பகுதிகளில் பெய்யும் மழைநீர் வெள்ளமானது முடக்கன் ஆற்றினூடாக மண்டைக்கல்லாற்றினைச்சென்று அதனூடாக பூநகரி கடலைச் சென்றடைகின்றது.

இதேபோன்று கடல் பெருக்கு காலங்களில் உவர்நீரானது மண்டைக்கல்லாறு வழியாக முடக்கன் ஆற்றினை சென்று அதனூடாக குஞ்சுக்குளம் வன்னேரிக்குளம் ஆகிய பகுதிகளின் பயிர் செய்கை நிலங்களுக்குள் வருகின்றன.

இதனால் பெருமளவான பயிர் செய்கை நிலங்கள் உவர் நிலங்களாக மாறியுள்ளன.

தற்போது குஞ்சுக்குளம் பகுதியில் அறுநூறு ஏக்கர் வரையான வயல் நிலங்கள் உவர் நிலங்களாக மாறியுள்ளதுடன் பயிர் செய்கை எதுவும் மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் குடிநீர் கிணறுகள் உவர் நீராக மாறியதன் விளைவாக இங்குள்ள குடும்பங்கள் படிப்படியாக வெளியேறியுள்ளன. ஆரம்பகாலத்தில் குஞ்சுக்குளம் கிராமத்தில் இயங்கி குஞ்சுக்குளம் கனேசாவித்தியாலயம் என்ற பாடசாலையும் கலைவாணி முன்பள்ளியும் இன்று இயங்காது அழிந்;து போயுள்ளது.

தற்போது பத்துவரையான குடும்பங்களே இப்பகுதிகளில் வசித்து வருவதாகவும் இவ்வாறு குஞ்சுக்குளம் கிராமம் உவர் நீரால் அழிவடைந்துள்ளது எனத்தெரிவித்த இப்பகுதி விவசாயிகள் தற்போது உவர் தன்மையானது சோலை ஆனைவிழுந்தான் இரண்டு ஏக்கர் திட்டம் ஆகிய பகுதிகளை நோக்கி படர்வதாகவும்இன்னும் குறிப்பிட்டசில ஆண்டுகளில் இந்தக் கிராமங்களும் உவர் நீரால் அழியும் ஆபாயநிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ள இப்பகுதி விவசாயிகள் மண்டைக்கல்லாறு பகுதியில் உவர் நீர்த்தடுப்பணையினை அமைத்துத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழர்களின் தனித்துவத்தை அழிக்க நினைத்தால் ஆட்சியை கவிழ்ப்போம்; சார்ள்ஸ் எம்.பி.தெரிவிப்பு

வவுனியா க.மதி

தமிழர்களின் தனித்துவத்தினை அரசாங்கம் அழிக்க நினைத்தால் இந்த ஆட்சியையும் தமிழ் தேசியக்கூட்டமைப்பு கவிழ்க்கும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியா சிதம்பரபுரம் சந்திரோதயம் விளையாட்டுக்கழகத்தின் 22 ஆண்டு நிறைவு விழாவும் சித்திரை புத்தாண்டு விளையாட்டுப் போட்டியிலும் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

வரவு செலவுத்திட்டத்திற்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பு ஏன் வாக்களித்தது என்ற கருத்து திருபுபடுத்தப்பட்டு மக்கள் மத்தியில் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது.; எங்கள் மக்களுக்கு எவ்வேளையிலும் துரோகம் செய்ய நினைப்பவர்கள் நாங்கள் அல்ல என்பதை தெளிவாக எம் மக்களுக்கு சொல்லி வைக்க விரும்புகின்றேன். ஆனால் இன்று இருக்கின்ற சூழ்நிலையின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற சதிப்புரட்சியின் மூலம் ஆட்சியை பிடிக்க எத்தனித்தவர்கள் மீண்டும் இந்த வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக ஆட்சிக்கு வரமுடியும் என்ற பரப்புரையை தென்பகுதியில் செய்து வந்தார்கள். அதனூடாக 2015 ஆம் ஆண்டுக்கு முட்பட்ட நிலைமையை கொண்டு வர அவர்கள் காத்திருந்தார்கள்.

2018 ஆம் ஆண்டு சதிப்புரட்சியை முறியடிப்பதற்காக நாங்கள் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியிருந்தோம். அப்போது ஆதரவு வழங்கியது சரி என்று அதற்கு ஆதரவு வழங்கிய சிலர் இன்று ஏன் வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவு வழங்கினீர்கள் என கேட்கின்றனர். அன்று நாம் ஆதரவு வழங்கியது சரி என்றால் இன்று வரவு செலவுத்திட்டத்

திற்கு ஆதரவு வழங்கியதும் சரி.

ஆனால் அரசாங்கத்தில் உள்ள பல நகர்வுகள் மக்கள் ஏற்றுக்கொள்ளமுடியாத வகையில் நகர்ந்துகொண்டிருக்கின்றது. அதனையும் நாங்கள் சொல்லியே ஆகவேண்டும். எமது மக்களுக்கு அபிவிருத்தி என்ற விடயம் மிகவும் தேவையாக இருக்கின்றது. அந்த வகையிலும் அமது பிரதேசத்தில் திட்டமிட்ட குடியேற்றங்கள் எமது பிரதேசங்களில் தொல்பொருள் திணைக்களத்தினால் எமது பாரம்பரிய இடங்கள் மற்றும் வரலாற்று சின்னங்களையும் அழிக்கின்ற நிகழ்வுகளும் இந்த நேரத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதனை தற்போதுள்ள அரசாங்கத்திடம் தெளிவாக நாம் கூறியிருக்கின்றோம்.

நாம் வரவு செலவுத்திட்டத்திற்கு வாக்களித்திருந்தாலும் கூட உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மீதான வாக்கெடுப்பில் நடுநிலை வகிப்பதாக சபாநாயகருக்கு தெரிவித்திருந்தோம். ஏனெனில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு எல்லா நேரத்திலும் எல்லா சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் என்ன பிழை செய்தாலும் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்போம் என எண்ணிவிடக்கூடாது என்பதற்காகவே இந்த நிலையை எடுத்திருந்தோம். இந்த அரசாங்கத்திற்கு நாங்கள் ஒரு விடயத்தினை சொல்லவிரும்புகின்றோம். அதாவது தமிழ் தேசியக்கூட்டமைப்பால் ஆட்சி அமைத்த அரசாங்கம் எதிர்காலத்தில் தமிழர்களின் தனித்துவத்தினை அழிக்க நினைத்தால் தமிழ் தேசியக்கூட்டமைப்பால் இந்த அரசாங்கம் ஆட்சியை இழக்கும் என்பதனையும் சொல்லி வைக்க விரும்புகின்றோம்.

இந்த நிலையில் மகிந்த ராஜபக்ச அணி மீண்டும் முன்னாள் பாதுகாப்பு செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கி வித்தியாசமான நகர்வை கொண்டு செல்ல திட்டமிட்டிருக்கின்றனர். ஆகவே இந்த விடயங்களை தடுப்பதற்காகவும் எங்களுடைய மக்களின் நன்மை கருத்தியும் இந்த வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவளித்திருந்தோம்.

இன்று பாராளுமன்றத்தில் உள்ள சிலரது தந்தையின் தந்தையினுடைய (அப்பப்பா) பெயர் தமிழ் பெயராக காணப்படுகின்றது. அவர்கள் தமிழர்கள். அந்த பெயர்களை சொன்னால் அவர்களுக்கு தென்பகுதியில் வாக்குகள் குறையும். எனவே தமிழர்கள் போராடியிருக்காவிட்டால் அவ்வாறான நிலையே இங்கும் உருவாகியிருக்கும்.

தற்போது தமிழர்கள் தனித்துவமாக வாழ்வதற்கு பலவிதமான முட்டுக்கட்டைகளை அரசாங்கம் எடுக்கின்றது. அது ஐக்கிய தேசிய அரசாங்கமாக இருந்தர்லும் சரி சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கமாக இருந்தாலும் சரி பொதுஜன பெரமுன அரசாங்கமாக இருந்தாலும் சரி அனைவரும் அதில் தெளிவாகவே இருக்கின்னர். அதனால் தான் தமிழ் தேசியக்கூட்டமைப்பில் இருந்து பிரிகின்றவர்களுக்கு அரசாங்கம் ஊக்குவிக்கின்றது. அத்துடன் தேசியக்கட்சிகளில் இருக்கின்ற தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களினூடாக தமிழ் மக்களையும் பிரிக்கின்றது. இதற்கு காரணம் தமிழர்களின் தனித்துவத்தை இல்லாமல் செய்துவிட்டால் அரசியல் தீர்வையும் கேட்க மாட்டார்கள் கௌரவமாக வாழக்கூடிய சூழ் நிலையையும் கேட்க மாவட்டார்கள் என்பதற்காகவே.

எனவே தமிழ் மக்கள் தனித்துவமாக வாழ வேண்டுமாக இருந்தால் அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசில்வாதிகளும் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒற்றுமையாக ஒரே பாதையில் பயணிக்க வேண்டும் என தெரிவித்தார்.

வவுனியாவில் கொள்ளையிடப்பட்ட நகை மற்றும் பணம் மீட்பு

வவுனியா க.மதி

வவுனியாவில் அடகு கடையில் இருந்து திருடப்பட்ட பெருந்தொகை பணம் மற்றும் நகை மீட்கப்பட்டுள்ளதுடன் ஒருவரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றி தெரியவருவதாவது,

கடந்த சில நாட்களிற்கு முன் நகை அடகு கடையில் இருந்து பெருந்தொகையான பணம் மற்றும் நகைகள் கொள்ளையிடப்பட்டடிருந்தது. இது தொடர்பான விசாரணையினை வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வந்திருந்த நிலையிலேயே ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த அடகு கடையில் இருந்து கொள்ளையிடப்பட்ட ஆறு

இலட்சத்து எழுபத்து மூவாயிரம் ரூபா பெறுமதியான நகையும் பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட பணமும் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட பொருட்களை வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு காண்பிக்கப்பட்டிருந்தது.

வவுனியா அல் அக்சா மகாவித்தியாலய கல்விச்செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

வவுனியா க.மதி

வவுனியா அல் அக்சா மகாவித்தியாலயத்தின் மேல் மாடி கட்டத்தினிள் குளவி கூடு கட்டியதன் காரணமாக பாடசாலை செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தது.

இஸ்லாமிய பாடசாலைகள் தற்போது இயங்கிவரும் நிலையில் இவ்வாறான சம்பவம் பாடசாலையில் இடம்பெற்றமையால் மாணவர்கள் அனைவரும் கட்டத்தில் இருந்து பாதுகாப்பு கருதி வெளியேற்றப்பட்ட நிலையில், நீண்ட நேரமாக இதற்கான தீர்வு எடுக்கப்பட முடியாமையினால் மரங்களிற்கு கீழும், கொட்டகைகளுக்குள்ளுமாக மாணவர்களிற்கான கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதேவேளை கடந்த மாதம் ஏழாம் திகதியும் இவ்வாறு குளவி கூடு கட்டியிருந்தமையினால் பாடசாலையின் கற்றல் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பளையில் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை திறப்பு

கிளிநொச்சி பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறச் சங்கத்தின் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கள் சில வேளைகளில் விற்பனைக்கு அப்பால் எஞ்சியவற்றை நிலத்தி ஊற்றுவது அல்லது குறைந்த விலையில் ஏனைய வடிசாலைகளுக்கு விற்பனை செய்து வந்தனர். இதனால் தொழிலாளர்களும் சங்கத்திற்கும் பெரும் வருமான இழப்பு ஏற்பட்டு வந்தது. இதனை கருத்தில் எடுத்து சங்கத்தின் நிர்வாகத்தினர் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் ஆகியோர் நிதி அமைச்சருடன் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக தற்போது பளை பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்திற்கு போத்தலில் கள் அடைப்பதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

இதன் மூலம் சங்கத்திற்கும் தொழிலாளர்களுக்கும் வருமான அதிகரிப்பு ஏற்படும் என தெரிவிக்கப்படுகிறது. எனவே இனிவரும் காலங்களில் மேலதிக கள் போத்தலில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதோடு வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதியும் செய்யப்படும் எனவும் சங்கத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சித்திரை வருடப்பிறப்பும் தமிழர் சம்பிரதாயங்களும்

சித்திரை பிறந்தாலே தமிழர்கள் பலர் தமது வாழ்வுக்கான வழிகளையும், திட்டங்களையும் வகுத்துக்கொள்வார்கள். இது தமிழர்களுக்கான புதுவருடம். தை மாதத்தினை விட சித்திரையே தமிழர்கள் ஏற்றுக்கொண்ட வருடமாகின்றது. சூரியன் சித்திரை மாதத்தில் ராசிகளில் முதலாவதாகிய மேஷ ராசியில் உதயமாகும் தினம் சித்திரை வருடப் பிறப்பு புண்ணியகாலம் எனப்படுகிறது. இதனை மேஷ சங்கராந்தி என்றும், சித்திரை விஷூ என்றும் அழைப்பார்கள். விஷூ என்பதற்கு இரவும் பகலும் சமமானது என்று பொருள். தமிழர்களது காலக்கணிப்பு முறையின்படி ஒரு ஆண்டுக்குரிய பன்னிரெண்டு மாதங்களில் சித்திரை முதலாவது மாதமாக கருதப்படுகிறது. தமிழ் மாதங்கள் சூரிய மாதங்கள் எனப்படுகின்றன. ஏன் என்றால், இம் மாதங்கள் பூமிக்குச் சார்பாகத் தோன்றுகின்ற சூரியனுடைய இயக்கத்தை அடிப்படையாக வைத்தே கணிக்கப்படுகின்றன. இராசிச் சக்கரத்தில் மேட இராசிக்குள் சூரியன் நுழைவதிலிருந்து அந்த இராசியை விட்டு வெளியேறும் வரையில் உள்ள காலம் சித்திரை மாதமாகும்.

சித்திரை மாதம் 31 நாட்களைக் கொண்டது. ஆங்கில நாட்காட்டியில் ஏப்ரல் மாதம் 14 ஆம் நாள் முதல் மே மாதம் 14 ஆம் நாள் வரை தமிழ் சித்திரை மாதமாகும். சூரியன் மேட இராசிக்குள் நுழைவது சித்திரை மாதப் பிறப்பு எனப்படும். சித்திரை முதல் மாதம் என்பதால் இதுவே புதிய ஆண்டின் தொடக்கமும் ஆகும்.

இதனால் சித்திரை மாதம் முதல் நாளை உலகத் தமிழர்கள் அனைவரும் தமிழ் வருடப் பிறப்பாக சிறப்பாக கொண்டாடுகின்றனர். இலங்கையில் தமிழ்- சிங்கள மக்களால் கொண்டாடப்படும் வைபவமாக புதுவருடப் பிறப்பு இருப்பதால் இது ஒரு தேசியப் பெருவிழாவாகவும் முக்கியத்துவம் பெறுகிறது. புதிய எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கைகளையும் வைத்து மங்களகரமான திருநாளாக சித்திரைப் புதுவருடம் வரவேற்கப்படுகிறது. சிங்களமக்களுக்கும் தமிழர்களுக்குமான இவ் திருவிழா அனைத்து மக்களாலும் எதிர்பார்க்கப்படுகிறது.

சித்திரை மாதம் பிறந்ததுமே இளவேனில்காலம் என்னும் வசந்த காலம் தொடங்குகிறது.

வசந்த காலத்தில் மாமரங்களில் மாந்தளிர்களும், மலர்களும் பூத்துக் குலுங்கும். அச்சமயம் வேப்ப மரங்களில் வேப்பம் பூக்கள் பூத்துக் குலுங்கும். மனித வாழ்க்கை இனிப்பும், கசப்பும் கலந்தே இருக்கும் என்பதை எடுத்துக் காட்டும் அம்சமாக இச்செயற்பாடு கருதப்படுகிறது. ஐக்கியம், சமய, சமூக, கலாசார உறவுகள், பண்பாட்டுக் கோலங்கள் என்பவைகளை எடுத்துக் காட்டும் வகையிலும் நல்லெண்ணம், நல்லுறவு, ஐக்கியம், அன்புப் பரிமாற்றம், குதூகலம், விருந்தோம்பல் போன்ற மனிதப் பண்பாட்டின் உயர்ந்த அம்சங்களை வெளிப்படுத்தும் வகையிலும் கொண்டாடப்படும் சமூக விழாவான புது வருடத்தில் இறைவழிபாடு, தானதர்மம், ஆசிபெறுதல் என்பவைகளையும் நாம் கடைப்பிடிப்பது வழக்கமடகிறது.

இந்த புண்ணிய காலத்தில் சகலரும் இறைவனை நினைத்து தூயமனத்துடன் பிராத்தனை செய்து சிரசில் விலா இலையும் காலில் கலப்பம் இலையும் வைத்து மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்தல் வேண்டும். மருத்து நீர் வைத்தல் என்பது முக்கிய விடயமாக புதுவருட தினத்தில் கருதப்படுகிறது.

இம்மருத்துநீர் தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், திற்பலி மற்றும் சுக்கு என்பவற்றை நீரிலே கலந்து காய்ச்சப்படும். மருத்து நீர் வைத்து நீராடினால் புத்தாண்டின் நல்ல பலன்களை பெறலாம் என்பது நம்பிக்கை ஆகும். வெண்மை மற்றும் சிவப்பு நிற ஆடைகள் அல்லது வெண்மை சிவப்புகரையுடைய ஆடை அணிந்து ஆலயங்களுக்குச் சென்று இறைவழிபாடு செய்தல் வேண்டும். இரத்தினம், பவளம், முத்து பதித்த ஆபரணங்கள் அணிதல் சிறப்புக் குரியதாகும்.

புதுவருட தினத்தில் தான தருமங்கள் செய்வது வழக்கம். ஏழைகளுக்கும், உறவினர்களுக்கும் தானம் செய்ய வேண்டும். அத்துடன் வேப்பம்பூ, பொரிக்கறி, கசப்பு சேர்ந்த அறுசுவை உணவு, இனிப்புப்பண்டங்கள்போன்றவற்றை விருந்தினருடன் உண்டு மகிழ்ந்தால் அந்த ஆண்டு முழுவதுமே குதூகலமாக இருக்கும் என்பது மக்களின் முக்கிய நம்பிக்கையாகும். இதற்காகவே விருந்தினர் வருகையும் விருந்தோம்பலும் நம் பாரம்பரியமாக மாறியது.

சித்திரைப் புதுவருடத்தின் மற்றொரு சிறப்பு அம்சம் கைவிசேடமாகும். ஆரம்ப காலத்தில் வீட்டின் தலைவி உரிய சுப நேரத்தில் சிறிய மூலிகைப் பொட்டலம் ஒன்றினை கிணற்றுக்குள் போட்டுவிட்டு பிறக்கும் புத்தாண்டு நிமித்தம் முதல் முறையாக தண்ணீரை கிணற்றிலிருந்து வெளியில் எடுப்பதையே கை விசேடமாக கருதப்பட்டது. ஆயினும் நாளடவில் கைவிசேடம் என்பது சுபமுகூர்த்தத்தில் பணத்தை கொடுப்பதும் எடுப்பதும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நல்ல நேரத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் குடும்பத் தலைவரிடமிருந்தும், வயதில் மூத்தவர்களிடமிருந்தும், அலுவலகங்கள், விற்பனை நிலையங்கள், தொழிற்சாலைகள் என்பவைகளில் வேலை செய்வோர் தங்கள் வேலை கொள்வோரிடமிருந்தும் புதுவருடத்தில் முதல் அன்பளிப்பாக வெற்றிலையில் பாக்கு, நெல்லு காசு என்பவற்றை வைத்து குத்து விளக்கின் முன்னாலே வைத்து கொடுப்பர்கள். பணத்தை கைவிசேடமாக பெற்றுக் கொள்வார்கள். கொடுக்க பட்ட எல்லாவற்றையும் எண்ணி (நெல்லு உட்பட) அது ஒற்றை விழுந்தால் நல்ல பலன் என்பது ஐதீகம். கைவிசேடம் பரிமாறிக் கொள்வது என்பது ஒரு பாரம்பரியமான வழக்கமாகும்.

மூத்தோர்களிடமிருந்து கைவிசேடம் பெற்றால் அந்த ஆண்டு முழுவதும் பணவரவும் பல நன்மைகளும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. கைவிசேடமாக பெற்ற பணத்தை அந்த ஆண்டு முழுவதும் பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என்பதும் நம்பிக்கையாக கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது.

சித்திரைப் புதுவருடம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பெருவிழாவாக இங்கு சிறப்புப் பெறுவதுடன், தமிழ், சிங்கள மக்களுக்கு இடையிலான நெருங்கிய தொடர்புகளை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்திருந்தாலும் கொண்டாடுவதில் சில தனித்தனியான பாரம்பரிய கலாசார நடைமுறைகளைப் பின்பற்றி வருகிறார்கள்.

சமாதானம் சந்தோஷம் ஆகியவற்றை சுமந்து வெள்ளைநிற வண்டியில் வரும் இந்திரதேவ குமரனின் வருகையினை கொண்டாடும் விதத்திலேயே சித்திரை புத்தாண்டை சிங்கள பௌத்தர்கள் கொண்டாடுவதாக வரலாறு கூறுகின்றது. புத்தாண்டு பிறக்கும் செய்தியினை குயில் தன் குரலால் உலகறியச் செய்வதாக நம்பப்படுகின்றது.

சிங்கள மக்கள் தமது புதுவருடத்தில் புத்தாண்டுக்கான ஏற்பாடுகள் அதற்கான சுபநேரத்தில் அரிசி இடித்து அடுப்புக் கட்டி பலகாரம் சுடுவதுடன் ஆரம்பிக்கப்படுவது வழக்கமாகும். அடுத்ததாக பழைய வருடத்திற்கான ஸ்நானம் இடம்பெறும். உடலையும் உள்ளத்தையும் சுத்தப்படுத்தும் நோக்கில் இடம்பெறும் இந்த குளியில் பழைய வருடத்திற்கான இறுதிக் குளியலாகும். புத்தாண்டுக்கான விசேட நீராடல் சிங்களவர் மத்தியில் வழக்கத்தில் இருந்து வருகின்றது.

புத்தாண்டு பிறப்பதற்கு முன் எழுந்து மருத்து எண்ணை வைத்து குளிப்பார்கள். விகாரைக்கு சென்று வழிப்பட்டு புத்தாண்டு பிறப்பு நேரத்தில் பட்டாசு கொளுத்துவர். புத்தாடை உடுத்தி பால் பொங்குதல்இ பால்சோறு சமைத்தல் அத்துடன் தின்பண்டங்கள் தயாரித்தலில் ஈடுபடுவர். இத்துடன் பணியாரம், வாழைப்பழம் மற்றும் தின்பண்டங்களும் வைத்து படையல் இடுவர்கள். இப் படையலில் முக்கியமாக பால்சோறு இருக்கும்.

நல்ல நேரத்தில் குத்து விளக்கேற்றி ஊதுவர்த்தி கொழுத்தி சாம்பிராணிப் புகைப் பிடிப்பர். குடும்பத்துடன் உணவு பரிமாறி உண்பர். அயலவர்களிடமும் உணவு பரிமாறிக்கொள்வர். பெரியோரை மதித்து வணங்குவர் அத்துடன் கைவிசேடம் பெறுவர். புண்ணியக் காலம் என்று குறிக்கப்பட்டிருக்கும் நேரத்திற்கு முன்பாக கொடுக்கல் வாங்கல்கள் செய்வர். ஒரு சம்பிரதாயத்திற்காக தத்தமது வேலை/தொழில் செய்வர். பின்னர் அநேகமானோர் புத்தர் விகாரைகளிற்கு பன (பௌத்த உரை) கேட்பதற்காகவும் வேறு விசேட நிகழ்வுகளுக்காகவும் செல்வர். இப் புண்ணியக் காலம் முடிந்தப் பிறகு, புத்தாண்டு கலாச்சார மற்றும் விநோத விளையாட்டுப் போட்டிகளை நடத்துவர். பெண்கள் றபான் அடிப்பர். இது தமிழரிடம் இல்லாத ஒரு வழக்கமாகும். சிலவேளை புண்ணியக்காலம் இரவில் முடிவடையுமாயின்இ இந்நிகழ்வுகள் அடுத்த நாளிலோ அல்லது அடுத்து சில நாட்களிலோ தமது வசதிக்கேற்ப வைத்துக்கொள்வர்.

சிங்கள பௌத்தர்கள் சித்திரைப் புத்தாண்டை பகைமை ஒழிப்புக்கான சிறந்த வாய்ப்பாக உபயோகப்படுத்திக் கொள்வது வழக்கத்தில் இருந்து வருகின்றது.

நீண்ட காலமாக பகைமை கொண்டிருந்த நண்பர்கள்இ உறவினர்கள் ஆகியோரை பார்க்கச் சென்று பகைமை தீர்த்துக் கொள்ளப்படும்.

நாட்டின் முக்கிய பகுதிகளிலும் கலை, கலாசார, இசை நிகழ்ச்சிகளுடன் சித்திரைப் புதுவருடம் சிறப்பாகவே கொண்டாடப்படும். இடத்துக்கு இடம் அந்தந்தப் பிரதேச கலாசார மரபுகளுக்கு அமைய வைபவ நடைமுறைகள் வேறுபட்டிருந்தாலும் பாரம்பரியமான நிகழ்ச்சிகளான போர்த்தேங்காய் அடித்தல், சேவல் சண்டை, கிளித்தட்டு, சடுகுடு போன்ற விளையாட்டுகள் எல்லா இடங்களிலும் நடைபெறும் சிறப்பு அம்சங்களாகும். இத்துடன் சில சமூகங்களில் பாரம்பரிய முறையிலான ஊஞ்சலாட்டம், கும்மியடித்தல், கொக்கான் வெட்டுதல், பல்லாங்குழி, ராபான் அடித்தல், சொக்கட்டான் போன்ற பெண்கள் கலந்து கொள்ளும் விளையாட்டுகளும் இடம்பெறுவதுண்டு. அத்துடன் மாட்டு வண்டிச் சவாரி, துவிச்சக்கர வண்டி ஓட்டம், மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், தலையணை சண்டை வழுக்கு மரம் ஏறுதல் போன்ற போட்டிகளும் சித்திரைப் புதுவருடத்தையொட்டி நடைபெறுவது வழக்கம்.

புதுவருடத்திற்காக அடுப்பு மூட்டுவதும் ஒரு பழக்கமாகும். பழைய வருடத்தின் முடிவில் அனைத்து அடுப்பு வேலைகளும் முடிவிற்குக் கொண்டு வரும் வீட்டுத் தலைவி அடுப்புச் சாம்பலையும் அப்புறப்படுத்தி அடுப்பை தூத்துவிடுவான். அதன் பின் புத்தாண்டு பிறக்கும் வரை வீட்டில் அடுப்பு பத்த வைப்பதில்லை. உரிய நேரம் காலம் பார்த்து மீண்டும் புதுப்பானை வைத்து பொங்குவதற்காக வீட்டுத் தலைவி சுபமுகூர்த்தத்தில் அடுப்பை பத்த வைப்பதே வழக்கத்தில் இருந்து வருகின்றது.

குடும்பத்தினர், உறவினர்களுடன் ஒன்றிணைந்து பட்டாசு வெடிகளுடன் புதுவருடத்தை வரவேற்று குதூகலமாகக் கொண்டாடும் நிலைமையானது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரியதாகும். புதுவருடத்தின் சுபநேரம் பார்த்து தங்கள் தொழிற்கருமங்களை ஆரம்பிப்பதும், பொதுமக்கள் ஒவ்வொருவரும் நல்ல நாள் பார்த்து தங்கள் உறவினர்களினதும் நண்பர்களினதும் வீடுகளுக்குச் சென்று வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டு விருந்துபசாரங்களில் கலந்து கொள்வதும்இ பெரியோர்களைச் சந்தித்து நல்லாசிகளைப் பெற்றுக் கொள்வதும் சிறப்பான பாரம்பரிய நிகழ்வுகளாகும்.

புதுவருடம் பிறந்ததன் பின் பஞ்சாங்க கணிப்பின்படி சுப தினத்தில் சுப நேரத்தில் தொழிலிலுக்குச் செல்வது அல்லது தொழிலை ஆரம்பிப்பதன் மூலம் தொழில் விருத்தி அடையும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

ஆரம்ப காலத்தில் முற்றத்தில் விளக்கேற்றி வைத்துஇ அதன் அருகே வைக்கப்பட்டிருக்கும் மண்வெட்டியைக் கொண்டு வீட்டின் தந்தை மண்ணை வெட்டி கத்தியால் ஒரு பிலா மரத்தின் கிளையினை வெட்டுவதே வழக்கத்தில் இருந்து வந்தது. காலப் போக்கில் அந்தந்த ஆண்டிற்கு ஏற்ப பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்ட வர்ண உடைகளை அணிந்து, சுப திசை சுப நேரம் ஆகியவற்றுக்கு அமைய அலுவலகத்திற்குச் செல்வதே வழக்கமாகி விட்டது. அநேகமாக எல்லா அலுவலகங்களும் விடுமுறையாக இருக்கும். இருந்தாலும் பலர் அந்த சுபவேளைகளில் அலுவலகம் சென்றுவரும் வழமைகளும் உண்டு.

பிறக்கின்ற இவ்வருடம் அனைவருக்கும் நன்மைபயக்கவேண்டும் என்பது எல்லோரினதும் எதிர்பார்பாகிறது. மனிதமனங்களில் பதிந்துள்ள அழுக்குகள் நீக்கப்பட்டு ஒளி பொருந்தும் நன்நாளாக மாறவேண்டும்.

சாந்தியும் சமாதானமும் நிறைந்த உருவாகும் காலத்திற்காய் அனைவரும் வேற்றுமைகள் நீங்கி மனிதத்துடன் இருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் புதிய வருடத்தை வரவேற்போம்.

விகாரி சித்திரை புதுவருடப் பிறப்புப் பற்றிய விபரங்களுடன் திருக்கணிதம், வாக்கிய பஞ்சாங்கங்களில் பதிவான புதுவருடப் பலன்களும்

இரகுநாதையர் வாக்கியப் பஞ்சாங்கப்படி விகாரி புதுவருடப் பிறப்பு 2019.04.14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 01 மணி 12 நிமிடத்திற்கு பிறக்கின்றது.

விஷு புண்ணிய காலம் அன்று காலை 09.12 முதல் மாலை 05.12 வரையாகும். மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்யும் போது தலைக்கு ஆலிலையும், காலுக்கு இலவமிலையும் வைக்க வேண்டும்.

பலன்: இவ்வருடம் முன்மழை சமம். பின்மழை குறைவு. பின்பு அதிக குளிர். ஸ்திரிகள் மூலம் கஷ்டம். கல்வியில் தடங்கல் ஏற்பட்டு பின் முன்னேற்றம். அந்நிய செலவாணி அதிகரிக்கும். பொருட்களின் விலை ஏற்றம், ஜனங்களுக்கிடையே ஒற்றுமை குறைவு. புடவைத் தொழில் வர்த்தகம் விருத்தி. கமம் விருத்தி. வருட நடுப்பகுதியில் வெப்பம் அதிகரித்தல். அரசியலில் சிறு குழப்பம் என்பன உண்டாம் என்று வாக்கியத்தில் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதேவேளை திருக்கணித பஞ்சாங்கம் ஒரு சில மாற்றங்களுடன் வருடப்பிறப்பு, சங்கிரமண புண்ணிய காலம் என்பனவும் புதுவருட ஜாதக பலனும் வேறுபட்டும் ஒருசில ஒருமித்தும் காணப்படுவதை விரிவாக இக்கட்டுரையில் விளக்கப்பட்டிருக்கிறது.

திருக்கணித பஞ்சாங்கப்படி வருடம் 2019.04.14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02 மணி 09 நிமிடத்தில் பிறக்கிறது.

சித்திரைப் புதுவருடம் பிறக்கும்போது உதய லக்கினம் கடகமாகி, லக்கினாதிபதி சந்திரன் பலமடைந்திருப்பதால், சுபப்பலன்கள் கிடைக்கிறது. அரசக் கிரகம் சூரியன் உச்சமடைந்து குருவின் நற்பார்வை பெறுவதால் நன்மையான பலன்கள் அதிகமாக நிகழும். 2ஆம் வீட்டதிபதி சூரியன் 9ஆம் பாவத்தைப் பெறுவதால், அந்நிய நாட்டுத் தொடர்புகளால் வருமானம் உயர்வடையும். போக்குவரத்துக்களில் வசதியீனங்கள் தென்படும். புதன் நீசமடைந்து 8ஆம் பாவத்தைப் பொருந்துவதால் கல்வித்துறையில் சற்று மந்த நிலை ஏற்படும்.

குருபகவான் பலமடைந்து 5ஆம் பாவத்தைச் சேர்வதால், சமயத்துறையில் முன்னேற்றம் காணப்படுவதோடு, சமயத்தலைவர்கள் கௌரவிக்கப் படுவார்கள். சுக்கிரன் அட்டமஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், விவாக தாமதங்களும், விவாகரத்துக்களும் ஏற்படக்கூடும். செவ்வாய் நற்சஞ்சாரம் செய்வதால் விவசாய வளர்ச்சி நன்றாக அமையும். இலங்கையை ஆளும் கும்பராசிக்கு அதிபதி சனி 11 ஆம் வீட்டில் வருவதாலும் நாட்டில் நல்ல முன்னேற்றமுண்டாகும். பொருளாதாரமும் ஸ்திர நிலையை அடையும். மேற்குறிப்பிட்டபடி சித்திரை புதுவருட விகாரி பலன்களை கிரக நிலைப்படி குறிக்கப்பட்டிருப்பதை அறியமுடியும்.

புனர்பூசம், பூசம், ஆயிலியம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம், ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் தோஷ நட்சத்திரங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. இந்நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் தவறாது மருத்துநீர் வைத்து ஸ்நானம் செய்து இஷ்ட, குல தெய்வங்களை வணங்க வேண்டும்.

கைவிசேடம்: 14.04.2019 ஞாயிறு இரவு 08.20 மணி முதல் 09.30 மணி வரையும் 15.04.2019 திங்கட்கிழமை காலை 05.00 மணி முதல் 06.00 மணி வரையும்.

பல்துறைக் கலைஞர், சமூக தீபம்
சிவஸ்ரீ.அ.அரசரெத்தினம்
சேனையூர் ஸ்ரீ நாகம்பாள் ஆலயக் குருக்கள்

மே 10இல் 'அயோக்யா'

விஷால் நடிப்பில் உருவாகியுள்ள 'அயோக்யா' திரைப்படம் மே 10-ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

'சண்டக்கோழி 2' படத்துக்குப் பிறகு விஷால் நடித்துள்ள படம்'அயோக்யா'. ஏ.ஆர்.முருகதாஸிடம் உதவியாளராகப் பணியாற்றிய வெங்கட் மோகன் இயக்கியுள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து, இறுதிகட்டப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வந்தன.

ஏப்ரல் 19-ம் தேதி வெளியீடு என்று அறிவிக்கப்பட்ட இப்படம், இறுதிகட்டப் பணிகள் முடிவடையாத காரணத்தால் தள்ளிவைக்கப்பட்டது. தற்போது மே 10-ம் தேதி வெளியீடு என்று அதிகாரப்பூர்வமாக படக்குழு அறிவித்துள்ளது.

ராஷி கண்ணா, பார்த்திபன், இயக்குநர் கே.எஸ்.ரவிகுமார் உள்ளிட்ட பலர் விஷாலுடன் நடித்துள்ளனர். சாம் சி.எஸ். இசையமைத்துள்ளார். சில நாட்களுக்கு முன்பு வெளியான இந்தப் படத்தின் டீஸருக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

தெலுங்கில் வெளியான 'டெம்பர்' படத்தின் ரீமேக் இது என்பது குறிப்பிடத்தக்கது. லகரி மியூஸிக் நிறுவனம் இதன் இசை உரிமையைக் கைப்பற்றியுள்ளது.

அஜித் விரைவில் இந்திப் படங்கள் பண்ண

அஜித் நடிப்பு பிரமாதம், விரைவில் இந்திப் படங்கள் பண்ண சம்மதம் தெரிவிப்பார் என்று தயாரிப்பாளர் போ
பிக்கை தெரிவித்துள்ளார்.

எச்.வினோத் இயக்கத்தில் அஜித் நடித்துள்ள படம் 'நேர்கொண்ட பார்வை'. இதன் படப்பிடிப்பு முடிந்து இறுதி
மும்முரமாக நடைபெற்று வருகிறது. இந்தியில் மாபெரும் வரவேற்பைப் பெற்ற 'பிங்க்' படத்தின் ரீமேக்காகும் இ

இப்படத்தின் எடிட்டிங்கில் சில காட்சிகளைப் பார்த்துவிட்டு, இதன் தயாரிப்பாளர் போனி கபூர் தனது ட்விட்ட
தெரிவித்துள்ளதாவது:

'நர்கொண்ட பார்வை' சில காட்சிகளை பார்த்தேன். மகிழ்ச்சி. அஜித்தின் நடிப்பு பிரமாதம். அவர் விரைவில் இ
செய்ய ஒப்புக் கொள்வார் என்று கருதுகிறேன். அவருக்காக 3 ஆக்ஷன் கதைகள் தயாராக உள்ளன, அதில் ஒன்றிற்கு
தெரிவிப்பார் என்று நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

இவ்வாறு போனி கபூர் தெரிவித்துள்ளார்.

'நேர்கொண்ட பார்வை' தயாரிப்பாளர் போனி கபூரின் இந்த ட்வீட் தகவல், அஜித் ரசிகர்கள் மத்தியில் பெரும்
கொண்டாட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

வித்யாபாலன், ஷ்ரத்தா ஸ்ரீநாத், இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரன், ரங்கராஜ் பாண்டே உள்ளிட்ட பலர் அஜித்துடன்
இப்படத்துக்கு யுவன் இசையமைத்துள்ளார். நீரவ் ஷா ஒளிப்பதிவு செய்துள்ளார். ஆகஸ்ட் 10-ம் தேதி இப்படம் வெ
படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ததா லூசிஃபர்?

மலையாள சினிமா தொடக்க காலத்திலிருந்தே அரசியலைப் பலவிதங்களில் பிரதிபலித்துவந்துள்ளது. காதல் படங்களில்கூட அரசியல் ஒரு சாரமாகச் சொல்லப்படுவதைத் தொடர்ந்து பார்க்கலாம். மார்க்சிஸ்ட் கட்சி ஆட்சி நடக்கும் இந்தக் காலகட்டத்தில் மார்க்சிஸ்ட் கட்சியின் தீரத்தை அடிப்படையாகக்கொண்டு பல படங்கள் சமீபத்தில் வெளிவந்துள்ளன. இவை அல்லாமல் அரசியல் பின்னணியில் வெகுமக்கள் சினிமாக்களும் சமீபத்தில் வெளிவந்து வெற்றிபெற்றுள்ளன. அந்த வரிசையில் ஒரு படம்தான் 'லூசிஃபர்'.

மோகன்லால், விவேக் ஒபராய், பிருத்விராஜ் சுகுமாரன், டொவினோ தோமஸ், இந்திரஜித் சுகுமாரன், மஞ்சு வாரியர் என நட்சத்திர நடிகர்கள் பலர் இந்தப் படத்தில் அணி சேர்ந்துள்ளனர். படத்தின் இயக்குநர் மலையாளத்தின் இளம் சூப்பர் ஸ்டார் பிருத்விராஜ் சுகுமாரன்.

'லெஃப்ட் ரைட் லெஃப்ட்' படத்தின் மூலம் கவனம் பெற்ற முரளி கோபிதான் கதை. இந்த அம்சங்களால் படம் பெரும் எதிர்பார்ப்புக்கு உள்ளாகியிருந்தது.

மோகன்லால், 'லால் சலாம்' என்னும் முழுநீள அரசியல் படத்தில் நடித்திருக்கிறார். பிருத்விராஜுக்கும்'தலப்பாவு', 'வாஸ்தவம்' ஆகிய அரசியல் பட அனுபவம் உண்டு. முரளி கோபிக்கும்'லெஃப்ட் ரைட் லெஃப்ட்' அனுபவம் இருக்கிறது. இந்த மூவரும் இணைந்து ஒரு நாயக சினிமாவுக்காக அரசியலைக் கையில் எடுத்திருக்கிறார்கள்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் நடந்த ஒரு பெரிய அரசியல் நிகழ்வைத்தான் படம் உந்துதலாகக் கொண்டு விரிகிறது. 2016-ல் படத்துக்கான கதை உருவானதாக பிருத்விராஜும் சொல்கிறார். முதல்வரும் மக்கள் செல்வாக்குள்ள தலைவருமான ராம்தாஸ் மருத்துவமனையில் மரித்துவிடுகிறார்.

அதனால் உருவாகும் நிச்சயமின்மையால் பல குளறுபடிகள் நடக்கின்றன. இரண்டாம் கட்டத் தலைவர், இடைக்கால முதல்வராகப் பரபரக்கிறார். அரசாங்கத்தையே ஒரு தொழிலாக நடத்திவரும் தலைவரின் கார்பரேட் மருமகனுக்கு வேறு திட்டம் இருக்கிறது.

கட்சியின் மக்கள் செல்வாக்குள்ள இளம் தலைவராகக் காட்டப்படும் ஸ்டீபன் நெடும்பள்ளிக்கு (மோகன்லால்) இதில் எதிலும் நாட்டமில்லை. இவர்கள் இருவரும் முரண்படும் புள்ளியில் படம் துளிர்க்கிறது.

ஏற்கெனவே பழக்கப்பட்ட கதையைச் சொல்வதற்கு ஒரு பெரிய கேன்வாஸை பிருத்விராஜ் தேர்ந்தெடுத்துள்ளார். அது ரஷ்யாவிலிருந்து இடுக்கிவரை நீள்கிறது. மோகன்லாலின் வருகைக்கு முன்பே படத்தில் அவரது பெயர் ஒரு பாதிரியின் குரலில் ஒலிக்கிறது: 'எஸ்தபானே (ஸ்டீபனே) நீ போய் ராம்தாஸைப் பார்க்கணும்'. பிறகு ஜூலியன் அஸாஞ் சேவாகத் தன்னைக் கருதிக்கொள்ளும் இந்திரஜித் சுகுமாரனின் கண்டுபிடிப்பின் வழி மோகன்லால் கதாபாத்திரம் பார்வையாளர்களுக்குச் சொல்லப்படுகிறது.

இந்த இரு காட்சிகளுக்கும் முன்பு சர்வதேசக் காவல் துறையான இண்டர்போல் அலுவலகக் காட்சி சிறு மின்னல்போல் வெட்டிச் செல்கிறது. இந்த விவரிப்பு, ஈர்க்கும் குற்றப் பின்னணியும் விநோதத்தன்மையும் கொண்ட அந்தக் கதாப்பாத்திரத்தின் மீது பார்வையாளர்களுக்கு எதிர்பார்ப்பை உருவாக்குகிறது. இந்த அலங்காரங்களுக்குள் இருக்கும் கதையை 80-களின் இந்தி, தமிழ் சினிமா பார்வையாளர்கள் கண்டுபிடித்துவிடுவார்கள்.

மோகன்லாலின் நாயக பிம்பத்துக்கு இதுபோல் நேர்மைசெய்த படம் சமீபத்தில் வெளிவரவில்லை. அதே நேரம் அவரது பிரபலமான படங்களைப் போல் இதில் அவர் மீசை முறுக்கவில்லை, முண்டு மடக்கிக் கட்டவில்லை. ஆறு வருஷத்த இடைவேள கழிஞ்சு இந்துசூடன் வந்திருக்குந்நு புதிய களிகள் காணாணும் சிலது காணிச்சுப் படிப்பிக்காணும் சிலது படிப்பிக்காணும் எனப் பஞ்ச் டயலாக் பேசவில்லை.

தீர்க்கமான முகமும் அளந்தெடுத்த வசனமும் கொண்டே ஒரு பிரம்மாண்ட மோகன்லாலை பிருத்விராஜ் உருவாக்கியிருக்கிறார். மோகன்லால் என்னும் நாயக பிம்பத்தைக் காண்பிப்பது இந்த மாதிரியான படத்தில் சவாலான விஷயம்தான். பிருத்விராஜ் அதைப் புரிந்துவைத்திருக்கிறார்.

'ராஜவிண்ட மகன்', 'விண்செண்ட் கோமஸ்', 'நரசிம்ஹம்', 'இந்துசூடன்', 'இருபதாம் நூற்றாண்டு', 'சாகர் அலைஸ் ஜாக்கி' போன்ற மோகன்லாலின் நாயக பிம்ப படங்களின் கதாபாத்திரங்கள், கதைகளைத் தாண்டி இன்றளவும் கொண்டாடப்படுபவை.

அவை எல்லாம் வெகுஜன மலையாள சினிமாவின் கலாச்சார அம்சங்கள். 'லூசிஃபரி'ன் 'ஸ்டீபன் நெடும்பள்ளி'யை அந்த வரிசையில் ஒன்றாக ஆக்க முயன்றிருக்கிறார்கள். ஆனால், அது வெற்றியடைந்ததா என்பது கேள்விக்குறிதான்.

ரஜினியின் 'தர்பார்' பூஜையுடன் ஆரம்பம்

ரஜினி நடிப்பில் உருவாகும் 'தர்பார்' படத்தின் படப்பிடிப்பு, படப்பூஜையுடன் மும்பையில் தொடங்கப்பட்டுள்ளது.

'பேட்ட' படத்துக்குப் பிறகு ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் உருவாகும் படத்துக்கு தேதிகள் ஒதுக்கியுள்ளார் ரஜினி. லைகா நிறுவனம் தயாரிக்கும் இப்படத்துக்கு 'தர்பார்' என்று தலைப்பிடப்பட்டு ஃபர்ஸ்ட் லுக் வெளியிடப்பட்டது.

தற்போது, 'தர்பார்' படப்பிடிப்பு படப்பூஜையுடன் மும்பையில் தொடங்கப்பட்டுள்ளது. இதில் லைகா நிறுவனத்தின் உரிமையாளர் சுபாஷ்கரன் கலந்துகொண்டார். காவல்துறை அதிகாரியாக ரஜினி நடிக்கும் இப்படத்தில் நயன்தாரா, யோகிபாபு, நிவேதா தாமஸ் உள்ளிட்ட பலர் நடிக்கவுள்ளனர்.

சந்தோஷ் சிவன் ஒளிப்பதிவு செய்யவுள்ள இப்படத்துக்கு அனிருத் இசையமைக்கவுள்ளார்.



இயக்குநர் பா.இரஞ்சித்தின் உதவியாளர் அதியன் ஆதிரை இயக்கத்தி
வாகி வரும் 'இரண்டாம் உலகப் போரின் கடைசி குண்டு' திரைப்படம் எ
உள்ளிட்ட இறுதிக்கட்ட வேலைகளில் உள்ளது. போருக்கு எதிரான ஒரு ப
உருவாகி வரும் இப்படத்தைப் பற்றி இயக்குநர் அதியன் ஆதிரை கூறியதா

'இங்கே சுனாமி தொடங்கி காய்கறி விலை ஏற்றம் வரைக்கும் எந்த ஒ
மாறுதல் நடந்தாலும், அது கடைக்கோடி மனிதனின் கனவைத்தான் சிதை
றது. அது, சாதாரண விளிம்பு நிலை மனிதனை தன் இயல்பான வாழ்க்கை
இருந்து இடம்பெயரச் செய்துவிடுகிறது. அதைப் பற்றி பேசும் படம்தான்
இது. தென் தமிழகத்தை களமாகக் கொண்டு உருவாகும் படங்களுக்கு நடு
இப்படம் விழுப்புரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளின் மண் வாசம் வீசும் பே
தமிழில் உருவாகிறது. நடிகர் தினேஷ் லாரி ஓட்டுநராகவும், நடிகை ஆ
கிராமத்து கல்லூரி மாணவியாகவும் நடிக்கிறார்கள்!' என்றார்.

காதோடு... காதாக...

பிரபல நடிகர் ஒருவர் வாரிசு நடிகைக்கு போட்டியாக உள்ளார். திறமை கொட்டிக் கிடக்கும் வாரிசு நடிகை சமூக வலைதளங்களில் பிரபலங்களை புகழ்ந்து தள்ளுவதை ஒரு வழக்கமாக வைத்துள்ளார். அவர் புகழ்வதை பார்த்தால் அடடா, அம்மணி எப்படி மனதார பாராட்டுகிறார் என்று ரசிகர்கள் சிலிர்ப்பார்கள். பட வாய்ப்பை பெறவே நடிகை இப்படி பாராட்டி ஐஸ் வைப்பதாகவும் விமர்சிக்கப்படுகிறது. இந்நிலையில் அவருக்கு போட்டியாக நடிகர் ஒருவர் கிளம்பியுள்ளார். ஆனால் ஐஸ் வைப்பதில் அவர் நடிகையே மிஞ்சிவிடுவார் போன்று. சில நேரம் அவர் பிரபலங்களை புகழ்வதை பார்த்தால் ரசிகர்களே எரிச்சல் அடைகிறார்கள். நடிகருக்கு தனது திறமை மீதிருந்த நம்பிக்கை போய்விட்டதா, அதனால் தான் இப்படி காக்கா பிடித்து வாய்ப்பு தேடப் பார்க்கிறாரா என்று சமூக வலைதளங்களில் விமர்சிக்கப்படுகிறது. அவர் தான் செய்யும் நல்ல காரியங்களை சமூக வலைதளங்களில் மறக்காமல் பதிவிடுகிறார். செய்வதை சொல்லிக் காட்டி பட வாய்ப்பு தேடுகிறார் என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. முதலில் நடிகையை விமர்சித்தவர்கள் நடிகர் ஐஸ் வைப்பதை பார்த்து இவருக்கு அந்தம்மா எவ்வளவோ பரவாயில்லை என்கிறார்கள்.

★★★★★

தங்கச்சி நடிகை முன்னணி ஹீரோவுடன் மீண்டும் ஜோடி சேரும் ஆசையில் தூதுவிட்டுக் கொண்டிருக்கிறாராம். தங்கச்சி நடிகை அறிமுகமான படத்திலேயே ரசிகர்களை கவர்ந்துவிட்டார். அதிலும் குறிப்பாக அந்த படத்தில் வந்த ஒரு பாடல் பட்டிதொட்டி எல்லாம் பிரபலமானது. முதல் படமே இப்படி என்றால் நடிகை நிச்சயம் ஒரு பெரிய ரவுண்டு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. நல்ல அழகும், நடிப்புத் திறமையும் இருந்தும் கூட தங்கச்சி நடிகையால் கோலிவுட்டின் முன்னணி நடிகையாக முடியவில்லை. தன் முதல் பட ஹீரோவுடன் மீண்டும் ஜோடி சேர்ந்து நடித்தார். அந்த ஹீரோ தற்போது வேற லெவலில் இருக்கிறார். படுத்து தூங்கும் தனது மார்க்கெட்டை தூக்கி நிறுத்த நடிகையும் ஏதேதோ செய்கிறார் ஒன்றும் கை கொடுக்கவில்லை. கவர்ச்சி புகைப்படம் வெளியிட்டும் கூட ஓர்க்அவுட் ஆகவில்லை. அவர் வாய்ப்பு கேட்டு தான் இப்படி எல்லாம் செய்கிறார் என்று தெரிந்தும் கூட இயக்குநர்கள் கண்டுகொள்ளவில்லை. தன் முயற்சிகள் பலன் அளிக்காத நிலையில் தன்னுடன் நடித்து தற்போது பெரிய ஹீரோவாக உள்ள அந்த நடிகருக்கு தூது விட்டுக் கொண்டிருக்கிறாராம் நடிகை. ஆனால் நடிகரோ அவர் வாய்ப்பு கேட்டு தூதுவிடுவதை கண்டும் காணாமல் இருக்கிறாராம். நடிகர் கண்டுகொள்ளாவிட்டாலும் மனம் தளராமல் நடிகை தொடர்ந்து தூது விடுகிறாராம். பட வாய்ப்பை பெற்று ஒரு ரவுண்டு வராமல் ஓய்வது இல்லை என்று ஒரு முடிவோடு இருக்கிறாராம் நடிகை. உங்களின் முயற்சி வெற்றி பெற வாழ்த்துக்கள் அம்மணி.

விபரீத முயற்

நான் சினிமாவுக்கு வந்தது விபத்து மாதிரி. ஒருபோதும் நடிகையாவேன் என்று எதிர்பார்க்கவில்லை என்கிறார் சம்யுக்தா மேனன். மலையாளக் கரையோரத்தில் இருந்து வந்திருக்கும் இவர் சமீபத்தில் வெளியான 'ஜூலை காற்றிலே' படத்தில் நாயகியாக நடித்தவர்.

தேவதையின் ரிஷிமூலம்?

சொந்த ஊர் கேரளா - தமிழக எல்லையோரமா பாலக்காடு. அப்பா துபாயில் டாக்டராக பணி புரிகிறார். அம்மாவுக்கு பாலக்காட்டில் வேலை. நான் சினிமாவில் நடிப்பதால் கொச்சினுக்கு ஷிப்ட்டாகி விட்டேன். வானுயர்ந்த அடுக்குமாடி வீட்டில் நான் மட்டும் வசித்தபோது தனிமை வாட்டி வதைக்கவே அம்மாவை துணைக்கு அழைத்தேன். அம்மாவும் எனக்காக வேலையை ராஜினாமா செய்துவிட்டு என்னுடன் வசித்து வருகிறார்.

சின்ன வயசுலேயே சினிமா ஆர்வமா?

இல்லைங்க. படிப்பில் நான் படுசுட்டி. எப்போதும் க்ளாஸ் ஃபர்ஸ்ட் வருவேன். அப்பாவைப் போல் எதிர்காலத்தில் டாக்டராக வேண்டும் என்ற கனவு எனக்குள் எப்போதும் ஓடிக் கொண்டே இருக்கும். ப்ளஸ் டூ முடித்தவுடன் மருத்துவத்துக்கான நுழைவுத் தேர்வுக்கு தயாராகிக் கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் போட்டோகிராபரான நண்பர் ஒருவரிடம் தப்பித் தவ
க்கிவிட்டது. நண்பரும்
அவருடைய முகநூல்
செய்திருக்கிறார். அந்த
இங்கே போய் ஒரு ம
டைப் படத்தை அலங்
அந்த அட்டைப்
நடிகையாக மாற்றிவி
வோ, நடிகையாகவோ
போதும் நான் நினை
இப்போது நடிகையாக
இனிதே ஆரம்பமாகி
உள்ளங்களால் 'களரி
போன்ற படங்களில் ந
தது. எதிர்பாராமல் வ
இப்போது சினிமாவை
மாக நேசிக்கிறேன்.

**நடிச்சுக்கிட்டே படிக்
சுமி மேனனெல்லாம் அ**

கண்டிப்பா அப்படி
இல்லை. இப்போது
றேன். மீண்டும் கல்லூ
ன்று என்னால் கல்லூ
முடியுமா என்று தெரி
மில்ல, 9 டு 5 வேலை
பாடில்லை.இப்போது

தமிழ்
ரெஜினா, இத
இணைத்து கிசு கி
அந்த தகவல்களை
சில மாதங்களுக்
டன் காதல் என
தார் ரெஜினா.
இந்நிலையி
கிசு கிசு கிளம்
துள்ளனர். அப்
வுட் வட்டாரத்
ரெஜினாவும் கே
'எத்தனை மு
கள் என தெரியவி
இப்போதைக்கு எனது
றேன். சினிமாவை தவி
நடித்தவருடன் என்னை
ஞங்கள்' என கோபமாக

ரெ
கே

கத்தி, வணக்கம் சென்னை படங்களுக்காக அனிருத் இசையில் ஹிப் ஆப் ஆதி 2 பாடல்கள் பாடியிருக்கிறார். தற்போது சிவகார்த்திகேயன் நடிக்கும் மிஸ்டர் லோக்கல் படத்துக்கு ஹிப் ஆப் ஆதி இசை அமைக்கிறார். இப்படத்துக்காக டக்குனு டக்குனு என்ற பாடலை அனிருத் பாடி தந்திருக்கிறார்.

இதற்கு தேங்கஸ் சொல்லியிருக்கும் ஆதி,'நீண்ட இடைவெளிக்கு பிறகு அனிருத்துடன் இணைந்ததில் மகிழ்ச்சி. எனது இசையில் பாடல் பாடியது இனிமையான அனுபவம். இதற்கு வாய்ப்பு தந்த சிவகார்த்திகேயன், இயக்குனர் ராஜேஷுக்கும் நன்றிகள். இந்த அனுபவம் மிகவும் சிறப்பாக அமைந்தது. பாசிடிவ் எண்ணங்களுடன் எனர்ஜி லெவலும் அதிகரித்தது. இன்னும் சிலபல பாடல்களில் இணைவோம்' என குறிப்பிட்டிருக்கிறார்.

...னுவார்

...னி கபூர் நம்
...கட்டப் பணிகள்
...து.
...ர் பக்கத்தில்
...ந்திப் படங்கள்
...அவர் சம்மதம்
...மகிழ்ச்சியையும்
...நடித்துள்ளர்
...வெளியாகும் என

ஹரீஷின்

'தனுசு ராசி நேயர்களே'

விஜய் டிவியில் ஒளிபரப்பான பிக் பாஸ் முதல் சீசனில் கலந்து கொண்டு பிரபலமடைந்தவர் ஹரீஷ் கல்யாண். ஏற்கெனவே படங்களில் நடித்திருந்தாலும் 'பிக்பாஸ்' நிகழ்ச்சியின் மூலமே பரவலாக அறியப்பட்டார். அதே பிக்பாஸ் நிகழ்ச்சியின் சக போட்டியாளரான ரைசா உடன் இவர் இணைந்து நடித்த 'பியார் பிரேமா காதல்' படம் நல்ல வரவேற்பை பெற்றது. அந்த படத்தின் வெற்றிக்குப் பிறகு ரஞ்சித் ஜெயக்கொடி இயக்கத்தில் 'இஸ்பேட் ராஜாவும் இதய ராணியும்' படம் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை.

இந்நிலையில் ஹரீஷ் கல்யாண நடிக்கும் அடுத்த படத்துக்கு 'தனுசு ராசி நேயர்களே'! எனப் பெயரிடப்பட்டுள்ளது. படத்தின் தலைப்பு குறித்து இயக்குனர் சஞ்சய் பாரதி கூறும்போது, நாம் ஒவ்வொருவருமே நம்முடைய ராசியை பற்றி தெரிந்து கொள்ள ஆர்வமாக இருக்கிறோம். பத்திரிகைகளிலோ அல்லது காலையில் தொலைக்காட்சியிலோ ஆர்வத்தோடு ராசி பலனை பார்க்கிறோம்.

இந்த படத்துக்கு 'தனுசு ராசி நேயர்களே' என்று பெயரிட காரணம், அது மற்ற ராசிகளுடன் ஒப்பிடுகையில் அதிகமாக கவனத்தை ஈர்க்கிறது.

மேலும் நாயகன் ஹரீஷ் கல்யாண் இந்த குறிப்பிட்ட ராசிக்காரர் தான். இந்த ராசிக்கான அடையாளம் ஒரு வில் அம்பு வைத்திருப்பவர். இது லட்சிய நோக்கத்ததை குறிக்கிறது. இதேபோல், படத்தின் ஹீரோ ஒரு குறிக்கோளுடன் இருப்பவர். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மகிழ் திருமேனி இயக்கத்தில் அருண் விஜய், ஸ்மிருதி வெங்கட், தன்யா ஹோப், வித்யா ப்ரதீப், சோனியா அகர்வால், பெப்ஸி விஜயன் உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியான படம் 'தடம்'. விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் இப்படத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

அருண் விஜய் நாயகனாக நடித்த படங்களிலேயே, அதிக வசூல் செய்த படம் என்ற சாதனையையும்'தடம்' நிகழ்த்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. இப்படத்தை தொடர்ந்து இந்த ஆண்டு இறுதியில் மீண்டும் அருண் விஜய் நாயகனாக நடிக்கும் படத்தை இயக்க முடிவு செய்துள்ளார் மகிழ் திருமேனி.

இந்நிலையில் 'தடம்' திரைப்படம் இந்தி மற்றும் தெலுங்கில் ரீமேக் ஆகவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இந்தி ரீமேக்கில் ஷாஹித் கபூரும், தெலுங்கில் ராம் போத்தினேனி நாயகனாக நடிக்கலாம் என்றும் கூறப்படுகிறது. ஆனால் இதுகுறித்து அதிகாரப்பூர்வ தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

இந்தியில் இயக்கம் தமிழில் நடிப்பு

தமிழ்ப் படங்களில் மட்டும் நடிக்கலாம். இந்தியில் படங்கள் இயக்கலாம் என்று பிரபுதேவா திட்டமிட்டுள்ளார்.

நடிகர், நடன இயக்குநர், பாடலாசிரியர் மற்றும் இயக்குநர் என்று பல்வேறு துறைகளிலும் பணிபுரிந்து வருகிறார் பிரபுதேவா. தமிழில் விஷால் நடித்த 'வெடி' படமே இவரது இயக்கத்தில் வெளியான கடைசிப் படமாகும்.

2015-ம் ஆண்டுக்குப் பிறகு இந்தியில் 'தபாங் 3' படத்தை இயக்கி வருகிறார். சல்மான் கான் நடிக்கும் இப்படத்தின் நாயகியாக சோனாக்ஷி சின்ஹா ஒப்பந்தமாகியுள்ளார். தற்போது முதல்கட்டமாக மகாராஷ்டிரா மாநிலம் இந்தூரில் பாடல் காட்சியைப் படமாக்கி வருகிறார்.

தனது சென்டிமென்ட் கணக்குப்படி முதல்வேலையாக கடந்த 3 நாட்களாக பாடல் காட்சியை எடுத்து வருகிறார் பிரபுதேவா. 'தபாங் 3' படத்துக்கு சல்மான் கான், பிரபுதேவா கூட்டணியில் உருவான 'வான்டெட்' படத்தின் இசையமைப்பாளர் ஷாஜித் - வாஜித் இசையமைக்கின்றனர்.

இதற்கிடையே தமிழில் தற்போது தனது நடிப்பில் எந்த ஒரு புதிய படத்தையும் ஒப்புக்கொள்ளாத பிரபுதேவா அடுத்து மீண்டும் சல்மான் கான் நடிப்பில் ஒரு இந்திப் படத்தை இயக்க உள்ளதாக தகவல் வருகிறது. மேலும் தற்போது ஹ்ருத்திக் ரோஷனிடம் ஒரு கதை சொல்லி அதற்கும் ஓ.கே. வாங்கியுள்ளார்.

இதன் மூலம் தமிழில் நடிப்பது, இந்தியில் படங்கள் இயக்குவது என்ற முடிவுக்கு பிரபுதேவா வந்திருப்பது தெளிவாகியுள்ளது.

எஸ்.ஏ.சந்திரசேகர் இயக்கவுள்ள புதிய படத்தில், ஹீரோவாக ஜெய் நடிக்கிறார்.

எஸ்.ஏ.சந்திரசேகர் இயக்கத்தில் கடைசியாக வெளியான படம் 'டூரிங் டாக்கீஸ்'. கதை, திரைக்கதை, வசனம் எழுதி எஸ்.ஏ.சந்திரசேகர் தயாரித்த இந்தப் படத்தில், அவரே ஹீரோவாகவும் நடித்தார். அபி சரவணன், மனோபாலா, ஏ.வெங்கடேஷ், ரோபோ சங்கர் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்த இந்தப் படம், 2015-ம் ஆண்டு வெளியானது.

'டூரிங் டாக்கீஸ்' படத்தைத் தொடர்ந்து 'நையப்புடை', 'கொடி', 'டிராஃபிக் ராமசாமி', 'ஆருத்ரா'ஆகிய படங்களில் நடித்தார் எஸ்.ஏ.சந்திரசேகர். இதில், 'டிராஃபிக் ராமசாமி' படத்தில், டிராஃபிக் ராமசாமி கதாபாத்திரத்தில் படத்தின் நாயகனாக நடித்தார்.

இந்நிலையில், சில வருடங்களுக்குப் பிறகு மறுபடியும் படம் இயக்கப் போகிறார் எஸ்.ஏ.சந்திரசேகர். இந்தப் படத்தில், ஹீரோவாக ஜெய் நடிக்கிறார். வருகிற 19-ம் தேதி படப்பிடிப்பு தொடங்க இருக்கிறது. இந்தப் படத்தை எஸ்.ஏ.சந்திரசேகரே தயாரிக்கிறார்.

வெங்கட்பிரபு இயக்கத்தில் 'பார்ட்டி' மற்றும் எல்.சுரேஷ் இயக்கத்தில் 'நீயா 2' ஆகிய படங்கள் ஜெய் நடிப்பில் ரிலீஸுக்குத் தயாராகி வருகின்றன.

காதலும் ...ராட்டமும்!

...ல் உரு
...ட்டிங்
...டமாக
...வது:
...ந
...க்கி
...யில்
...வே,
...சுத்
...ந்தி

ஜானி ரிலீசை தொடர்ந்து தியாகராஜனின் ஸ்டார் மூவிஸ் தயாரிக்கும் படம், சேலஞ்ஜ். பிரஷாந்த் ஜோடியாக மிஸ் இந்தியா அனு கிரீத்திவாஸ் நடிக்கிறார். இவர் திருச்சியை சேர்ந்த தமிழ்ப்பெண். தவிர நாசர், பிரகாஷ் ராஜ், ஷாயாஜி ஷிண்டே, நரேன், சுப்பு பஞ்சு, மாரிமுத்து, ஹரீஷ் உத்தமன், உமா பத்மநாபன் நடிக்கின்றனர். சிவகுமார் ஒளிப்பதிவு செய்கிறார். பாலிவுட் இசை அமைப்பாளர் தனிஷ்க் பாக்ஜி இசை அமைக்கிறார். மனோகரன், சங்கர் வசனம் எழுதுகின்றனர். ஏ.வெங்கடேஷ் இயக்குகிறார்.

...சிகள் வேண்டாம்!

...றி என் போட்டோ சி
...அந்த போட்டோவை
...க்கத்தில் பதிவேற்றம்
...ப் படம் அங்கே போய்
...லையாள இதழின் அட்
...கரித்தது.
...படம் தான் என்னை
...ட்டது. ஒரு மாடலாக
...வரணும் என்று ஒரு
...த்ததில்லை. ஆனால்
...என்னுடைய பயணம்
...யுள்ளது. சில நல்ல
..., 'ஜூலை காற்றில்'
...டிக்க வாய்ப்பு கிடைத்
...ந்த துறை என்றாலும்
...வ நான் அளவுக்கதிக

...கலாமே? உங்க ஊரு லட்
...படித்தானே படிச்சாங்க?
...ட ஒரு ஐடியா சுத்தமா
... சுதந்திரமா இருக்கி
...ரி வாழ்க்கைக்குள் செ
...ரி விதிகளின்படி வாழ
...யவில்லை. அதுமட்டு
...யிலும் எனக்கு உடன்
... சினிமாவை தீவிரமாக

காதலிக்கிறேன். நிச்சயமற்ற வாழ்க்கையில் நடக்கும் எதிர்பாராத நிகழ்வுகளை எதிர்பார்த்து வாழ பழகி வருகிறேன். அரைத்த மாவை அரைப்பது போல் ஒரே இடத்தில் ஒரே வேலை செய்வது என்னைப் பொறுத்தவரை எந்தவிதத்திலும் சுவாரஸ்யமாகவோ புத்துணர்வையோ தூண்டாது என்று நம்புகிறேன்.

தமிழில் நடித்த 'ஜூலை காற்றிலே' பற்றி...?

அது ஒரு ஃபீல் குட் மூவி. இன்றைய காதலர்களின் மனநிலையை அழகாகப் பிரதிபலித்த படம். வழக்கமான ஹீரோயின் என்று சொல்லமுடியாத அளவுக்கு நடிப்புக்கு முக்கியத்துவம் இருந்தது. பெட்ரூம் சீன் காட்சியில் நடித்ததைப் பற்றி கேட்கிறார்கள். அந்தக் காட்சி எவ்வளவு அவசியம் என்று படம் பார்த்தவர்களுக்கு தெரியும். என்னைப் பொறுத்தவரை கதைக்கு எது தேவையோ அதை அந்த நடிகர், நடிகை கொடுக்க வேண்டும். அதைத்தான் நானும் பண்ணியிருந்தேன்.

தொடர்ந்து தமிழில் நடிப்பீர்களா?

நிச்சயமாக. தொடர்ந்து தமிழ் சினிமாவில் நடிக்க ஆர்வமாக இருக்கிறேன். 'களரி' படத்தில் நடிக்கும் போதே தமிழ் கற்றுக்கொண்டதால் என்னுடைய கேரக்டரை உள்வாங்கி நடிக்க முடிகிறது. இங்குள்ளவர்களிடம் சகஜமாகப் பழக முடிகிறது. தமிழில் உடனடியாக படங்களை கமிட் பண்ணவில்லை. மலையாளத்தில் சில படங்களில் கமிட்டாகி யுள்ளேன்

உங்க குரல் நல்லா இருக்கே?

ஆஹா.. நீங்களும் ஆரம்பிச்சிட்டீங்களா? இப்போ நிறைய நடிகைகள் பின்னணி பாடுவதால் என்னிடமும் பாடுவீங்களான்னு சிலர் கேட்கிறார்கள். எதுக்கு அந்த விபரீத முயற்சி. ப்ளீஸ் வேண்டாமேன்னு மறுத்துடறேன். எனக்கு நடனம் நல்லா தெரியும். எதிர்காலத்தில் நடனத்துக்கு முக்கியத்துவம் உள்ள ரோல் கிடைத்தால் நானும் சந்தோஷப்படுவேன். ரசிகர்களையும் சந்தோஷப்படுத்த முடியும்.

கல்யாணம் எப்போ?

அநியாயமா கேட்குறீங்களே ! நான் ரொம்ப சின்னப்பொண்ணு. சினிமாவில் இப்போதுதான் நடிக்க ஆரம்பித்துள்ளேன். மற்றவர்களுக்கு எப்படியோ என்று தெரியாது. ஆனால் நான் டைம்பாஸுக்காக சினிமாவுக்கு வரவில்லை. இப்போது சினிமாவை என்னுடைய புரஃபஷனாகப் பார்க்கிறேன். இதில் தான் என்னுடைய முழு கவனம் இருக்கும்.

என்னைப் பொறுத்தவரை எந்த வேலை செய்தாலும் அந்த வேலையில் திருப்தி இருக்க வேண்டும். அப்படி எனக்கு திருப்தி அளிக்கும் வகையில் விருதுகள், பெரிய ஹீரோவுடன் நடிக்கும் வாய்ப்பு, நல்ல படங்கள் என்று எதாவது நடக்க வேண்டும். அது வரை என்னுடைய சினிமா பயணம் தொடரும். அப்படியொரு நிலையை அடைந்த பிறகு வேண்டுமானால் திருமணத்தைப் பற்றி யோசிப்பேன்.

..., தெலுங்கில் நடித்து வரும்
...க்கு முன் ஒரு சில நடிகர்களுடன்
...சுக்கப்பட்டார். அப்போதெல்லாம்
...அவர் மறுத்து வந்தார். இந்நிலையில்
...கு முன் தெலுங்கு ஹீரோ சாய் தரம் தேஜ்
...வந்த தகவலை பற்றி வாய் திறக்காமல் இருந்
...ஆனால் சாய் தரம் தேஜ் இதை மறுத்தார்.
...ல் சமீபத்தில் மீண்டும் இவர்களை இணைத்து
...பியது. இருவரும் சேர்ந்து 2 படங்களில் நடித்
...போது முதல் காதலில் விழுந்திருப்பதாக டோலி
...தில் சலசலப்பு இருக்கிறது. இது பற்றி இப்போது
...பமாக பதிலளித்துள்ளார்.
...றைதான் இப்படியெல்லாம் வதந்தி கிளப்புவார்
...ல்லை. யாருடனும் நான் காதலில் விழவில்லை.
...து வேலையை மட்டும்தான் நான் காதலிக்கி
...ர எனது கவனம் எதிலும் இல்லை. என்னுடன்
...இணைத்து பேசுவதை இத்துடன் நிறுத்திக்கொள்
...பதிலளித்துள்ளார்.

...தினாவின் ...காபம்!

ஜெயலலிதா வேடத்தை நிராகரித்த வித்யாபாலன்

மறைந்த முதல்வர் ஜெயலலிதா வாழ்க்கை படத்தை தலைவி பெயரில் இயக்குனர் விஜய் டைரக்ட் செய்கிறார். ஜெயலலிதா வேடத்தில் கங்கனா ரனாவத் நடிக்க ஒப்பந்தம் ஆகியிருக்கிறார். முன்னதாக ஜெயலலிதா வேடத்தில் நடிக்க வித்யாபாலனிடம் பேச்சு நடந்தது. அநேகமாக அவர் ஜெயலலிதா வேடம் ஏற்பார் என்றும் கூறப்பட்டது. கடைசி நேரத்தில் ஜெயலலிதா வேடத்தை ஏற்காமல் அவர் விலகினார். அதற்கான காரணம் தற்போது தெரியவந்துள்ளது.

மறைந்த பிரதமர் இந்திரா காந்தி வேடம் ஏற்று வெப் சீரியலில் நடிக்க உள்ளார் வித்யாபாலன். இதை வித்யாவின் கணவர் சித்தார்த் ராய் கபூர் தயாரிக்கிறார். இந்திராகாந்தி வேடத்தில் நடிக்கும்போது வேறு எந்த திசை திருப்பமும் தனக்கு இருக்கக்கூடாது என்பதாலேயே ஜெயலலிதா வேடத்தை அவர் ஏற்கவில்லை என்று அவரது தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இந்திரா காந்தி உடல்மொழி மற்றும் அவரது பேச்சு ஸ்டைல் போன்றவற்றை கற்பதற்கான பயிற்சியில் வித்யா ஈடுபட்டிருக்கிறார். முன்னதாக இந்திரா காந்தி வேடத்தில் நடிக்க மனிஷா கொய்ராலாவிடம் பேசப்பட்டு வந்தது. அவரும் நடிக்க ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் அந்த படம் ஏதோ சில காரணங்களால் தொடங்கப்படவில்லை.

தளபதி 63 இல் இந்துஜா

தளபதி 63 படத்தில் இந்துஜா நடிக்கிறாராம். அட்லி இயக்கத்தில் விஜய், நயன்தாரா உள்ளிட்டோர் நடித்து வரும் படம் தளபதி 63. இந்த படத்தில் பெண்கள் கால்பந்தாட்ட அணியின் பயிற்சியாளராக விஜய் நடிப்பதாக கூறப்படுகிறது.

படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வரும் நிலையில் புதிதாக இந்துஜாவை ஒப்பந்தம் செய்துள்ளார்களாம். மேயாத மான் படம் பார்த்தவர்களுக்கு ப்ரியா பவானிசங்கரை விட இந்துஜா மீது தான் கண். அந்த படம் மூலம் ரசிகர்களை தன் பக்கம் ஈர்த்துவிட்ட இந்துஜா தற்போது விஜய் படித்தில் அதுவும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறாராம்.

அவர் ஏற்கனவே படப்பிடிப்பில் கலந்து கொண்டுள்ளாராம். இந்த படத்திலும் நிச்சயம் இந்துஜா தனித்து தெரிவார் என்பதில் சந்தேகம் இல்லை.

கால்பந்தாட்டத்தை மையமாக வைத்து எடுக்கப்படும் படம் இது. அதனால் சென்னைக்கு வெளியே பிரமாண்ட கால்பந்தாட்ட ஸ்டேடியம் செட் போட்டுள்ளார்களாம்.

விஜய்யை வைத்துக் கொண்டு பொது இடங்களில் படப்பிடிப்பு நடத்தினால் கூட்டம் கூடிவிடுகிறது. அதை கட்டுப்படுத்துவதற்குள் படக்குழுவுக்கு போதும் போதும் என்று ஆகிவிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

வெயிலோடு விளையாடி...

கோடை, கத்தரி வெயில் போல காட்டமாக வாட்டி வதைக்கத் தொடங்கிவிட்டது. சிறுவர்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுவிட்டது. மீதி மாணவர்களுக்கும் இன்னும் சில நாட்களே பள்ளி இயங்க இருக்கிறது. பின்னர் விடுமுறைதான். குட்டீஸ், நீங்கள் எல்லாரும் விடுமுறை என்றாலே குதூகலமாகிவிடுவீர்கள்தானே? கோடையில் நீங்கள் எங்கே செல்ல திட்டமிட்டு இருக்கிறீர்கள்? சுற்றுலாவுக்கா, உறவினர் வீட்டிற்கா, இல்லை கோடை பயிற்சி வகுப்புகளுக்கா? எங்கு சென்றாலும் வெயிலில் இருந்து தற்காத்துக் கொள்வது அவசியம். கோடை வெயிலின் கடுமை பற்றியும், அதிலிருந்து தப்பிக்கும் வழிகளையும் தெரிந்துகொள்வோம்...

வெயிலில் அலைந்தால்தானே நமக்குப் பாதிப்பு என்றுதான் பலரும் எண்ணுவோம். ஆனால் கோடையின் உக்கிரம் என்பது, நேரடியாக இல்லாமல் மறைமுகமாகவும் உடல் வெப்பம் மற்றும் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியது. உடல் சூடு, சரும பாதிப்புகள், அதிக வியர்வை, உடல் அசதி என பாதிப்புகள் நீண்டு கொண்டே செல்லும்.

கோடை வெப்பத்தால் ஏற்படும் சோர்வு உங்களை எளிதில் களைப்படைய வைத்துவிடும் குட்டீஸ். எனவே வெயிலிலும், வெப்பம் நிறைந்த இடங்களிலும் நீண்ட நேரம் விளையாடுவதை தவிர்க்க வேண்டும். கிரிக்கெட் விளையாடுவது, சைக்கிள் ஓட்டுவது மற்றும் பிற விஷயங்களுக்காக நண்பர்களுடன்/ தோழிகளுடன் வெயிலில் திரிவது தவறாகும். குறிப்பாக உச்சி வெயலில் கண்டிப்பாக வெளியே சுற்றுவதை தவிர்க்க வேண்டும்.

வெயிலில் அதிகமாக சுற்றுவதால் ஏற்படும் களைப்பு சிலரை மயக்கத்தில் தள்ளிவிடும் என்பதால் கவனம் தேவை. சக தோழர்களோடு விளையாடும்போது மயக்கமடைந்தால் அவர்களும் திகைப்படைவார்கள். முதலுதவி பற்றி யாருக்கும் தெரியாவிட்டால் சிக்கலாகிவிடும். எனவே விளையாட்டு எவ்வளவு சுவாரஸ்யமாக இருந்தாலும், உடம்பு களைத்து விட்டது தெரிந்தால், அதிகமாக தாகம் எடுப்பதை உணர்ந்தால் விளையாட்டிற்கு ஓய்வு கொடுத்துவிட்டு, நிழலில் இளைப்பாறுங்கள். தண்ணீர் மற்றும் பழரச பானங்களை பருகி உடலுக்கு தெம்பூட்டுங்கள். ஒருவேளை உங்களுடன் விளையாடும் தோழன் -தோழி யாராவது மயக்கமடைந்தால் உடனே அருகில் உள்ள பெரியோர்களின் உதவியுடன் அவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்யுங்கள். பெற்றோருக்கும் தகவல் தெரிவியுங்கள். முடிந்தவரை, ஆள்நடமாட்டம் இல்லாத கண்மாய், காடுகளில் விளையாடுவதை தவிர்த்துவிடுங்கள். நிழல் நிறைந்த இடங்களில், வீட்டிற்கு அருகிலேயே விளையாடுங்கள்.

நீண்ட நேரம் விளையாடாமல் இருந்தாலும் வெயிலின் தாக்கம், உங்களை பாதிக்கலாம். தினமும் கொஞ்ச நேரம் வெயிலில் விளையாடுவதால், அந்த வெப்பம் தலைவலியை ஏற்படுத்தலாம். சருமத்தில் சுருக்கங்களையும், அதிகமான வியர்வை வெளியேற்றத்தையும் உண்டாக்கலாம். இதனால் தோல் வெளிறிப் போவதுண்டு. சிலருக்கு சருமம் கருப்பாக மாறிவிடும். சிலருக்கு நேர்மாறாக உடலின் சூடு குறைந்துவிடுவதும் உண்டு. நாக்கு வறட்சி அடிக்கடி ஏற்படும்.

வெயிலில் திரிந்து திரும்பியபின்பு, சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல் ஏற்படலாம். சிறுநீர் அதிகமான மஞ்சள் நிறத்துடன் வெளியேறினால் கவனிக்க வேண்டும். தொடர்ந்து இப்படி ஏற்படுவது மஞ்சள் காமாலை பாதிப்பை குறிக்கும். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

வெயிலினால் வியர்வை மற்றும் சிறுநீருடன் சேர்த்து உப்புக்களும் வெளியேறுவது, களைப்புக்கு காரணமாகும். இதை ஈடு செய்ய தண்ணீரில் சிறிதளவு உப்பு சேர்த்து பருகலாம். அல்லது எலுமிச்சை சாறுடன், உப்பு சேர்த்து பருகலாம். இனிப்பு தேவைப்படுபவர்கள் சர்க்கரையும் சேர்த்துக் கொள்ளலாம்.

வீட்டின் உள்ளே இருந்தாலும் சிறுகுழந்தைகள் வெயிலின் தாக்கத்தால் பாதிக்கப்படும். வியர்க்குரு உள்ளிட்ட சரும பாதிப்புகள் ஏற்படும். உயரம் குறைவாக உள்ள வீடுகளில் வசிப்பவர்கள், ஆஸ்பெஸ்டாஸ் கூரை வீடுகளில் வசிப்பவர்களுக்கு இதுபோன்ற பாதிப்புகள் அதிகம் ஏற்படும். வழக்கத்திற்கு மாறாக குழந்தைகள் அழுவது, சருமத்தை சொரிந்து கொண்டிருப்பது, சுறுசுறுப்பாக விளையாடாமல் முடங்கிவிடுவது, சிறுநீரில் மாற்றங்கள் தெரிவது போன்ற நடவடிக்கைகள் தெரிந்தால் குழந்தையின் தாயார் அதிக கவனமாக குழந்தையை பராமரிக்க வேண்டும். வெப்பத்தை தணிப்பதற்காக சுகாதாரமற்ற வகையில் தயாரித்து விற்கப்படும் சர்பத் மற்றும் ஜூஸ்களை குடிக்க வேண்டாம். குளிர் பானங்களையும் தவிர்க்கலாம்.

வெளியில் விளையாடிவிட்டு வீட்டிற்குச் சென்றால், கைகால்களை கழுவாமல் எந்த வேலையிலும் ஈடுபடக்கூடாது. முக்கியமாக சாப்பிடக்கூடாது.

அம்மை நோய் தாக்கம் ஏற்பட்டால், வெயிலில் திரியாமல், தனியறையில் இருந்து சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். சின்னம்மை, மஞ்சள் காமாலை பாதிப்புகளுக்கு மருந்தும், சிகிச்சையும் உள்ளது என்பதை மறந்துவிடாதீர்கள்.

வெயில் உயிர்களுக்கு பலவிதங்களில் நன்மை செய்கிறது. கோடை வெயிலாலும் பல நன்மைகள் உண்டு. ஆனாலும் கோடை வெயிலால் உடல் நிலையில் தாக்கம் ஏற்படும் என்பதால் கவனமாக விளையாட வேண்டும்.

இரத்தச் சோகையை தடுக்கும் முருங்கை கீரை

முருங்கை கீரையில் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் மற்றும் தாதுக்கள் அடங்கியுள்ளது. இதில் வைட்டமின்கள் பி , சி, கே, புரோவிட்டமின் ஏ என்னும் பீட்டா கரோட்டின், மேலும் மாங்கனீசு, மற்றும் புரதம், இரும்பு, தாமிரம், சுண்ணாம்பு சத்து போன்ற அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் இருப்பதால் வளரும் நாடுகளில் இது ஊட்டச்சத்து உணவாக பரிந்துரைக்கப்பட்டு வருகின்றது.

பசும்பாலைவிட அதிக கால்சியம் சத்து கொண்டது, அதிக புரத சத்து கொண்டது.

கேரட்டைவிட அதிக வைட்டமின் ஏ கொண்டது.

கீரை மற்றும் காய்கள், ரத்தத்தை சுத்திகரிக்கும் பண்புகள் கொண்டதாகவும் மற்றும் ஒரு வலிமையான கிருமிநாசினியாகவும் செயல்படுகிறது.

முருங்கை இலையை உருவி காம்புகளை நறுக்கி விட்டு பின் மிளகு ரசம் வைத்து சாப்பாட்டுடன் சேர்த்து உண்டு வந்தால் கை, கால் உடம்பின் வலிகள் யாவும் நீங்கும். கீரையை நெய்யில் வதக்கி சாப்பிட்டால் இரத்த சோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல இரத்தம் ஊறும். பல் கெட்டிப்படும். முருங்கைக் காய் சூப் காய்ச்சல், மூட்டு வலியையும் போக்க வல்லது.

முருங்கை பட்டையோடு வெள்ளைக் கடுகு, பெருங்காயம் இவற்றை சேர்த்து நன்கு அரைத்து சூடாக்கி மூட்டு வீக்கத்தின் மீது பற்று போட சில நாட்களில் மூட்டுவலி குணமாகும்.

முருங்கை கீரையுடன் உப்பு சேர்த்து இடித்து சாறு எடுத்து அதை இடுப்பில் நன்றாக தேய்த்தால் இடுப்புவலி குறையும்.

ஓய்வு தேவை

கர்ப்பத்தின் 9 - 10 மாதங்கள் வரை பெண்ணின் உடல் ஏகப்பட்ட ஹார்மோன் மாறுதல்களைச் சந்திக்கிறது. அவளது தலை முதல் பாதம் வரை ஒவ்வொரு உறுப்பிலும் மாற்றத்தை உணர்ந்திருப்பாள். பிரசவமானதும் இயற்கையாக அவளது உடலின் நோய் எதிர்ப்பு சக்தி வெகுவாகக் குறைந்துவிடும். எளிதில் தொற்றுகளுக்கு உள்ளாகக்கூடும் என்பதால்தான் அவளை பாதுகாப்பான சூழலில் ஆரோக்கியமாக வைத்திருக்க மருத்துவர்கள் அறிவுறுத்துகிறார்கள்.

இதுதவிர தாய்ப்பால் கொடுப்பதால் குழந்தைக்கும் ஆரோக்கிய பாதிப்பு வந்துவிடக்கூடாது என்பதிலும் அவள் கவனமாக இருக்க வேண்டும். வீட்டை விட்டே வெளியே போகக்கூடாது என்பதும், சமையலறை பக்கம் போகக் கூடாது என்பதும் அவளது ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு செல்லப்பட்ட தகவல்களே தவிர, அப்படி செல்வதால் தவறு ஒன்றும் இல்லை. களைப்பாக இருப்பாள் என்கிற ஒரே காரணம்தான் இவை எல்லாவற்றின் பின்னணியும்.

இப்போதெல்லாம் சிசேரியன் செய்யப்படுகிற பெண்களையே மருத்துவமனையில் இரண்டாவது, மூன்றாவது நாளே எழுந்து நடக்கச் செய்கிறோம். அப்போதுதான் அவளுக்கு தன் உடல் பற்றிய பயமும், பதற்றமும் மாறும். காயங்களும் சீக்கிரம் ஆறும்.வீட்டை விட்டு வெளியே செல்கிறபோது உணவு விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

பிரசவித்த பெண்களுக்கு சிரிமானக் கோளாறுகள் வரலாம் என்பதால் வெளி உணவுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதும் அவர்களை வெளியே அனுமதிக்காததற்கு ஒரு காரணம். மற்றபடி தாய் ஆரோக்கியமாக இருக்கும் பட்சத்திலும், ஊட்டம் நிறைந்த உணவுகளை எடுத்துக் கொள்கிறதும், தன்னையும் குழந்தையையும் பாதுகாப்பாகப் பார்த்துக் கொள்கிற பட்சத்திலும் வெளியே சென்று வருவதில் பிரச்னை இல்லை.

சுகப்பிரசவமோ, சிசேரியனோ... எதுவானாலும் பிரசவித்த பெண் உடலளவிலும் மனதளவிலும் மிகுதியான களைப்பை சந்தித்திருப்பாள். பிரசவம் பற்றிய பயமும் பதற்றமும் நீங்கி, அவள் சகஜமான உடல் மற்றும் மனநிலைக்குத் திரும்ப சில நாட்கள் ஆகும். பிரசவமான பெண்ணுக்கு முழு ஓய்வு மட்டுமே அதை சாத்தியப்படுத்தும்.

அந்த ஓய்வு அம்மாவுக்கும் குழந்தைக்குமான பிணைப்பைக் கூட்டவும் காரணமாக அமையும். இத்துடன் பிரசவித்த முதல் சில நாட்களுக்கு குழந்தைக்கும் தாயின் அருகாமை மிக அவசியம். தாயின் வாசனையும் ஸ்பரிசமும் குழந்தைக்கு அதிகமாகத் தேவைப்படும். பசியால் அழும்போதெல்லாம் தாய்ப்பால் கொடுக்க தாய் அருகில் இருக்க வேண்டும்.

தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் பிரசவித்த பெண்ணுக்கு வெளியே செல்ல வேண்டிய தேவை ஏற்படும் போது, குழந்தையை மிக மிகப் பாதுகாப்பான சூழலில் நம்பிக்கையான நபர்களிடம் விட்டுச் செல்ல வேண்டியது முக்கியம். சுகாதாரமான சூழல் வலியுறுத்தப்பட வேண்டும். குழந்தை இருக்கும் சூழலில் புகைப்பிடிப்பவர்களோ, மது அருந்துபவர்களோ இல்லாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நீரிழிவை கட்டுக்குள் வைக்க என்ன செய்யலாம்?

இன்று 63 சதவிகிதமாக உள்ள நீரிழிவு நோயாளியின் எண்ணிக்கை இன்னும் 10 ஆண்டுகளில் 20 சதவிகிதம் அதிகரிக்கும் என ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர். இதற்கு முக்கிய காரணம் நம் உணவு முறையே. மேலும் நகர வாழ்க்கையின் தாக்கமும் ஒரு காரணம். போதிய உடற்பயிற்சியின்மை என பல பாதிப்புகளின் வெளிப்பாடே நீரிழிவு நோய் வருவதற்கு காரணமாகிறது.

நீரிழிவு நோயை முற்றிலும் குணப்படுத்த முடியாது. ஆனால் வராமல் தடுக்கவும், கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளவும் முடியும். இத்தகைய நோயின் தாக்கத்திலிருந்து விடுபட வைப்பது நம் உணவு முறையே. முறையான உணவு, தேவையான உடற்பயிற்சியிருந்தால் நீரிழிவு நோயை நம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளலாம்.

காய்கறிகள்

கத்தரி பிஞ்சு, சுரைக்காய், முட்டைகோஸ், முள்ளங்கி, வெண்டைக்காய், கோவைக்காய், பீன்ஸ், சாம்பல் பூசணி, புடலங்காய், வாழைத்தண்டு, காளி பிளவர், வெண்பூசணி, பாகற்காய், வாழைப்பூ, காராமணி, கொத்தவரங்காய், வெங்காயம், பீர்க்கங்காய், வாழை பிஞ்சு, நூல்கோல், முருங்கைக் காய், வெள்ளரிக்காய், செசெ இவைகளுடன் கறிவேப்பிலை, இஞ்சி, கொத்தமல்லி, புதினா சேர்த்து பச்சடியாக தினமும் உணவில் சேர்த்து வந்தால் சர்க்கரை நோயின் பாதிப்பிலிருந்து எளிதில் மீளலாம்.

கீரைகள்

சர்க்கரை நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தன்மை கீரைகளுக்கும் உண்டு. கறிவேப்பிலை, தூதுவளைக் கீரை, ஆரைக்கீரை, முசுமுசுக்கைக் கீரை, வெந்தயக் கீரை, துத்திக் கீரை, முருங்கைக் கீரை, மணத்தக்காளிக் கீரை, அகத்திக் கீரை, சிறுகீரை, அரைக் கீரை, வல்லாரைக் கீரை, கொத்தமல்லிக் கீரை இவற்றில் ஏதாவது ஒன்றை சூப் செய்து தினமும் 1 டம்ளர் வீதம் காலை அல்லது மாலை ஒருவேளை சாப்பிட்டு வரலாம், அல்லது இவற்றில் ஏதாவது ஒன்றை எதாவது ஒரு வகையில் உணவில் சேர்த்து வந்தால் சர்க்கரை நோய் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்.

திருத்திக் கொள்ள வேண்டிய சுகாதாரமற்ற பழக்கங்கள்

ஒவ்வொருவருக்கும் சில சுய சுகாதாரங்கள் அவசியம். அவரவர் அறியாமலேயே சில சுகாதாரமற்ற பழக்கங்கள் அவர்களிடம் இருக்கும். அவற்றில் சில கீழே கூறப்பட்டுள்ளது. அவற்றினை நாம் சரி செய்து கொள்ளலாமே.

★ முகத்தில் சிறு பரு வந்தாலும் பலருக்கு ஒரு பழக்கம். அதனை பிய்த்து பிய்த்து கிருமி தாக்குதல், மறையா வடு இவற்றினை ஏற்படுத்தி விடுவர்.

★ வலி இருந்தால் அதன் மீது ஐஸ் வையுங்கள். சரும மருத்துவர் உதவி பெறுங்கள். முகத்தினை வலிய கெடுத்துக் கொள்ளாமல் இருப்பது சுகாதாரமே. மேலும் பருக்களின் மீது நகம் படுவதும் ஆபத்தானதே.

★ இம்மாதிரி முகத்தில் பருக்கள், கட்டிகள் வருவதற்கு சில காரணங்களில் ஒன்று அவர்களது கை குட்டைகள், துண்டுகள்தான் இவை சுகாதாரமற்று, துவைக்காமல் அழுக்காக இருப்பதுதான். பல நாட்கள் அதே கைக்குட்டை, துண்டினை உபயோகிப்பது நோயினை ஓடி சென்று வரவழைப்பதாகும். வியர்வை, அழுக்கு போன்றவை துண்டு, கை குட்டைகளில் படிவதால் இதனை அன்றாடம் முறையாய் சுத்தம் செய்வது அவசியம்.

இதே போன்று படுக்கை விரிப்பு, தலையணை உரைகளை மாதக் கணக்கில் துவைக்காமல் இருந்தால் அநேக கிருமிகளின் நிரந்தர உறைவிடமே மனித உடல்தான் என்றாகி விடும். படுக்கை விரிப்புகளை அடிக்கடி துவைப்பதே சிறந்தது.

★ சிலர் காதினை சுத்தம் செய்கின்றேன் என்கிற பெயரில் பல கூரிய ஆயுதங்களை உபயோகிப்பது வழக்கம். இதனால் ஏற்படும் பாதிப்பில் யாரும் அக்கறை கொள்வதில்லை. காதில் நிரந்தர பாதிப்புகள் ஏற்படலாம்.

ஆகவே முதலில் இப்பழக்கத்தினை கை விடுங்கள். பஞ்சு கொண்ட குச்சியாக இருந்தாலும் அதனை தொண்டை வரை உள் விட்டு உள்காதை தேய் தேய் என தேய்த்து சுத்தம் செய்ய வேண்டாம். உள் காதில் புண், பாதிப்பு என பல பிரச்சினைகளை ஏற்படுத்தி விடும். மேலும் காதில் உள் உள்ள கீகிவீ மேலும் உள் தள்ளப்படலாம். பஞ்சு உள்ளே சிக்கிக் கொள்ளலாம். உள் அழுக்கினை நீக்க மருத்துவர் மருந்தினை சிபாரிசு செய்வார். அதனையே பயன்படுத்தவும்.

★ அன்றாடம் பள்ளிக்கு, அலவலகத்திற்கு தண்ணீர் கொண்டு செல்வது பலரின் வழக்கம். இது நல்லதே. ஆனால் அதனை சுத்தமே செய்யாமல் தொடர்ந்து அந்த பாட்டிலிலேயே தண்ணீர் கொண்டு செல்வது பல வைரஸ் கிருமிகளை கொண்டு வந்து சேர்க்கும். தண்ணீர் பாட்டிலை சுத்தமாக சோப்பு கொண்டு கழுவுவது மிக முக்கியம்.

★ இருமல், சளி இருக்கும்போது அடுத்தவர் முகத்துக்கு நேரே இருமவோ, தும்மவோ செய்வது தவறு. எளிதாக அனைவருக்கும் நோயினை தானம் செய்து விடுகின்றீர்கள். கை குட்டை, டிஷ்யூ இவற்றினை பயன்படுத்துங்கள். இது நமது கடமையாகும்.

★ அதிக நேரம் ஷவரில், சுடுநீரில் நின்று கொண்டே இருக்காதீர்கள். உடலிலுள்ள இயற்கை எண்ணை பசையினை நீக்கி சருமத்தினை வறண்டு விடச் செய்யும். தோல் வயதானவர் போல் தோற்றமளிக்கும்.

★ சாப்பிட்டவுடன் பற்களை நன்கு சுத்தம் செய்யுங்கள். இது ஆரோக்கியம் மற்றும் நாகரீகமும் கூட. வைட்டமின் பி12 பற்றாக்குறை உள்ளதைக் கூறும் அறிகுறிகள். பொதுவில் சாதாரண மறதி. வெளிர்ந்த தோல் இவைகளை பி12 குறைபாடு என எளிதில் கூறி விடுவர்.

வைட்டமின் பி- பிரிவில் 8 வகை உள்ளன. அவை அனைத்தும் உடலுக்கு உணவிலிருந்து சக்தி கிடைக்க உதவுபவை. ஞிழிகி, ஆரோக்கிய நரம்பு, ரத்த செல்கள் இவற்றுக்கு பி12 மிகவும் அவசியமானது. ரத்த சோகையினைத் தவிர்க்கின்றது. இதன் குறைபாடு காட்டும் சில அறிகுறிகளைப் பார்ப்போம்.

ஆண்கள் சந்திக்கும் ஹார்மோன் பிரச்சினைகள்

நம் உடலின் ஒவ்வொரு செல்லும் இன்னொரு செல்லுடன் ஹார்மோன் மூலம்தான் தொடர்பு கொள்கிறது. உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை இயங்கத் தேவையான ஹார்மோன்களை ஒவ்வொரு நொடியும் உற்பத்தி செய்யக்கூடிய பல நாளமில்லாச் சுரப்பிகள் உள்ளன. தைராய்டு, அட்ரினல் மற்றும் பிட்யூட்ரி சுரப்பிகளில் உற்பத்தியாகி ரத்த ஓட்டம் அல்லது மற்ற உடல் திரவத்தின் வழியாக ஊடுருவி, உடலின் மற்ற உறுப்புகள் மற்றும் திசுக்களுக்கு சென்று அவற்றின் கட்டமைப்புகள் மற்றும் செயல்பாடுகளை மாற்றியமைக்கக் கூடிய சக்தி உடையவை இந்த ஹார்மோன்கள். அதாவது உடல் எப்போது? என்ன செய்ய வேண்டும்? என்ற சமிக்ஞைகளைத் தரும் சிக்னல்களாக வேலை செய்கின்றன.

ஆண்களுக்கு வயதாகும்போது Testosterone ஹார்மோன் சுரப்பு குறையக்குறைய எலும்பு அடர்த்தியும் குறையும். இதனால் அடிக்கடி எலும்புமுறிவு ஏற்படும். இதுவரை சொன்னது எல்லாம் ஆண் ஹார்மோன்களினால் மட்டுமே, ஆண்களுக்கு வரக்கூடிய பிரச்சனைகள். இதுதவிர, ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவாக வரக்கூடிய மற்ற ஹார்மோன்களால் தைராய்டு சுரப்பு குறைவு அல்லது அதிகம், பிட்யூட்ரி சுரப்பியில் குறைபாடு, அட்ரினல் சுரப்பியில் ஏற்படும் குறைபாடு போன்றவற்றால் வரக்கூடிய நோய்கள்.

இயக்கமற்ற வாழ்க்கைமுறையினால் கொழுப்பு ஹார்மோன் அதிகமாவதால் வரக்கூடிய உடல்பருமன் நோய். இதைத் தொடர்ந்து Pancreas சரியாக வேலைசெய்யாதால் இன்சுலின் சுரப்பு குறைந்து நீரிழிவு நோய் வருவது இதெல்லாம் முக்கிய ஹார்மோன் பிரச்னைகள். உடல்பருமன், நீரிழிவு நோய் வந்துவிட்டாலே உடலுறவில் நாட்டம் இல்லாமல் போய்விடும்.

பெரும்பாலும் ஆண் மலட்டுத்தன்மைக்கு உயிரணு எண்ணிக்கை குறைவு, விதையின் வளர்ச்சியின்மை மற்றும் விரைவில் விந்தணு வெளியேற்றம், Erectile Dysfunction ஆகியவை காரணங்களாகின்றன. சிலருக்கு மனம் மற்றும் உடல்ரீதியிலான பிரச்சனைகளால் உடலுறவு கொள்வதில் கடினம், உடலுறவில் நாட்டமின்மையால் ஆண் மலட்டுத்தன்மை உண்டாகிறது.

ஆண்களின் 60, 70 வயதுகளில் ஹார்மோன் வளர்ச்சி பற்றாக்குறை மற்றும் தைராய்டு சுரப்பு ஹார்மோன் நிலை குறையலாம். இதனால் மூளையின் செயல்பாட்டுத் தன்மையை குறைக்கும் என சில ஆராய்ச்சிகள் சொல்கின்றன. அந்தந்த ஹார்மோன் உற்பத்தி குறைபாட்டிற்கு ஏற்ற சிகிச்சைகள் மூலம் சரிசெய்து கொள்ளலாமே தவிர, சர்வ ரோக நிவாரணியாக ஒரே மருந்தில் வயதாவதால் ஏற்படும் எல்லா பிரச்சனைகள் அனைத்தையும் சரி செய்து விட முடியாது.

மின்னஞ்சல் விற்பனையைத் தடுக்கும் வழி

வீட்டில் சேரும் குப்பைகளைவிட உங்கள் மின்னஞ்சல் பெட்டியில் அதிகக் குப்பைகள் குவிந்து கொண்டிருக்கலாம். இதை நீங்கள் அறியாமலே இருக்கலாம் அல்லது அறிந்தும் செய்வது அறியாமல் விழித்துக்கொண்டிருக்கலாம். 'ஸ்பேம்'எனப்படும் அழையா விருந்தாளியாக வரும் குப்பை மின்னஞ்சல்களால்தான் இந்த நிலை!

வலை விரிக்கும் மின்னஞ்சல்கள்

இது மின்னஞ்சலின் ஆதி காலத்திலிருந்து இருக்கும் பிரச்சனைதான். ஆனால், இன்னமும் அதற்கு தீர்வு கிடைத்த பாடில்லை. வாடிக்கையாளர்களைச் சென்றடைவதற்கான எளிய வழி என்பதால், விளம்பர வலை விரிக்கும் இமெயிலை பல நிறுவனங்கள் அனுப்பிவைக்கின்றன. முன்பின் தெரியாத நிறுவனங்களும் மோசடிப் பேர்வழிகளும்கூட இவ்வாறு செய்வதுண்டு.

அறிமுகம் இல்லாத மின்னஞ்சல்கள் அல்லது வேண்டாத மின்னஞ்சல்கள் இன்பாக்ஸை நிரப்பும்போது, இவர்களுக்கு நம் மின்னஞ்சல் முகவரி எப்படி கிடைத்தது எனும் கேள்வி உங்களுக்கு எழுந்திருக்கும். பலவிதங்களில் நிறுவனங்கள் மின்னஞ்சல் முகவரியை அறுவடை செய்கின்றன. ஏதாவது ஒரு செய்தி சேவையில் நீங்கள் உறுப்பினராகச் சேர்ந்திருக்கலாம் அல்லது நிறுவன மெயில்களுக்கு பதில் அளிக்கும்போது உங்கள் முகவரியை சமர்பித்திருக்கலாம். உங்களை அறியாமல் பொதுவெளியில் மின்னஞ்சல் முகவரியைப் பகிர்ந்திருக்கலாம்.

விற்கப்படும் மின்னஞ்சல்கள்

இப்படி பலவழிகளில் மின்னஞ்சல் முகவரிகள் சேகரிக்கப்படுகின்றன. தவிர 'ஹேக்கர்கள்' கைவரிசைக் காட்டி முகவரிகளை களவாடிச் சென்றிருக்கலாம். மூன்றாம் தரப்பு நிறுவனங்கள் உங்கள் மின்னஞ்சல் முகவரியை விற்பனை செய்திருக்கலாம். ஆம், மின்னஞ்சல் முகவரியை அறுவடை செய்து வர்த்தக நிறுவனங்களிடம் விற்பனை செய்வதையே வர்த்தகமாக மேற்கொள்ளும் நிறுவனங்களும் இருக்கின்றன. சொல்லப்போனால் இணையத்தில் மின்னஞ்சல் முகவரிகளுக்கு வலை வீசப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. வலையில் சிக்கும் மின்னஞ்சல்கள் கொத்து கொத்தாக விற்பனை செய்யப்படுகின்றன. ஸ்பேம் மின்னஞ்சல்கள் உங்கள் இன்பாக்ஸில் குவிய இதுவும் ஒரு முக்கிய காரணம்.

கண்டறியும் இணையம்

இந்தப் பின்னணியில், மின்னஞ்சல் முகவரி விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்பதை கண்டறிய உருவாக்கப்பட்டுள்ளது 'ஹேவ் ஐ பீன் சோல்ட்' (https://haveibeensold.app/) என்ற இணையதளம். இந்தத் தளத்தில் மின்னஞ்சல் முகவரியைச் சமர்பித்தால், அந்த முகவரி விற்பனை செய்யப்பட்டிருக்கிறதா என்பதைச் சரி பார்த்து சொல்கிறது. அதாவது, வர்த்தக நோக்கில் விற்பனை செய்யப்பட்ட மின்னஞ்சல் பட்டியல்களில் சமர்பிக்கப்பட்ட முகவரி இருக்கிறதா எனத் தேடிப்பார்த்து தகவல் அளிக்கிறது.

பாதுகாப்பு அம்சங்கள்

மின்னஞ்சல் பாதுகாப்பை உறுதி செய்துகொள்ள விரும்புபவர்கள் இந்தச் சேவை மூலம் மின்னஞ்சல் நிலையை அறிந்துகொள்ளலாம். ஆனால், தற்போது இந்தத் தளத்தின் வசம் பெரிய அளவில் தரவுகள் பட்டியல் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தங்களிடம் சமர்பிக்கப்படும் மின்னஞ்சல் முகவரி அல்லது வேறு எந்த விவரங்களையும் சேகரிப்பதில்லை என இந்தத் தளம் உறுதியளிக்கிறது. மின்னஞ்சல் முகவரியைச் சோதித்து பார்த்த பிறகு அந்த முகவரியை நீக்கிவிடுவதற்கான வாய்ப்பையும் இந்தத் தளம் அளிக்கிறது. இந்தத் தளத்தின் மீது நம்பிக்கை வைத்து, மின்னஞ்சல் முகவரியைச் சமர்பித்து, எதிர்காலத்தில் அந்த முகவரி விற்பனை செய்யப்பட்டால் அது குறித்து எச்சரிக்கும் மின்னஞ்சலையும் பெற ஒப்புக்கொள்ளும் வசதியும் அளிக்கப்படுகிறது.

பயனாளிகளின் தரவுகளை பாதுகாப்பதற்கான ஜி.டி.பி.ஆர். சட்டம் ஐரோப்பிய நாடுகளில் அமலுக்கு வந்துள்ள நிலையில், இந்தச் சட்டத்தை மீறி நடக்கும் நிறுவனங்களைக் கண்டறிந்து புகார் செய்யவும் இந்தத் தளம் பயன்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 'ஸ்பேம்' மின்னஞ்சல்களிலிருந்து தற்காத்து கொள்வதற்கான வழிகளையும் இந்தத் தளம் பட்டியலிட்டுள்ளது.

மேலும் தகவல்களுக்கு: https://neighbourly.google.com/

'கிரிப்டோ' வேலை வேண்டுமா?

'பிட்காயின்' உள்ளிட்ட 'கிரிப்டோ' நாணயங்களில் உங்களுக்கு ஆர்வம் உண்டா? இந்தத் துறையில் வேலைவாய்ப்பைப் பெற விருப்பம் இருக்கிறதா? அப்படியெனில் 'ஆல் கிரிப்டோ ஜாப்ஸ்' (https://allcryptojobs.io/) என்ற இணையதளம் உதவுகிறது. இந்தத் தளம் 'கிரிப்டோ'நாணயங்கள் தொடர்பான வேலைவாய்ப்புகளை பட்டியலிடுகிறது. இந்தத் துறை தொடர்பான வேலைவாய்ப்புகளைத் தேடிப்பார்க்கும் வசதியையும் அளிக்கிறது. ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை வேலைவாய்ப்பு விவரங்கள் அப்டேட் செய்யப்படுகின்றன. உங்கள் திறன்களுக்கு ஏற்ற வேலையைத் தேடலாம்.

'நோபோன்' எனும் பெயரில் ஆண்ட்ராய்டு போன்களுக்கான புதிய செயலி ஒன்று அறிமுகமாகியுள்ளது. 'லாஞ்சர்' வகையைச் சேர்ந்த இந்தச் செயலி, ஸ்மார்ட்போன் பயன்பாட்டைக் குறைக்க உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அழைப்புகளை மேற்கொள்ளலாம். செயல்களைப் பட்டியலிட்டுத் திட்டமிடலாம். சமூக ஊடக சேவைகளை அணுக இதில் சாத்தியம் இல்லை. போனில் செலவிடும் நேரத்தைக் குறைத்துக் கொண்டு குடும்பம், நண்பர்களுடன் அதிக நேரத்தைச் செலவிட இந்தச் செயலி உதவும்.

மேலும் தகவல்களுக்கு: https://bit.ly/2GHX2K4??

பூகம்பத்துக்கும் இமோஜி!

வட்ஸ்அப்பிலோ சாட்டிங்கிலோ இமோஜியைச் சேர்த்துக்கொள்வது அரட்டையைச் சுவாரசியப்படுத்தும். ஆனால், பேரிடர் கால தகவல் தொடர்பை மேம்படுத்த இமோஜியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் எனச் சொன்னால் நம்ப முடிகிறதா? பூகம்பத்தை உணர்த்தக்கூடிய இமோஜி உருவாக்கப்பட வேண்டும் என்று சர்வதேசக் குழு ஒன்று கோரிக்கை வைத்துள்ளது. அது மட்டுமல்ல இதற்கான இமோஜியை உருவாக்கி சமர்பிக்க உலகளாவிய போட்டியையும் அறிவித்துள்ளது.

இமோஜி சேவை

வாட்ஸ்அப் உள்ளிட்ட சமூக ஊடக உரையாடல்களிலும் அரட்டைகளிலும் உருவ எழுத்துகள் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. இந்த உருவ எழுத்துகள் புதிய மொழியாகவே உருவாகி இருக்கின்றன. பெரும்பாலும் நகைச்சுவை நோக்கில் பயன்படுத்தப்பட்டாலும், சொற்களுக்குப் பதில் உணர்வுகளை வெளிப்படுத்துவதில் இமோஜிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. எனவே, இமோஜியை விளையாட்டுச் சங்கதியாக நினைத்துவிட முடியாது.

இவை இணைய உரையாடலிலும் தகவல் தொடர்பிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. ஆகவே, புதிய இமோஜிகளை உருவாக்குவதற்கான தேவையும் அதிகரித்துவருகிறது. அதேநேரம், புதிய இமோஜிகளைத் தனியாகவோ எந்த நிறுவனமோ இஷ்டம்போல அறிமுகம் செய்துவிட முடியாது. புதிய இமோஜிகளை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளும் பொறுப்பு இணைய எழுத்துருக்களை நிர்வகிக்கும் யூனிகோட் கூட்டமைப்பு வசம் உள்ளது. எனவே, புதிய இமோஜிக்கான கோரிக்கையை இந்த அமைப்பிடம் சமர்ப்பித்து, அது ஏற்கப்படக் காத்திருக்க வேண்டும்.

இப்படிப் பல கோரிக்கைகள் ஏற்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட புதிய இமோஜிகள் அண்மையில் அறிமுகமாகத் தொடங்கியுள்ளன. கடந்த பிப்ரவரியில் இதற்கான பட்டியலை யூனிகோடு கூட்டமைப்பு வெளியிட்ட நிலையில், நிறுவனங்கள் புதிய இமோஜிகளைத் தங்கள் இயங்குதளங்களில் வெளியிடத் தொடங்கியுள்ளன.

பூகம்பக் குறியீடாக...

அந்த வகையில்தான் இப்போது, பூகம்பத்தை உணர்த்த ஒரு பிரத்யேக இமோஜி தேவை எனும் கோரிக்கை எழுந்துள்ளது. இந்தக் கோரிக்கையை வைத்திருப்பது சாதாரண அமைப்பு அல்ல; சர்வதேச விஞ்ஞானிகளை உள்ளடக்கிய குழு ஒன்று. இந்தக் கோரிக்கையை வலியுறுத்தும் வகையில், யூனிகோடு கூட்டமைப்பில் சமர்ப்பிக்க உள்ள பூகம்ப இமோஜியை உருவாக்கும் போட்டியையும் அறிவித்துள்ளது. இதற்காக 'இமோஜிகுவேக்' (https://www.emojiquake.org/) எனும் இணையதளத்தையும் அமைத்துள்ளது. ஜூலை 14-ம் தேதிவரை வடிமைப்பாளர்கள், இமோஜி ஆர்வலர்கள் இந்தத் தளத்தில் பூகம்ப இமோஜிக்கான வடிவமைப்பைச் சமர்ப்பிக்கலாம். இது தொடர்பாகச் சமர்ப்பிக்கப்படும் ஐடியாக்களை #emojiquake' எனும் ஹாஷ்டேக் மூலம் பின்தொடரலாம்.

பூகம்ப இமோஜி எளிமையானதாக, எல்லோருக்கும் புரியக்கூடியதாக, தனித்தன்மை மிக்கதாக, பூகம்பத்தை உணர்த்தக்கூடியதாக இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பூகம்ப இமோஜி அவ்வளவு முக்கியமா? இணைய உரையாடலில் இமோஜிகள் அதிக அளவில் பயன்படுத்தப்படுவதோடு, பல விஷயங்களை எளிதாக உணர்த்தவும் கைகொடுக்கின்றன. பத்துச் சொற்கள் தேவைப்படும் இடங்களில் ஒரு இமோஜி கச்சிதமாகப் பொருந்திவிடுகிறது.

எல்லாம் சரி, பூகம்ப இமோஜியால் என்ன பயன்?இமோஜிகள் உலகில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. உலகில் வேகமாக வளர்ந்தும்வருகின்றன. அதே நேரத்தில் உலகின் பெரும்பாலான பகுதிகள் பூகம்பப் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றன. பூகம்பம் தொடர்பான தகவல்களைப் பகிர்ந்துகொள்வதில், அதற்கான பிரத்யேக இமோஜி பேருதவியாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

ஒரே மொழி வழக்கு

பூகம்பம் போன்ற பேரிடர்களின்போது, ட்விட்டர் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் மக்கள் அது பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். ட்விட்டரில் பகிர்ந்துகொள்ளப்படும் தகவல்களை வைத்தே பூகம்பம் தொடர்பான கணிப்புகளை மேற்கொள்ள முடிவதாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பூகம்பத்தை உணர்ந்த மக்கள் சமூக ஊடகங்களில் அது பற்றிய தகவல்களைப் பகிர்வதை அடிப்படையாகக்கொண்டு குறிப்பிட்ட பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைக் கண்டறியலாம்.

ஆனால், சமூக ஊடகப் பகிர்வில் உள்ள சிக்கல் என்னவெனில், இவை பல மொழிகளில் வெளியாகும்போது அவற்றை ஒருங்கிணைத்துப் புரிந்துகொள்ள வழியில்லை. இந்தச் சிக்கலுக்குத் தீர்வாகத்தான், பூகம்பத்துக்கு ஒரு இமோஜி தேவை என வலியுறுத்துகின்றனர். பூகம்பப் பாதிப்பு தகவல் எந்த மொழியில் வெளியிடப்பட்டாலும், அதனுடன் பூகம்ப இமோஜி இணைக்கப்பட்டிருந்தால், அதை வைத்தே எளிதாகப் புரிந்துகொண்டு விடலாம்.

சூறாவளி, புயல், எரிமலை போன்ற இயற்கை நிகழ்வுகளைக் குறிக்க இமோஜி இருக்கும்போது, பூகம்பத்தைக் குறிக்க மட்டும் இமோஜி இல்லை. இந்த நிலை மாறவே இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. பூகம்பப் பாதிப்புகளைக் கண்டறிவதில் மட்டுமல்லாமல் மீட்பு பணிகள், நிவாரண உதவிகளை ஒருங்கிணைப்பதிலும் பூகம்ப இமோஜி கைகொடுக்கும் என நம்பப்படுகிறது.

இணையங்களைத் துப்பறியும் தளம்

இணையத்தில் உலவும்போது இடறிப் போய் சுவாரசியமான இணையதளங்களைக் கண்டறிந்த இனிமையான அனுபவம் உங்களுக்கு உண்டா? ஆம் எனில், 'ஸ்டம்பிள் அப்பான்' சேவையைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். இந்த சேவை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருப்பதை அறிந்து வருத்தமும் அடைந்திருக்கலாம்.

மூடு விழா

கடந்த 16 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த 'ஸ்டம்பிள் அப்பான்' இணையதளம் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இணைய கண்டறிதலில் ஆர்வம் உள்ளவர்களுக்கு இது மிகப்பெரிய ஏமாற்றம்தான். 'ஸ்டம்பில் அப்பான்' தளம் வழங்கிய சேவையிலிருந்து இணையம் வெகு தொலைவு முன்னேறி வந்துவிட்டாலும், அந்தத் தளம் மூடப்படும் செய்தி அருமையான சேவை ஒன்றின் இழப்பே.

ஃபேஸ்புக், ரெட்டிட், ட்விட்டர் பாணி தளங்களுக்கு பழகிய இன்றைய தலைமுறையினர்கூட இந்தத் தளத்தின் பெயரைக் கேள்விபட்டிருக்கலாம். சமூக வலைப்பின்னல் சேவைகள் அறிமுகமாவதற்கு முந்தைய காலத்தில் இணையத்தில் புதிய தகவல்களையும் சுவாரசியமான இணையதளங்களையும் கண்டறிவதற்கான இடமாக 'ஸ்டம்பிள் அப்பான்' விளங்கியது.

புதிய அனுபவம்

சமூக ஊடக தளங்களின் டைம்லைனிலேயே புதிய செய்திகளையும், தகவல்களையும் இன்று தெரிந்துகொள்ள முடிகிறது. இதில் பாதகமான அம்சங்களும் இருக்கின்றன என்பது வேறு விஷயம். ஆனால், சமூக ஊடகங்கள் அறிமுகமாவதற்கு முன் இருந்த நிலை வேறு. அப்போது இணையத்தில் பொழுதை கழிக்க வேண்டும் என்றாலும் சரி, பயனுள்ள புதிய விஷயங்களை தெரிந்துகொள்ள வேண்டும் என்றாலும் சரி, கூகுள் போன்ற தேடியந்திரங்களில் வலை வீச வேண்டும்.

2002-ல் அறிமுகமான 'ஸ்டம்பிள் அப்பான்' புதிய அனுபவத்தைத் தந்தது. அன்று சமூக புக்மார்க்கிங் சேவை தளங்களில் ஒன்றாக அறிமுகமான 'ஸ்டம்பிள் அப்பான்', ஆர்வமும் ஆச்சர்யமும் அளிக்கக்கூடிய புதிய இணையதளங்களை எளிதாகக் கண்டறிய வழி செய்தது. தளத்தில் உள்ள 'ஸ்டம்பிள்' எனும் பட்டனை 'கிளிக்' செய்தால் போதும், புதியதொரு இணையதளம் பரிந்துரைக்கப்படும். தொடர்ந்து 'கிளிக்' செய்தால், ஒவ்வொரு முறையும் ஒரு புதிய தளத்தை அறியலாம். இதுவே இடறி விழுவது (ஸ்டம்பிள்) என சுவாரசியமாகக் குறிப்பிடப்பட்டது. இடறி விழும் ஒவ்வொரு முறையும் புதிய தளத்தைக் கண்டறியலாம்.

வித்தியாசமான சேவை

இவை எல்லாமே இந்தத் தளத்தின் உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்டு பகிரப்பட்ட இணையதளங்கள். எனவே விதவிதமான தளங்களை இந்த வழியில் அறிமுகமாயின. உறுப்பினராக சேரும்போது பயனாளிகள் தங்களுக்கு ஆர்வம் உள்ளவை எனக் குறிப்பிடும் துறைகளுக்கு ஏற்ப இந்தப் பரிந்துரைகள்

அமைந்திருக்கும். இந்தப் பரிந்துரைகளை ஆமோதிக்கும் நிராகரிக்கும் வசதியும் உண்டு. இதன் அடிப்படையில் அடுத்த முறைக்கான பரிந்துரைகள் பொருத்தமாக மாற்றி அமைக்கப்படும்.

இணையதளங்கள் தவிர வீடியோக்கள், தகவல்கள், செய்திகள் ஆகியவற்றையும் இந்த முறையில் கண்டறியலாம். இணையத்தில் அலுப்பு ஏற்படும்போது, இந்தத் தளத்தில் எட்டிப்பார்த்தால் சுவாரசியமான புதிய தளங்களைக் கண்டறிந்து உற்சாகம் பெறலாம். இதனாலேயே இந்தத் தளம் பிரபலமாக இருந்தது. ஆனால், சமூக ஊடகங்கள் வருகைக்குப் பின் செல்வாக்கு இழந்து பின்னுக்குத் தள்ளப்பட்டது.

புதிய பெயரில் சேவை

பெரும்பாலானோர் இந்தத் தளத்தையே மறந்துவிட்டனர். இந்நிலையில், இதன் நிறுவனர்களில் ஒருவரான கிரேட் கேம்ப், இந்த சேவை மூடப்படுவதாக அறிவித்துள்ளார். இந்த 16 ஆண்டு காலத்தில் 4 கோடிப் பயனாளிகளுக்கு 60 ஆயிரம் கோடி கண்டறிதலை இந்த சேவை வழங்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

'ஸ்டம்பிள் அப்பான்' சேவை விடைபெறுவது வருத்தமானதுதான் என்றாலும், இந்த சேவை வேறு பெயரில் மறு அவதாரம் எடுக்க இருப்பது ஆறுதலான விஷயம்தான். ஆம், 'ஸ்டம்பிள் அப்பான்' பயனாளிகள், மிக்ஸ் (https://mix.com/) எனும் புதிய சேவைக்கு மாறிக்கொள்ளலாம் என கேம்ப் தெரிவித்துள்ளார். இருப்பினும் 'ஸ்டம்பிள் அப்பான்' போல வருமா எனும் எண்ணம் கொண்டவர்கள், இந்த மாற்று சேவைகளை முயன்று பார்க்கலாம்: டிஸ்கவர்.காம் (https://www.discuvver.com/)- ஒவ்வொரு கிளிக்கிலும் ஒரு புதிய தளத்தை அடையாளம் காட்டும் தளம். இதே போன்ற இன்னொரு சேவை https://urlroulette.net/, ஸ்டம்பிள்.டிவி (http://stumbl.tv) - ஒவ்வொரு 'கிளிக்' கிலும் ஒரு வீடியோவைக் காட்டும்.

உடலை அழகுபடுத்த உபயோகப்படுத்தும் இயற்கை வழிகள்

பெண்கள் பொதுவாக அழகாகவும், ஆரோக்கியமாகவும் தங்களை வைத்துக் கொள்ள வேண்டும் என்றே விரும்புவார்கள். தலை முதல் கால் வரை அழகாக்கும் இயற்கை மூலிகைகளை பற்றி பார்க்கலாம்.

1. நெல்லிக்காய் எண்ணெய் : நெல்லிக் காயில் பெருமளவு வைட்டமின் சி உள்ளது. இந்த வைட்டமினால் நீளமான அடர்ந்த கூந்தலை பெற முடியும். இதை கொண்டு பொடுகு மற்றும் இதர முடி சம்மந்த பிரச்சனைகளை நீக்க முடியும். இந்த வகை எண்ணெயை வாங்கி பயன்படுத்தும்போது தலைமுடிகளில் சிறந்த மாற்றங்களை காண முடியும்.

2. கடலை மாவு : முகத்தில் உள்ள இறந்த திசுக்களை உரித்து எடுக்க இந்திய பெண்கள் பயன்படுத்தும் மிகப் பிரபலமான பொருளாகும். இது ஸ்கிரப் முடியில் உள்ள எண்ணெயை எடுக்கவும் உபயோகப்படுகின்றது. இதை பால் அல்லது கிரீம் ஆகியவற்றில் கலந்து சோப் போல் பயன்படுத்தலாம். இந்த பால் மற்றும் கிரீம் சருமத்தை ஈரப்பதமூட்டி மென்மையாக்குகின்றது. இதில் தேன் மற்றும் பால் ஆகியவற்றை கலந்து ஃபேஸ் பேக்காகவும் பயன்படுத்தலாம்.

3. மஞ்சள் : சரும படை, தேமல், தொற்று மற்றும் எரிச்சல் ஆகியவற்றை குணப்படுத்த மஞ்சளை பயன்படுத்துவார்கள். சருமத்தில் ஏற்பட்ட கருமையை நீக்குவதற்கும் இதை பயன்படுத்துகின்றனர். அது மட்டுமில்லாமல்

முகத்தில் வளரும் முடியை நீக்குவதற்கும் மஞ்சளை தினசரி பயன்படுத்தலாம்.

4. குங்குமப்பூ : இது காஷ்மீரில் அதிகளவு விளைகிறது. இதை வறண்ட சருமம் மற்றும் இதர சரும பிரச்சனைகளுக்கு பயன்படுத்தலாம். அது மட்டுமில்லாமல் சரும நிறத்தை மேம்படுத்தி நல்ல வெளிர் நிறத்திற்கு தோலை கொண்டு வரவும் உதவுகின்றது.

5. ரோஸ் வாட்டர் : புதிதாக மலர்ந்த ரோஜா இதழ்களை கொண்டு உருவாக்கப்பட்ட ரோஸ் தண்ணீரை கரு வளையங்களை போக்கவும், அமைதிப்படுத்தவும் மற்றும் டோனராகவும் பயன்படுத்தலாம். இதை பல பெண்கள் அழுக்கு மற்றும் எண்ணெய் பசையை முகத்திலிருந்து நீக்க பயன்படுத்துகிறார்கள்.

6. சந்தனம் : சந்தனம் அழகுக்கு மட்டுமல்லாமல், மருத்துவ மருத்துவ குணங்கள் கொண்டதாகவும் உள்ளன. சந்தன பசை மற்றும் சந்தன எண்ணெய் ஆகியவை இந்திய பெண்களால் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. அது சருமப் பராமரிப்பு, எரிச்சல், படை மற்றும் பிளாக்ஹெட்ஸ்களையும் நீக்க உதவுகின்றது.

7. சீகைக்காய் : இதை முடியின் பழம் என்றும் ஆயர்வேதத்தில் கூறுவார்கள். இவை தலையில் உள்ள பொடுகை நீக்குவதிலும் தளர்ந்த வேர்களை வலுவூட்டவும் இது வல்லமை பெற்றது.

8. தயிர் : இது உண்ணும் பொருள் மட்டுமில்லாமல் இதில் உள்ள அழகு ரகசியங்கள் ஏராளம். இதை பல ஃபேஸ் மாஸ்க் தயாரிப்பதில் பயன்படுத்தினால் முகம் பொலிவுறும்.

சருமத்தை காக்கும் கிர்ணிப் பழம்

கிர்ணி பழத்தில் புரதமும் கொழுப்புச்சத்தும் அதிகம் உள்ளதால், கேசத்துக்கு உறுதியையும் சருமத்துக்குப் பொலிவையும் கொடுக்கிறது.

தோலில் உள்ள எண்ணெய்ப் பசை குறைந்து சருமம் வறண்டு காட்சியளிப்பவர்கள் கிர்ணி பழ ஜுஸ், வெள்ளரி ஜுஸ் இரண்டையும் தலா ஒரு தேக்கரண்டி கலந்து தோலின் மீது தடவினால் தோல் மிருதுவாகும்.

கிர்ணி பழ விதையைக் காய வைத்து பவுடராக்கி 100 கிராம், ஓட்ஸ் பவுடர் 100 கிராம் எடுத்து அத்துடன் தேவையான அளவு வெள்ளரி ஜுஸ் கலந்து பசையாக்கி. கூந்தல் முதல் பாதம் வரை தேய்த்துக் குளித்தால், எண்ணெய் தேய்த்துக் குளித்தது போன்று குளிர்ச்சியாகவும் வாசனையாகவும் இருக்கும். கிர்ணி பழ விதை, தலைமுடிக்கு நல்ல கண்டிஷனராக செயல்படும்.

சிலருக்கு முகத்தில் அடிக்கடி வியர்த்துக் கொட்டி முகம் டல்லாக இருக்கும், அவர்கள் கிர்ணி பழத்துண்டு ஒன்றை எடுத்து மசித்து முகத்தில் பூசி கழுவினால் முகம் பளிச்சென்று இருக்கும்.

இரண்டு தேக்கரண்டி வெள்ளரி ஜூஸுடன், இரண்டு தேக்கரண்டி கிர்ணி பழ விழுதைச் சேர்த்து, 4 (அ) 5 துளி எலுமிச்சைச் சாறு கலந்து ஸ்ப்ரே பாட்டிலில் ஊற்றி நன்றாகக் குலுக்கி ஃப்ரிட்ஜில் வைத்து, வெளியில் போகும் போது இதை இயற்கை சென்ட் ஆகப் பயன்படுத்தலாம். 2 முதல் 3 மாதங்கள் வரை கெடாது. தோலையும் சேதப்படுத்தாது. விருப்பப்பட்டால் பன்னீர் சேர்த்துக் கொள்ளலாம்.

சிலருக்கு கை, கால், முகத்தில் தேவையில்லாத முடிகள் முளைக்கும், இதற்கு கிர்ணி பழ விதை பவுடர், ஓட்ஸ் பவுடர், கோரைக்கிழங்கு பவுடர், ஆவாரம்பூ பவுடர் தலா 100 கிராம் எடுத்து விழுதாக அரைத்துத் தேய்த்துக் குளித்து வர முகத்தில் உள்ள முடியை வலுவிழக்கச் செய்து தோலை மிருதுவாக்கும். ஆவாரம் பூ சருமத்துக்கு நல்ல நிறத்தைக் கொடுக்கும்.

வயோதிகத்தின் அறிகுறி கண்களில் தான் முதலில் தெரியும். இதற்கு பால் பவுடர், கிர்ணி பழ விதை பவுடர் இரண்டையும் சம அளவு எடுத்து, தண்ணீரில் கலந்து கண்களைச் சுற்றிலும் பூசி, 5 நிமிடம் கழித்துக் கழுவ வேண்டும். சுருக்கங்கள், தொய்வு, கருவளையம், சோர்வு நீங்கி, கண்கள் பிரகாசிக்கும்.

கடுகு எண்ணெய்யுடன், கிர்ணி பழ விதை பவுடரை கலந்து பாதங்களில் பூசினால் பஞ்சு போல் மிருதுவாகும்.

ஆலிவ் எண்ணெயின் அற்புதங்கள்

கோடை காலங்களில் வெயிலின் தாக்கத்தின் காரணமாக சருமம் வறண்டு பொலி விழந்து காட்சியளிக்கும். அவ்வாறு பொலிவிழந்து இருக்கும் சருமத்தை பாதுகாக்க நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

ஆலிவ் எண்ணெய் பயன்படுத்துவதன் முலம் பல்வேறு சரும பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம்.

பல ரகங்கள் கொண்ட ஆலிவ் எண்ணெயில் 'எக்ஸ்ட்ரா விர்ஜின் ஆயில்' தான் சிறந்தது. அதில் தான் எந்த ரசாயன கலப்பிடமும் இல்லை. சருமத்திற்கு எந்த வித பிரச்சனையும் வராது.

ஆலிவ் எண்ணெய் தேய்த்து குளிப்பதால் சருமம் வழவழப்பாகவும் பொலிவாகவும் காட்சி அளிக்கும். ஆலிவ் எண்ணெய் முகத்தில் தேய்ப்பது மட்டுமல்லாமல் உடலில் தேய்த்து வந்தால் அது சரும ஆரோக்கியத்தை பாதுகாக்கும். வெயில் காலங்களில் உடலில் உள்ள பழைய செல்கள் அதிகமாக உதிரும். ஆலிவ் எண்ணெய் பயன்படுத்துவதால் பழைய செல்கள் உதிர்ந்து முகம் பளபளப்பாகும். புதிய செல்களுக்கு புத்துணர்வும் கிடைக்கும்.

சிறிய பஞ்சில் ஆலிவ் ஆயில் வைத்து கண்களை சுத்தி தேய்த்து வந்தால் கண்ணில் உள்ள கருவளையம் நீங்கும். மேலும் கண்களுக்கு புபுத்துணர்வு அளிக்கும்.

ஷாம்பூ போட்டு குளித்த பின்பு ஆலிவ் எண்ணெயை தண்ணீரில் கலந்து கூந்தலில் மசாஜ் செய்து மீண்டும் குளித்தால் தலையில் உள்ள பொடுகு தொல்லை நீங்கும்.

பாத அழகை பராமரிப்பது எப்படி?

முகத்தை பராமரிக்க செலவிடும் நேரத்தில், சில நிமிடங்கள் கூட, பாதங்களை கவனிக்க நாம் செலவு செய்வதில்லை. முகத்தின் அழகு எவ்வளவு முக்கியமோ., அதே போல் நம் பாதத்தின் அழகும் முக்கியம்.

பாதத்தை அடிக்கடி உயர்த்துவது, நின்று கொண்டிருப்பது, கால்களை நீட்டுவது, நடப்பது மற்றும் இதர வகை உடற்பயிற்சிகள் மூலம் உங்கள் பாதத்துக்கு ரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்யலாம். பாதத்துக்கு மசாஜ் செய்தல் மற்றும் மெல்லிய சூட்டில் பாதத்தைக் கழுவுதல் ஆகியவை பாதத்துக்கான ரத்த ஓட்டத்தை அதிகரிக்கும்.

பாதங்களை அழுக்காகாமல் பார்த்துக் கொண்டாலே பாதி குறைந்து விடும். வீட்டிற்குள்ளும் காலணிகளை போட்டுக்கொள்ளுங்கள். ஒரு நாள் விட்டு ஒரு நாள் எலுமிச்சை பழ தோலால் பாதங்களை நன்றாக தேய்த்து கழுவ வேண்டும். இது கால் வெடிப்பில் உள்ள அழுக்குகளை நீக்கி, பாதத்தை சுத்தமாக்கும் மேலும் கிருமிகளை ஒழிக்கும்.

தினமும் இரவில் படுக்கப்போவதற்கு முன்பு ஒரு பாத்திரத்தில் சூடு தாங்கும் அளவு வெந்நீர், உப்பு, எலுமிச்சைச்சாறு, ஷாம்பு போட்டு பாதங்களை 5 முதல் 10 நிமிடங்கள் வரை ஊற வைத்து பிறகு பிரஷினால் சுத்தம் செய்யவும். இதை வாரத்திற்கு இரண்டு அல்லது 3 நாட்களுக்குச் செய்யலாம். பின்பு பாதங்களை ஈரம்போக ஒரு மெல்லிய டவலால் துடைத்து நல்லெண்ணெயை லேசாக சூடு செய்து காலில் தடவலாம். பாதத்தில் வெடிப்பு உள்ளவர்கள் வீட்டில் மருதாணி இலையை விழுது போல நன்கு அரைத்து வெடிப்பு உள்ள இடங்களில் வாரந்தோறும் தடவி வந்தால் வெடிப்பு நீங்கும். உருளைக்கிழங்கை காய வைத்து அதனை மாவு போன்று அரைத்து தண்ணீரில் குழைத்து பூசி வர வெடிப்பினால் ஏற்பட்ட கருமை நீங்கி, பாதம் மிளிரும்

பாதங்கள் மிருதுவாக இருக்க வேண்டுமானால் பீர்க்கங்காய் நார் கொண்டு தினமும் குளிக்கும்போது பாதத்தில் நன்றாக 5 நிமிடம் தேய்த்து வந்தால் பாதங்கள் மிருதுவாகி

கணவன் மனையிடம் எதிர்பார்ப்பவை

இரண்டு வெவ்வேறு மனிதர்கள், திருமணம் என்ற பந்தத்தில் கணவன், மனைவியாக இணைகிறார்கள். பொதுவாக, கணவர்கள், மனைவிகளிடம் என்னென்ன எதிர்பார்ப்பார்கள் என்பது தெரிந்த விஷயம். ஆனால், டிரெண்ட் மாறிக்கொண்டே இருக்கிறதே. ஸோ, இந்தக் கால கணவர்கள், தங்கள் மனைவிகளிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று தெரிந்துகொள்வோமா?

★ 'ஏங்க', 'என்னங்க' மாதிரியான ஸோ கால்டு மரியாதை வார்த்தைகளை இந்தக் கால கணவர்கள் எதிர்பார்ப்பதே இல்லை. இவற்றுக்குப் பதிலாக, வாடா, போடா, மாமா, மச்சான் என எப்படிக் கூப்பிட்டாலும், லவ்வபிளாக ரியாக்ட் பண்ணுகிறார்கள். டார்லு, மாம்ஸ், பப்பு மாதிரியான செல்லப் பெயர்களோடு மனைவி அழைப்பதை இந்தக் கால கணவர்கள் விரும்புகிறார்கள்.

★ ஆஃபீஸில் நடக்கும் பாலிடிக்ஸ், அப்ரைசல், வேறு ஆஃபீஸ் மாறுவது, தன் உடன்பிறந்தவர்களின் பிரச்சனைகள் என்று தன்னைச் சார்ந்த அத்தனை விஷயங்களையும் மனைவியிடம் வெளிப்படையாகச் சொல்லி, அதற்கான தீர்வுகளையும் எதிர்பார்க்கிறார்கள் இன்றைய ஆண்கள்.

★ சமூக வலைதளம், ஆஃபீஸ் என நிறையப் பெண் தோழிகள் இருந்தபோதும், தன்னை மனைவி நம்ப வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு

ஆண்களிடம் இருக்கிறது. அதே நேரம், மனைவி சமூக வலைதளங்களில் ஆக்ட்டிவாக இருப்பது பல ஆண்களுக்கும் டென்ஷன் ஏற்படுத்துகிறது.

★ தாம்பத்யம் விஷயத்தில் தன் விருப்பம், தன் சுகம் போன்ற சுய நலங்கள் இன்றைய ஆண்களிடம் குறைந்துள்ளன. அதனால், தாம்பத்யம் முடிந்ததும் தன் மனைவி சந்தோஷப்பட்டாளா என்பதை அவள் வெளிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். ஸோ, உங்கள் விருப்பங்களை, அந்த நேரத்துக்குத் தக்க உணர்வுகளுடன் வெளிப்படுத்துங்கள் பெண்களே.

★ 'நீ வீட்டைப் பார்த்துக்க; வேலைக்குப் போகவேண்டாம்' என்று சொல்லும் பழக்கம் இன்றைய முக்கால்வாசி ஆண்களிடம் இல்லை. மனைவியும் தனக்கு உதவியாக வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற எதிர்பார்ப்பு கிட்டத்தட்ட எல்லா ஆண்களிடமும் இருக்கிறது.

★ தங்கள் மனைவியிடம் வெளிப்படையாக இருக்கும் ஆண்கள்கூட, தங்களுக்கென்று ஒரு ஸ்பேஸை மனைவி கொடுக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கிறார்கள்.

★ தாங்கள் பேசுவதை மனைவிகள் காது கொடுத்து கேட்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பும் ஒரு சில ஆண்களிடம் இருக்கிறது.

குழந்தைகளுக்கு மசாஜ் செய்வதால் கிடைக்கும் நன்மைகள்

மசாஜ் பல உடல் ரீதியான நன்மைகள் நிறைந்தது என்பதோடு குழந்தையின் உணவுச் செரிமானம், இரத்த ஓட்டம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றில் முக்கிய பங்காற்றுகிறது.

குழந்தைகள் மசாஜ் என்பது தாய் மற்றும் குழந்தை இருவருக்குமே ஆறுதலைத் தரவல்லது. குழந்தைகளுக்கும் பொழுதுபோக்கு இல்லையென்றால் மன அழுத்தம் உருவாகும். மசாஜ் பல உடல் ரீதியான நன்மைகள் நிறைந்தது

என்பதோடு குழந்தையின் உணவுச் செரிமானம், இரத்த ஓட்டம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றில் முக்கிய பங்காற்றுகிறது.

குறை பிரசவத்தில் பிறந்த குழந்தைகளில் சரியான வளர்ச்சிக்கும் குறைபாட்டுடன் பிறந்த குழந்தைகளில் தசை வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கிறது. மசாஜ் ஆஸ்துமா, சர்க்கரை நோய் அல்லது சரும பிரச்சனைகளால் அவதியுறும் குழந்தைகளுக்கு மிகவும் பயன் தரக்கூடிய ஒன்று.

புற்று நோயால் அவதியுறும் குழந்தைகளுக்கும் உடம்பு மசாஜ் மன அழுத்தத்தை குறைத்து எதிர்ப்பு சக்தியை ஊக்குவிக்கிறது. ஆட்டிசம் பாதித்த குழந்தைகளுக்கும் இது மிகவும் பயனளிப்பதாக உள்ளது.

குழந்தைகளுக்கு மசாஜின் மூலம் கிடைக்கும் நன்மைகள் :

குழந்தைகளின் தூக்கத்தை மேம்படுத்தவும் அவர்களுடைய தூக்க முறைகளை நெறிமுறைப்படுத்தவும் உதவுகிறது.

மசாஜ் செய்வதன் மூலம் குழந்தைகள் மற்ற குழந்தைகளை விட ஆரோக்கியமாக அதாவது எடை சீக்கிரமாக கூடுவர்.

உணர்ச்சிகளை மேம்படுத்தவும் குழந்தைகளின் மனநிலையை மேம்படுத்தவும் மசாஜ் உதவுகிறது

குழந்தைகளில் அதிகம் காணப்படும் மலச்சிக்கல் உள்ளிட்ட பல உடல் உபாதைகளிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது.

உடலின் எதிர்ப்பு சக்தி இயக்கத்தை சீராக வைக்க உதவுகிறது.

குழந்தைகள் புத்துணர்ச்சியாகவும் சுறுசுறுப்பாக உணரவும் தசைகள் வலுப்பெறவும் உதவுகிறது. இந்தக் குழந்தைகள் சட்டென எதையும் புரிந்துகொள்ளவும் சமாளிக்கவும் செய்வர்.

குழந்தைக்கு 15-20 நாட்கள் ஆனவுடனேயே மசாஜ் செய்யத் தொடங்கி விடுங்கள். மசாஜ் செய்த பின்பு வெது வெதுப்பான தண்ணீரால் குளிப்பாட்டி விடுவதன் மூலம் உங்கள் குழந்தையை ஆசுவாசப்படுத்தவும் நல்ல தூக்கத்தைப் பெறவும் உதவும்.

கண்களைச் சுற்றி கருவளையமா?

நாள் முழுவதும் கம்ப்யூட்டர் முன்பு பணிபுரிவதாலும், தூக்கமின்மை காரணமாகவும் கண்ணின் கீழ் கருவளையம் வரும். இதனை போக்கும் வழிமுறைகளை பார்க்கலாம்.

நாள் முழுவதும் கம்ப்யூட்டர் முன்பு பணிபுரிவதாலும், தூக்கமின்மை காரணமாகவும் கண்ணின் கீழ் கறுத்துப் போகக்கூடும். விரைவில் கருவளையத்தை போக்கும் வழிமுறைகளை பார்க்கலாம்.

கண்களைச் சுற்றி ஏற்படும் கருவளையம் அழகை முற்றிலும் பாதிக்கும். நாள் முழுவதும் கம்ப்யூட்டர் முன்பு பணிபுரிவதாலும், தூக்கமின்மை காரணமாகவும் கண்ணின் கீழ் கறுத்துப் போகக்கூடும். உடலில் வெப்பம் அதிகரித்து நேரடியாகக் கண்களைப் பாதிக்கும். கண்களுக்கு எரிச்சலைத் தரும். தொடர்ச்சியை கீழே வாசியுங்கள்.

தினமும் 8 மணி நேரம் தூக்கம் அவசியம். உணவில் கீரை வகைகளைச் சேர்க்கவேண்டும். எண்ணெய் வைத்துக் கண்களைச் சுற்றி மசாஜ் செய்வதும் கருவளையத்தைப் போக்கும்.

குழந்தைகளும் ஸ்மார்ட் கடிகாரங்களும்

மேலை நாடுகளில் குழந்தைகளுக்கு பெற்றோர் ஸ்மார்ட் கடிகாரங்களை வாங்கித் தருகின்றனர். இதன் மூலம் குழந்தையின் இருப்பிடம் மற்றும் செயல்பாடுகளை அறிந்து கொள்கிறார்கள். ஆனால் இதில் ஆபத்து உள்ளதாக கன்சியூமர் கவுன்சில்கள் எச்சரித்துள்ளன. வேண்டாதவர்கள், குழந்தைகளின் இருப்பிடம் மற்றும் நடமாட்டத்தை அறிந்து, அவர்களை கண்காணித்து துன்புறுத்தும் வாய்ப்பு அதிகம்!

மேலும் இத்தகைய ஸ்மார்ட் கடிகாரங்களை விற்கும் நிறுவனங்களுக்கும் இது சார்ந்த தகவல்கள்

செல்கின்றன. அவர்கள் இவற்றை வைத்து என்ன செய்கிறார்கள் என்பது புரியவில்லை. ஆகவே குழந்தைகளுக்கு ஸ்மார்ட் கடிகாரம் வாங்கித் தரும் பெற்றோர் இவற்றை மனதில் கொண்டு வாங்கிக் கொடுப்பது நல்லது என கன்சியூமர் கவுன்சில் கோரிக்கை விடுத்துள்ளது.

உருளை.புலாவ்

தேவையான பொருட்கள் :

உருளைக்கிழங்கு - 2
புதினா - சிறிதளவு
கொத்தமல்லி - சிறிது
சீரகம் - 1 டேபிள் ஸ்பூன்
பாசுமதி அரிசி - 1 1/2 கப்
மிளகாய் தூள் - 1 டேபிள் ஸ்பூன்
மஞ்சள் தூள் - 1 டீஸ்பூன்
கிராம்பு - 3
ஏலக்காய் - 4
பட்டை - 1
தண்ணீர் - 2 கப்
உப்பு - தேவையான அளவு
நெய் - 2 டேபிள் ஸ்பூன்

செய்முறை :

கொத்தமல்லி, புதினாவை பொடியாக நறுக்கி கொள்ளவும்.

உருளைக்கிழங்கை வேக வைத்து துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும்.

குக்கரை அடுப்பில் வைத்து, அதில் நெய் ஊற்றி காய்ந்ததும், சீரகம், பட்டை, கிராம்பு, ஏலக்காய் சேர்த்து தாளிக்க பின்னர் அதில் வேக வைத்துள்ள உருளைக்கிழங்கு சேர்த்து, வதக்கவும்.

அடுத்து அதில் அரிசியைக் கழுவி போட்டு, சிறிது நேரம் கிளறி விட வேண்டும்.

பிறகு அதில் உப்பு, மிளகாய் தூள், மஞ்சள் தூள் மற்றும் தண்ணீர் சேர்த்து, தண்ணீரை நன்கு கொதிக்க விட்டு, குக்கரை மூடி 4 விசில் விட்டு, 15 நிமிடம் தீயை குறைவில் வைத்து வேக வைத்து, இறக்க வேண்டும்.

பின்பு விசிலானது போனதும், குக்கரை திறந்து, அதில் நறுக்கி வைத்துள்ள புதினா, கொத்தமல்லி சேர்த்து கிளறி, 10 நிமிடம் குக்கரை மூடி வைத்து, பின் திறந்தால், சூப்பரான உருளைக்கிழங்கு புலாவ் ரெடி!!!

ஈபிள் டவர் பற்றி நமக்கு தெரியாத வியக்க வைக்கும் சில தகவல்கள்!!!

ஈபிள் டவரை இடிக்க திட்டம்

கடந்த 1909 ஈபிள் டவரை இடிக்க திட்டமிடப்பட்டது, பின் இது சிறந்த ரேடியோ ஆண்டெனாவாக உபயோகப்படுகிறது என அந்த திட்டத்தை கைவிட்டுனர்.

நிறைய பேர் கண்டுகளித்த நினைவுச் சின்னம்

கடந்த 2011 ஆம் ஆண்டு உலகிலேயே கட்டணத்தின் பெயரில் அதிக சுற்றுலா பயணிகளால் கண்டுகளிக்கப்பட்ட நினைவுச் சின்னம் என்ற பெருமையை பெற்றது ஈபிள் டவர்.

ஹிட்லருக்கு அவமதிப்பு

இரண்டாவது உலக போரின் போது ஹிட்லர் ஈபிள் டவரை காண வந்த போது, அதன் லிப்ட் கேபிள்கள் துண்டிக்கப்பட்டன. இதனால் ஹிட்லர் ஈபிள் டவரின் உச்சியை காண இயலாது போனது.

ஈபிள் டவரின் படிகள்

ஈபிள் டவரில் மொத்தம் 1,665 படிகள் இருக்கின்றன. இதை மொத்தத்தையும் ஏறி போய் ஹிட்லர் பார்க்க முடியாது என்பதனால் தான் கேபிளை துண்டித்துவிட்டனர் போல.

மோசடி நபர்

விக்டர் லுஸ்டிக் எனும் மோசடி நபர் ஒரு இரும்பு கடைக்காரருக்கு ஈபிள் டவரை விற்றுள்ளார்.

பார்சிலோனாவுக்காக வடிவமைக்கப்பட்டது

ஸ்பெயின் நாட்டிலுள்ள பார்சிலோனா நகருக்காக தான் முதன்முதலில் ஈபிள் டவரின் கட்டிட வடிவம் வடிவமைக்கப்பட்டது. அவர்களுக்கு இந்த வடிவம் பிடிக்காதால் நிராகரித்துவிட்டனர்.

பாராசூட் வடிவமைப்பாளர் மரணம்

பாராசூட்டை வடிவமைத்தவர் அதை பரிசோதனை செய்து பார்க்க ஈபிள் டவரில் இருந்து குதித்த போது மரணம் அடைந்துவிட்டார்.

ஈபிள் டவரின் திருமணம்

கடந்த 2007 ஆம் ஆண்டு எரிக்கா லா எனும் பெண்மணி ஈபிள் டவரை திருமணம் செய்துக் கொண்டார்.

20,000 விளக்குகள்

ஈபிள் டவர் இரவில் ஒளிமயமாக காட்சியளிக்க 20,000 விளக்குகள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

மாதிரிகள்

உலகெங்கிலும் ஈபிள் டவரை போலவே 30 மாதிரிகள் பல்வேறுப்பட்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன

பத்து யானைகளுக்கு சமம்

ஈபிள் டவரில் உபயோகிக்கப்பட்ட பெயிண்ட்டின் எடை பத்து யானைகளின் எடைக்கு சமமாம்.

லண்டன் மாடல்

கடந்த 1891 ஆம் ஆண்டு ஈபிள் டவரை விட மேம்பட்ட கட்டிடத்தை கட்டியது லண்டன். ஆனால், அது சரியான முறையில் கட்டப்படாததால் 1907 ஆண்டு இடிக்கப்பட்டது.

பறக்கும்போதே உறங்குகின்ற அல்பட்ரோஸ் பறவை

அல்பட்ரோஸ் (ஆல்பட்ரோஸ்) பறவைகள் மிகத் திறனுடன் காற்றோட்ட வேறுபாடுகளைப் பயன்படுத்தி அதிக அலுப்பின்றி வெகு தொலைவு பறக்க வல்லவை. இவை நீரில் வாழும் கணவாய் (squid) மீன குறில் (krill) முதலியவற்றை உணவாக உட்கொள்ளுகின்றன. ஆல்பட்ரோஸ் பறவைகள் கடலிடையே உள்ள சிறு தீவுகளில் பெருங்கூட்டமாக வாழ்கின்றன. ஆல்பட்ரோஸ் பறவைகள இணையாக வாள்ணாள் முழுவதும் ஒன்றாகவே (இணை பிரியாமல்) வாழ்கின்றன. இனப்பெருக்கக் காலங்களில் ஒரு முறைக்கு ஒரு முட்டைதான் இடுகின்றன.அல்பட்ரோஸ் (ஆல்பட்ரோஸ்) தென்முனைப் பெருங்கடலிலும் வட பசிபிக் பெருங்கடலிலும் காணப்படும் கடற் பறவையினமாகும். இவை பெரும்பாலும் வெண்ணிறக் கழுத்தும் பெரிய அலகும் மிகப்பெரிய இறக்கை விரிப்பளவும் கொண்டவை.

சதை இணைப்புள்ள கால் அடிகள் (கொய்யடிகள்) கொண்டவை. இப் பறவையினம் இன்று உயிர் வாழும் பறவையினங்களிலேயே மிகப் பெரியவைகளின் ஒன்றாகும். இவ்வினத்தின் உயிரியல் வகைப்பாட்டுப் பெயர் டியோமெடைடிடே (Diomedeidae) என்பதாகும். இவ்வினத்தில் 21 வகையான உள்ளினங்கள் உள்ளன ஆனால் அவற்றுள் 19 இனங்கள் மிக அருகிய உயிரினப்பட்டியலில் உள்ளன. பெரும் வெண் ஆல்பட்ரோஸ் என்னும் பறவையின் இறக்கை விரிப்பளவு இன்றுள்ள பறவைகள் யாவற்றினும் மிக நீளமானது.

இவை கடல் பறவைகள். பூமியின் தெற்குப் பகுதியில் உள்ள கடல் பகுதிகளில்தான் ஆல்பட்ரோஸ்கள் வசிக்கின்றன. முட்டையைவிட்டு வெளி வந்து பறக்கத் தொடங்கிவிட்டால் பிறகு, இந்தக் கடற் பறவைகள் கரையில் இறங்குவதில்லை. கீழே இறங்காமல் ஏறத்தாழ ஐந்து வருடங்கள் தொடர்ந்து பறப்பதற்கு இவற்றால் முடியும். பறப்பதற்கிடையில்தான் இவை உண்கின்றன, உறங்குகின்றன.

இந்தப் பறவைகள் பெரிய இறக்கைகளைக் கொண்டிருக்கின்றன. ஒரு பகுதி இறக்கை, ஏறத்தாழ மூன்று மீட்டர் நீளமுடையதாயிருக்கும். இந்த இறக்கைகளை இருபுறமும் விரித்தால், மணிக்கணக்காகவோ அல்லது நாட்கணக்காகவோ இவற்றால் ஆகாயத்தில் அப்படியே பறக்க முடியும். கடலில் உள்ள மீன்களும், சிறிய பிராணிகளும் தான் இவற்றின் உணவு. நாள் ஒன்றுக்கு

ஏறத்தாழ 640 கிலோ மீட்டர் தூரம் இவை பறப்பதுண்டு. மிக விரைவாகப் பறக்கும் திறமை உள்ள ''ஸ்விப்ட்' எனும் கடற் பறவையும் பறக்கும்போதுதான் உறங்கும்.

நன்றி மறக்காத எறும்பு

ஒரு கட்டெறும்பு தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தது. மரத்திலிருந்து இதைப் பார்த்த புறா ஒன்று மரத்திலிருந்த இலை ஒன்றைப் பறித்து நீரில் வீசியது. எறும்பும் தத்தித் தத்தி வந்து

அந்த இலையின் மேல் ஏறிக் கொண்டது. அந்த இலை காற்றில் அசைந்து மெதுவாகக் கரைப்பக்கம் ஒதுங்கக் கரையில் ஏறி தப்பியது அந்த எறும்பு.

மற்றொரு நாள்.

ஒரு வேடன் அந்த புறாவைக் குறி வைப்பதைப் பார்த்தது அந்த எறும்பு. ஆனால் புறாவோ இதை அறியாமல் வேறெங்கோ கவனமாக இருந்தது. அன்று தன்னைக் காப்பாற்றிய புறாவின் உயிரைக் காப்பாற்ற வேண்டியது தனது கடமையாக எண்ணியது எறும்பு. விரைந்து சென்று வேடனின் காலில் நறுக்கென்று கடித்தது. கடியின் வலி தாங்க முடியாமல் கத்திய வேடனின் குறி தப்பியது. சத்தத்தைக் கேட்டுத் திரும்பிய புறா தனக்கேற்படவிருந்த ஆபத்தை அறிந்து அந்த இடத்தை விட்டுப் பறந்தது. அன்று புறா நமக்கென்ன என்று அலட்சியமாயிருக்காமல் உதவி செய்ததால் தான் புறாவின் உயிர் தப்பியது. அந்த சிறிய உருவம் கொண்ட எறும்பும் நன்றி மறக்காமல் செயல்பட்டது.

எவருக்கும் எந்த நேரத்திலும் நம்மால் முடிந்த உதவியைச் செய்ய வேண்டும். அது போல் நமக்குச் செய்த நன்றியையும் எந்தக் காலத்திலும் மறக்கக் கூடாது.

சேர் பொன்னம்பலம் அருணாசலம்

சேர் பொன்னம்பலம் அருணாசலம் (செப்டம்பர் 14 1853 ஜனவரி 9 1924) அவர்கள் பிறந்த தினமாகும். பொன்னம்பலம் அருணாசலம் கேட் முதலியார் என அழைக்கப்பட்ட அருணாசலம் பொன்னம்பலம், செல்லாச்சி (சேர் முத்து குமாரசுவாமியின் சகோதரி) ஆகியோரின் மூன்றாவது புதல்வர். குமாரசாமி முதலியார், சேர். பொன். இராமநாதன் ஆகியோரின் சகோதரர். இவரது மனைவியின் பெயர்: சுவர்ணம் நமசிவாயம். பிள்ளைகள் : அருணாசலம் மகாதேவா, சிவானந்தன் அருணாசலம், அருணாசலம் இராமநாதன் ஆகியோர்

சேர் பொன்னம்பலம் அருணாசலம் சட்ட நிரூபண சபையில் சேர் பொன் இராமநாதனுக்குப் பின் அங்கத்துவம் வகித்தார். அரசாங்க சேவையில் பணியாற்றும் காலத்திலேயே சுயராஜ்ய உணர்வால் உந்தப்பெற்றார். ஓய்வு பெற்ற பின் அரசியல், சமூக, கல்விப் பண்பாட்டுத் துறைகளிலே ஈடுபட்டார். 1919-ம் ஆண்டு இலங்கையருக்கு கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கோரி இலங்கைத் தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. இதனுடைய முதல் தலைவராக 1919 முதல் 1922 வரை பொன்னம்பலம் அருணாசலம் விளங்கினார். ஆனால் சேர். ஜேம்ஸ் பீரிசும், நு. து. சமரவிக்கிரமவும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் அருணாசலம் உட்படத் தமிழ்த் தலைவர்கள் காங்கிரசில் இருந்து விலகி தமிழர் சீர்திருத்தக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கினர். அவரது காலத்தில் இலங்கையின் தேசியத் தலைவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டவர்.

தானே முன்னின்று உருவாக்கி அதன் முதற் தலைவராக இருந்து இலங்கைத் தேசியக் காங்கிரஸை தாபித்த பின் அதை விட்டு வெளியேறி சேர் பொன்.அருணாசலம் அவர்கள் இலங்கைத் தமிழர் கழகத்தைத் (Ceylon Tamil League) தொடங்கிய போது அதன் இரண்டாம் பொதுக் கூட்டத்தில் பின்வருமாறு கூறினார்.

அரசியற் தேவைப்பாட்டின் நிமித்தமே எங்கள் இக்கழகம் உருவாகியுள்ளது. ஆனால், அதன் உருவாக்கத்திற்கு அரசியலே காரணம் என்று முடிவு செய்து விடமுடியாது. அதன் நோக்குகள் பரந்துபட்டன. காலாதிகாலமாகப் பரம்பரை பரம்பரையாகத் தமிழர்கள் வாழ்ந்து இன்று இந்த நிலைக்கு வர அவர்களுக்கு அனுசரணையாக இருந்த தமிழர் இலட்சியங்களை நடைமுறைப்படுத்தவும் அவற்றை இலங்கை, தென் இந்தியா மற்றும் தமிழர் வாழும் குடியேற்ற நாடுகளில் விருத்தியடையச் செய்யவும் தமிழர்கள் செறிந்து வாழும் தமிழகத்துடன் தொடர்பு கொண்டு ஐக்கியமுற்று வாழவும் எமது நோக்குகள் வியாபித்து விரிவடைந்துள்ளன. நாம் தமிழர் என்ற அந்தத் தனித்துவத்தைப் பேண விரும்புகிறோம்.

இயற்றிய சமய நூல்கள்

A Revel in Bliss தாயுமான சுவாமிகள் பாடல்களிற் சிலவற்றின் மொழிபெயர்ப்பு 1895. A Few Hymns of Manikka Vachaka and Thayumanavar ஜி. யூ. போப் அவர்களுடன் இணைந்து மொழிபெயர்த்த மாணிக்கவாசகரினதும் தாயுமானவரினதும் பாடல்கள் சென்னை, 1897. Studies and Translations from the Tamil ஆய்வுகளும் மொழிபெயர்ப்புகளும் சென்னை. Studies and Translations, Philosophical and Religious கட்டுரைத் தொகுதி முதற் பதிப்பு:1937

திருக்கோவையார், கல்லாடம், திருமுருகாற்றுப்படை, ஞானவாசிட்டம், புறநானூறு என்பவற்றிலிருந்தும் மொழி பெயர்ப்புச் செய்துள்ளார்.

மின்சாரம் ஒரு தமிழ் கண்டுபிடிப்பு!

குட்டை உருவமும், நீண்ட தாடியும் கொண்ட ஒரு சாமியாரும், ஒரு மண் குடுவையும் ஒரு சில ஆங்கில வார்த்தைகளும் உங்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கலாம். முதலில் யாரிந்த சாமியார் என்பதை தெரிவித்து விடுகிறோம். இவர் தாங்க ''அகத்தியர்''. ஒரு சிலர் படத்தைப் பார்த்ததும் யூகித்திருப்பீர்கள்! சரி இவருக்கும் இந்த பதிவுக்கும் என்ன சம்மந்தம் என்பதைப் பார்க்கலாம்.

சுமார் 9000 ஆண்டுகளுக்கு முன் இந்தியர்கள் கண்ட விமான அறிவியல், வானவியல் சாஸ்திரம் என்ற வரிசையில் இப்போது சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழன் அறிந்து வைத்திருந்து ஒரு அரிய தொழில் நுட்பத்தைப் பற்றி விவரிப்பது தான் இந்த பதிவு.

''சன்ஸ்தப்ய ம்ரின்மாய பத்ரே
தாம்ரப்பத்ரம் சுசான்ஸ்க்ரிதம்
சாட்யெச்சிகிக்ரிவன் சர்த்ரர்ப்ஹி
கஷ்த்பம்சுப்ஹி
தஸ்தலொஷ்தோ நிததவ்யாஹ்
பர்தச்சடிதஸ்த்ஹா
சன்யோகஜ்ய்தே தேஜோ
மித்ரவருனசங்கியதம்''

புரியலை நா விட்டுடுங்க..., நீங்கள் இப்போது படித்த வரிகள் பைந்தமிழ் முனிவர் அகத்தியர் எழுதிய அகத்திய சம்கிதம் என்ற அறிவியல் பொக்கிடத்தின் ஒரு பகுதி.

இதற்கான விளக்கத்தை இப்போது பார்க்கலாம்,

''ஒரு மண் குடுவையை எடுத்து அதனுள்ளே தாமிர தகடை செலுத்தி சிறிதளவு சிகிக்ரிவம் நிறப்ப வேண்டும். பின்னே அதை ஈரமான மரத்தூள், பாதரசம் மற்றும் துத்தநாகத்தைக் கொண்டு பூசி, இரண்டு கம்பிகளை இணைத்தால் மித்ரவருனசக்தியைப் பெறலாம்''

மித்ரவருனசக்தியா அப்படினா என்ன? சித்தர்கள் தவமிருந்து கிடைக்கிற சக்தியா?

Rao Saheb Krishnaji Vajhe (சுருக்கமாய் கிருஷ்ணாஜி) 1891 ஆம் ஆண்டு புனேவில் தமது பொறியியல் படிப்பை முடித்துவிட்டு, தமது துறை சார்ந்த விடயங்களை பண்டைய கால படைப்புகளில் தேடலைத் தொடங்கினார். அப்போது உஜ்ஜெய்னி மாகாணத்தைச் சேர்ந்த Damodar Tryambak Joshi (சுருக்கமாய் ஜோஷி) ஜோஷியிடம் ஒரு சில பண்டைய ஆவனங்களைப் பெற்றுத் தனது ஆய்வுகளைத் தொடர்ந்தார். அது சுமார் கி.மு 1550 ஆம் ஆண்டின் ஆவணம். நாம் மேலே பார்த்த அந்த வரிகளைப் படித்த உடன் அதைப் பற்றி தெரிந்து கொள்ள சமஸ்கிருத வல்லுனரான Dr.M.C.Sahastrabuddhe (சுருக்கமாய் புத்தே) அவர்களை அணுகினார். புத்தே அப்போது நாக்புர் பல்கலைக்கழக சம்ஸ்கிருதத் துறைத் தலைவர். அவர் இதைப் படித்துப் பார்த்ததும் ஆச்சரியத்துடன் அதிர்ந்து போய் இது ஏதோ ஒரு டேனியல் செல்லைப் போன்ற மின் கலத்தின் கட்டுமானத்தைப் போன்று இருக்கிறது என்றார். சரி இதை மேலும் ஆராய வேண்டும் என்ற ஆர்வம் தொற்றிக் கொள்ள புத்தே அதை நாக்பூரைச் சேர்ந்த பொறியியல் வல்லுனர் P.P. Hole (ஹோல்) அவர்களிடம் அதைக் கொடுத்து ஆராயச் சொன்னார். இதைக் கேட்டதும் நமது கிருஷ்ணாஜிக்கு உற்சாகம் பீறிட்டு வர அவரும் களத்தில் குதித்தார்.

ஒவ்வொன்றாய் படித்து படித்து அதில் கூறப்பட்டதைப் போன்றே தனது மின்கலத்தை வடிவமைக்கும் போது அவர் வந்து முட்டி மோதி நின்ற இடம் சிகிக்ரிவம் என்ற சொல். நாமும் கூட அதை படிக்கையில் என்ன அது என்று சற்று யோசித்திருப்போம். அவர்களும் இது என்னவாய் இருக்கும் எனத் திணரும் போது ஒரு சமஸ்கிருத அகராதியில் ''மயிலின் கழுத்துப் பகுதி'' என்று இருந்ததைப் பார்த்தார்கள். உடனே அவர்கள் இருவரும் பக்ஹ் என்ற ஒரு மயில் சரணாலயத்தில் தலைமைப் பொருப்பாளராய் இருந்தவரிடம் போய் ஏதாவது இறந்த மயில்கள் உள்ளதா அல்லது இங்கிருக்கும் மயில்கள் எப்போது சாகும் என கேட்க அவருக்கு கோபமே வந்துவிட்டது. பிறகு இவ்விருவரும் நிலைமையை விளக்கிக் கூற உடனே பக்ஹ் சிரிக்க ஆரம்பித்துவிட்டார். இருவரும் திகைப்புடன் அவரை நோக்க பக்ஹ் சொன்னார் ''அது மயிலின் கழுத்து அல்ல மயிலின் கழுத்தைப் போன்ற நிறம் உள்ள பொருள்''. இதைக் கேட்டதும் அவர்களுக்கு சிந்தனை முளைத்தது. ஆஹா! ஆம்! அது தான் அது!, மயிலின் கழுத்து நிறம்! அதே தான். காப்பர் சல்ஃபேட்! கண்டுபிடித்தாகிவிட்டது.

அடுத்த சில மணி நேரங்களில் மின் கலமும் தயாரானது. அந்த மின் கலத்தை ஒரு மல்டி மீட்டரை வைத்து ஆராய்ந்த போது 1.38 Open Circuit Voltage மற்றும் 23 milliampere Short Circuit Current. கிடைக்கப்பெற்றது. ஆமாம்! வெள்ளைக்காரன்Electric current என்றதை அலுப்பே இல்லாம மின்சாரம் என்று பெயர் மாற்றி பயன்படுத்தி வருகிறோமே அதற்கு நம் பாட்டன் இட்ட பெயர் மித்ரவருண சக்தி.

இந்த மித்ரவருண சக்தி என்ற பெயருக்கும் கூட விளக்கமுண்டு. வருணன் என்றால் தண்ணீர் என்பது நாம் அறிந்ததே, மிதரன் என்றால் சூரியன் என்று பொருள். ஆனால் இங்கே ஹைட்ரஜன் என்ற பொருளைக் கொள்ளும். ஏனெனில் சூரியனின் சக்தி ஹைட்ரஜனில் தான் உள்ளது. அதனால் இங்கே ஹைட்ரஜனைக் குறிக்க மித்ரா என்று குறிப்பிடுகிறார். தண்ணீரில் இருந்து ஹைட்ரஜனைப் பிறித்து எடுத்தால் மாபெரும் சக்தியை நாம் பெறலாம். எனவே அவ்வாறு பெறப்பட்ட சக்தியையே மித்ரவருண சக்தி என்கிறார் அகத்தியர்.

என்னப்பா இது அந்த காலத்துல மின்சாரமா என்று கேட்கிறீர்களா? தேடுங்கள் கூகுள் தளத்தில், பாக்தாத் பேட்டரி என்று ஆங்கிலத்தில். அது மட்டும் அல்ல ஹிஸ்டரி சேனலின் ''தி ஏன்ஸியண்ட் ஏலியன்ஸ்' தொட்ரைப் பார்த்தவர்களுக்கு இது தெரிந்திருக்கக் கூடும்.

இருங்க இருங்க.., நம்ம பாட்டன் இதோட நிருத்திடல.. இன்னும் கொஞ்சம் தகவல் மட்டும் சுருக்கமாய் சொல்லி முடித்து விடுகிறோம்..

அவர் மேலும் கூறுவது, இது போல 100 கலன்களை செய்து தண்ணீரைப் பயன்படுத்தினால் அது பிராண வாயுவாகவும் ஹைட்ரஜனாகவும் பிரியும் என்கிறார். இந்த ஹைட்ரஜன் மிதக்கும் தன்மையுடையது எனவும் இதை ஒரு பையில் அடைத்தால் பறக்கப் பயன்படுத்தலாம் எனவும் தெரிவிக்கிறார். அது மட்டுமல்லாமல் இதே அகஸ்திய சம்ஹிதாவில் நமது நவீன கால ''electroplating'' என்று சொல்லக் கூடிய அதே முறையை தெள;ளத் தெளிவாக விவரித்து செயற்கையாக தங்கத்திற்கு சாயம் பூசுவது எப்படி என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நிறந்தீட்டுவோம்



இரண்டாவது மிகச் சிறிய நாடு!

கீழே உள்ள 10 குறிப்புகள் ஒரு குறிப்பிட்ட நாட்டைக் குறிக்கின்றன. அது எந்த நாடு என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. வாடிகனை அடுத்து இதுதான் உலகின் மிகச் சிறிய நாடு.
2. தலைநகரின் பெயரும் நாட்டின் பெயரும் ஒன்றே.
3. இதன் கொடியை வரைவது மிக சுலபம். மேல்பாதி சிவப்பு, கீழ்பாதி வெள்ளை.
4. 2016-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 38,400 பேர் வாழ்கிறார்கள்.
5. ஆட்சி மொழி பிரெஞ்சு.
6. இன்றுவரை இங்கு மன்னர் ஆட்சிதான்.
7. வருமானவரி கிடையாது.
8. சுற்றுலாவுக்குப் புகழ்பெற்ற நாடு.
9. இங்கு நடைபெறும் பார்முலா 1 கார் பந்தயங்கள் புகழ்பெற்றவை. மிகவும் சவாலான பந்தயப் பாதையாக இருக்கிறது.
10. இங்கு விமான நிலையங்களே கிடையாது. ஹெலிகாப்டர் அல்லது ரயிலில்தான் இங்கு வந்து சேரமுடியும்.

மொனாகோ

இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்

இவ்வாரம் ஜென்ம புதன் சஞ்சரிப்பதால் தன ரவி , வீரியத்தில் வெள்ளி சஞ்சரிப்பதால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டாகும். தேகம் புது வீரியம் பெறும். தன பாவத்தில் ரவி சஞ்சரிப்பதால் தன லாபம், பொருள் வரவுண்டு. மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தி அடையும். ஜீவன பாவத்தில் குஜன் சஞ்சரிப்பதால் தொழில் விருத்தி, உயர்வு உண்டு. உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் காண்பர்.

தன பாவத்தில் வெள்ளி இருக்கக் குரு நோக்குவதால் தனலாபமுண்டு. இவ்வாரம் வியாழ சுகயீனம் , அட்டமத்துச் சனி தோஷம் இருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழுவும், மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும் கூட்டு வாணிபத்தையும் மட்டுப்படுத்தல் வேண்டும். விவசாயிகளுக்கு அரச மானியம் உரிய வேளையில் வந்து சேராது.

இவ்வாரம் இலாப பாவத்தில் புதன், குரு நோக்குவதால் தொழிலால் இலாபம், விருத்தி , ஈடுபடும் கருமகாரியங்கள் யாவும் ஜெயமளிக்கும். ஜென்ம ஸ்தானத்தைக் குரு நோக்குவதால் தேகம் புதுப்பொலிவு பெற்று, வீரியம் அடையும். உத்தியோகத்தர் பதவிச்சிறப்பு, உத்தியோக அதிகாரம் கொள்வர். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும் கொள்முதல்களையும் ஆரம்பிக்கலாம்.

மாதுரு பாவத்தில் குரு சஞ்சரிப்பதாலும் , புதன் நோக்குவதாலும் மாதா நலம், கல்வி விருத்தி, மனை நலம் , வாகன சுகம், குடும்ப சேமம் முதலியன உண்டாகும். ஜீவன பாவத்தில் புதன், ரவி சஞ்சரிக்கக் குரு நோக்குவதால் செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். வெள்ளி சுகத்தால் கன்னியரின் காதல் விவகாரம் ஜெயமளிக்கும். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் புது உத்வேகம் கொண்டு ஏற்றம் காண்பர்.

இவ்வாரம் வியாழ சுகயீனம் 5இல் சனி தோஷம் கண்டக ரவி தோஷம் இருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை உண்டகும். ஜீவன, கர்ம பாவத்தில் வெள்ளி ஆட்சி பெறுவதால் செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் ஏற்படும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்பு, உத்தியோக அதிகாரம் கொள்வர். வியாபாரிகள் கூட்டு வாணிபம், உயர்வு பெறும். வாடிக்கையாளர்களின் வருகை கூடும்.

தன பாவத்தில் குரு சஞ்சரிப்பதால் புதன்(2ம்) தன பாவத்தை நோக்குவதால் தன லாபம், பொருள் வரவுண்டு. மனை, வாகன குடும்பம் அபிவிருத்தி அடையும். தொழிலால் உயர்வுண்டு. வங்கி வசதிகள் கூடும். உத்தியோகத்தர் அதிகாரிகளின் ஆதரவும், சக உத்தியோகத்தர்களின் உதவி, அனுசரனை கிட்டும். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ப ஆதாயம் பெறும். விவசாயிகளுக்கு அரச நிவாரணம் கிடைக்கும். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் நன்கு நடைபெறும்.

இவ்வாரம் ஜென்ம குரு, கண்டக ராகு, கேது புதன் செவ்வாய் தோஷமிருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை பயக்கும். உத்தியோகத்தர்க்கு கணிசமான வேலைப்பழுவும், மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு புதிய முதலீடுகளையும், கொள்முதல்களையும் கட்டுப்படுத்தல் வேண்;டும். விவசாயிகளுக்கு விவசாயப் பண்ணைகளால் கூலியாட்களின் மேலதிக உதவி, ஒத்துழைப்புக்கள் கிடைப்பது கடினமாகும்.

இவ்வாரம் தனலாபம் , பொருள் வரவுண்டு. மனை விருத்தி உண்டு. வெளிநாட்டு நிதி வந்து சேரும். செய்தொழில் விருத்தி, இலாபம் , சேமிப்பு உண்டு. வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். ஈடுபடும் கரும, காரியங்கள் யாவும் நிறைவு பெறும். உத்தியோகத்தர் பணிகளில் ஏற்றம் காண்பர். கன்னியரின் காதல் விவகாரம் வெற்றியளித்து, திருமணப் பேச்சுக்கள் இவ்வாரமும் தொடரும்.

இவ்வாரம் ஜென்மச்சனி (ஏழரை நடுக்கூறு) இலாப பாவத்தில் குரு, அஷ்டமத்தில் ராகு, கேது நடைபெறுவதால் சனி, ராகு , கேதுக்களுக்கு தோஷ நிவர்த்தி செய்ய வேண்டும். வெள்ளி இவ்வாரம் யோக சஞ்சாரஞ் செய்வதால் கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைகூடித் திருமணப்பேச்சுக்கள் தொடரும். உத்தியோகத்தர் சக ஊழியர்களை அனுசரித்து நடந்தால் வேலைச்சுமை குறையும். வியாபாரிகள் , விவசாயிகள் தம் முதலுக்கேற்ப ஆதாய முன்னேற்றம் அடைவர்.

இவ்வாரம் ஜீவன பாவத்தில் குரு சஞ்சரிக்கப் புதன் நோக்குவதால் செய்தொழில் விருத்தி, உயர்வு, சேமிப்பு, வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்படைந்து, உத்தியோக அதிகாரம் கொள்வர். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும், கொள்முதலையும் தொடங்கலாம். கூட்டு வாணிபம் வெற்றி தரும். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் நன்கு அமையும். ஆசிரியர், மாணவர், உறவு சீராக இருக்கும்.

இவ்வாரம் புத்தி , புத்திர பாவத்தில் வெள்ளி சஞ்சரிக்க குரு நோக்குவதால் புத்தி பலம் கூடும். புத்திரர் உதவி, அனுகூலம் கிட்டும். தர்ம, பண்ணிய காரியங்களில் ஆர்வம், ஈடுபாடு ஏற்படும். நோன்பு, விரதம் அனுஷ்டித்தல், ஆலய தரிசனம் ஏற்படும். உத்தியோகத்தர்க்கு கணிசமான வேலைப்பழுவும், மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வரவு கூடும். பழைய நிலுவைகள் வந்து சேரும்.

இவ்வாரம் ஆயுட் பாவத்தில் குரு இருக்க புதன் நோக்குவதால் ஆயுட்பலமுண்டு. ஜீவன தொழில் ஸ்தானத்தில் சனி இருக்க வெள்ளி நோக்குவதால் செய்தொழில் விருத்தி, உயர்வு , சேமிப்பு , வங்கி வசதிகள் உண்டாகும். ஈடுபடும் கரும காரியங்கள் யாவும் நிறைவு ணபுறும். உத்தியோகத்தர், அதிகாரிகளின் பாராட்டையும் , ஊக்குவிப்பையும் பெறுவர். வியாபாரிகள் , விவசாயிகள் தத்தம் தொழிலால் நல்ல ஆதாய முன்னேற்றம் அடைவர்.

கோவில்களில் மணி ஒலிக்கச் செய்வது ஏன்?

கோவில்களில் பூஜை செய்யும் நேரத்தில் மணி அடித்து, ஒலி எழச் செய்வார்கள். சில கோவில்களில் பக்தர்கள் உள்ளே செல்லும்போதே மணி அடித்துவிட்டு, பிறகு இறைவனை வணங்குகின்றனர். எதற்காக மணி அடிக்கிறோம்?

அந்தக் காலத்தில் தயாரிக்கப்பட்ட வெங்கல மணியில் ஒரு அடி அடிக்கும்போதே, சத்தம் எழும்பி பின் 'ஓம்' என்ற பிரணவ மந்திர ஒலியோடு நாதம் சிறிது சிறிதாகத் தேய்வதை நாம் உணரலாம். 'ஓம் என்ற ஓங்கார ஒலியின் சத்தத்தை எழுப்பி, நம் மனத்துக்குள் நிறைவதால், நாம் மணியை ஒலிக்கச் செய்கிறோம். இறைவன் நாத வடிவமானவன் என்பர். அந்த வடிவத்தின் வெளிப்பாடே அகாரம் உகாரம் மகாரம் சேர்ந்த, அதாவது அ, உ, ம மூன்றின் கலவையான ஓம் என்பது. ஓம் ஒலியானது நம் மனத்தினுள் மோதும்போதே அதன் அதிர்வலைகள் நம் உள்ளத்தில் ஒரு வித நேர்மறை எண்ணங்களைத் தோற்றுவித்து, நல்ல சகுனத்தைக் கூட்டுகிறது. நன் நிமித்தத்தை வெளிப்படுத்துகிறது.

நாம் கோயில்களில் பூஜா காலங்களில் மணியை ஓங்கி அடித்து ஒலிக்கச் செய்யும் போது, கூடவே நாகஸ்வரம், மேளம், சங்கு



போன்றவற்றையும் ஒலிக்கச் செய்கிறோம். வாத்தியங்கள் முழங்க பூஜை செய்வது என்பது மரபு. பூஜை செய்யும்போது, அதாவது, இறைவனுக்கு தீப தூப ஆரத்திகளை சமர்ப்பிக்கும்போது, நம் மனம் இறை இன்பத்தில் லயித்திருக்கவேண்டும். வெளி விவகாரங்கள் எதுவும் நம் மனத்தில் எழக்கூடாது. அதற்கு நாம் நம் ஐம்புலன்களில் ஒன்றான ஒலி உணரும் காதினை கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.

அதாவது, பூஜை நேரங்களில் எவரேனும் ஒருவர், வேண்டாத பேச்சுகளைப் பேசலாம், அபசகுனமான வார்த்தைகளை வீசலாம், அல்லது யாரையேனும் கொடுஞ் சொற்களால் ஏசலாம். இவற்றைக் கேட்கும் ஒருவருக்கு, மனம் கட்டுப்பாடு இழந்து எங்கெங்கோ அலைபாயும். எனவே தான், பூஜை செய்யும்போது, இந்த விதமான சப்தங்களை அடக்கி ஒடுக்கும் பிரணவ ஒலியை ஒலிக்கச் செய்வது வழக்கமாக இருந்திருக்கிறது. நம் மனத் திட்பத்தை அதிகரிக்கச் செய்யும் ஒன்றுதான் மணி அடித்தல் என்பதை உணர்வோம்.

கடவுளின் அன்புக் கட்டளை

கடவுள், மோசே வழியாக நமக்கு கொடுத்த கட்டளைகள் 10. அந்த 10 கட்டளைகளும் நாளடைவில் பெருகி 613 கட்டளைகள் ஆனது. அதில் 248 கட்டளைகள், ஒரு சில வேளைகளில் மக்களுக்கு சாதகமானதாகவே இருந்தது. ஆனால் எஞ்சியுள்ள 365 கட்டளைகளும், ஒரு சில வேலைகளை செய்யக் கூடாது என்றிருந்தது. இத்தகைய கட்டளைகளை மக்கள் கடைபிடிக்க வேண்டும் என்று ஒரு சிலர் துன்புறுத்தி வந்தனர். ஆனால் அந்த கட்டளைகளை கடைபிடிக்க, புதிய ஏற்பாட்டில் இயேசு சிறிய இரண்டு வழிகளை காட்டியுள்ளார். அதாவது இரண்டு கட்டளை எடுத்துக்காட்டியுள்ளார்.

(மத்தேயு 22:37-39)

'உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனதோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து'. இதுவே தலை சிறந்த முழுமையான கட்டளை. 'உன் மீது நீ அன்பு கூர்வது போல, உனக்கு அடுத்து இருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக' என்பது அதற்கு இணையான இரண்டாவது கட்டளை. இவ்வாறு இயேசு அனைத்து கட்டளைகளையும் சுருக்கி இரண்டு கட்டளைகளை நமக்கு தந்தார். இந்த இரண்டு கட்டளைகளையும் கடைபிடிக்க நம்மால் முடியாது என்பதை உணர்ந்த இயேசு, இரண்டையும் சுருக்கி ஒரு கட்டளையாக கொடுத்தார்.

(யோவான் 13:34) 'ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்கு கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்'. நாம் மற்றவர்களிடம் அன்பு செலுத்தும் போது, அவர்களை பற்றி தவறாக பேசவோ, அவர்கள் மீது பொறாமையோ கொள்ள மாட்டோம். அவ்வாறு நாம் அன்பு செய்து வாழ்கின்ற போது, நமக்கும் மற்றவர்களுக்குமான உறவு நல்லதாக இருக்கும். இவ்வாறு வாழ கடவுள் நமக்கு கொடுத்திருக்கும் கட்டளை ஒன்று தான். அதுதான் அன்புக்கட்டளை.

தொழுகைக்கான திசை

கிழக்கு திசையும், மேற்கு திசையும் அல்லாஹ்விற்கே உரியன. ஆதலால் நீங்கள் எத்திசையை நோக்கினும் அங்கு அல்லாஹ்வின் முகம் இருக்கிறது. நிச்சயமாக அல்லாஹ் விசாலமானவன். மிக அறிந்தவன் (திருக்குர்ஆன் 2:115)

அண்ணல் எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு நபித்துவம் கொடுக்கப்பட்டு அல்லாஹ்வின் தூதராய் அவர்கள் அங்கீகரிக்கப்பட்டார்கள். அல்லாஹ்விடம் இருந்து 'வஹி' எனப்படும் இறைச்செய்திகள் அவ்வப்போது நபிகளுக்கு வந்தது. அந்த இறைவசனங்களை மக்களிடம் அவர்கள் எடுத்துக்கூறினார்கள்.

அந்த இறைவசனங்களில் இருந்த உண்மை மக்களை இஸ்லாத்தின் பக்கம் ஈர்த்தது. கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் நபிகளாரின் போதனைகளை ஏற்றுக் கொண்டு அல்லாஹ்வின் நல்லடியார்கள் கூட்டத்தில் தங்களை இணைத்துக்கொண்டனர்.

இவ்வாறு இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள், ஏக இறைவனான தன்னை வணங்குவதற்கான ஒரு வழிபாட்டு முறையை ஏற்படுத்தித் தர அல்லாஹ் விரும்பினான்.

இதையடுத்து நபிகளாரை மிக்ராஜ் என்ற விண்வெளிப் பயணத்தின் மூலம் தன்னிடத்திற்கு அழைத்தான். அப்போது, தன் அடியார்களுக்கு தினமும் ஐந்து வேளைத் தொழுகையை கடமையாக்கினான்.

அதன் அடிப்படையில் பலருக்கு தொழுகை முறையைக் கற்றுக் கொடுத்தார்கள் கண்மணி நாயகம். அதில் ஒரு வரைமுறையாக, தொழுகைக்காக எழுந்து நிற்பவர் பாலஸ்தீனில் உள்ள பைத்துல் முகத்தஸ் என்ற இறை இல்லத்தை நோக்கி தொழ வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தார்கள்.

அண்ணலார் மக்காவில் வாழ்ந்த காலத்தில் பைத்துல் முகத்தஸ் என்ற பள்ளிவாசல் இருந்த திசையை நோக்கியே அனைவரும் தொழுது வந்தனர். நபிபெருமான் (ஸல்) மக்காவை விட்டு 'ஹிஜ்ரத்' செய்து மதினாவை வந்தடைந்த பிறகு 'கஅபா' ஆலயத்தின் மீதான அன்பு அவர் களுக்கு மனதில் அதிகரிக்க ஆரம்பித்தது. இதுகுறித்து அவர்கள் இறைவனிடம் பிரார்த்தனையும் செய்தார்கள். இதை அறிந்த அல்லாஹ் நபிகளாருக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் கீழ்க்கண்ட இந்த வசனத்தை இறக்கினான்:

நபியே உமது முகம் பிரார்த்தனை செய்து அடிக்கடி வானத்தை நோக்குவதை நாம் காணுகிறோம். ஆகவே நீர் விரும்பும் கிப்லாவாகிய மக்காவின் பக்கமே நாம் உம்மை நிச்சயமாக திருப்புகிறோம். எனவே நீர் தொழும் போது மக்காவிலுள்ள கஅபத்துல்லாவின் பக்கமே உமது முகத்தை திருப்புவீராக. நம்பிக்கையாளர்களே! நீங்களும் எங்கிருந்த போதிலும் தொழுகையில் அதன் பக்கமே உங்கள் முகங்களைத் திருப்புங்கள் (திருக்குர்ஆன் 2:144).

ஹிஜ்ரி 2-ம் ஆண்டு ஷபான் மாதம் அத்தீக் என்ற இடத்தில் அண்ணல் எம்பெருமானார் (ஸல்) லுஹர் (நண்பகல் நேர) தொழுகை தொழுது கொண்டிருந்த போது இந்த வசனம் இறங்கியது.

மாநபி அவர்கள் மனம் மகிழ்ந்தவர்களாக தான் தொழுது கொண்டிருந்த இரண்டாவது ரக்காத்திலேயே அப்படியே நேர் எதிர் திசையான கஅபத்துல்லாவை நோக்கி திரும்பினார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து தொழுது கொண்டிருந்த சஹாபா பெருமக்களும் அப்படியே நபிகளைப் பின்பற்றி தங்கள் திசையை மாற்றிக் கொண்டார்கள்.

அன்றிலிருந்து இன்று வரை இஸ்லாமியர்கள் அனைவரும் கஅபத்துல்லாவை முன்னோக்கியே தொழுது வருகிறார்கள்.

எந்த மஸ்ஜித்தில் நபிபெருமானார் (ஸல்) அவர்கள் தொழுதார்களோ அந்த பள்ளிவாசல் இன்று வரை பாதுகாக்கப்பட்டு வருகிறது. அங்கு இமாம் நின்று தொழும் இடம் (மிக்ராப்) எதிரும் புதிருமாக இரண்டு

இருப்பதை இன்று கூட அங்கு செல்லும் அனைவராலும் காணமுடியும். அந்த பள்ளிவாசல் 'மஸ்ஜித் கிப்லதைன்' (இரண்டு மிக்ராப்கள் கொண்ட மஸ்ஜித்) என்ற அடைமொழியோடு அழைக்கப்பட்டு வருகிறது.

இவ்வுலகில் இறைவனை வணங்குவதற்கென மனிதர் களுக்கு அமைக்கப்பட்ட ஆலயங்களில் முதன்மையானது மக்காவில் இருப்பது தான் என்பது திருக்குர்ஆன் (3:96) வசனமாகும். அல்லாஹ்வால் கட்டி அமைக்கப்பட்ட இல்லம் கஅபத்துல்லா. உலகம் தோன்றிய அன்றே அல்லாஹ்வால் நிர்மாணிக்கப்பட்ட இறைஇல்லம் 'கஅபா' உலகின் முதல் ஆலயமும், ஆதிபிதா ஆதம் நபியவர்கள் தொழுத ஆலயமும் இதுவே. பின்னாளில் நூஹ் நபி காலத்தில் வெள்ளப் பிரளயத்தால் உலகம் அழிக்கப் பட்ட போது கஅபத்துல்லாவும் சிதலம் அடைந்து மண்ணில் புதைந்திருந்தது. இப்ராகிம் நபியவர்களின் காலத்தில் அல்லாஹ் அந்த கஅபத்துல்லாவை மீண்டும் புதுப்பித்து மக்களுக்காக வணக்கஸ்தலமாக உருவாக்க எண்ணினான்.

பாரசீகத்தில் வாழ்ந்து வந்த இப்ராகிம் நபியவர்களை அரபு பாலைவனத்திற்கு வரச் செய்து, அந்த இடத்தை அவர்களுக்கு அடையாளம் காட்டி மீண்டும் அதனை கட்டி முடிக்க கட்டளையிட்டான். இப்ராகிம் நபியும், அவரது மகன் இஸ்மாயில் நபியும் சேர்ந்து கஅபாவை கட்டி முடித்து விட்டு இவ்வாறு பிரார்த்தனை செய்தார்கள்:

எங்கள் இறைவனே! உனக்காக நாங்கள் செய்த இந்த பணியை எங்களிடமிருந்து ஏற்றுக்கொள்வாயாக. நிச்சயமாக நீ தான் எங்களது பிரார்த்தனையை நன்கு செவியுறுபவன், நன்கு அறிந்தவன் (திருக்குர்ஆன் 2:127)

அவர்களின் பிரார்த்தனையை ஏற்றுக் கொண்ட அல்லாஹ், மக்காவில் இப்ராகிம் நபியவர்கள் கட்டிய கஅபா என்னும் வீட்டை மனிதர்கள் ஒதுங்கும் இடமாகவும், அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க கூடியதாகவும் நாம் ஆக்கியிருக்கிறோம் (2:125) என்ற வசனத்தை திருக்குர்ஆனில் இறக்கி வைத்தான்.

இந்தியாவில் வாழும் பிற மதத்தினர் முஸ்லிம்கள் அனைவரும் மேற்கு திசையை நோக்கித் தொழுகிறார்கள் என்றே நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் உண்மையில் அல்லாஹ்வின் கட்டளை கஅபத்துல்லாவை நோக்கி தொழ வேண்டும் என்பதே. கஅபத்துல்லா, அல்லாஹ்வால் உருவாக்கப்படும் காலகட்டத்திலேயே இத்தகைய சிறப்பம்சத்தோடு தான் அது நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதனால் தான் முஸ்லிம்களின் தொழுகையின் முகப்பு கஅபத்துல்லாவாக இருக்கிறது.

நீங்கள் எங்கிருந்த போதிலும் மஸ்ஜித் கஅபாவின் பக்கமே உங்கள் முகங்களைத் திருப்புங்கள். எனக்கே நீங்கள் பயப்படுங்கள். கிப்லாவைப் பற்றிய இக்கட்டளையின் மூலம் என் அருட்கொடையை நான் உங்கள் மீது முழுமையாக்கி வைப்பேன். அதனால் நீங்கள் நிச்சயமாக நேரான வழியை அடைவீர்கள் என்பது திருக்குர்ஆன் (2:150) வசனம் ஆகும்.

நாம் எங்கிருந்த போதிலும் நம் முகத்தை காஅபா நோக்கியே திருப்புவோம், தொழுவோம், நன்மை அனைத்தையும் பெற்று கொள்வோம்.

இன்றைய சமூகம் அண்மையிலுள்ள கிராமப்புற பாடசாலைகளை புறக்கணிப்பது ஏன்?

ஓர் நாட்டின் அபிவிருத்தியில் கல்வியின் பங்கு அளப்பரியது ஆகும். அந்தவகையில் கல்வியினை வழங்கும் முக்கிய அமைப்புக்களாக பாடசாலைகள் இயங்குகின்றன. நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளின் வாயிலாக மாணவர்கள் கல்வியை பெற்று எதிர்கால உலகிற்கு ஏற்றவாறு உருவாக்கம் பெறுகின்றனர். பாடசாலைகள் வெறுமனனே அறிவினை புகட்டுவது மட்டுமின்றி ஓர் பிள்ளையின் எதிர்காலத்திற்கு தேவையான சகல தேவைகளையும் பூர்த்தி செய்யும் செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றன. எனதோன் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு பாடசாலைகளும் போற்றப்படவும் பாதுகாக்கப்படவும் வேண்டியவை. அண்மைக் காலங்களாக குறிப்பிட்ட சமூகத்தினரால் சில பாடசாலைகள் புறந்தள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவற்றுள் கிராமப்புற பாடசாலைகளே அதிகம் புறம்தள்ளப்படுகின்றன.

இன்றைய சமூகத்தவர்களால் கிராமப்புற பாடசாலைகள் புறம்தள்ளப்படுகின்றமைக்கான காரணங்கள் என்ன? என ஆராய்வோமானால், கிராமப்புற பாடசாலைகள் புறம்தள்ளப் படுகின்றமைக்கான முக்கிய காரணமாக கிராமப்புற பாடசாலைகளில் நிலவும் பௌதீக வளப்பற்றாக்குறையை குறிப்பிடலாம். பௌதீகவளப்பற்றாக்குறை எனும் போது வகுப்பறைகளின் போதமை, கற்றல்-கற்பித்தலுக்கு தேவையான துணைச்சாதனங்களின் பற்றாக்குறை, போதிய நீர் வசதி காணப்படாமை, மலசலகூட வசதி காணப்படாமை, நூலக வசதி கிடையாமை, விளையாட்டு உபகரண மற்றும் மைதான வசதிகள் இல்லாமை, போதியளவு தளபாட வசதிகள் காணப்படாமை போன்றவற்றை குறிப்பிடலாம். இவ்வாறான வளப்பற்றாக்குறை பாடசாலைகளில் நிலவும் போது அங்கு கற்றல்-கற்பித்தலில் பின்னடைவு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் ஏலனவே காணப்படும்.

சமூகத்தின் எதிர்பார்ப்பு தமது பிள்ளைகள் பாடசாலைகளில் நிறைவான கற்றலை பெறவேண்டும் என்பதாகும். பௌதீக வளப்பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளில் நிறைவான கற்றலை வழங்குவதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே உள்ளது. எனவே சமூகத்தின் பார்வையில் வளப்பற்றாக்குறை நிலவும் கிராமப்புற பாடசாலைகள் கற்றலுக்கு சாதகமற்ற சூழலை உடைய பாடசாலையாக இனங்காணப்படுகின்றது. இதனால் சமூகத்தவர் தமது பிள்ளைகளை இவ்வாறான பாடசாலைகளில் இணைப்பதற்கு ஆர்வம் காட்ட மறுக்கின்றனர். இதனால் பாடசாலைகள் புறம்தள்ளப்படுகின்றன. இலங்கையினை பொருத்தமட்டில் ஆயிரக்கணக்கான பாடசாலைகள் மூடும் தறுவாயில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளே அதிகளவில் இடம் பிடித்துள்ளன. கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகள் மூடப்படும் நிலையில் காணப்படுகின்றது. இவற்றுக்கான முக்கிய காரணம் பாடசாலையை சூழவுள்ள சமூகம் பாடசாலைகளை ஏற்றுக்கொள்ளாமையே எனலாம்.

அடுத்து கிராமப்புற பாடசாலைகள் புறக்கணிக்கப்படுவதற்கான முக்கிய காரணமாக ஆசிரியர்களின் போதாமை. இங்கு ஆசிரியர்களின் போதமையினை இரண்டு வகைப்பாட்டின் வழி நோக்க முடியும். அந்தவகையில் ஒன்று குறிப்பிட்ட பாடம் சார் ஆசிரியர் இல்லாமை மற்றையது பாடசாலையில் கற்கும் மாணவர் விகிதாசாரத்திற்கு ஏற்ப ஆசிரியர்களின் எண்ணிக்கை போதாமல் காணப்படுதல். பொதுவாக கிராமப்புற பாடசாலைகளில் பணிபுரிவதற்கு குறிப்பிட்ட சில ஆசிரியர்கள் நாட்டம் காட்டுவதில்லை. காரணம் போக்குவரத்து தொடர்பான சிரமங்கள், தூரம், கற்பித்தலில் சிக்கல் தன்மையினை எதிர்நோக்கல். இதனால் அனேகமான ஆசிரியர்கள் கிராமப்புற பாடசாலைகளில் நியமனம் பெற்றாலும் தமது அரசியல் பின்புலம், உயர் அதிகாரிகளுடன் கொண்டுள்ள தொடர்புறகளின் வாயிலாக தமக்கு வசதியான நகர்புறம் சார்ந்த பாடசாலைக்கு தமது நியமனத்தை மாற்றி பெற்றுக் கொள்கின்றனர். இதனால் ஆசிரியர் வளத்தினை அதிகமான கிராமப்புற் பாடசாலைகள் இழக்கின்றன. இலங்கையினை பொருத்தவரையில் 17:1 எனும் விகித அடிப்படையில்; மாணவர், ஆசிரியர் விகிதாசாரம் காணப்படுகின்றது. இருப்

கோப்புப்படம்

பினும் கிராமப்புற பாடசாலைகளில் இந்நிலைமை காணப்படுவது கிடையாது. பாடசாலைகளின் அபிவிருத்தியின் ஒரு தூண் என வர்ணிக்கப்படும் ஆசிரியர்களின் பற்றாக்குறை பாடசாலையில் நிலவும் பட்சத்தில் அப் பாடசாலை தொடர்பான மதிப்பு சமூகத்தில் குன்றியே காணப்படும்.

பெற்றோரிடையே காணப்படும் நகர் பிரதேச பாடசாலைகள் தொடர்பான மோகமும் கிராமப்புற பாடசாலைகள் ஒதுக்கப்படுவதற்கான முக்கிய ஓர் காரணமாக உள்ளது. கல்விக்கான மதிப்பு நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு எவ்வாறான வழியிலாவது சிறந்த கல்வியை வழங்க வேண்டும் என துடிக்கின்றனர். அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என்பார்கள். சிறந்த கல்வியினை பெற்றுக் கொடுக்க வேண்டும் எனும் அவா பெற்றோரிடையேயான போட்டியாக மாறிவிட்டது. எனது பிள்ளை நகர்புற பாடசாலையில் படிப்பதே எனக்கு பெருமை என நினைக்கும் பெற்றோர் சமூகமே இன்று அதிகம். இதனால் தமக்கு அருகாமையிலுள்ள பாடசாலைகளை விட்டு விட்டு நகர்புற பாடசாலைகளை நோக்கி நகர்கின்றனர். பெற்றோர்கள் மட்டுமின்றி தற்கால பிள்ளைகளும் நகர்புற பாடசாலைகளில் கல்வி கற்பதே பெருமை என நினைக்கின்றனர். உண்மையில் தமது சமூகத்திற்கு தேவையான தமது கிராமத்திற்கு உரித்தான பாடசாலைகளை விட்டு வெளிப்பிரதேச பாடசாலைகளை தேடிச்செல்பவர்கள் மடயர்களே.

குறிப்பிட்ட சில கிராமப்புற பாடசாலைகளில் காணப்படும் முறையற்ற நிர்வாகமும் கிராமப்புற பாடசாலைகள் ஒதுக்கப்படுவதற்கான முக்கிய காரணம் எனலாம். அந்தவகையில் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர் என்போர் பாடசாலையின் மீது அக்கறை இன்றி பொறுப்புணர்ச்சி இன்றி செயற்படக்கூடும். கிராமப்புற பாடசாலைகளில் கல்வி கற்கும் அனேகமான பிள்ளைகளின் பெற்றோர்கள் கல்வி அறிவில் பின்தங்கிய நிலையினை உடையவர்கள். எனவே அதிபர், பிரதி அதிபர்கள் கேள்வி கேட்க யாரும் இல்லை என தான் தோற்றித்தனமாக செயற்படவும் எத்தணிப்பர். பாடசாலைக்கு கிடைக்கும் நிதியில் மோசடி செய்தல். பாடசாலைக்கு உரித்தான வளங்களை தமது சொந்த தேவைக்கு பயன்படுத்துதல். இவற்றால் பாடசாலையித் தரம் குறைவாகவே சமூகத்தவரால் மதிக்கப்படும். பாடசாலையின் நிர்வாகம் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை இன்றி செயற்படும் போது சமூகத்தின் பங்களிப்பு பாடசாலைக்கு எட்டாக் கணியே.

இன்றைய சமூகத்தவரிடம் கிராமப்புற பாடசாலைகள் பற்றிய பிழையான எண்ணக்கருவாக்கமும் முக்கிய காரணமாக உள்ளது. கிராமப்புற பாடசாலைகள் என்றாலே அங்கு நல்ல கற்பித்தல் இடம் பெறாது. திறமை வாய்ந்த ஆசிரியர்கள் காணப்படமாட்டார்கள் பிள்ளைகள் ஒழுங்கான முறையில் கற்றலை மேற்கொள்ள முடியாது. பரீட்சைகளில் மாணவர்களால் உயர் பெறுபேறு பெறமுடியாது. எனவேதான் கிராமப்புற பாடசாலைகளில் நமது பிள்ளைகள் கல்வி கற்கக்கூடாது, என சமூகத்தினர் தமக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளை விட்டு தூரத்தினையும் கவனத்தில் கொள்ளாது வெளி நகரங்களில் உள்ள பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளை சேர்ப்பதில் முன்நிற்கின்றனர். இவ்வாறு பாதிக்கப்படும் பாடசாலைகளுள் அதிகமாக தரம் III வகையைச் சேர்ந்த பாடசாலைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவற்றை மாற்றியமைக்க வேண்டும் எனும் நோக்கில் அரசாங்கத்தினால் புதிய திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்பதே இத் திட்டமாகும். இத் திட்டத்தின் வாயிலாக அண்மையுள்ள பாடசாலைகள் தரமுயர்த்தப்பட வேண்டும் எனவும் பாடசாலையினை சுற்றியுள்ள சமூகத்தின் ஒத்துழைப்பினை பாடசாலைகளுக்கு வழங்க வேண்டும் என்பதுமாகும். மேலும் ஒரு பிரதேச செயலகப் பிரிவில் குறைந்தபட்சம் இரண்டு பாடசாலை என்ற அடிப்படையில் சகல பிரதேச செயலகப் பிரிவினாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 600 பாடசாலைகளை சகல வசதிகளுடனும் அபிவிருத்தி செய்தல், சகல பாடசாலைகளிலும் நீர் மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்ட சுத்திகரிப்பு வசதிகளை போதியளவு வழங்குதல், கிராமிய மற்றும் கஷ்டப் பிரதேசங்களுக்கு முன்னுரிமை வழங்கி பாடசாலைகளுக்கு அதிபர் விடுதிகள், ஆசிரியர் விடுதிகள். ஓய்வறை போன்ற வசதிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் இத் திட்டத்தின் வாயிலாக மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு இத்திட்டமானது நடைமுறையிலுள்ள போதிலும் எல்லா பாடசாலைகளும் சமமான முறையில் சம வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றதா என வினா எழுப்பினோமேயானால் இல்லை என்றே கூற முடியும். காரணம் இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்ட சகல பாடசாலைகளும் ஒரே வகையானவை அல்ல. பாடசாலைக்கு என்ன தேவை உள்ளதோ அதை அறிந்து அப் பாடசாலைக்கான வளநிரம்பலானது மேற்கொள்ளப்பட வேண்டும். மாறாக சகல பாடசாலைகளுக்களும் பொதுவான நிவாரணத்தை வழங்குவது இருக்கும் நிலைமையினை மேலும் சிக்கலாக்கிவிடும். உண்மையில் கிராமப்புற பாடசாலைகளை சமூகம் புறக்கணிப்பதற்கான முக்கிய காரணம் வளப்பற்றாக்குறையே ஆகும். எனவேதான் அரசு பாடசாலைகளில் வள நிரப்பலில் சமத்துவம் மேற்கொள்ள வேண்டியது அவசியம். சமத்துவம் என்பமை விட சம வாயப்பு வழங்கப்பட வேண்டும்.

எனவேதான் கிராமப்புற பாடசாலைகள் உயர்த்தப்பட வேண்டுமாயின் அதனை சுற்றியுள்ள சமூகத்தினரை விழிப்படையச் செய்ய வேண்டியது அவசியம். இது எமது பாடசாலை அதை நாமே பாதுகாத்து உயர்த்த வேண்டும் எனும் எண்ணத்தை சமூகத்தவர் மத்தியில் கட்டியெழுப்ப வேண்டும். சமூகத்தினது பங்களிப்பு இன்றி ஓர் பாடசாலையும் பாடசாலையின் பங்களிப்பு இன்றி ஓர் சமூகமும் சிறப்பான முன்னேற்றம் காண முடியாது.

கோ.துசாந்தினி
கல்வியியல் சிறப்புக் கற்கை
விடுகை வருடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

காலமும் வெளியும்!

எமது மாணவர்கள் இயற்பியல் ஆய்வில் ஆர்வம் காட்டல் அவசியம். ஆண்டு 11, 12, 13இல் கல்வி கற்பிக்கும் விஞ்ஞான, பௌதீக, கணித ஆசிரியர்கள் இயற்பியல் கருதுகோள்கள் பற்றிய அடிப்படை விளக்கங்களை மாணவர்களுக்கு எடுத்துக்கூறல் வேண்டும்.

தற்போதைய விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி இயற்பியல் கருதுகோள்களில் புதிய பரிமாணத்தை அளித்துள்ளது. இவை நியூட்டன், ஐயன்ஸ்டீன் ஆகியோர்களது சார்புக் கோட்பாடுகளுக்கு அப்பால் விஞ்ஞானத்தினை இட்டுச் சென்றுள்ளது. அஞ்ஞானத்தினை எமது மாணவர்களுக்கு விளக்குவது எமது கடமையாகின்றது.

காலத்தினையும், வெளியினையும் திணிவு வளைக்கின்றது என்பது தற்போதைய விஞ்ஞானிகளின் உய்த்தறிவாகும். உதாரணமாக எமது அகிலத்தின் காலவெளியினை சூரியனின் திணிவு வளைக்கின்றது. அதாவது சூரியன் இன்றேல் எமது அகிலத்தின் காலவெளி தட்டையாக அமையும். காலவெளியின் தளத்தன்மையையும், அதில் திணிவின் தாக்கத்தையும் மாணவர்களுக்கு எளிய மாதிரி மூலம் விளக்கலாம்.

அதாவது ஒரு அழுத்தமான தட்டில் வர்ணத்தீந்தையை ஊற்றின் அது எவ்வாறு தளவடிவில் பரவி இருக்கின்றதோ அவ்வாறானதே திணிவுகள் அற்ற காலவெளி ஆகும். (Space time fabric without mass)

அடுத்து அழுத்தமான தட்டில் சிறிய மாபிள்கள், உலோக உருண்டைகள் என்பவற்றை வெவ்வேறு இடங்களில் வைத்தபின் அத்தட்டில் வர்ணத்தீந்தைகளை ஊற்றின் அது எவ்வாறு பரவி கோளங்கள் உள்ள பகுதியில் வளைந்து செல்கின்றதோ அவ்வாறான காலவெளி திணிவினால் வளைக்கப்படுகின்றதன்மை (Space time fabric without mass) இத்தட்டில் உள்ள ஒரு கோளமும் அதனை சூழ வளைந்த தீந்தைப் பிரதேசமும் எமது அகிலத்தின் காலவெளியாகக் குறிப்பிடலாம்.

இதில் இருந்து காலமும் வெளியும் புள்ளிக்குப்



புள்ளி வேறுபடும் என்பதனையும் அது ஒரு சீராக அமையாது என்பதனையும் உய்த்தறியலாம்.

காலமும் வெளியும் அவதானிப்பவரது வேகத்திற்கு ஏற்ப மாறுபடும்.

ஈர்ப்பு அலைகளும் காலவெளியில் ஒளியின் வேகத்தில் பயணிக்கின்றன. இவை காலவெளிக்கு அப்பாலும் பயணிக்கின்றன. ஈர்ப்புவிசை திணிவில் மட்டுமல்ல. காலவெளியில் அதன் நிலையிலும் தங்கி உள்ளது. அதாவது ஈர்ப்பு விசை திணிவிலும் நிலையிலும் மட்டும் தங்கி இருப்பதில்லை. காலவெளியின் வளைவிலும் தங்கி உள்ளது.

காலவெளியின் இயற்பியல பற்றிய உய்த்தறிவானது எமது அகிலத்தின் காலவெளியினைச் சூரியனது திணிவு பாரிய அளவில் வளைவுறச் செய்து உள்ளதை வெளிப்படுத்தியுள்ளது. காலவெளிக்கு அப்பால் சூரியனுக்கு ஓர் ஆள்கூற்றினை நாம் கணிப்போமாயின் அவ்வாள்கூற்றினை நோக்கி பூமி 8 நிமிடம் 20 செக்கன்களில் நகர்கின்றது. அதாவது காலவெளிக்கு அப்பால் பூமி - சூரியனது சார்பு இயக்கம் 8 நிமிடம் 20 செக்கன் இடைவெளியில் அமைகின்றது.

இதனை மாணவர்களுக்கு விளக்குவதாயின் ஒரு நேர்கோட்டுப் பாதையில் இரு கார்கள் 8 நிமிடம் 20 செக்கன் இடைவெளியில் பயணிப்பதுபோல் காலவெளிக்கு அப்பால் பூமியினதும் சூரியனதும் நகர்வுகள் அமைகின்றன. இது எமக்கு சூரியனில் இருந்து ஒளியலைகள் 8 நிமிடம் 20 செக்கனில் வருவது போல் தோற்றமளிக்கின்றது. ஆனால் உண்மையில் 8 நிமிடம் 20 செக்கனில் சூரியன் இருந்த இடத்தை நோக்கி காலவெளிக்கு அப்பால் பூமியே நகர்கின்றது.

அகிலத்தின் வளைவு பாரிய திணிவுகளால் தீர்மானிக்கப்படுகின்றது. அவற்றில் ஒரு வகையே கருந்துளைகள் ஆகும்.

இதனையும் நாம் தீந்தை பரவிய தட்டில் உள்ள பருமனில் பெரிய கோளங்களுக்கு ஒப்பிடலாம்.

காலவெளிக்கு அப்பாலான பயணம், காலவெளியின் வளைவுகளுக்கு இடையில் உருவாக்கப்படும் திணிவு சக்தி மாற்றத்தினால் சாத்தியமாகும். இங்கு நடைபெறும் சக்திப் பரிமாற்றம் குவாண்டம் வெற்றுச்சக்தி (Quantum vacuum energy) அல்லது Casmir Effect எனப்படும். இவை இயற்கையாகவே நிகழலாம். அதாவது காலத்தையும், நேரத்தையும் பெருமளவான சக்தியைப் பிரயோகிப்பதனால் வளைக்கலாம். இச்செயன்முறை உருள்புலம் (Wrap field) மூலம் நிகழ்த்தப்படும். இதன்மூலம் ஒரு அறையின் கனவளவை ஒரு நீர்க்குமிழியின் கனவளவுக்கு ஒடுக்கலாம்.வேற்றுக் கிரகவாசிகள் காலவெளியைக் கடந்து பயணிக்கும் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குகின்றனர். இத்தொழில்நுட்பம் உருள் தொழில்நுட்பம் (wrap up technology) என்பர். இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியே பறக்கும் தட்டுக்கள் செயற்படுவதான அவதானிக்கலாம்.

நாம் ஊர்ந்துஉருளிகளைப் பயன்படுத்துகின்றோமோ அவ்வாறே வேற்றுக் கிரகவாசிகள் உருள் தொழில்நுட்பவூர்திகளைச் சாவகமாகப் பயள்படுத்தலாம்.

காலவெளியின் தட்டையான பரப்பில் சிறு கோளங்களுக்கு இடையே தீந்தை பரவியது போல் காலவெளியினைக் கருதின் உருள் தொழில்நுட்பவூர்திகள் ஒரு கோளத்தில் இருந்து மறுகோளத்திற்கு செல்லும் பொறிமுறையை காலவெளியான தீந்தை படலத்தை தாண்டிச் செயற்படும் தகையது என்பதை மாணவர்களிற்கு விளக்கலாம்.

மருத்துவர். சி. யமுனாநந்தா

குறைகள் உடலில் இல்லை; மனதில்தான்...

சி.திவியா

வருடம் பிறப்பதுக்கு சில மணித்தியாலங்கள் முன்,மம்மல் நேரம் நல்லா மை பூசிக்கொண்டு மம்மிக்கொண்டு மெட்ரோ ட்ரெயினில் ஏறி இருந்து 'உலகம் பிறந்தது உனக்காக எனக்கா இல்லைஇல்லவே இல்லை என்று பாடிக்கொண்டு உலகம் மறந்து வீட்டை நோக்கி வந்து கொண்டு இருந்த நேரம் ஒரு ஆபிரிக்க இளஞ்சன்,கொஞ்சம் நடக்கக் கஷ்டப்பட்டு நடந்து வந்து எனக்கு முன்னால இருந்த சீட்டில வந்து இடி அமின் போல இருந்தான்.

நான் சந்தோசமா பாடுறேன் என்று நினைத்து சிரித்துக்கொண்டே 'ப்ரதர் ஹாப்பி நியூ இயர் ' என்று ஆங்கிலத்தில் சொன்னான்,நான் அதுக்கு பதில் சொல்ல தாமதித்தேன் , ' ஏன் உனக்கு ஹாப்பி நியூ இயர் சொல்ல தயக்கமா' என்று கேட்டான். நான் 'புதுவருடமும் புடலங்காயும்....' என்று ஆங்கிலத்தில் வேண்டா வெறுப்பாக சொன்னேன்,அவன் திடுக்கிட்டு 'ஏன்பா இப்படி சொல்லுறாய்' என்று பொப் மார்லி ஸ்டைலில் கையை பொத்திக்கொண்டு கேட்டான்,நான் அதுக்கும் ஏதவாது எடக்கு முடக்கா பதில் சொல்லுவேன் போல அவனைப் பார்த்தேன்.

அவன் கொஞ்சம் யோசிதுப் போட்டு 'நீ உண்மையில் சந்தோஷமா ஹப்பி நியூ இயர் என்று சொல்லாலம்' என்று சொன்னான். 'நீ ஏன் இப்படி சொல்லுறாய்' என்று கேட்டேன்,,,அவன் ' நல்லா யோசிதுப்பார் நீ இப்ப அந்தா இந்தா என்று ஆசுப்பதிரியிலையோ, கம்பி எண்ணிக்கொண்டு ஜெயிலிலையோ.அல்லது விழி பிதுங்க பயங்கர அகதிகள் தட்டுப்பு முகாமிலோ இல்லை கையைக் காலை நல்லா ஆட்டிக்கொண்டு சுதந்திர மனிதன் போல இருக்கிறாய்,அதுக்கு கடவுளுக்கு நன்றி சொல்லியாவது ஹாப்பி நியூ இயர் என்று சொன்னால் உனக்கு என்ன நாலு பணம் குறைந்து போகப்போகுது' என்று சொல்லி அவன் ருவாண்டா என்ற ஆபிரிக்க நாட்டில் இருந்து உயிர் அரசியல் அகதியாக நோர்வே தப்பி வந்த கதை சொன்னான்.

அவனைப் பார்க்க கொஞ்சம் பயமா இருந்து, எழும்பி என்னோட முகத்தில குத்தினான் என்றால் என்னோட சீவியமே கிழியும் போல இருந்தது அவன் தோற்றம், ஆனால் அவன் பொறுமையா 'இவன் வாயை மட்டும் வைச்சுக்கொண்டு வாழ்கையை ஓட்டும் அற்ப ஜீவன் ' போல பார்த்துக் கொண்டு இருந்தான் .இடை இடையே 'வாழ்க்கை சுவாரசியமானது அதை ரசித்து வாழ முயற்சிக்கும் போது' என்று மெதுவா சொல்லி கொண்டு இருந்தான்.

நான் பொறுமையாகக் அவன் சொன்ன அவலக் கதையைக் கேட்டேன். கேட்டுப்போட்டு 'என்னிடம் இப்ப வோட்கா இருக்கு குடிக்கப் போறியா என்னோட சேர்ந்து' என்று கேட்டேன். அவன் அமைதியாக இருந்தான், கொஞ்ச நேரத்தில் ஒரு கேள்வி கேட்டான்,' நீ ஏன் குடிக்கிறாய்' என்று கேட்டான் ,நான் அதை விட நினைத்தாலும் அது என்னை விடுகுது இல்லையே என்று 'வாயல வங்காளம் போகும் மகாரசன் பெண்சாதி மர்மக்காரி யாருடன் சொன்னாலும் திறமைக்காரி' கதை போல வித்தையைக் காட்ட நினைத்தேன் ,ஆனாலும் அது எடுபடாது என்று நினைச்சு வாயை இறுக்கி மூடிக்கொண்டு இருந்தேன்.

இந்தக் கேள்வியோட அவன் கொஞ்சநேரம் என்னைப் பார்த்திட்டு, 'சில நேரம் நீ உன் கடந்தகாலக் கவலையை மறக்கக் குடிக்கலாம் ஆனாலும் இந்த உலகத்தில் பெண்கள் எவளவு கஷ்டத்தை தாங்கி வாழுறாங்க,அவர்கள் எல்லாரும் குடிகுரார்களா' என்று கேட்டுப்போட்டு,நொண்டி நொண்டி அடுத்த ஸ்டேஷனில் இறங்க வெளிக்கிட அவனோட காலைப் பார்த்தேன், அவன் இரண்டு காலும் பிளாஸ்டிக் கால் போட்டது போல இருந்து, 'என்ன பார்க்கிறாய், கண்ணி வெடியில சிதறிப் போய் விட்டது என்னோட இரண்டு காலும் முழங்காலுக்கு கீழே' என்று சொல்லிப்போட்டு கெந்திக் கெந்திக் இறங்க முதலும் 'ஹாப்பி நியூ இயர்' என்று சொல்லிப்போட்டு போயிட்டான்.

அவன் கேட்ட, 'நீ ஏன் குடிக்கிறாய்' என்ற கேள்வி சென்ற வருடம் முழுவதும் மனடையைக் குடைந்து கொண்டே இருந்தது. பல சமயங்களில் நாங்கள் எல்லாருமே கிருஷ்ண பரமாத்மா ஜீவாத்மாக வாக வரும் மகாபாரத்தில் கிருஷ்ணனிதும் யாதவ குலத்தினதும் அழிவு ஏற்பட்ட 'எந் தக்கடலில் இரும்பு உலக்கை பொடி செய்யப்பட்டு கரைக்கப்பட்டதோ அதே கடலின் கரையிலேயே இவர்கள் மது அருந்தி களி நடனம் புரிந்தனர்' போன்ற .....வாக்கியங்களையும் அதலா வந்த சாத்யகி , கிருதவர்மன் மது உறக்கத்தில் இருந்த உபபாண்டவர்களை அஸ்வத்தாமனுடன் சேர்ந்து கொன்ற சம்பவங்களை என்னமோ உலக மகா தத்துவம் போல திருப்பி திருப்பி படித்தும்,ஜோசிதுக்கும் கொண்டும் இருக்கிறோம், ஆனால் சாதாரண ஒரு மனிதன் கேட்ட ஒரு சின்னக் கேள்வி இப்பவும் என்னை சித்திரவதை செய்கிறது.

யாவும் கற்பனை

மரணத்திற்குப் பின் வாழ்க்கை இருப்பது உறுதி செய்யப்பட்டது

மனித வாழ்க்கை சார்ந்த ஆயிரமாயிரம் அறிவியல் ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டாலும், மனிதனின் மரணத்திற்கு பின்பு என்ன நடக்கிறது..? என்னவாகும்..? என்ற மர்மமான அதே சமயம் சுவாரசியமான கேள்விக்கு நிகராக எந்த ஆய்வும் இல்லை என்பதே நிதர்சனம்.

அப்படியான ஒரு தேடுதலை அடிப்படையாக கொண்டு நடத்தப்பட்ட மிகப்பெரிய அறிவியல் ஆய்வின் படி, இறந்த பிறகு என்னவாகும் என்ற கேள்விக்கான விடை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது..!

பிரிட்டன் நாட்டை அடிப்படையாக கொண்ட ஒரு ஆய்வாளர்கள் அணி மாரடைப்பு நோயாளிகளை தொடர்ச்சியாக அதாவது கடந்த 4 ஆண்டுகளாக ஆய்வு செய்துள்ளனர்.

மாரடைப்பில் இருந்து உயிர் பிழைத்தவர்களில் கிட்டத்தட்ட 40 சதவீதம் பேர், மருத்துவ ரீதியாக அவர்கள் இறந்துவிட்டனர் என்று அறிவித்துவிட்ட குறிப்பிட்ட நேரத்தில் ''விழிப்புணர்வில்'' இருந்ததாகவும் சில வடிவங்கள் கண்டதாகவும் விவரித்துள்ளனர்.

நிபுணர்கள்படி, இதய துடிப்பு நின்ற அடுத்த 20 முதல் 30 நொடிகளில் மூளை இயக்கம் நின்று போகும், அதன் பின்பு எதை பற்றிய விழிப்புணர்விற்கும் சாத்தியமே இல்லை .

அப்படியிருக்க உயிர்பிழைத்தவர்கள் கூறும் அந்த விழிப்புணர்வு என்பது என்ன..? எதை பற்றிய எச்சரிக்கையாக அது இருக்க வேண்டும்..? என்ற குழப்பம் எழுந்தது.

சமீபத்திய ஆய்வின் மூலம் மருத்துவ ரீதியான இறப்பிற்கு பின்னர் நோயாளிகள் மூன்று நிமிடங்கள் வரையிலாக உண்மையான நிகழ்வுகள் ஏற்படுவதை உணர்கின்றனர் என்பது தெரிய வந்துள்ளது.

உடன் நோயாளிகள் புத்துயிரளிக்கப்பட்ட பின்பு ஒரு முறை மட்டுமே தங்களுக்கு நேர்ந்த அனுபவத்தை பற்றிய நினைவை துல்லியமாக பெறுகின்றனர் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

பொதுவாக இதுபோன்ற ஆய்வுகளில் உருவெளித்தோற்ற நிகழ்வுகளை மட்டுமே நோயாளிகள் காண்பார்கள் ஆனால் சமீபத்திய ஆய்வு முற்றிலும் புதியதொரு கோணத்தை வழங்கியுள்ளது என்று கூறியுள்ளார் நியூயார்க்கின் மாநில பல்கலைக் கழகத்தின் உதவி பேராசிரியரும், இந்த ஆராய்ச்சியை முன் நடத்துபவருமான டாக்டர் சாம் பரினா.

இந்த ஆய்வில் ஒரு நோயாளியை மீள் உயிர் பெற வைக்க டாக்டர்கள் மற்றும் நர்சுகள் முயற்சி செய்த போது அவர் (நோயாளி) என்ன நடக்கிறது என்ற ஒரு 'மிகவும் நம்பகத்தனமான' தகவலை அளித்துள்ளார்.

அதாவது மருத்துவ அறையின் ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு நான் சுவாசம் செய்துகொண்டிருந்தை உணர்ந்தேன் என்று கூறியுள்ளார்.

வழக்கமாக இதயம் நின்ற பின்பு மூளை செயல்பட முடியாது. ஆனால், இந்த விஷயத்தில், விழிப்புணர்வு நிலை சுமார் மூன்று நிமிடங்களுக்கு தொடர்ந்துள்ளது.

இதன் மூலம் மரணத்திற்கு பிந்தைய வாழ்க்கை ஒன்று இருப்பதின் துப்பு கிடைக்கப் பட்டுள்ளதாகவே கருதப் படுகிறது. இந்த ஆய்வில் இங்கிலாந்து, அமெரிக்க மற்றும் ஆஸ்திரியா ஆகிய நாடுகளை சேர்ந்த 15 மருத்துவமனைகளில் இருந்து 2,060 நோயாளிகள் உட்படுத்தபட்டுள்ளனர்.

அவர்களில் உயிர் பிழைத்த 46 சதவீதம் பேர் ஒரு பரந்த அளவிலான மன நினைவுகளின் அனுபவம் பெற்றுள்ளனர்.

அவர்களில் ஒன்பது சதவீதம் மரணத்தின் அருகாமை அனுபவத்தின் பாரம்பரிய வரையறைகளை அனுபவித்துள்ளனர், 2% பேர் உடலுக்கு வெளியே உள்ள அனுபவங்களை அதாவது தன் உடலை தானே பார்ப்பது போன்ற வெளிப்படையான விழிப்புணர்வு நிகழ்வுகளை அனுபவித்துள்ளனர்.

சுட்டெரிக்கும் சூரியனை கொஞ்சம் கட்டிப்போட வேண்டும்...

என்.ஹரன்

கோடை காலம் வந்துவிட்டது..சுட்டெரிக்கும் வெயிலில் இருந்து நமது சருமத்தை பாதுகாத்துக்கொள்ள தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பின்பற்ற வேண்டும்.

கோடையில், சிறிது நேரம் வெயிலில் சென்று வந்தால் கூட, சருமம் உடனே கருமையடையும். அதனால், நேரடியாக,'சூரிய ஒளி' நம் மீது படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வெளியே செல்லும் போது, குடை பிடித்து, தொப்பி மற்றும் குளிர் கண்ணாடி அணிவது அவசியம். வெளியே செல்லும் போது, 'சன் ஸ்கிரீன் லோஷன்' பூசவும்.

வெயில் காலத்தில் நமது உடல் நலத்தை பாதுகாப்பது என்பதில் கவனத்துடன் செயல்பட வேண்டும். ஏனெனில் கோடைகாலம் முழுவதும் உடல் சுலபமாக சோர்வடையும் நீர்சத்து குறைபாடு, உடல் வெப்ப நிலை மாறுபாடு, சரும பிரச்சினைகள், அதிக வியர்வை போன்ற பல பிரச்சினைகளை அனைவரும் எதிர்கொள்ள வேண்டி வரும். குறிப்பாக குழந்தைகள் மற்றும் முதியவர்கள் தான் அதிக பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

வெயில்காலம் முழுவதும் நாம் உணவு பழக்கம், அன்றாட செயல்கள், சில உடற்பயிற்சி, ஆடைகளில் மாற்றம் போன்றவை மேற்கொள்வது மிக முக்கியம்

வெயில் காலத்தில், 'அல்ட்ரா வயலட்' அதிகமாக வெளிபடுவதன் காரணமாக, முடி நன்கு வளரும். அதே சமயம், வெயிலின் பாதிப்பால், முடியின் நுனி வெடிக்கும். இதனால், முடி வளர்ச்சி தடைபடும். இதைத் தவிர்க்க, தேங்காய் எண்ணெய் அல்லது ஆலிவ் ஆயில் சூடுபடுத்தி, தலையில் பூசி மசாஜ் செய்ய வேண்டும்.

★ வேர்க்குரு பிரச்னை உள்ளவர்கள், நுங்கு தண்ணீரை, உடலில் தேய்த்து, ஊற வைத்து, பின் குளித்தால், நல்ல பலன் கிடைக்கும்.

★ வெயில் காலத்தில், சிலருக்கு தலையில் அரிப்பெடுக்கும். அப்பிரச்னை உடையவர்கள், எண்ணெயை சிறிது சூடாக்கி, தலைக்கு, மசாஜ் செய்து, பின், சிறிது வேப்பிலையுடன், மூன்று சின்ன வெங்காயம் சேர்த்து அரைத்து, தலையில் ஊற வைத்து, 10 நிமிடங்கள் கழித்து, தலைக்கு குளித்தால், அரிப்பு நிற்பதுடன், முடி மென்மையாக இருக்கும்.

★ வெயில் காரணமாக, உடலில் அரிப் பெடுத்தால், இரவில், அரை பக்கெட் தண்ணீரில், துளசிப்பொடி, வேப்பிலை மற்றும் மஞ்சள் பொடி கலந்து, காலையில், சிறிது தண்ணீர் சேர்த்து குளிக்கவும். குளிக்கும் முன், தேங்காய் எண்ணெய் பூசி, சிறிது நேரம் ஊற வைத்து குளிக்கவும்.

வெயிலால் முகம் கறுப்பாவதை தடுக்க, கிர்ணி மற்றும் தர்பூசணிப்பழத்தின் சாறை, முகத்தில் பூசி கழுவலாம்.

கற்றாழை ஜூஸ் எடுத்து, உடலில் மசாஜ் செய்தால், குளிர்ச்சியாக இருக்கும்.

★ வெயில் காலத்தில், வியர்வையால் பொடுகு தொல்லை ஏற்படும். அதற்கு, வாரம் மூன்று முறை, ஆயில் மசாஜ் செய்து, தலைக்கு குளிக்க வேண்டும். விளக்கெண்ணெயும், ஆலிவ் எண்ணெயும் ஒன்றுக்கு இரண்டு என்ற விகிதத்தில் கலந்து, சூடு செய்து, மசாஜ் செய்யலாம்.

★ வியர்வை நாற்றத்தை தவிர்க்க, கைப்பிடி அளவு கல் உப்பை, தண்ணீரில் போட்டு குளிக்கலாம்.

★ வெயில் காலத்தில், கடலை மாவிற்கு பதில், பயித்த மாவு போட்டு குளியுங்கள்.

★ தவிர்க்க முடியாதபடி, சில நேரங்களில் ஷூ அணிய நேர்ந்தால், கால்களுக்கான, 'புட் பவுடர்' போட்டு, பின் சாக்ஸ் போட்டு, ஷூ அணிந்தால், அவ்வளவாக வியர்க்காது.

★ பருத் தொல்லையால் அவதிப்படுவோர், வேப்பிலைச்சாறு எடுத்து, 10 நிமிடத்துக்கு ஒருமுறை என்று, மூன்று முறை தினமும் ஒத்தடம் கொடுத்தால், பரு பிரச்னையிலிருந்து விடுதலை கிடைக்கும்.

★ வெயில் காலத்தில், நம் உடம்பில் இருக்கும் உப்பு, வியர்வையின் காரணமாக, அதிகமாக வெளியேறும். அதனால், மாதுளை, ஆரஞ்சு மற்றும் எலுமிச்சம் ஜூஸ் நிறைய குடியுங்கள். மேலும், கூழ் மற்றும் வெங்காயம் நிறைய எடுத்துக் கொள்ளுங்கள்.

★ லைட் கலர் காட்டன் உடைகள் மற்றும் பருத்தியால் ஆன உள்ளாடைகளையே அணியுங்கள், அத்துடன், இறுக்கமாக போடுவதை தவிருங்கள்.

இதற்காக பியூட்டி பார்லருக்கு சென்று விலை அதிகமான அழகு சாதனப் பொருட்களை உபயோகிக்கவேண்டுமென அர்த்தம் இல்லை. நமது வீட்டில் இருக்கும் எளிய பொருட்களை வைத்தே வெயில் தாக்கத்தால் சருமத்தில் ஏற்பட்ட டானிங், சோர்வு, சரும வறட்சி ஆகியவற்றை தடுத்து, உங்களின் பொலிவை மீட்டெடுக்கலாம

அவ்வகையில் கோடை காலத்தில் வெயிலினால் ஏற்படும் சரும பாதிப்புகளுக்கு வீட்டிலிருக்கும் எளிய பொருட்கள் எப்படி தீர்வாகிறது எனப் பார்ப்போம்.

எலுமிச்சை

எலுமிச்சை சாறுடன், தேவையான அளவு பன்னீர் மற்றும் சிறிதளவு மஞ்சள் தூள் சேர்த்து மை போலக் கலந்துக் கொள்ளுங்கள்.இந்த கலவையை முகத்தில் மாஸ்க் போலப் பூசிக்கொள்ளலாம். இப்படி செய்தால் வெயிலினால் பாதிப்படைந்த உங்கள் சருமம் பட்டுப்போல் ஜொலிக்கும்.

முட்டை

கோடை காலத்தில் ஏற்படும் சரும நிற மாற்றத்திற்கு உகந்தது முட்டை மாஸ்க். வெயிலில் இருந்து வீடு திரும்பியதும் உங்கள் முகத்தில் முட்டையின் வெள்ளை கருவை மட்டும் மாஸ்க் போல பூசுங்கள். உங்களுக்கு வறண்ட சருமம் இருந்தால் முட்டையின் வெள்ளை கருவுடன் சிறிது தேன் கலந்துக்கொள்ளலாம். இந்த கலவை உங்கள முகத்தில் இருக்கும் சோர்வை போக்குவதுடன் முகத்தில் இருக்கும் சுருக்கங்களையும் போக்கும்.

தயிர்

தயிர் உங்களது சருமத்தில் ஈரப்பதத்தை தக்கவைக்கும். ஒரு பாத்திரத்தில், தயிர், சிறிதளவு கடலை மாவு அல்லது முல்தானிமட்டி, அரைத்த ஆரஞ்சு தோல் ஆகியவற்றை ஒன்றாக கலந்து முகத்தில் பூசிவந்தால் முகம் பொலிவு பெறுவதுடன் சருமத்தில் ஈரப்பதமும் தக்கவைக்கபடும்.

பெரும்பாலும் நாம் வெளியே மேற்கொள்ள வேண்டிய பணிகளை காலை அல்லது மாலை வேளைகளில் செய்திடல் நல்லது. முதியவர்கள் பகல் 11 மணி முதல் 3 மணி வரை வெளியே செல்வதை தவிர்க்கவும். வெயில் நேரத்தில் வெளியே செல்லும்போது குடை, தண்ணீர், சர்க்கரை மற்றும் சாக்லேட் போன்றவைகளை எடுத்து செல்லவும்.

ஏதேனும் மயக்கம் ஏற்பட்டால் உடே தண்ணீர் மற்றும் சர்க்கரை உதவிகரமாக இருக்கும். அலுவலகம் செல்வோர் இருசக்கரவாகனத்தில் செல்லும்போது தலைக்கவசம், கையுறை போன்றவை அணிந்து செல்லவும்.

அதிக வெயில் நேரம் எனில் ஈரப்படுத்திய கைக்குட்டையை முகத்தில் கட்டிக் கொண்டால் உஷ்ண காற்று சுவாசித்தலை தவிர்க்கலாம். அதுபோல் மோர், எலுமிச்சை சாறு, பழச்சாறுகளை பாட்டிலில் அடைத்து கொண்டு சென்று தேவையான போது அருந்துவது வேண்டும்.

தினம் இருவேளை பச்சை தண்ணீரில் குளியல், தளர்வான பருத்தி ஆடைகள் அணிவது, எந்நேரமும் வீட்டின் உட்புறம் அடைந்து இல்லாமல் மாலை நேரம் இயற்கை காற்றில், சிறுநடை போன்றவை உடல் உஷ்ணமடைவதை தவிர்க்கும்.

வீடுகளில் குளிர்ச்சியை ஏற்படுத்த தரைகளை தண்ணீர் கொண்டு துடைப்பது, திரை சீலைக்கு பதிலாக வெற்றிவேர் பதாகைகள், சீலைகள், மூங்கில் திரை சீலைகள் போன்றவற்றை ஜன்னல் மற்றும் வாசல் பகுதிகளில் தொங்க விடலாம்.

கோடைகாலத்தில் உடலில் வியர்வை நாற்றம் வராது இருக்க சந்தனம், ஜவ்வாது போன்றவைகளை குளித்தவுடன் உடலில் பூசச் செய்யலாம். அதுபோல் நாம் குடிக்கும் நீரில் வெட்டிவேர், நண்ணாரி போன்றவை போட்டு சுவைநீராக அருந்தும்போது உடல் உஷ்ணம் ஏற்படாது. சருமமும் போஷாக்குடன் புத்துணர்வுடன் இருக்கும்.

குரல் கொடுப்பீர்களா?

இலங்கைப் போக்குவரத்துச் சலையை மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ் கம்பனிகளாக மாற்றப்பட்டபோது, சகல ஊழியர்களுக்கும் இ.போ.சபையினால் வழங்கப்பட்ட உரிமைகள், சலுகைகள் தொடர்ந்து வழங்கப்படும் என்று ஆட்சியாளர்களால் கூறப்பட்டது மட்டுமன்றி, வழங்கிய நியமனக்கடிதத்திலும் குறிப்பிடப்பட்டு இருந்தது.

மேலும் கம்பனியில் கடமை புரியும் சகல ஊழியர்களுக்கும் அவர்கள் சார்ந்த சாலைகளின் அசையும், அசையா சொத்துக்கள் உள்வாங்கப்பட்டு, இதன் மொத்தப் பெறுமதியில் ஐம்பத்தொரு வீதப்பங்கு, அரசாங்கத்திற்கும், நாற்பத்தொன்பது வீதம் பங்கு ஊழியர்களுக்கும் அடிப்படைச் சம்பளம், சேவைக்காலம், தரம் என்ற அடிப்படையில் பிரிக்கப்பட்டு பங்கீட்டு அட்டைகள் மூலம் உரிமையாக்கப்பட்டு பத்து ரூபா பங்குகளாக ஊழியர்களின் பெயரில் வைப்பிலிட்டு, அதற்குரிய பத்திரமும், நஷ்டஈட்டு காசோலையும் 1992.05.14 திருமலைச் சாலையில் நடந்த நிகழ்வில் அந்நாள் இ.போ.ச. தலைவர் யு.எல்.எம்.பாறுக் அவர்களால் வழங்கப்பட்டது.

பங்குப்பத்திரம் வழங்கும் போது, தலைவர்கள் அவர்கள் இதைப் பத்திரமாக வைத்துக் கொள்ளும்படி சொன்னார். அவர் வாய்ச் சொற்பஐ இன்றுவரை வெற்றுப் பத்திரமாகவே இருக்கின்றது.

இ.போ.சபை மத்திய தலைமைக் காரியாலயம், பிராந்திய தலைமைக் காரியாலயம், வடபிராந்திய போக்குவரத்துச் சபை மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனியில் உள்வாங்கப் படாததால் அதில் கடமை புரிந்த ஊழியர்கள் அதிகரித்த அடிப்படைச் சம்பளம், அதிகரித்த சம்பள உயர்வு, முழுச் சேவைக்கால பணிக்கொடையும் பெற்றார்கள். அன்றைய அரசாங்கத்தின் வேறுபட்ட செயலால் பல்லாயிரம் ஊழியர்கள் பாதிக்கப்பட்டதையும், பாதிக்கப்படுவதையும் பின்னாளில் வந்த அரசாங்கங்களும் கண்டு கொள்ளவில்லை.

2005இல் சகல கம்பனிகளும் இ.போ.சபையாக மாற்றப்பட்ட போதும், ஒவ்வொரு பங்கு தொடர்பிலும், அதன் சமபெறுமதியில் நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றும், நிபந்தனை மூன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இருந்தாலும் கம்பனியில் பங்குதாரர்களாக செயல்பட்டு வந்த ஊழியர்கள், ஓய்வுபெற்றுச் சென்று பலவருடங்களாகியும் அவர்களின் கொடுப்பனவுகளை அரசாங்கம் இன்னும் வழங்கவில்லை. ஒருசில ஊழியர்கள் இறந்தும் விட்டார்கள்.

மேலும் பரிதாபத்திற்குரிய பங்குதாரர்கள் தமது பகுதியில் வைத்தியசாலை போன்ற இடங்களுக்குச் சென்று வரை நாளாந்த பயணச்செல்கை சீட்டு (இலவசம்) வழங்க மக்களுக்காகவே நாங்கள் என்று மார்பு தட்டும் நல்லாட்சியாளர்களுக்கும் இன்னும் மனசு வரவில்லை.

வருடா வருடம் விலையுயர்ந்த வாகனங்களை இறக்குமதி செய்து பங்கிடும் அரசாங்கத்திற்கு, வறுமைக் கோட்டில் வாழும் ஊழியர்களுக்கு, இலவச பயணச் சீட்டு வழங்குவதனால் எந்த நட்டமும் ஏற்படப் போவதில்லை.

மனிதாபத்திற்குரிய பாராளுமன்ற உறுப்பினர்களே! முப்பதாயிரம் முன்னாள் இ.போ.சபை ஊழியர்களின் அவலநிலையைப் போக்க குரல் கொடுப்பீர்களா?

கே.புவனேந்திரன்
இ.போ.ச.உத்தியோகத்தர்
323, அன்புவழிபுரம்,
திருகோணமலை.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 14.04.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.